

# முக்காடு

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன்...


PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

இந்நூல்
புலவர்மணி **ஆ.மூ.ஷரிபுத்தீன்** அவர்களின்
அன்புக்குரிய மாணவர் ஓய்வுபெற்ற அதிபர்
**மர்ஹூம் எம்.ஐ.அபூஸாலிஹூ**
அவர்களின் நினைவாக வெளியிடப்படுகின்றது

# கொடைநாயகி



இந்நூல்
தனது கணவர்
**மர்ஹூம் எம்.ஐ.அபூஸாலிஹூ**
அவர்களின் பெயரில்
அச்சுருப்பெறப் பொருளுதவி செய்த
ஓய்வுபெற்ற அதிபர்
திருமதி **றைஹானா அபூஸாலிஹூ**
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்காடு

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

LENDING SECTION

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

13812
894.8113

வகுப்பு எண் 894.8113
வரவுப் பதிவு எண் 13812
மட்டை கட்டுதல் | மறுமட்டை கட்டுதல



## முக்காழி *(புதினம்)*

ஆசிரியர் : ஜின்னாஹ் ஷரிபுத்தீன்
இரண்டாம் பதிப்பு : 01.09.2019
வெளியீடு : அன்னை வெளியீட்டகம்.
மருதமுனை.
முகவரி : 16, School Avenue,
Off Station Road,
Dehiwela,
Sri Lanka.
அச்சகம் : புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அட்டைப்படம் : ஷப்ராஸ் ஷரிபுத்தீன்

## MUKKAZHI *(NOVEL)*

Author : Dr. A. J. Sherifudeen
Second Edition : 01.09.2019
Publisher : ANNAI VELIEETTAKAM.
MARUTHAMUNAI.
Address : 16, School Avenue,
Off Station Road,
Dehiwela,
Sri Lanka.
Press : St. Joseph's Catholic Press,
360, Main Street, Jaffna. 021 222 2378
email: editorkavalan@gmail.com
Cover Desigen : SHAFRAZ SHERIFUDEEN
Copy right : Hamziya Fareeda Sherifudeen
Pages : xii + 190
Price : 400/-
ISBN : ISBN978-955-54039-7-9
Bar Code : 9 789555 403979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் வெளிவந்த பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | முத்துநகை | 1989 |
| 2. | பாலையில் வசந்தம் | 1989 |
| 3. | மஹ்ஜபீன் காவியம் | 1992 |
| 4. | புனித பூமியிலே காவியம் | 1998 |
| 5. | பனிமலையின் பூபாளம் | 1995 |
| 6. | கருகாத பசுமை (புதினம்) | 2000 |
| 7-8. | ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் *(பிரளயம் கண்ட பிதா - தாய்க்கென வாழ்ந்த தனயன்)* | 2001 |
| 9. | கடலில் மிதக்கும் மாடிவீடு (சிறுவர் பாடல்) | 2002 |
| 10. | அகப்பட்ட கள்வன் (சிறுவர் படக்கதை) | 2003 |
| 11. | பெற்றமனம் (சிறுகதைத் தொகுப்பு) | 2003 |
| 12. | எங்கள் உலகம் (சிறுவர் பாடல்கள்) | 2003 |
| 13. | பண்டார வன்னியன் காவியம் | 2005 |
| 14. | திருநபி காவியம் | 2006 |
| 16. | திருமறையும் நபிவழியும் | 2007 |
| 17. | வேரறுந்த நாட்கள் (சிறுகதைத் தொகுப்பு) | 2008 |
| 18. | ராகுலுக்கு ஒரு புதுவண்டி | 2008 |

SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | சிறுமியும் மந்திரக் கோலும் | 2010 |
| 20. | தீரன் திப்புசுல்தான் காவியம் | 2010 |
| 21. | அன்பின் கருணையின் பேரூற்று | 2010 |
| | *( மொழிமாற்றக் கவிதைகள்)* | |
| 22. | வாத்தியார் மாப்பிள்ளை காவியம் | 2011 |
| 23. | "கேள்வியும் பதிலும்" | 2011 |
| | *(மகாகவி இக்பாலின் ஷிக்வா ஜவாபே ஷிக்வா* | |
| | *கவிதைகளின் மொழிமாற்றக் கவிதைகள்)* | |
| 24. | எல்லாள காவியம் | 2013 |
| 25. | நாயனொடு வசனித்த நந்நபி | |
| | (மூஸாநபி காவியம்) | 2014 |
| 26. | அன்னை கதீஜாவும் | |
| | அண்ணலார் குடும்பமும் காவியம் | 2017 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION

## சமர்ப்பணம்

தனித்திருந்தே தமிழ்செய்தேன்
என்னை
வலம்புரி கவிதா வட்டத்தின் மூலம்
படைப்பாளிகளுடன் சங்கமிக்கச் செய்த
கவிஞர் தாஸிம் அகமது அவர்களுக்கு
இப் புதினம் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கோலங்களைக் காட்சிப்படுத்தும் எழுத்துக்கோலம்

*- கலாபூஷணம் தாஸிம் அகமது*

மூக்காழி குறுநாவல் பற்றிய எனது பார்வை 1960களுக்கு முன்னர் இலங்கைவாழ் மூவின மக்களிடையே காணப்பட்ட இன, மத, பிரதேச, மொழி பேதமற்ற வாழ்வியலை சித்தரிக்கும் குறுநாவல் முக்காழி. இலங்கையின் பிரதான இனங்களான சிங்கள தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையே நிலவிவந்த நல்லுறவை மூவினக் கதாபாத்திரங்களை வைத்து வரையப்பட்டுள்ளது. முக்காழி மூன்று விதைகளைக் கொண்ட சுவைமிகுந்த பழத்துக்கு வழக்கிலிருந்து வந்த தமிழ்ப்பேரகராதிப் பெயராகும். இப்புதினத்தின் பிரதி வாசித்தலில் அனுபவித்தவற்றை குறிப்புகளாக இங்கு பதிவு செய்துள்ளேன்.

கிழக்கிலங்கை மருதமுனை மீனவ, விவசாய சமூகத்தின் விடியல் பொழுது வேலைகளின் வர்ணனையுடன் புதினம் தொடங்குவது மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரன் பிள்ளையின் வர்ணனைகளை நினைவூட்டுகின்றன.

- வர்சகனைத் தூண்டும் வண்ணம் வசனங்களைப் பிரித்து எழுதி வாசகனை சங்கடப்படுத்தாமல் தொடர் வாசிப்பை ஈடுபட வைக்கும் எழுத்தாற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சம்பவங்களை கச்சிதமாகக் கூறிவரும் கதை சொல்லும் உத்தி
- கதை மாந்தர் பெயர்களும் வசனிக்கும் வார்த்தைகளும் கதை சொல்லும் காலத்தை விட்டும் சற்றும் பிசகாத கட்டுக்கோப்பு
- கடந்த காலத்தை நிகழ்காலத்தில் மீட்டிப் பார்க்கவைக்கும் நினைவாற்றல் மிகுந்தசம்பவக் கோவை.
- சுவையுள்ள உவமானவர்ணனை. (11) வீடும் வெளியும் சொல்லும் அற்புதவரிகள்.
- படக்காட்சி போன்ற படிமபத்தி (12) களப் பெயர்கள், கதைமாந்தர் பெயர்கள் அந்தக் களத்துக்கே வாசகனை கொண்டுசெல்கின்றன.
- காட்சிகளை ஒப்பிட்டுக் கற்பனையில் படம் பிடித்து மீட்டுப் பார்க்கவைக்கும் வசனக் கோப்பு (38) "தேயிலைச் செடிகளுக்கிடையில் புகுந்தோடும் ஒற்றையடிப்பாதை தோட்டத்து லயங்களைப் பிணைக்கும் நெடுங்கயிறு. இடையிடையே பூத்துக் குலுங்கும் கொன்றை மரங்களின் மஞ்சள் மலர்கள் காற்றோடு கலந்து பனிபடர்ந்த தேயிலைத் தளிர்களில் பரவிச் சீனத்து வண்ணச் சீத்தையின் வடிவு காட்டும்."
- கிராமத்து மொழியில் நகரும் கதை.
- பிராந்தியப் பேச்சு மொழியை கவனமாக கையாண்டு உள்ளமை. இடத்துக்கும் பாத்திரங்களுக்கும் ஏற்றவாறு. (44) "என்னம்பி, விடியக்குள்ளேயே வந்திரிக்கயள். என்னசெரி பிரச்சினைய"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடிகட்டிய பணக்காரி குருதி உந்தல் (46) - புதுமைத் தொடர்
- தலைமயிருக்கு மருதோன்றியிடுதல் முஸ்லிம்களின் பழக்கம் - இதன்மூலம் இன நல்லுறவு மறைமுகமாகக் கூறப்படுகிறது. (46) "பியசீலி வயது ஐம்பதைத் தாண்டினாலும், வெள்ளை மனத்தால் இளமைக்கு விடைதர மறுத்திருந்தாள். தலையில் நரைத்தது ஓரிரு மயிர்கள்தான். அவையும் மருதோன்றி அரைப்பினால் சிவந்திருந்தன."
- மூடநம்பிக்கை வெறுக்கப்பட வேண்டியது என்று நாசூக்காக ஆசிரியர் சொல்கிறார். (48) "பள்ளிக் காலத்திலேயே மூட நம்பிக்கைகளை வெறுத்த ஷரிபுத்தீன் வாத்தியாரின் மாணவன் அவன். தன்னையும் அவ்வாறே பழக்கி இருந்தான். பில்லி சூனியம், பேயோட்டல், கழிப்புக் கழிப்பது, அட்சிரம், துவாக்கூடு இவை அவன் வெறுத்தொதுக்கும் கைங்கரியங்கள்."
- 28ம் பக்கத்தைபார்த்ததும் சிரிப்போசிரிப்பாய் வந்தது. வைத்தியர் மந்திரம் சொல்லுவது.
- கமராவின் படப் பிடிப்புக் காட்சிகளாய் விரியும் நினைவுகளின் நிகழ்வுகளின் காட்சிப்படுத்தல். Camera Corner போன்று பதிவாகியுள்ளது.
- சம்பவங்களை கூறும் போது தானாக வந்துவிழும் சொற்கள்.
- குறியீட்டு வசனங்கள் (55) "பொருளாதாரத்தை உறிஞ்ச வந்த வெள்ளைப் பசாசுகள். பாட்டாளிமக்களின் குருதியுறுஞ்சக் கூடவே கொணர்ந்ததோ இந்தஅட்டைக் கூட்டம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION


- உணர்வுகளை வார்த்தையில் வடிக்கும் சாதுர்யம் மனக்கோலங்களை கண்முன் கொண்டுவரும் பொருத்தமான வார்த்தைப் பிரயோகம். (58) "

- காதல் பற்றி கதையாசிரியர் கூறுவது சொந்த அனுபவமோ. (72) "மீண்டும் வாய்விட்டுச் சிரித்தான் சிவா. "பலநாள் திட்டமிட்டு புடம்போட்டு வருவதல்ல காதல். பார்த்ததும் பிறக்கும் மனத்துந்தல், பின்னால் புடமிட்டு வளர்க்கப் படுவது." இதில் மனத்துந்தல் என்பது புதுமைத் தொடர்.

- நாவல் மனோரதியப் பாங்குடன் இணைந்து நகர்கிறது. (78) "யாராவது வரவேண்டும், அஸ்ஸலாமு அலைக்கும் ஹாஜியார் என்று சொல்லி அழைக்க வேண்டும் என்ற ஆவலோடு காத்திருந்தவர்போல பரீது ஹாஜியார் வெளியில் வந்தார். அவருக்குத் தெரியும் "இஷா" தொழுகைக்குப் பின் யாராவது வருவார்கள் என்று."

- கதாபாத்திரங்களின் அசைவுகளைக் கூட நுணுக்கமாகக் கூறும் பாங்கு. (79) "என்ன ஹாஜியார், எப்பிடி பயணமெல்லாம்? ஹைறர்தானே?" என்றார் கலீல் காக்கா." "பரீது ஹாஜியார் கதிரையில் நிமிர்ந்து தன்னை ஒருநிலைப் படுத்திக் கொண்டு விபரம் சொல்லத் தயாரானார்."

- கதை சொல்லும் போது பிராந்தியப் பேச்சுமொழி பயன்படுத்தும் லாவகம். (79) "அங்க பாக்க ஓணும் சீதேவி வந்திருந்த சனாங்கள். சுபுஹானல்லாஹ்! லெச்சோப லெச்சம். கஃபாவ சுத்த நாலு பொறத்திருந்தும் வாறானுகள் வாறானுகள் வாறானுகள் வாப்பா." "செவப்பனும் வாறான், வெள்ளையனும் வாறான், கறுப்பனுகளும் வாறானுகள். சோல்லி வேலல்லவா." "மவனே, ஒவ்வொருத்தனும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமாக்கிலும் ஹஜ்ஜுக்குப் போகாட்டி அவன் மனிசனில்லவா!"

- கதை சொல்லும் காலத்தில் பாவனையில் இருந்த பொருட்களின் பெயர் எடுத்தாளப்படும் திறமை. (80) "நீண்ட கண்ணாடி அலுமாரியில் பீங்கான் கோப்பைகளின் அடுக்கு. மேலே ஒரு "மார்க்கோனி" வானொலிப் பெட்டி. கூடவே சுவரில் ஒரு "றெடிபியுஷன்" பெட்டியும் பாட்டும், செய்தியும் கேட்கவெனப் பொருத்தப்பட்டிருந்தன. "பிக்பென் கடிகாரம்" "சாய்மனை கதிரை" போன்ற அக்காலப் பொருட்கள்.
- காதல்வயப் பட்டவளின் மன உளறல் (94) "இருந்தும் எதிர்காலத்தை எண்ணி அவள் ஐயுற்றாள். அவன் விரும்பினால், என்ற எண்ணம் மேலிட உள்மனம் உறுத்தியது. அவன் விரும்புவான்... விரும்பவேண்டும்... என்னை ஏன் அவன் விரும்பக் கூடாது?. விரும்ப வைப்பேன்... இல்லை விரும்புவான்!."
- கதை சொல்லி கதை நடக்கும் காலத்தை இம்மியும் பிசகாது கையாளுதல்.
- கதையோட்டத்தில் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் வலிந்து புகுத்தப்படாமல் இயல்பாக வருகின்றன. (96) "கலீல் காக்காவின் மகள் கதீஜா, தனது பெயரின் முதலெழுத்து தனது மகளின் பெயரில் முதலெழுத்தாக வந்தால் அவருக்கு நல்லதென ஒரு ஆலிம்சா "பால்பார்த்துச்" சொன்னார் என்று வைத்த பெயர். சில பழைய குருட்டு நம்பிக்கைகளுக்கு அன்றைய மக்கள் அடிமையாய்ப் போனதன் விளைவுதான் அது.
- "நெறுதுளி" எனும் வார்த்தை இற்றைக்கு 60வருடங்களுக்கு முன் தென்கிழக்கு பிரதேச மக்களிடையே வழக்கிலிருந்த சொல். (126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ பௌத்தமத வரலாற்றுத் தொன்மை இங்கு மீட்டப்படுகிறது. (127) "பௌத்த தர்மம் இறை வணக்கத்திற்குப் புறம்பானது. இருந்தும், பௌத்தர்கள் இந்து சமயக் கடவுள்களை கணதெய்யோ, கதரகம தெய்யோ, விஷ்ணு தெய்வோ என்றும், மனிதப் பெண்ணான கண்ணகியைப பத்தினி தெய்வோ என்றும், இந்துக்கள் வணங்கும் அனைத்துத் தெய்வங்களுக்கும் அது போன்ற பெயர்கள் சொல்லி வணங்குவர்.

➢ தமிழ் பேசுபவர் சிங்களசொற்களை உச்சரிக்கும்போதும், சிங்களம் பேசுபவர் தமிழ் சொற்கள் உச்சரிக்கும் போது கொச்சைப்பேச்சு மொழியதார்த்தம் எழுதப்பட்டுள்ளதை பலபக்கங்களில் காணலாம்.

➢ இறுக்கமான சொற்கள் கொண்டு காட்சிப் படுத்தலை விரிக்கும் கற்பனை (136) "பட்டியகம வீட்டைச் சுற்றியிருந்த பூந்தோட்டம் புதுப்பொலிவு பெற்றிருந்தது. பல்வகை வண்ணங்கொண்ட பூக்கள் புத்தம் புதிதாய்ப் பூத்தனவோ, புதியவர்கள் வரவேற்க என்னும் பாங்காய் புன்னகைத்து நின்றன."

➢ கிராமத்துக் கதாபாத்திரங்களின் உரையாடல் தர்க்க மொழி அபாரம் வாசகனின் காதில் ஒலிப்பது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது. (134) "என்ன, கலியாணம் பேசுறயள, மீன் யாவாரம் பண்ணுறயள? அது வேணும் இது வேணும் எங்கிறவர் அவர்ர பேரில என்னத்த வாங்கிக்கிக் கலியாணம் முடிச்சதாம்? அவளப் புறியப்பட்டு கலியாணம் பண்ணி, அவள் சொல்லுறதுக்கெல்லாம் ஆடறார். "அவள்ள உம்மா வாப்பா ஊடுவளவு, காணி எல்லாத்தையும் இவரில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை இல்லாமத்தானே அவள்ள பேரில எழுதிக் குடுத்தாங்க. இவர் அங்கயொண்டும் வாலாட்ட ஏலாதாக்கும். அதுஅப்பிடி இரிக்கி, இப்ப தம்பிக்கெண்டு கொழும்பாருகிட்ட உறுஞ்சப் பார்க்கிறார்." "தம்பிக்கிப் புறியமெண்டா அவிய அவியட புள்ளைக்கிக் குடுக்கத குடுக்கட்டும் எண்டு பேசி முடியுங்க. ஒங்களுக்கு என்ன குடுத்தாம் எனக்கி கலியாணம் பண்ணி வெச்சாங்க? நாங்க நல்லாத்தானே, கெடச்சத திண்டுகிட்டு இரிக்கம். நான் செல்லிறத்த ஒள்ளுப்பம் ரோசிச்சுப் பாருங்க."

மேற்சொன்னவாறான மூவின மக்களையும் மும்மதத்தைச் சேர்ந்தவர்களையும் இணைக்கும் ஒரு நவீனமாக முக்காழியை நான் காணுகின்றேன். இந்த நவீனத்தை (குறுநாவல்) சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்து வெளியிட்டால் சிங்கள வாசகர் மத்தியிலும் இன உறவை பேணுகின்ற சமூக சீர்திருத்தவாதிகள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெறும் என்பதை துணிந்து கூறலாம். இனிவாசகர்கள் நாவலுக்குள் நுழைந்து அவர்களும் இந்நாவலின் பெறுமானத்தை அனுபவிக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

# முக்காழி

கதிரவன் உதயத்தைக் கட்டியங்கூறிக் கிழக்கு வானில் செம்மைபடரத் தொடங்கியது. அழகிய அந்தக்காலைப் பொழுதில், தன் குடிசைவீட்டின் முன்வாசற் கதவை மெல்லத் திறந்தாள் ஜமீலா.

கடல் தெரியும் தூரத்தில் அமைந்திருந்த சிறிய களிமண் வீடு அவளுடையது. அதன் முற்றத்தை ஒட்டிய மரத்தினாலான அக்காலத்துக் கொட்டுக்கிணறு.

அதைச் சுற்றி நின்ற குலை தள்ளிய வாழை மரங்கள். காய்த்துக் குலுங்கிய பாக்குமரங்கள். அனைத்துங் கூடி அவள் மனத்திற்கு இதமளித்தன.

கிணற்றுத் துலாவின் பத்திக்கையைப் பற்றினாள். கிணற்றுள் ஆழ்த்தினாள். ஒரு வாளித் தண்ணீரை மொண்டு. காலைத் தொழுகைக்காகத் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டாள். முந்தானைத் தலைப்பால் முகத்தையும் கைகளையும் துடைத்துக் கொண்டாள்.

காலைத் தொழுகை மனத்திற்கு அமைதியையும், உற்சாகத்தையும் அளித்தது. அவள் சுறுசுறுப்பானாள்.

அடுப்பை மூட்டித் தேநீர் தயாரித்தாள். கணவரின் உள்ளங்கையில் சிறிது சீனியைத் தந்து தேநீர்க் கோப்பையையும் நீட்டினாள். அவர் நுனி நாக்கால் சீனியில் சில கற்களை நக்கித் தேநீரைப் பருகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம்போல் காலைத் தொழிலுக்குத் தன்னைத் தயார்ப்படுத்தினார் மீராப்பிள்ளை. தான் உடுத்திருந்த சாரத்தைச் சோர்ந்து, சிறுவாலை அதனுள் திணித்து அரைநாண் கொடியால் இறுகக் கட்டிக் கழன்றுவிடாது காபந்து செய்துகொண்டார்.

அதில் பொருத்தி இருந்த அரைக்கூடும், அச்சிரமும் வெளியில் பிதுங்கிக் கிடந்தன. அதற்கு மேலால் மீண்டும் இடுப்பில் சாரத்தைச் சுற்றிக் கட்டினார்.

அச்சிரமும், அரைக்கூடும் உடல் காவலுக்கென்று கணடி வைத்தியர் கட்டியவை. மேலுடம்பை மூட வட்டக் கழுத்தோடு கூடிய கட்டைக்கைச் சட்டையைத் தலைக்குமேலால் திணித்து வலப்பக்கத் தோளில் முடிச்சிட்டுக் கொண்டார்.

ஜமீலா முதல்நாள் இரவு சோற்றுப் பானையில் எஞ்சியிருந்த கைக்குத்தரிசிச் சோற்றில் வழக்கம்போல் நீரூற்றி வைத்திருந்தாள். அது பதமாக இளகியிருந்தது.

நான்கைந்து வெங்காயங்களையும், இரண்டுமூன்று பச்சைக் கொச்சிக்காய்களையும் விரல் நகத்தால் இனுங்கிப் போட்டுத் தேங்காய்ப்பூ கூட்டி இறுகப் பிசைந்தாள். சற்றைக்கெல்லாம் தண்ணிச்சோறு ஜமீலாவின் கைவண்ணத்தில் அமிர்தமானது.

"இஞ்சயிங்க, வெட்டைக்க எறங்கறத்துக்கு முன்ன இதத் திண்டுட்டுப் போங்க".

கடற்கரைக்குத் தோணி தள்ளும் அவசரத்தில் கணவர் காலைச் சாப்பாட்டை மறந்துவிடக் கூடாதே என்ற ஆதங்கம் ஜமீலாவுக்கு.

தினமும் காலைமுதல் மாலைவரை வீட்டுக்காய் உழைத்துப் போடும் ஜீவன். அவர் சோர்ந்து போகக் கூடா தென்னும் ஆழமான அக்கறை மனைவிக்கு.

மொட்டைத் தலையில் துண்டுச்சால்வையைச் சுற்றிக் கொண்டு பழைய பாய்த்துண்டில் கால்களைச் சம்மாரங் கூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கையாக்கிக் கொண்ட மீராப்பிள்ளை, பொண்டாட்டி பக்கத்திலிருந்து பரிமாறிய பழைய சோற்றுக்கரையலை அவளுக்கும் பாதிவைத்துப் பருகினார்.

அவசரத்திலும் கரையலை விரும்பி அவர் உண்ட பூரிப்பைக் கண்ட ஜமீலா,

"இஞ்சயிங்க, எல்லாத்தையுந் தின்னுங்க. வேகாவெயிலுக்க நிண்டு வலை இழுக்க வேணும். நான் வெறென்னத்தயாச்சும் தின்னுகன்," என்றாள் பரிவாக. அதில் பொய்மை செத்துப் போயிருந்தது.

பொலபொலத்து விடிகின்ற, பனிதூவிய காலைப்பொழுது.

"பாரக் கௌரா ஓடியாங்கடோ, ஓடியாங்கடோ!" என்று கூக்குரலிட்டவாறு கடற்கரைப் புலத்திருந்து ஒருவன் ஊருக்குள் ஓடிவந்தான்.

மீராப்பிள்ளைக்கு இருப்புக்கொள்ளவில்லை. உண்டதுபாதி உண்ணாததுபாதி என்று கிடக்க வாசற் படலையைத் தாண்டிக் குதித்துக் கடற்கரையை நோக்கி ஓடினார். ஒரு ஓட்டப் பந்தய வீரன் போல.

அவர் வாயும் கடலில் பாரக்கிளையைப் பாராதுவிட்டாலும் அவரை அறியாமல்,

"பாரக் கௌரா. பாரக் கௌரா. ஓடியாங்கடோ, ஓடியாங்கடோ!" என்று குரலெழுப்பியது. கால்கள் விசை கூட்டி கடல்நோக்கிப் பறந்தன. அவை இரும்பாய் நிலத்தில் இறுகி மீண்டன.

எங்கிருந்தெல்லாமோ கூக்குரல் கேட்டுக் கடற்கரை நோக்கி ஓடியது கரைவலை இழுக்கும் மருதமுனையின் மீனவர் கூட்டம்.

ஆதம் தண்டயல் நீண்ட பலகைத் துடுப்பைத் தோளில் தாங்கியவாறு ஒருபக்கம் சிறுவால் களர அவர்களைத் தொடர்ந்து ஓடினார். தோணியடியில் கூட்டம் திரண்டது.

நேற்றைய மாலைப் பொழுதில் கடல்வலையில் பீத்தல் பொத்தி, சிக்கலகற்றி வலையேற்றித் தோணி தயார் நிலையில் இருந்தது..

துரிதமானார்கள் வலைஞர்கள். யாரெவரின் கட்டளையையும் எதிர்பார்த்திராமல் தோணி அலைவாய்க் கரையைத் தொட்டதும் தண்டுவலிக்கும் நால்வர் தோணிமுகப்பில் ஏறிக்கொண்டனர். வாட்டசாட்டமான இளைஞர்கள். பின் நுகப்பில் தண்டையலும் ஏற, தோணி கடலலையைக் கிழித்தது.

கரையில் தோணியிலிருந்து தரப்பட்ட தடித்த கயிற்றின் ஒரு முனையைத் தொடர்ந்து, கயிற்றுவலை கடலில் இறங்கியது.

மேலே தெப்பக் கட்டைகள் மிதக்கக் கற்களுடன் கூடிய கீழ்ப்புறம் ஆழியுள் தாழ்ந்தது. அவ்வாறே நூல்வலையும் தோணியைத் தவிர்க்க ஆழ்கடலில் மடிவலையை மெல்ல இறக்கினார் தோணியின் நடுவினில் நின்ற முதியவர்.

பின்னர் வாகாகத் தோணி திரும்பி வேகமாகக் கரைநோக்கி ஓடியது. நூல்வலை கயிற்றுவலையைத் தொடர்ந்து கயிறும் இறங்க, வலையை இறக்கியவர் கயிற்றின் மறுமுனையை அலைவாய்க் கரையில் கயிற்றுக்காய்க் காத்திருந்தவர்புறம் வீசினார். இருவர் அதனை லாகவமாகப் பற்றிக்கொண்டனர்.

கடலுக்குள் சுற்றுச் சுவரொன்று கட்டியது போன்ற பாதுகாப்பு வளையம் வலையால் தோன்றியது உள்ளிட்ட மீன்கள் விட்டுத் தப்ப வழியில்லாவாறு. எண்ணியவாறு மீன்கூட்டம் சுற்றி வளைப்புக்குள் அகப்பட்டுக்கொண்டது.

கடல் நடுவில் நீர்ச்சுழிப்பை வைத்தே மீனின் வகையை அறிந்துகொள்ளும் அனுபவம் கொண்ட மீனவர்கள் பாரைக் கூட்டம் என்பதால் பதறினர்.

மீண்டும் மடிவலையைத் தோணி அண்டியதும், மந்துக் கயிற்றைத் தண்டையல் பற்றிக்கொண்டார். மடிவலை வாயகற்றி மீன்களின் கபளிகரத்திற்காகக் காத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணித் தண்டையல் தோணி முகப்பில் இரு கைகளையும் பக்கவாட்டில் விரித்து ஆலாய்ப்பறந்தார். இடையிடையே மொட்டைத் தலையில் சுற்றியிருந்த சால்வைத் துண்டைக் கழற்றி வலக்கரத்தில் ஏந்தியபடி வலையில் தொய்வு கண்ட வலைக்கால் பக்கம் மேலுங் கீழும் ஆட்டினார்.

சமிக்ஞையைப் புரிந்துகொண்ட கரைத்தண்டையல், வலையிழுக்கும் வலைஞர்களை வாய்க்கு வாலாயமான அம்மண வார்த்தைகளால் அபிஷேகஞ் செய்தார்.

"அடேய், இந்தப்பக்கம் வலை தொய்யுதுடா. இழுடா மகனே. ஊண்டி இழுடா. ஏன்ரா பண்டி செத்த பொணம்போல வலையில தொங்குறாய். ஹறாங்குட்டி அம்பாச் செல்லி இழுடா. ஏலே.... ஏலே.... ஏலே...." ஒரு வலைக்காலில் இருந்து மற்றைய வலைக் காலுக்கு விசை கூட்டின அவர் கால்கள். அங்கும் அதே வாய்ப்பாட்டு.

வழக்கமான வசைமொழிகள்தான். தனியொருவரைச் சுட்டாது, பொதுவில் பொழியும் உச்சகுரற் சங்கீதம்.

தெரியும் அவர்களுக்கு அத்தனையும் மடிவலை கரையேறும் வரைதான். பிறகு அவர் வாயில் வருவது வாப்பா, மகனே, சீதேவி, தங்கம் என்பனதான்.

உச்சி வெயிலின் உக்கிரம் படியுமுன் வலை கரையேறியது. எதிர்பார்த்தபடி அன்று பாரைமீன் கும்பல் மடிவலையை நிரப்பியிருந்தது. மடிதாங்கி போட்டுக் கரை சேர்த்தனர். மீராப்பிள்ளை தனது வாட்டசாட்டமான உடலுக்கு ஏற்றபடி மற்றவர்களோடு இயங்கினார்.

மடிவலையுள் சிறிதும் பெரிதுமாய் மீன்கள் தமது இறுதி மூச்சு அடங்கும்வரை துடியாய்த் துடித்தன. ஆனால் அவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தவர்களுக்கோ நீண்ட நாட்களின் பின் பிடிபட்ட ஒரு பெரும் மீன்பாடு என்பதால் உச்சிமுதல் உள்ளங்கால்வரை குதூகலம்.

வலையிலிருந்து மீன்கள் கரைக்குத் தூக்கிவரப்பட்டன. மணலில் குவிக்கப்பட்ட மீன்களுக்கு வியாபாரிகள் ஏலமிட்டனர். கல்முனைக்குடி மீராசா முதலாளி பெருந்தொகை கொடுத்து அனைத்தையும் வாங்கிக் கொண்டார். அன்று மீராப் பிள்ளைக்கும் கைகொழுத்த வரவு. மற்றவர்போல் சந்தோஷத்தால் பூரித்தார்.

❖❖❖❖

கணவன் கடற்கரைக்குப் போனதும் ஜமீலா வழமைபோல் இயங்கினாள். இரண்டு குழந்தைகள் ஜமீலாவிற்கு. பொருளாதாரம் குறைந்திருந்தாலும் குழந்தைப் பாக்கியத்திற்குக் குறையிருக்கவில்லை அவர்களுக்கு.

கைக்குழந்தை பாலுக்கு அழுதது. அதன் அழுகுரல் கேட்டு அடுத்ததும் விழித்துக் கொண்டது. அதனையும் அணைத்துக் கொண்டு முந்தானையால் மூடி குழந்தைக்குப் பாலூட்டி மீண்டும் தூங்கவைத்தாள்.

மூத்ததுக்கு வயது மூன்றேதான். அதற்கான காலைக் கடன்களையும் முடித்துக்கொண்டு மீண்டும் தனது வழமையான வேலைகளில் கருத்தானாள்.

கிணற்றடியில் கிடந்த குழந்தைகளின் அழுக்கு உடைகளோடு கணவனின் உடைகளையும் கழுவத் தொடங்கினாள்.

மீராப்பிள்ளையின் நேற்றுடுத்த சிறுவாலில் களிமண் கறை அப்பிக் கிடந்தது. சிறிது நேரம் அதனையே பார்த்துக் கொண்டிருந்த ஜமீலாவின் கண்கள் பனித்தன.

தினமும் தங்களுக்கான கணவனின் அயராத உழைப்பை எண்ணிப் பூரித்துப் போனாலும் உடலுழைப்பின் வருத்தத்தை எண்ணி நெகிழ்ந்தது அவள் மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் கடற்கரை. மாலையில் மேட்டுவட்டை நெல்வயல். நேரங் கிடைத்தால் சொந்தத்தில் சாப்பூட்டில் போட்டிருந்த நெசவுத்தறியில் சோமனும் நெய்வார். ஓய்வில்லாத உழைப்பாளி அவர்.

வேலைச்சுமை அதிகரித்த நாட்களில் இரவில் அவர் உடலயர்ச்சியினால் படும் பாட்டை அவள் விழித்திருக்குங் கண்கள் வாங்கும். மனம் விம்மும். அவளை அறியாமலேயே விழிகள் கனக்கும்.

இதமாகக் கால்களைப் பிடித்துவிடுவாள். அதன் சுகம் உணர்ந்தோ, உணராமலோ மீராப்பிள்ளை கண்ணயர்ந்து தூங்குவார்.

❖❖❖❖

மருதமுனை, கிழக்கு மாகாணத்தின் ஓர் அழகிய கிராமம். ஒருபுறம் வயலும் வயல்சார்ந்த பூமியும் கூடிய மருதம், மறுபுறத்தில் வங்கப் பெருங்கடல் ஒன்றிய நெய்தலை எல்லையாகக் கொண்டது.

மற்றிரு புறமும் இரண்டு சகோதர இனஞ்சார்ந்த பாண்டிருப்பு, பெரிய நீலாவணைக் கிராமங்கள். மொழியால், கலாசாரத்தால் பெரிதும் ஒன்று பட்டு ஒருவரோடொருவர் அண்ணன் தம்பியாய், காக்கா தம்பியாய் இரண்டறக் கலந்து வாழும் தாய்மண்.

இறைவனின் கொடையாக வயலளிக்கும் நெல்லும், கடலளிக்கும் மீனும், மக்கள் பஞ்சமின்றி வாழ உயிர்க் காப்பளித்தன. போதாமைக்கு நெசவுத்தொழிலில் கிடைக்கும் வருமானம் வறுமையென்ற நிலைமையே ஊருக்குள் வராவிடாது பக்கபலஞ் சேர்த்தது.

மருதமுனைச் சோமனுக்கும், கம்பாயத்திற்கும் மவுசு அதிகம். வண்ணவண்ணச் சோமன் புடவைகள் ஊரிலும், சுற்றுவட்டாரத்திலும், ஊர்கடந்தும் நன்கு விலைபோயின.



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் உருவாக்கம் புதுமையானது. பெரும் அண்டாப் பானைகளில் கொதிக்க வைக்கும் நீரில் வண்ணக் கலவையிட்டு நூலை அதனுள் ஆழ்த்தி அவிய விட்டு, பின்னர் வெயிலில் காயவிடுவர்.

காய்ந்தபின் நூல் சுற்றுகளைப் பாவோடி, கஞ்சியிட்டுச் சறுக்காலில் இட்டுத் தார்குழல்களில் சுற்றியெடுப்பர். பின்னர் தறிகளில் பொருத்தி நெய்வார்கள். வீட்டுக்கு ஒரு நெசவுத்தறி இருக்கும். குழித்தறியும் ஊரில் பிரபலம்.

இறைபக்தி மிக்க மருதமுனை மக்கள், தொழுகைக்கு இரண்டு பள்ளிகள். வடதெரு, தென்தெரு என்று. புரிந்துணர்வோடு வாராவாரம் இரண்டு பள்ளிகளிலும் மாறிமாறி வெள்ளிக் கிழமைத் தொழுகை நடைபெறும்.

வெள்ளைச் சாறம் வெள்ளைச்சட்டை, தலையில் தொப்பி. ஆண்களும் சிறுவர்களும் தினமும் ஐந்து வேளையும் பள்ளியில் சங்கமிப்பர். வெள்ளிக் கிழமை விடுமுறைநாள். அன்று பள்ளிவாயில் நிரம்பி வழியும்.

கல்விக்கென இரண்டு பள்ளிக் கூடங்கள். ஆண்களுக்கு ஆண்கள் பாடசாலை என்றும், பெண்களுக்குப் பெண்கள் பாடசாலை என்றும் வேறுவேறாய் இயங்கின.

பாகுபாடில்லாமல் அனைவரும் அங்குக் கல்வி கற்றனர். ஆரம்பக் காலத்தில் சகோதர சமூகஞ் சார்ந்தவர்களே ஆசிரியர்களாகக் கற்பித்தனர். பின்னர் முஸ்லிம்களும் கல்வியில் முன்னேற அவர்களும் ஆசிரியர்களாயினர்.

அண்டைய கிராமத்து மக்களுடன் ஒன்றிக்கலந்து உறவு கொண்டிருந்ததால், பிரதேசத்தின் அமைதிப் புலமாகவும் மருதமுனை விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்குடில்களும், ஓலைக் குடிசைகளுந்தான் மக்கள்வாழும் இல்லிடம். போக்குவரவுக்கு அகலமான "கிறவல்" வீதிகளும் உள்ளூர் நடமாட்டத்திற்கு மணல் ஒழுங்கைகளும் தான்.

பெரும் பணக்காரர்களோ, அடிமட்ட ஏழைகளோ இல்லாத நடுத்தர மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தனர்.

சண்டியர்களோ, குடிபோதைப் பாவனையாளர்களோ மருந்துக்கும் மருதமுனையில் இல்லாதிருந்தது ஒரு பெருமைக்குரிய வரலாறு.

வழக்கு விசாரணைகளுக்கு நீதிமன்றம் சென்ற வரலாறு மருதமுனைக்கு இருந்ததில்லை. விதானைமார் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்தனர். சிற்சிறு சர்ச்சைகளை அவர்களே தீர்த்து வைத்தனர்.

அடிபிடி சண்டைகள் இல்லாமல் வாய்ப்பேச்சில் தீர்த்துவிடும் பிரச்சினைகள் மட்டும் என்பதால் கோடு,கச்சேரி ஏறும் தேவை இல்லாமல் இருந்தது.

❖❖❖❖

**வ**ழமைபோல் அன்றும் மாலைவேளை மீராப்பிள்ளை வயலுக்குச் சென்றிருந்தார். பெருவாய்க்கால் அருகிலிருந்த வரவையொன்றின் வரப்பின் நடுப்பகுதியில் ஒரு சாணளவு மண்வெட்டியால் கொத்தி வக்கடையைத் திறந்துவிட்டார்.

அதனூடாய் அடுத்த வரவைக்குள் தண்ணீர் பாயத் தொடங்கியதும் அவர் மண்வெட்டியைத் தோளில் தாங்கிக் கொண்டு மற்ற வரவையை நோக்கி நடந்தார்.

சூரியன் மேற்கை நோக்கிச் சரியும் நேரம். முற்பகல் தொட்டுப் பகல்வரை உச்சிவெயிலில் கடற்கரையில் உருகிப்போன உடலுக்கு மாலைக் கதிரவனின் உட்டணம் உபாதை தரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்று மேனியோடு வயலின் வரப்புகளை வளையவந்தார். நெற்றியில் துளிர்த்த வியர்வையைச் சுட்டுவிரலால் துடைத்து விட்டார்.

இரண்டு ஏக்கர் நன்செய்நிலம், குத்தகைக்கு எடுத்து, மானாவாரிப் பயிர்ச்செய்கை செய்திருந்தார். நீரை மாந்திய பயிர்கள் தாய்பாலுண்ட சிசுவின் பூரிப்பில் திளைத்திருந்தன.

வீட்டில் தன் மனையாளிடம் பாலுண்ணும் தனது பிஞ்சு மகனை ஒருமுறை எண்ணிய மீராப்பிள்ளையின் மனம் நெகிழ்ந்தது.

வரப்புயர வளர்ந்து, பசுமை கொஞ்ச விரிந்துகிடந்த வேளாண்மைப்பயிர், காற்றுக்கு அசைந்து கண்களுக்கு விருந்தாகி, மனநிறைவைத் தந்தது.

அவரால் வெட்டிவிடப்பட்ட வக்கடையால் வழிந்தோடும் நீரின் சலசலப்புக்கு அஞ்சி, வரப்புகளில் துளையிட்டுப் பதுங்கியிருந்த சிறுநண்டுகள் வெளியேறித் திக்கறியாது ஓடிய காட்சி அவரின் இளகிய மனதைக் கனக்கச் செய்தது.

தொடர்ந்து நான்கு மாதங்கள் பகல் உணவின்பின், பாலுக்கு அழும் பிள்ளையைத் தாலாட்ட ஓடும் தாய்போல வயலுக்கு வருவார். அதனை அக்கறையோடு பராமரித்தார். அதன் பயனாய்ப் பொன் விளைத்தது பூமி.

விளைந்த பயிரை அறுவடை செய்து உப்பட்டிகளை ஒன்றாக்கிச் சூடு குவித்தனர் உதவிக்கு வந்தோர். அது வானுயர்ந்து குன்றுபோல் காட்சி தந்தது. இரண்டு இரவுகள் மலையெனக் குவிந்திருந்த சூடு தரைமட்டமாகியது.

சூட்டுக்களம் அமைத்து, அரக்குப் புதைத்து, வாரிக்காலன் எருமைகள் கொண்டு சூடடித்தனர். பகலில் அவரியில் ஏறிக் காற்றுவளம் பார்த்து, கடகத்தால் பொலி அள்ளியெடுத்துத் தூற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். கணக்கனால் பொலியளந்து பெருவாயனில் கட்டினர். ஏக்கருக்குப் பத்து அவணம் என அறுபது மூடைகள் அந்த வருடம் இருபது அவணம் தேறியது.

இம்முறை விளைச்சல் கையைக் கடிக்கவில்லை மீராப் பிள்ளைக்கு. அதிகமே தேறியது. சென்றவருடக் கடனையும் அடைத்தபின் கையிலும் நிறையவே காசு மிஞ்சியது.

பேசிவைத்தபடி களவெட்டிக்கே கொள்வனவு செய்ய முதலாளி வந்தார். நெல் விற்றுவந்த பணத்துடன் வீடுவந்து சேருமுன், ஊர்ச் சந்தியில் அகமதுமைதீனின் புடவைக் கடைக்குள் புகுந்து ஜமீலாவுக்கு ஒரு ஜப்பானின் சுங்குகட்டடிப் புடவையை வாங்கிக் கொண்டார். அதற்கேற்ற சட்டைப் புடவையும் அதே வண்ணத்தில் வாங்கினார்.

ஜமீலாவின் முகம் பூரித்துப் போனது. கையில் கிடைத்த சேலையும் பணமும் அவளை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினாலும், புருஷனின் கையில் வேறொன்றும் இல்லா திருப்பது அவளுக்குக் கவலையைத் தந்தது. வாய் முந்திக் கொண்டது.

"என்ன, நீங்க ஒங்களுக்கு ஒண்டும் சாறன் கீறன் வாங்கல்லிய?" என்றாள்.

மீராப்பிள்ளை சிரித்தார். "எனக்கென்னத்துக்குப் புதுச் சாறன் புள்ள? எங்க உடுத்துக்குப்போக? வெள்ளிக்கெழும கொத்துவாக்கு உடுத்துக்குப்போக ரெண்டு எண்பதுக்கு எண்பது வெள்ளைச் சாறன் இரிக்கி. போதாத? விடிஞ்சா கடல், பின்னேரம் மேட்டு வட்டை. அதுக்குள்ள புதுச்சாறன் வேணும்?"

ஜமீலாவுக்கு நெஞ்சுக்குள் சுளீரென்றது. அவர் சொன்னது உண்மைதான் என்றாலும் தங்களை வாழவைக்க அவர் படும் பாட்டினை எண்ணி நெகிழ்ந்தாள்.



PUBLIC LIBRARY MARUTHAMUNAI MUNICIPAL COUNCIL KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீலாவுக்குக் காக்காவுந் தம்பியுமாய் உடன் பிறப்புகள் இருவர். அவர்கள் வழியில் அவள் பயனற்றுப் போயிருந்தாள்.

உடன் பிறந்தவளுக்காய்ச் செப்புக்காசுக்கும் அவர்கள் நாதியற்றிருந்தார்கள். மூத்தவர் சேகுமதார். வசதி இருந்தும், வழங்க மனமிருந்தும், பொண்டாட்டி தாசர். அவள் கீறிய கோட்டைத் தாண்டமாட்டார்.

பாத்துமுத்து வாய்காரி. கைக்கூலி சீதனத்தோடு வந்த திமிர் அவள் மண்டையுள் மலிந்து கிடந்தது.

தம்பி மகுமூது. வாத்தியார் ஒருநாள் அடித்தார் என்று, படிப்பைப் பாதியில் கைவிட்டுவிட்டுப் பொறுப்பற்று ஊரளந்தான். சேகுமதார் வீட்டில்தான் சோறும் படுக்கையும். அவன் வழியில் மனைவியின் நச்சரிப்பு இருந்தாலும், கூடப்பிறந்த பாசம் அதனை வென்றது.

பொறுப்போடு மகளுக்கு ஒரு நல்ல வரன் தேடித் திருமணம் செய்து கொடுத்தகையோடு, ஓரிரு வருடத்துள் அடுத்தடுத்துப் பெற்றவர்கள் இருவரும் மண்ணுக்குத் தீனியாகினர்.

ஜமீலாவுக்குப் பாயிழைக்கத் தெரியும். பனையோலைப் பெட்டியும் பின்னுவாள். சாயம்போட்ட கற்பன்னும், கிராம்பன்னும் எப்போதும் அவள் வாசற் கொடிகளில் காய்ந்த வண்ணமிருக்கும்.

அத்திராசிப்பாய் இழைப்பதில் அவளுக்குப் பயிற்சி அதிகம். தகப்பன் படிப்பறிவைத் தராவிட்டிருந்தாலும், தாய் தன் கைப்பணித் திறனை மகளுக்குத் தாராளமாகத் தந்திருந்தாள்.

பச்சைப் பனையோலையைச் சுடுமணலில் பரத்தி, வெயிலில் காய்ச்சி, அளவளவாய்க் கிழித்துச் சாயங் காய்ச்சி, பற்பல வண்ணக் கலவையோடு பெட்டிகள் செய்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பெட்டி, கால்வைத்த ஈற்றடுக்கு அஞ்சறைப்பெட்டி, தட்டு, காசு போடுங் குட்டான்- இத்தியாதி அவள் கைவண்ணத்தில் பொலிவுபெறுவன.

வீட்டு வேலைகளோடு வெட்டியாய்க் காலத்தைக் கழிக்காது அதனைப் பயனுறச் செய்வதில் ஜமீலா மனநிறைவு கண்டாள். அது குடும்பச் செலவுக்கும் பக்கபலஞ் சேர்த்தது.

❖❖❖❖

நீண்டுயர்ந்து இலையடர்ந்த மாமரத்து நிழலில் பன்பாய் விரித்துப் படுத்துக் கிடந்தார் மீராப்பிள்ளை. அது ஒரு மாலைப் பொழுது. அன்று அவர் வயலுக்குச் செல்லவில்லை. நிலத்தின் சூடடங்கி மெல்லிய தென்றல் சுற்றுச் சூழலைத் தனதாக்கிக் கொண்டநேரம்.

மாமரத்தில் ஓடிவிளையாடும் அணில்பிள்ளைகளின் "கீச்கீச்" ஒலியோடு எங்கிருந்தோ குரல்கொடுக்கும் ஆண்குயிலின் குரலுக்கு பதில் கூறும் பேடையின் "கூஊ....கூஊ...." கூவலும் சூழலை இனிமையாக்கியன.

கைக்குழந்தையை நெஞ்சில் அமர்த்தி, அவன் பிஞ்சுக் கரங்களைப் பற்றிக் சாஞ்சாட்டுப் பாடி அவனைக் கொஞ்சிக் கொண்டிருக்க, ஜமீலா தேநீர் கோப்பையுடன் வந்தாள். மூன்று வயது மூத்தவன் தாயின் முந்தானைத் தலைப்பைப் பற்றியவாறு கூடவே வந்தான்.

"இஞ்சயிங்க, இந்தாங்க தேத்தண்ணி. புள்ளையக் கீழ் வெச்சுப்போட்டு இதக் குடியுங்க," என்றாள் பரிவோடு.

அவர் அவனைக் கீழிறக்கத் தூக்கியபோது அவரது அந்தச் செய்கை பிடியாதவன்போல, விட்டானே ஒரு "சூ". அது மீராப்பிள்ளையின் தலை, முகம் அனைத்தையும் ஒன்றென அபிஷேகஞ் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியின் செய்கை மூத்தவனுக்குச் சிரிப்பையூட்ட அவன் கைகொட்டி நகைக்கலானான். கணவன் மீது சின்னவனின் மூத்திராபிஷேகம் ஜமீலாவுக்கும் சிரிப்பை ஊட்டினாலும் அடக்கிக்கொண்டாள்.

மீராப்பிள்ளைக்கோ மகனின் சிறுநீர் குளிப்பு பன்னீர் மழையில் நனைந்த களிப்பையூட்ட வாய்விட்டுச் சிரிக்கலானார். இப்போது ஜமீலாவும் அவரோடு சேர்ந்துகொண்டாள். மகிழ்ச்சியாய் நகர்ந்த அந்த மாலைக் கருக்கலில், முன்வேலிப் படலையைக் கடந்தபடி வளவுக்குள் நுழைந்தான் ஜமீலாவின் தம்பி மகுமூது.

நீண்ட நாட்களின்பின் வந்த தம்பியைக் கண்டதும் உடன்பிறந்த உள்ளம் உவகையுற்றது. இருந்தும், காரணமின்றி வளவுக்குள் கால்பதியாத அவனை எண்ணி மனதுக்குள் ஏதோ உறுத்தியதை ஜமீலா உணர்ந்தாள்.

கையில் காசு முற்றும் கரைந்து போனால் மட்டுமே அவள் வீட்டுத்திசை நோக்கும் அவன் கண்கள். வேலையில்லாமல் வெட்டியாய் ஊர் சுற்றுகின்றானே என்ற ஆதங்கம் அக்காளுக்கு.

சகோதரி சற்றுக் கறாரென்றாலும், மைத்துனரின் இளகிய மனத்தை நன்கு புரிந்து வைத்திருந்ததால், அவ்வப்போது அவர்களிடம் காசு கறக்க அவனால் முடிந்தது.

"வாடா மகுமூது. என்னடா வாடக்காத்து மாறியடிக்குதோ?" என்றாள் தம்பியின் முகத்தைப் பார்த்துக் கொஞ்சம் ஏளனமாக. மகுமூதின் முகம் சற்றுக் கூம்பியது. அவனை அறியாமலேயே வார்த்தைகள் சிதறின.

"என்கடிச்சிநீ, வராட்டியும் ஏசுறாய். வந்தாலும் ஏதாச்சும் செல்லுகாய். நான் வாறது ஒனக்குப் புடிக்காட்டிச் செல்லு. வராமலே உட்டுறன்," என்றான் சற்று வெறுப்பைக் காட்டியவனாகத் தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் ..டேய்.. பகிடிக்கிச் சென்னன்டா. கோவிக்காதடா கிளி," என்று தனது தவறை உணர்ந்தவள்போல சொல்லிவிட்டு, அதனைச் சமாளிக்கும் பாங்காய்....,

"நீ இவடத்த மச்சானோடயும் புள்ளையளோடயும் இரி, மிச்ச நாளைக்கிப் பொறகு வந்திரிக்காய். நான் ஒனக்கு தின்ன ஏதாச்சும் எடுத்துக்கு வாறன்," என்றபடி ஜமீலா எழுந்தாள்.

"வாங்க மச்சினன் வாங்க, எப்பிடி சொகமா இரிக்கயள? காக்கா, பொண்டாட்டி புள்ளயளெல்லாஞ் சொகந்தானே?" என்றார் சம்பிரதாயமாக மீராப்பிள்ளை.

அண்ணன் வீட்டில்தான் மதினியின் குத்துக் குடைச்சலுக் கிடையில் வெற்றுச் சோற்று மாப்பிள்ளையாகக் காலத்தை கடத்துபவன் மகுமூது என்பதால், கேள்வி அவனோடு நில்லாது நீண்டது.

"ஓம் மச்சான், எல்லாரும் நல்லா இரிக்கினம்," என்றபடி மூத்தவனை இழுத்து மடியில் அமர்த்திக்கொண்டான் தாய்மாமன்.

சற்றைக்குள் அடுப்புச் சுடுசாம்பலில் வெந்த தோலுரித்த மரவள்ளிக் கிழங்கு ஒரு கையிலும், தொட்டுக்கொள்ள மிளகாய்த் துண்டுகளிட்ட உப்புத்தண்ணி கிண்ணத்தை மறுகையிலும் எடுத்துவந்த ஜமீலா அவர்களுடன் இணைந்துகொண்டாள்.

"சுட்ட மயிறுக்கெழங்குடா, புட்டுப் போல நல்லா அவிஞ்சிக்கி. தின்னு" என்றவாறு தம்பியிடம் தந்தாள். அவள் அதனைத்தர மடியிலிருந்த மருமகனை அருகில் அமர்த்திவிட்டு வாங்கிக் கொண்டான். பலநாட்கள் சென்றுவந்த தம்பிக்கு எதையாவது தந்துவிட வேண்டுமென்ற விருப்பம் ஜமீலாவுக்கு.

கொண்டுவந்தவற்றை அருகினில் வைத்துவிட்டு, "மச்சான், இப்ப நான் வந்ததென்னவெண்டா, ஒங்க ரெண்டுபேரோடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானொள்ளுப்பம் கதைக்க வேணும்," என்று வார்த்தைகளைத் தொடராது நிறுத்தினான்.

ஜமீலா தன்னைச் சுதாரித்துக்கொண்டாள். வழக்கமாய்ச் சில்லறைக்கு வீடு தேடிவருபவன், இப்போது ஏதோ மொத்தமாய்க் கறக்க வந்திருக்கின்றான் போல என மனத்துள் யூகித்தாள்.

நேத்து காக்காட பொம்புளப் புள்ளக்கி காச்சலுக்கு ஓதிப் பாத்து "துஆ" கட்ட, பரிசாரியார் கண்டியார் வந்திருந்தார். அப்ப நான் ஊட்டதானிருந்தன்.

"என்னக் கண்டு "இப்ப என்னம்பி செய்யிறயள்" எண்டு கேட்டார். அப்ப மச்சி சென்னா "அவரென்ன செய்யிற. சும்மாதான் நேரத்துக்குச் சோத்தத் தின்னுகதும், ஊரச் சுத்திப்போட்டு வந்து படுக்கதும்தான்" எண்டா.

"எனக்கி வெக்கமா போச்சி மச்சான். வாறவிய போறவி எல்லாருக்கிட்டயும் இப்பிடிச் செல்லி என்ன கேவளப் படுத்துறா" என்ற அவன் கண்கள் கலங்கின.

ஜமீலாவுக்கு நெஞ்சுக்குள் தணல்சட்டியைக் கொட்டிவிட்டது போலிருந்தது. எப்படி இருந்தாலும் தானாடாவிட்டாலும் தன் தசையாடும் என்பார்களே. அதுபோல. கோபத்தால் வாய்பாறினாள்

"டேய், நீ என்னடா அவள்ள வாப்பாட சொத்திலயாடா தின்னுகாய்?. தேவ....ள். நீ ஒண்ட காக்காட ஒளப்பில தானே தின்னுகாய். என்னத்துக்கிடா நீ கேட்டுக்கிட்டு இரிக்காய்? திருப்பி ரெண்டு கேக்க வேண்டியது தானே?" வெட்டிப்பயலுக்கு வாய்வராது என்பதை அவள் உணரவில்லை.

கணவனுக்குப் புரிந்தது. எட்டாம் வகுப்புப் படித்துவிட்டு, வேலைவெட்டி இல்லாமல் தண்டச்சோறு தின்றுவிட்டு, ஊர்சுற்றுபவனுக்கு யார்தான் பக்கநலம் பேசுவார்கள்?. இதை அவர் மனத்தில் நினைத்தாரே தவிர வாய்விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுமூது தொடர்ந்து பேசினான். "மச்சி அப்பிடிச் சென்னதும் பரிசாரியார் "நீ என்னோட கண்டிக்கி வாறய தம்பி, நானொன்ன கடையொண்டில சேத்துடுறன் எண்டார். மச்சியும் நல்லமெண்டு செல்லிட்டா." என்று முடித்தான்.

கண்டியாருக்குச் சொந்தவூர் மருதமுனைதான். அங்குதான் திருமணம் முடித்திருந்தார். இரண்டு குழந்தைகளுடன் இவரைத் தனிக்கவிட்டு அவர் மனைவி இறந்துபோக, அவர் தன் இருப்பிடத்தைக் கண்டிக்கு மாற்றிக்கொண்டு அங்கேயே இரண்டாம் மனையையுந் தேடிக்கொண்டார்.

நாட்டுவைத்தியத்தில் கைராசிக்காரர். நோய்க்கு மருந்து கொடுப்பதுடன், ஷைத்தானை விரட்டவும் வேலைகள் செய்பவர். ஓதி ஊதுதல், தண்ணீர் ஓதிக் குடிக்கக் கொடுத்தல், இசும் எழுதிக் கொடுத்தல், துஆ கட்டுதல் போன்றவையும் செய்வார்.

பில்லி சூனியம் எடுப்பதும், பேயோட்டுவதும், குறளிகாட்டுவதும் மேலதிகச் செயற்பாடுகள். ஏதுமறியாத கிராமத்து மக்கள் அவரை முற்றாக நம்பினர்.

காடாறு மாதம் நாடாறு மாதம் என்பதுபோல மூன்று மூன்று மாதங்கள் மாறிமாறி வைத்தியம் செய்யும் அவருக்குச் சொந்த ஊரில் "கண்டியார்" என்றும், மலைநாட்டில் "மட்டக்களப்பார்" என்றும் அடைமொழி வைத்து வைத்தியர் என்பார்கள். மருத்துவத்தோடே, மந்திரமும், தந்திரமும் நன்கே அறிந்து வைத்திருந்த கெட்டிக்காரரர் அவர்.

அவன் சொன்னவற்றைக் கேட்டதும் கணவனுக்கும் மனைவிக்கும் வியப்பாக இருந்தது. அவர்கள் குடும்பத்தில் யாரும் பக்கத்து ஊர்களைத் தவிர வேறு தொலைதூரம் போய்ப் பழக்கமற்றவர்கள். திடீரென அவன் கண்டிக்குப் போகவேண்டும் என்றதும் பதிலென்ன சொல்லுவதென்று தெரியாமல் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியைக் கலைக்க மீராப்பிள்ளையே பேசினார். "நீ என்னம்பி சென்னாய்?" என்று அவன் முடிவறியக் கேட்டார். வெறுமனே ஊர்சுற்றி வெற்றுச்சோறு தின்று காலத்தை ஓட்டுவதிலும், ஊர்விட்டு ஊர்போய் உழைத்துத் தின்பதி லொன்றும் குறைவில்லை என அவர் மனம் எண்ணியது.

"நானொண்டும் செல்லல்ல மச்சான். மச்சிக்கெண்டா முழுப்புறியம். அவ சென்னா காக்கா தலையத்தான் ஆட்டுவார். ஒங்க ரெண்டுபேருக்கும் புறியமெண்டா நான் ஓமெண்டு செல்லுகன்" என்றான் பதிலுக்கு.

ஜமீலாவுக்கு என்ன சொல்லுவதென்று புரியவில்லை, அடிக்கடி வராவிட்டாலும் தம்பி ஊரில்தான் இருக்கின்றான் என்ற திருப்தியிருந்தது அவளுக்கு.

ஊரைவிட்டுக் கண்காணாத தொலைதூரம் போய்விட்டால் எப்போது அவனைப் பார்ப்பது என்ற கவலை அவள் மனத்துக்குச் சங்கடத்தைத் தந்தது. இறுதியாய் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு,

"இஞ்சயிங்க, நீங்க என்ன செல்லுகயள்?" என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

"தொழில் ஒண்டுமில்லாம சும்மா இரிக்கத்தப் பாக்கிலும் தொழிலுக்குப்போய் நாலுகாசு தேடுறங்கிறது நல்லது தானே புள்ள."

"தூரந்தான் எண்டாலும், ரெண்டுமூணு மாசத்துக்கொருதரம் ஊருக்கு வந்து போகலாந்தானே!"

"என்ன, தண்ணிக் கப்பல்லைய போகப்போறார், கோச்சிலதானே! வேணுமெண்டா ஒருநாளுட்டு ஒருநாளும் வரலாம்," என்றார் மீராப்பிள்ளை.

இடையிடை ஊருக்கு வந்து போகலாம், என்ற கணவனின் வார்த்தைகள் உடன்பிறந்தாளுக்கு மன ஆறுதலைத் தந்திருக்க வேண்டும். சற்று யோசித்தபின் அவள் பேசினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் செல்லுகதும் நல்லத்துக்குத்தான். மகுமூதுத் தம்பி. எப்ப கூட்டிக்கிப் போவாராம்? இவியட நக்குச்சோறு திங்கத்தக் காட்டி நீயும் ஔச்சி மனிசனாகிக் காட்டத்தான் வேணும்," என.

"வாற வெள்ளிக்கெழும கொத்துவாக்குப் பொறகு. புறியமெண்டா ஆயித்தமா இரிக்கச் சென்னார். இஞ்சருந்து வஸ்சில மட்டக்களப்புக்குப் போய், அங்கருந்து கோச்சில கண்டிக்கிப் போகவேணுமாம்."

ஒருவாறு பேசிமுடித்துப் போவதெனத் தீர்மானித்தபின், அவர்களின் விருப்பத்தோடு அங்கிருந்து புறப்பட்டான் மகுமூது.

❖❖❖❖

சகோதரியும் அவர் கணவரும் மனவிருப்போடு அவனை அனுப்பிவைத்ததும் போகும் தீர்மானத்தில் மகுமூது உறுதிகொண்டான். தனது கடந்தகால வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்படப் போவதை அவனால் உணர முடிந்தது.

நண்பர்களின் சேர்க்கை அவனை ஒரு பொறுப்பற்ற மனிதனாக வளர்த்திருந்தது. அவன் மனம் அவனது கழிந்துபோன நாட்களை ஒரு முறை நினைவிட்டுப் பார்த்தது.

எத்தனை எத்தனை சம்பவங்கள்! சம்பந்தா சம்பந்தமில்லாத விடயங்களிலெல்லாம் தன்னை மற்றவர்கள் ஈடுபடுத்த, தான் கருவியாக அமைந்ததை எண்ணி அவன் மனங்குமைந்தான்.

வாக்குரிமை இல்லாத வயதிலும் அரசியல் வினைகளில் அவன் தன்னை மற்றவர்களின் தூண்டுதலால் ஈடுபடுத்தத் தவறவில்லை.

பட்டிருப்புத் தொகுதியோடு ஒரேயொரு முஸ்லிம் கிராமமான மருதமுனையும் ஒன்றியிருந்த காலமது. இனமத பேதமற்று எல்லோரும் மொழியால் ஒன்றுபட்டிருந்த காலப்போழ்து. தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் எஸ்.எம்.இராசமாணிக்கமும், சுயேட்சை வேட்பாளனாக எஸ்.எதிர்மன்னசிங்கமும் பேட்டியிட்டனர்.



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்துவ அரசியல் என்னவென்றே மக்கள் அறியாத அக்காலத்தில் மருதமுனை இராசமாணிக்கத்தின் வாக்குக் கோட்டை. அவரது வெற்றியைத் தீர்மானிக்கும் கிராமமாக மருதமுனையே இருந்தது. தமிழரசுக் கட்சியை வெல்ல வைப்பதே அவ்வூர் மக்களின் அபிலாசை.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவை மக்கள் அனைவரும் தந்தை என்றே அழைத்தனர். இராசமாணிக்கத்தின் வெற்றியைத் தமது வெற்றியாகவே கருதிக் கொண்டாடினர். அதற்காக இரவுபகலாய்ப் பாடுபட்டனர். அவருக்கு விரோதமான தம்மவர்களையும் மக்கள் அடியோடு வெறுத்தனர்.

அப்போதெல்லாம் மகுமூதும் அவர்களுக்கு எதிரான செயற்பாடுகளில் முன்னிலைப்படுவான். இளைய இரத்தம் பின்விளைவுகளை எண்ணாது செயற்பட்டுக் கைகலப்புக்களிலும் ஈடுபட்டதுண்டு.

மருதமுனையில் சூதும், குடிப்பழக்கமும் இல்லாததால் அக்கெட்ட பாவச்செயல்கள் இளைஞர்களிடம் பற்றியிருக்க வில்லை. ஊர்க்கோடியில் பெரியநீலாவணையின் தொடக்கத்திலேயே சாராயத் தவறணை இருந்தும் அவர்கள் மதுவைக் கண்டதுமில்லை.

மகுமூது வெட்டியாய் ஊர்சுற்றினாலும் எந்தக் கெட்ட பழக்கத்திற்கும் தன்னைப் பழக்கிக் கொள்ளாதிருந்தான். அதற்கு கிராமத்தின் வாழ்வுமுறையும் ஒரு முக்கிய காரணியாகும். ஊர் நிலைமைகளை நன்கு அறிந்ததால்தான் கண்டி வைத்தியரும் கண்ணை மூடிக்கொண்டு அவனை அழைத்துச்செல்லத் தீர்மானித்தார்.

செல்லத் தீர்மானித்திருந்த நாளின் முதல்நாளே தனது கண்டிச்சீமைப் பயணத்தை அவன் நண்பர்களுக்கும் சொல்லியிருந்தான். போவதற்கு முன்னாடியே யாரிடமும் சொல்ல

வேண்டாம் என சேகுமதார் கட்டளையிட்டிருந்தார். அறிந்தால் அவனது மனத்தை மாற்றிவிடுவார்கள் என்ற அச்சமவருக்கு.

பயணத்திற்கு முதல்நாள் இரவு மகுமூதுவுக்குத் துயிலரசி துணைசெய்ய மறுத்தாள். கிராமத்தையும் குடும்பத்தையும் விட்டுச்செல்லும் கவலை ஒருபுறமும், தனது புதிய எதிர்காலம் எப்படி அமையப் போகின்றதோ என்ற சூன்யமும் அவனை விழிக்க வைத்திருந்தன.

❖❖❖❖

மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பை நோக்கி இரவு ஏழு மணிக்குப் புறப்பட்டது புகையிரதம்.

கரிக்கோச்சியின் கடகட ஓசை காதைக் கிழித்தது. அதில் பயணஞ் செய்து பழகிப்போன வைத்தியர் யன்னல் ஓரக் கண்ணாடியில் தலைசாய்த்துக் கண்ணயர்ந்தார்.

மகுமூதுக்கு முதலனுபவம். கண்ணாடியைத் திறந்தால் கரித்தூள் கண்ணுக்குள் போகும் என அனுபவம் கூறியிருந்ததால், புதுப்பழக்கம் பேசாதிருந்தது.

கருமை உறையும்வரை ஏறாவூர், வாழைச்சேனை, பொலன்நறுவை என நகரங்கள் தாண்டி, காட்டுவெளியையும் கண்ணுள் வாங்கிய மகுமூதுக்குத் தூக்கம் வந்தது. அவனும் அயர்ந்து போனான்.

"காப்பி காப்பி. கார்காப்பி," "வடே வடே" "முறுக்கு, பக்கடா, தைர்வடே!.........

மகுமூது அதிர்ந்து போனான். வாழ்நாளில் நடுச்சாமத்தில் என்றுமே கேட்டிராத அவலக் குரல்கள் அவனைத் திடுக்கிட்டு எழும்ப வைத்தன.

கண்விழித்ததும் கிழவரைப் பார்த்தான் அவர் விழித்துக் கொண்டிருந்தார். அது கல்லோயா புகையிரத நிலையம்.

"கோப்பி வேணுமா தம்பி" என்றார். அந்தவேளையில் கோப்பி குடித்துப் பழக்கமில்லாததால் அவன் "வேண்டாம்" என்றான். அவரும் அவனை நிர்ப்பந்திக்கவில்லை. கண்டிப் புகைவண்டி தனக்கான பெட்டிகளைத் தாங்கியவாறு தனக்கான சமிக்ஞை கிடைத்ததும், மீண்டும் கடகட மேளதாளத்துடன், குழலூதிப் புறப்பட்டது.

கண்டிப் புகையிரத நிலையம். இரவெல்லாம் ஓடிக்களைத்த சோர்வு நீங்க ஒரு நீண்ட பெருமூச்சுடன், மட்டக்களப்புப் புகைவண்டி வேகந்தணிந்து நின்றது.

கோச்சு வண்டியின் பக்கக் கதவுகளூடாகப் பயணிகள் இறங்குதளத்தில் அவசர அவசரமாகப் பிதுங்கி வழிந்தனர்.

தொடர்ந்து பயணம் செய்யாது இறுதியாய்த் தரித்தபோதும், எதிலும் வேகங் கொள்ளும் மனித மனம் இறங்கத் துரிதங்காட்டியது. வைத்தியரும் மகுமூதும் அவர்களில் இருவராகினர்.

கண்டியின் காலைப் பனிக்குளிர் காற்றோடு கலந்து, காதுக்குள் ஞொய் என்ற ஒலியோடு தோலைத் தடவ, மகுமூதுவின் கரங்கள் அவனை அறியாமலேயே ஒன்றோடு ஒன்று உரசிச் சூடாக்கிக்கொண்டன.

கைகளைத் தோள்மாற்றிப் பற்றிக்கொண்டு கூதலால் உடல் சிலிர்த்தான். உட்டணப் பிரதேசத்திலிருந்து மாற்றமான சீதோஷ்ணம், அவன் மனத்திற்கு இதமூட்டியது.

அவ்வேளையில் அவன் அறிந்திருக்கவில்லை, அவன் வாழ்விலும் அதுபோன்ற ஒரு குளிரான மாற்றம் நிகழவிருப்பதனை.

கிழவருக்குப் பெரிதாகவொன்றும் அக்காலைச் சீதளம் தேகத்தைத் தாக்கவில்லை. பழகிப்போன பழக்கத்தோடு,

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



அணிந்திருந்த தடித்த கோட்டும், ஒன்றுக்குமேல் ஒன்றாய் அணிந்திருந்த சாறமும் குளிரோடு எதிர்வாதம் செய்தன.

அவர் சாதாரணமாகவே இயங்கினார். இருவருக்குமான இரண்டு "டிறாங்குப்" பெட்டிகளையும் இளையவனே தூக்கிக் கொண்டான். வைத்தியரைத் தொடர்ந்து வெளி வாசலை நோக்கி அவனும் பின்தொடர்ந்தான்.

வைத்தியருக்குக் குடியிருப்பு கண்டியிலிருந்து பத்துக்கல் தொலைவிலிருந்த மடவளைக் கிராமம். இருந்தாலும் கலஹாவைத் தாண்டிய பட்டியகமவுக்கே தங்கள் பிரயாணத்தை அவர் தொடர்ந்தார்.

அங்குதான் அப்புசிங்ஹோ முதலாளி தனது சில்லறைக் கடையில் வேலைசெய்ய நல்ல தமிழ்தெரிந்த ஒரு பொடியன் வேண்டுமென்று அவருக்குச் சொல்லியிருந்தார்.

முதலாளிக்கு வைத்தியரின் வைத்தியத்தின்மீது அலாதி நம்பிக்கை. அவர்கள் இருவரும் நீண்டநாள் நண்பர்கள். அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

அவரது நெருங்கிய சொந்தத்துள் ஒருத்திக்குத் திருமணம் செய்து பல வருடங்களாகப் பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருந்தது.

அப்பிரதேசங்களில் மேல்நாட்டு வைத்தியம் பிரபலம் இல்லாதிருந்த காலமது. நாட்டு மருத்துவர்களை இறைவனின் கொடையென மக்கள் முழுமையாய் நம்பினர்.

மடவளையில் மட்டக்களப்பு வைத்தியரின் பிரபலத்தை யாரோ அவருக்குச் சொல்லியுள்ளனர். ஒருமுறை கடைக்குத் தொகையளவில் கொள்வனவு செய்யக் கண்டிக்கு வந்த அவர், அங்குச் சென்று வைத்தியரைச் சந்தித்திருக்கின்றார்.

அவரிடம் தன்து சொந்தக்காரியின் மகப்பேறில்லாத நிலமையைச் சொல்லியிருக்கின்றார். பெண்ணை நேரடியாகக்

கண்டு மருந்தோடு இன்னும்பல காரியங்கள் செய்யவேண்டும் என்று வைத்தியர் சொல்ல, முதலாளியின் ஒப்புதலும் பெறப்பெற்றது.

அடுத்த வாரமே கடைவிடயமாகக் கண்டிக்கு வந்த அப்புசிங்ஹோ முதலாளி, மடவளைக்கும் வந்தார். வைத்தியரையும் தன்னோடு அழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினார். மறுநாளே வைத்தியரின் வேலை தொடங்கியது.

மருத்துவத்தோடே, மந்திரமும், தந்திரமும் நன்கே அறிந்து வைத்திருந்த கெட்டிக்கார வைத்தியரான மட்டக்களப்பார், முதலில் கழிப்புக் கழிக்க வேண்டுமெனவும் அதற்கு வேண்டிய பொருட்களை ஆயத்தம் செய்யவுங் கூறி, அன்றிரவு நடுநிசியில் வேலையைத் தொடங்க வேண்டும் என்றும் சொன்னார்.

காரியங்கள் காற்றாய் நிறைவேறின. ஏழு கிணற்று நீருடன், ஏழுவகைப் பூக்களும், நூறு எலுமிச்சம் பழங்களும் ஒன்று சேர்த்து எடுக்கப்பட்டன.

குளித்து முழுகித் தூய வெள்ளைச் சேலையுடுத்துப் பிள்ளை வேண்டியிருந்த பெண் புதுப்பாயில் பக்குவமாய் அமர்ந்திருந்தாள். வைத்தியர் மந்திரம் முணுமுணுத்தார். முணுமுணுப்பு சொற்களாக மாறி வேகமும் பெற்றது.

"ஓம்.... பந்துக்கே பந்து.... இஸ்ராயீலுக்கே பந்து.... இஸ்ராயீலுக்கே பந்து.... ஓடாத தூரங்கள் ஓடிவந்த சக்கரம், ஏறாத மேடுகள் ஏறிவந்த சக்கரம்.... எட்டுத் திக்கும் பதினாறு கோணங்களுக்கும் ஓடியோடி விலகிவிலகிப் போகவே சுவாஹா சுப்,"

வினாடிகள் நிமிடங்களாகிக் கழிந்தவாறிருந்தன. வைத்தியர் உருக்கொண்டு கையுங்காலும் நடுங்கத் தொடங்கின. தலையும் ஆடியது. மீண்டும் மீண்டும் புதுப்புது மந்திரங்கள் ஜெபித்தவாறு காலத்தைக் கொன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருந்த பெரியவர்கள் பயபக்தியோடு பார்த்திருக்க, இளையவர்கள் அவர் நடுங்குங் கோலத்தைக் கண்டு கொடுப்புக்குள் நகைத்தனர்.

சேர்த்திருந்த பொருட்கள் ஒவ்வொன்றாக மந்திர உச்சாடனங்களுடன் பெண்ணின் தலையில் அபிஷேகஞ் செய்யப்பெற்றன. இறுதியில் எலுமிச்சம் பழங்கள் ஒவ்வொன்றாக அவளின் நெற்றிப்பொட்டில் வைத்துக் கூரிய எழுத்தாணிக் கத்தி கொண்டு வைத்தியர் வெட்டத் தொடங்கினார்.

மந்திர உச்சாடனம் காதைக் குடைந்தது. மணித்துளிகள் வரிசையாய்க் கழிந்தன. பழங்கள் இருஇரு துண்டங்களாகிப் பெண்ணின் இருபுறமும் வீழ்ந்தன. ஒன்று, இரண்டு, ஐந்து.பத்து என்று தொண்ணூற்று ஒன்பது பழங்களும் இருகூறாகி பெண்ணின் இருபுறமும் வீழ்ந்தன. எதுவும் புதிதாய் நடக்கவில்லை.

இறுதிப் பழம் வெட்டப்பட்டபோது வைத்தியர் கிடுகிடுவென முன்னிலும் உருக்கொண்டு ஆடினார். அப்போது அங்கு நடந்தது ஓர் எதிர்பாராத அதிசயம்.

வெட்டிய பழத்திலிருந்து செந்நிறத்தில் இரத்தங் கசியத் தொடங்கியது. பெண்ணின் கேசத்தின் நடுவகிடின் ஊடாக கசிந்த இரத்தம் முகத்திலும் வடியத் தொடங்கியது.

கண்களை இறுக மூடி இருந்த அவளுக்கு அது புரியா விட்டாலும், அது கண்ட அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றனர். 13812

கொடுப்புக்குள் சிரித்த சிறுவர்கள் பயத்தால் இருந்த இடத்தைக் காலிசெய்து யாரும் அறியாது மெல்ல நழுவத் தொடங்கினர்.

மருத்துவத்தோடே, மந்திரமும், மற்றவர் அறியாத தந்திரமும் நன்கே அறிந்தவரல்லவா வைத்தியர். எலுமிச்சம் பழத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் எப்படி வந்தது என்ற சூட்சுமத்தை அவர் மட்டுமே அறிவார்.

தனது முயற்சியில் முழுதும் வெற்றி கண்டவர்போல் காட்டிக்கொண்டு, முதலாளியின் முகத்தை அவர் கண்டு கொள்ளாதவாறு நோக்கினார். அது அதிர்ச்சியாலோ ஆச்சரியத்தாலோ வெளிறிக் கிடந்தது.

மாதங்கள் மூன்றுக்குள் மருந்தின் பலத்தால் அவள் கருத்தரித்தாள். மந்திரங்களும் வைத்தியரின் தந்திரங்களும் பெண்ணின் மனத்தில் நம்பிக்கையை ஊட்டின என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

❖❖❖❖

அப்புசிங்ஹோவுக்குப் பையனைக் கண்டதும் பிடித்துப் போயிற்று. அவன் வாட்டசாட்டமாக இருந்தான். மகுமூது வேலைவெட்டி இல்லாது வெட்டிச்சோறு தின்று, ஆலையடித் திடலில் கால்பந்து, கைப்பந்து போன்ற விளையாட்டுகளில் தனது காலத்தைக் நகர்த்தியவன். உடலை நன்கு வளர்த்திருந்தான்.

அவர் அவனுடன் தமிழில் பேசினார். சிங்களம் மட்டக்களப்புப் பையனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பது அவருக்குத் தெரிந்தவிடயம்.

வியாபாரத்துக்காகக் கடைக்கு வருபவர்களில் பெரும் பாலானவர்கள் தோட்டத்துத் தமிழ் மக்கள் என்பதால், அது அவருக்கு ஒரு பொருட்டாகவும் இருக்கப் போவதில்லை.

முதலாளியுடன் பொடியனுக்கான சம்பளம் முதலானவற்றைப் பேசிமுடித்ததும் வைத்தியர் மடவளைக்குப் புறப்பட்டார். அவர் பிரிவு மகுமூதுக்குச் சற்றுக் கவலையைத் தந்தது.

தான் தனித்து விடப்பட்டது போல உணரக் கண்கலங்கினான். புரிந்துகொண்ட வைத்தியர் அவனுக்கு ஆறுதல் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒள்ளுப்பமும் கவலப்படாத தம்பி. மொதலாளி நல்ல மனிசன். ஒன்ன புள்ளபோல நல்லா வெச்சிக்குவார். என்னமுமெண்டா எனக்கிக் கடுதாசி போடு. நான் வருவன்" என்றார்.

"நீங்க பயப்பட வாணாம் புள்ள. நீங்க எனக்கு மகன் மாதிரித் தானே. நீங்க ஒண்ணுக்கும் கவலப்பட வாணாம்," என்று முதலாளியும் தென்பூட்டித் தைரியம்தர அவன் அமைதியானான்.

பட்டியாமம் என்று தமிழ் பேசுபவர்களால் அழைக்கப்பெற்ற பட்டியகம என்ற கிராமம், பல இனமக்களும் ஒன்றித்து வாழும் ஒரு பிரதேசம். அன்றாடப் பொருள் கொள்வனவுக்கான கடைத்தெரு கிராமத்தின் மத்தியில் வேறாக அமைந்திருந்தது.

மூவினத்தாரும் பல்வேறு பொருட்களைக் கொண்ட கடைகளை வைத்துப் போட்டியின்றி வியாபாரம் செய்து வந்தனர். அப்புசிங்ஹோ முதலாளியின் கடையும் அங்குதான் இருந்தது. பலசரக்குக் கடையொன்றும், அதனை அடுத்து புடவைக் கடையொன்றும் வைத்திருந்தார்.

தோட்டக் குடிமக்களின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் அவர் கடைகளில் பெறமுடிந்தது. அதனால் அங்குக் கூட்டம் அதிகம். புதிய ஊழியனின் தேவைக்குக் காரணமும் அதுவே.

புடவைக் கடையின் பின்புறத்தில் அமைந்திருந்த அறை ஒன்றைக் கடைச் சிப்பந்திகளுக்காக முதலாளி தந்திருந்தார். அப்போதைக்கு அதில் ஒரு சிங்கள இளைஞன் தங்கியிருந்தான். அவனோடு மகுமூதுவையும் தங்கும்படி முதலாளி கூறினார். அவன் தமிழும் பேசியதால், கூட இருப்பதில் மகுமூதுவுக்குச் சங்கடம் ஏற்படவில்லை.

புதிய இடமும், மாறுபட்ட சீதோஷ்ணமும் மகுமூதுக்கு அன்றிரவு தூக்கத்திற்குத் தடையாய் அமைந்தன. காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளைத் திறக்கும் பொறுப்பு அப்புஹாமியின் வசமிருந்ததால் அவன் வழமைபோல எழுந்துகொண்டான்.

போர்வைக்குள் தன்னை முழுமையாகப் புதைத்துக்கொண்டு சுருண்டு கிடந்தான் மகுமூது. மலைக்குளிரின் கொடுமையை அவனால் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

"மே மல்லி, எலும்புங்க, எலும்புங்க. இப்ப விடிஞ்சி போனது தானே. சுறுக்கா எலும்புங்க. பீலிக்கு குளிக்கப் போகணுந் தானே"

மகுமூதுவின் தோளைப்பற்றி உசுப்பினான் அப்புஹாமி. அவனது மறுகையில் சூடான தேநீர்க் கோப்பையொன்றும் இருந்தது. புதிதாக வந்தவனை நன்றாகக் கவனித்துக் கொள்ளும்படி முதலாளி அவனுக்குச் செல்லி இருந்தார்.

"இல்ல ஐயா. செரியான கூதல்கொடுகுது. இன்னம் ஒள்ளுப்ப நேரம் படுக்கனே...."

"சீச்சீ, முதலாளி வந்தா கட தொறக்காட்டி ஏசுவான் தானே. எலும்புங்க. எலும்புங்க இந்தப் ப்ளேன்டீய குடீச்சிட்டு வாங்க...."

புதிய இடம், பொறுப்போடு வேலைசெய்ய வேண்டும் என மனம் உந்த, கையில் கிடைத்த சூடான பானத்தால் ஒருவாறு தன்னைச் சூடாக்கிக்கொண்டு அப்புஹாமியுடன் புறப்பட்டான் மகுமூது.

அவனுக்குப் புதுமையான ஒரு அனுபவம். வேலைவெட்டி இல்லாமல் ஊரில் இருந்தபோது, உச்சிவெயில் உலகாளத் தொடங்கு முன்தான் விழித்தெழுவான்.

இப்போது காலைப்பனி காதைத் துளைக்கும் வேளை கண்விழிக்க வேண்டிய கட்டாயம். அப்போது மற்றவர்களிடம் மச்சி சொல்லும் வாசகம் நினைவுக்கு வந்தது.

இருவரும் சிறிது தூரம் நடந்து, பாதையில் சரிவான பள்ளத்தில் குறுக்கிடும் தேயிலைத் தோட்டத்து ஒற்றையடிப் பாதையில் நடந்தனர். கவ்வாத்துச் செய்யப்படாத அடர்ந்த செடிகளினூடே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாய் நடந்தான் அப்புஹாமி. அது அவனுக்குப் பழகிப்போன பாதை என்பதால்.

புல்லிடையில் பதுங்கிக் கொழுந்து பறிக்கும் பெண்டிரின் கால்களில் குருதி குடிக்கும் அட்டைகள், மூன்று தசாப்த்தங்களாக பரம்பரை பரம்பரையாய், இந்திய வம்சாவளியினரின் இரத்தத்தை உறிஞ்சிவரும் பரம்பரையின் வாரிசுக்கள்.

மெல்ல நடந்தால் அவை பற்றிக் கொள்ளும் என்ற பாதுகாப்பு அவர்களின் நடையின் வேகத்தைக் கூட்டியது.

மலையிலிருந்து சிறுசிறு ஊற்றுகளில் கசிந்துவரும் நீர்க்கசிவுகள் ஒரே திசையில் ஒன்றாகிப் பள்ளத்தை நோக்கி வடியும்.

அதனை ஒரு இடத்தில் மடைகட்டித் தகையவைப்பர் மலையக மக்கள். அது எப்போதும் நிறைந்தபடியிருக்க எஞ்சிய நீர் ஒரு பீலியால் புறமொன்றில் வழிந்தோடிக் கொண்டிருக்கும்.

இவ்வாறு இயற்கையாகவும் அமைவதுண்டு. அதனைக் குளிக்கவும், உடைதோய்க்கவும் அவர்கள் பயன்படுத்துவர். அவ்வாறான ஒரு பீலிக்குத்தான் அப்புஹாமி மகுமூதுவை அழைத்துச் சென்றிருந்தான். எத்தனை வேகங்கூட்டி நடந்தும், சிறியசிறிய அட்டைகள் இருவரின் கால்களிலும் பற்றிக் கொண்டிருந்தன. மகுமூதுவுக்கு அவை அருவருப்பையும் அச்சத்தையும் தந்தன.

அப்புஹாமிக்குப் பழகிப்போனதால், அவற்றை நுட்பமாகத் தலையைத் தூக்கும் போது பெருவிரலாலும் சுட்டுவிரலாலும் பிடுங்கிச் சிறிது நேரம் விரலிடையில் வைத்தபடி உருட்டி அகற்றியதோடு நண்பனுக்கும் உதவினான்.

வெற்றிலை மென்று பழக்கப்பட்டவர்கள் புகையிலை கலந்த வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்தால், அவை தானாகவே கழன்று விழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீலியை அண்டியதும் ஏற்கனவே அணிந்த உடைகளைக் கழுவத் தொடங்கினான் அப்புஹாமி. அவன் வேலை முடியும்வரை அருகில் இருந்த பாறாங்கல் ஒன்றில் தன்னைக் குந்தவைத்துக் கொண்டான் மகுமூது. குளிரால் அவன் கைகால்கள் நடுங்கின.

அப்புஹாமி பீலியில் சீறிவரும் தண்ணீருக்குத் தலையை நீட்டினான். கூடவே "மல்லி, நீங்கலும் வாங்க நேரம் போறது தானே" என்றான்.

குளிரில் குளிக்க மனமில்லாவிட்டாலும், காலங்கடப்பதை எண்ணி அவனும் நீருக்குத் தலையை நீட்டினான். தோளில் பட்ட குளிர்ப்புனல் முதலில் மெய்சிலிர்க்க வைத்துப் பின்னர் உடலைப் பழக்கியது.

விடிந்தது முதல் மாலையாகும்வரை பகலவனின் தனியாட்சிக்குள் தோய்ந்து கிடக்கும் கிழக்கு மண்ணின் மைந்தன் மகுமூதுவுக்கு அது ஓர் இன்பமான அனுபவம். குளித்து இருவரும் உடைமாற்றிக்கொண்டு கடைக்குத் திரும்பினர்.

ஆரம்பத்தில் மகுமூதுவுக்குக் கடையில் ஓடுவான் பாடுவான் வேலைதான். பொறுப்புவாய்ந்த வேலைகள் தந்தால் இளைஞன் பயந்துவிடுவான் என்பது பலரை வேலையில் அமர்த்திப் பழக்கப்பட்டிருந்த முதலாளிக்குத் தெரியும். அவனும் சுமையறியாது இயங்கினான்.

அப்புஹாமி சிறிது சிறிதாகக் கடைக் காரியங்களைப் பழக்கினான். அவனுக்கு மகுமூதைப் பிடித்திருந்தது. பேதமறப் பழகினான். நண்பனுக்குத் தமிழ் தெரிந்திருந்ததால், இருவருக்கும் மொழி ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

பட்டியகமவிற்கும் சுற்றியிருந்த போப்பிட்டிய, வனஹாப்புவ, வட்டஹபொத்த, உடுதெனிய போன்ற சிறிய முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களுக்கு அக்காலை போதிய போக்குவரத்து இருக்கவில்லை. சுற்றியிருந்த தோட்ட லயங்களுக்கும் நடைராஜாவே வாகனம்.

அப்புசிங்ஹோ முதலாளி வியாபார நுட்பம் தெரிந்தவர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் பறிப்பவர். வாரம் ஒருமுறை நடக்கும் சந்தைப் "பொல"வில் வீதிக் கடை பரத்த வைப்பதோடு, கிராமங்களுக்கும் பெட்டி வியாபாரத்திற்கும் ஆள் அனுப்புவார்.

கிராமத்து மக்கள் நாணயமானவர்கள். ஒருவாரம் காசின்றிக் கடனுக்குப் பொருள் வாங்கினால் அடுத்த வாரமே அதை அடைத்து விடுவதால், கடன் கொடுக்கல் வாங்கல்களும் கணிசமாய் நடந்தது.

காலம் காற்றாய்க் கலைந்தது. ஆறு மாதங்கள் அகன்ற தடம் தெரியவில்லை மகுழுதுக்கு. சம்பளம் மாதம் ஐம்பது ரூபாய். வயிறுமுட்ட உண்ண மூன்றுவேளைச் சாப்பாடு. தேநீர். தங்குமிட வசதி.

"சும்மா கெடந்த முஸ்த்தபாவுக்குச் சுண்டலும் சோறும்" என்பார்களே. நாடுவாசாரியாய் வீதி அளந்தவனுக்குத் தொழிலுக்குத் தொழில், வருவாய்க்கு வருவாய். இளைஞன் ஒரு சுற்றுப் பருத்தும் போனான்.

கிடைத்த சம்பளத்தில் தாத்தா ஜெமீலாவுக்கு மூன்று முறை ரூபா பதினைந்து வீதம் பணமும் அனுப்பினான். வெறுமனே ஊரளந்த தம்பி, தொழிலொன்றுக்குப் போனதே அவளுக்குத் தலைகால் தெரியாத புளகாங்கிதம்.

இந்நிலையில் தம்பியின் உழைப்பைக் கண்ணால் கண்டதும் அவளுக்குச் சந்தோஷம் தாங்க முடியாதிருந்தது. அவளை அறியாமல் கண்கள் பனித்தன.

எல்லாவற்றிற்கும் மேலாகக் காக்காவின் மனைவியின் கடுஞ்சொற்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதும் அவளுக்குப் பெரும் திருப்தியைத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வகுப்புவரை மருதமுனை ஆண்கள் பாடசாலையில் சரிபுத்தீன் வாத்தியாரிடம் கணக்குப் பாடம் படித்திருந்தான் மகுமூது. இத்தனை நாளும் பயனற்றுப் போயிருந்த கூட்டலுங் கழித்தலும் தொழிலுக்கு வந்ததும் அவனுக்குப் பயன்படத் தொடங்கின.

அப்புஹாமி படியாதவன். இருந்தாலும் மனக்கணக்கில் விண்ணன். மகுமூது கணக்கெழுதிக் கூட்டி முடிக்குமுன் அவன் மனக்கணக்கில் மொத்தத்தைச் சொல்லிவிடுவான். அதற்குப் பல வருட அனுபவம் அவனுக்குக் கைதந்தது. கூட்டலில் போட்டி போட்டு எப்போதும் வெற்றிபெறுவது மனக்கணக்குக்காரன்தான்.

தலையில் பெட்டி சுமந்து வியாபாரம் செய்வது அந்தக் காலத்தில் ஒரு வியாபாரக் கலை. பலரும் அத்தொழிலில் ஈடுபட்டனர்.

புடவை வியாபாரிகள் வண்ணவண்ணப் பூப்போட்ட சீத்தை வகைகளைப் பொட்டணி கட்டி அதன் உச்சியில் ஒரு முழத்தடி கோத்துச் "சீலே புடவே", "சீலே புடவே", என்று கூவி விற்பார்கள்.

மட்டக்களப்புக் கிராமங்களில் சீன வியாபாரிகள் ஒருகாலத்தில் இப்படித் தெருத்தெருவாகச் சென்று வியாபாரம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். அதை மகுமூது அறிவான். அப்போது இப்படி ஒருநிலை தனக்கும் வரும் என அவன் எண்ணிப் பார்த்திருக்கமாட்டான்.

அப்புசிங்ஹோ முதலாளி தனது சிப்பந்திகளை இத்தொழிலுக்கு அனுப்புவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

புடவைப் பொட்டணி ஒன்றும், கண்ணாடி வளையல், சவர்க்காரம், போன்றவற்றை தனித்து ஒரு சதுரப் பெட்டியில் பொதித்து, வெளியிலும் தொங்கவைத்துத் தலையில் சுமந்து மலை ஏறுவர் வியாபாரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீலே புடவே" என்பது போல, சாப்புச் சாமான் என்ற பெயரோடு கூடிய பெட்டிக்காரர் "சோப்பு, சீப்பு, கண்ணாடி. வளையே....ல்" எனப் பெருங்குரலெடுத்துக் கூவுவார்கள்.

மலைகளில் மோதி எதிரொலிக்கும் அவர்கள் கூக்குரல் "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" எனபது போல லயத்துக் குடிகளின் காதுகளைத் துளைக்கும். இவர்களுக்கு அப்பிரதேசங்களில் மணிப்பொட்டிக்காரன் என்பது வழங்குபெயர்.

காப்பு, சீப்பு, முகப் பவுடர் வாங்கக் காத்துக் கிடக்கும் லயத்துப் பெண்குட்டிகள் காதுகளுக்கு இந்த முன்னறிவிப்புத் தேனாக இனிக்கும். அதற்காக அவர்கள் காத்துக்கிடப்பர்.

காலை தொட்டுப் பொழுது சாயுமட்டும் தமது வியர்வையைத் தேயிலைச் செடிகளுக்குத் தானமளிப்பதோடு, சருகு அட்டைகளுக்குத் தமது இரத்தத்தைத் தானமாக வழங்கும் பெற்றோர்களின் காதுகளில் அக்குரல் நாராசமாகப் பாயும்.

கையைப் பிடித்துக் காப்புப் போடுவதில் மகுமூதுவுக்குக் குதூகலம். எப்போதும் அவன் சாப்புச் சாமான் பெட்டியைத் தூக்குவதில் முந்திக்கொள்வான். அப்புஹாமி அப்பாவி. அலட்டிக் கொள்ளாமல் புடவைப் பொட்டணியைத் தலைதாங்குவான்.

தேயிலைச் செடிகளுக்கிடையில் புகுந்தோடும் ஒற்றையடிப் பாதை தோட்டத்து லயங்களைப் பிணைக்கும் நெடுங்கயிறு. இடையிடையே பூத்துக் குலுங்கும் கொன்றை மரங்களின் மஞ்சள் மலர்கள் காற்றோடு கலந்து பனிபடர்ந்த தேயிலைத் தளிர்களில் பரவிச் சீனத்து வண்ணச் சீத்தையின் வடிவு காட்டும்.

நீண்டுயர்ந்த சவுக்கு மரங்கள், மலைவாழ் மக்களின் உடலுரத்தைப் பறைசற்றவோ வானுயர்ந்து வளர்ந்தன?.......

அப்புஹாமியும் மகுமூதுவும் தொழிலுக்குப் பழக்கப்பட்டுப் போயினர். வாரத்துக்கு ஒருநாள் விரிந்து பரந்த அந்தப்



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்தைத் தமதாக்கிக் கொண்டு முதலாளியின் விருப்பப்படி இருவரும் பெட்டி சுமப்பர்.

ஆரம்பத்தில் மலையேறச் சிரமப்பட்டாலும் காலப்போக்கில் மட்டக்களப்பானுக்கு மலையகம் வாலாயமானது. மகுமூது உற்சாகமாகத் தொழில் செய்ய முதலாளி சம்பளத்தோடு தந்த கிம்பளமும் உதவியது.

கடலோடு கூடிய பரந்தகன்ற நிலப்பரப்பு. பார்க்கும் இடமெல்லாம் வீடுவாசல். விரிந்தகன்ற நெடுஞ்சாலை. இரவுபகலற்ற மனுப்புழக்கம். வீதிதோறும் வாகனங்கள்.

இவ்வாறான சூழலில் பழக்கப்பட்ட மகுமூதுக்கு ஆரம்பத்தில் மலையக வாழ்வு, தன்னை ஒரு இருட்டறையுள் கட்டிப்போட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தி இருந்தாலும், குறுகிய காலத்துள் அந்த வாழ்வுக்குப் பழக்கப்பட்டுப் போனான்.

என்னதானிருப்பினும் அந்த மக்களின் துயர் விஞ்சிய வாழ்வு அவனது நல்ல மனத்தை உறுத்தாதிருக்கவில்லை.

லயங்களில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் சோகம் நிறைந்த வாழ்வு அவனைத் துயரப்படுத்தினாலும், அதனை அவர்கள் தமதாக்கிக் கொண்டு வாழுகின்ற துணிவு அவனை வியக்கவைத்தது.

ஒருவேளை உணவுக்கே துயருறும் மக்கள், தோட்ட முதலாளித்துவத்தால் சுரண்டப்படுவதைக் காதால் கேட்டும், கண்ணால் கண்டும் வருந்தியிருக்கின்றான்.

ஒற்றையறைக் காமராக்கள் ஒன்றோடு ஒன்றாய் அடுக்கி வைத்ததுபோல் கட்டப்பட்டிருப்பது ஆரம்பத்தில் அவனுக்குப் புதுமையாக இருந்தது. அது ஆரம்பத்தில் மட்டக்களப்புக் கோச்சியை அவனுக்கு நினைபுடுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அறைகள் கொண்ட வீட்டில் வாழ்ந்து பழக்கப்பட்டவன் அவன். உள்வீடு, ஆலவூடு, சாப்பூடு, திண்ணை, அடுப்படி எனப் பல பிரிவுகள் கொண்ட வீடுகள் அவன் கிராமத்து வீடுகள்.

அழுக்கடைந்த ஆடை, எண்ணெய் காணாத கேசம். தோட்டங்களில் அவன் காணும் குழந்தைகளின் காட்சியிது.

பிசைந்து ஊட்டினாலும் பாதியை உண்ணும் பிள்ளைகள் வாழும் கிராமத்தில் வாழ்ந்த அவனுக்கு, அவை பரிதாபத்தைத் தோற்றுவிக்கும்.

தார்வீதியிலும் மணல் ஒழுங்கைகளிலும் திரிந்து வளர்ந்த கால்கள், கல்லிலும் முள்ளிலும் நடந்து பழகின. காலாகாலமாய், பரம்பரை பரம்பரையாய் மலைப்புல மக்கள் தினமும் அனுபவிக்குந் துன்பமது.

வீதிக்குவீதி வேண்டியன வாங்கக் கடைகளால் நிறைந்த தனது ஊரைப்பற்றி உள்ளம் மகிழ்ந்தாலும், வாரம் ஒருமுறை தங்களது வருகைக்காய்க் காத்துக்கிடக்கும் மக்களை எண்ணி அவன் மனம் நெகிழுவான்.

❖❖❖❖

கண்டியில் கலஹா குளிரோடு காற்றுங் கலந்த பிரதேசம். சில சமயங்களில் முன்னால் நடப்பவரை மறைத்துவிடும் மூடுபனி வேறு.

கோணிச் சாக்குகளை இரண்டாய் மடித்து, மூலைகளை ஒன்றுக்குள் ஒன்றைச் சொருகித் தலையில் தொப்பிபோல் அணிந்துகொள்வர் மக்கள். சிலவேளை தோட்டங்களில் வழங்கப்படும் தடித்த போர்வைகள் அவர்களுக்குக் குளிர் தாங்கிகளாக உதவும்.

பெரும்பாலும் தகடு வேய்ந்த வீட்டுக் கூரைகள், காற்றுக்கு ஈடுகொடுக்க மண் மூட்டைகளைச் சுமந்தவாறிருந்தன. சிறுசிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுகள் தேயிலைச் செடிகளால் போர்வை இட்டுக்கொள்ள. ஆங்காங்கே நீண்டுயர்ந்த மரங்கள் மண்ணின் வளத்துக்கான அடயாளங்களாக ஓங்கி நின்றன.

இரவுபகல் என்றில்லாது, எப்போதும் தூறும் மழை, அப்பிரதேசத்தைக் குளிர்ச்சியோடு வைத்திருக்கக் கதிரவனின் பொற்கரங்களும் குளிர்ந்தே காயும் புண்ணிய பூமியது.

காலைப் புலர்வுக்குக் காத்திராமல் அப்புஹாமி எழுந்து கொண்டான். பழக்கதோஷம் அவனைப் படுக்க விடவில்லை. மகுமூது குளிர் தாங்க மாட்டானாய்க் கையிரண்டையும் பின்னிக் கோத்துக் காலிடையில் இறுக்கியவாறு, கயிற்றுக் கட்டிலில் கூனிக்குறுகிக் கிடந்தான்.

இத்தனைக்கும் கனமான கம்பளிப் போர்வை அவனைத் தன்னுள் கபளீகாரம் செய்திருந்தது. அவனின் அந்தக் கோலத்தைக் கண்ட நண்பனுக்குச் சிரிப்புவந்தது.

பிறந்த மண்ணில் குளிரைக் காணாதவன். வேலைவெட்டி இல்லாததால், விடியும் வேளையின் விபரம் அறியாது தூங்கிக் கழித்தவன். "குப்பியில் வெயில் படும்வரை படுப்பவன்" எனக் காக்காபொண்டியால் கரித்துக் கொட்டப்படும் கையாலாகாதவன்.

கண்டிக் குளிரின் கதகதப்பில் தன்னைமறந்து தூக்கத்தைத் துணையாக்கிக் கொண்டிருந்ததில் வியப்பில்லைதான்.

சூரியன் தோன்றாவிட்டாலும் காலையை உணர்த்தும் சேவல்களின் விட்டுவிட்டு ஒலிக்கும் கூவலும் ஓங்கி ஒலிக்கும் கோயில் மணியும் பள்ளியின் "பாங்கோசை"யும் "பண்சல" வின் "பிரித்" பாராயணமும் இனியும் தூங்கக் கூடாத கட்டாயத்தை நியாயப் படுத்தியதோடு, கடை முதலாளியின் கண்டனக் குரலுக்கும் பயந்து அப்புஹாமியை உசுப்பேற்றிவிட்டன.

"அனே மல்லி, நெகிடபாங். விடிஞ்சி போனது தானே. எலும்புங்கோ புள்ள, எலும்புங்கோ!" மகுமூதின் முதுகில் நாலு தட்டுத் தட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் என்றால் திடுக்கிட்டு எழுந்திருப்பான். இங்கு நண்பனின் கையபிஷேகம் அவனை ஒன்றும் செய்யவில்லை. மாறாக இன்னுங் கொஞ்சம் இறுக்கிப் போர்த்துப் படுக்கவே செய்தான்.

வழைமைபோல் "பிக்பென்" மேசைக் கடிகாரம் விழித்துக் கொண்ட அலறல் அப்புஹாமியை உசார்ப்படுத்த ஒரு சுறங்கைக் குளிர்நீர் மகுமூதுவின் முகத்தில் குடிபெயர்ந்தது.

அவன் பதறியடித்து எழுந்துகொண்டான். புதிதில் மொழி அறியாதவர்களுக்குக் கற்றுத்தரும் பாலபாடம் சிங்களத்தில் அவன் வாயால் தடையின்றி அப்புஹாமிமேல் பொழிய. அவன் அதனை வாங்கிக் கொள்ளாதவன்போல் வாய்விட்டுச் சிரிக்கலானான்.

தினம்போல நண்பன் தந்த சூடான ஒரு கோப்பைக் காலைக் கோப்பி. நட்பைப் புதுப்பித்துக் கொள்ள இருவரும் "பீலி"க்குப் புறப்பட்டனர்.

முதலில் வழக்கம்போல அழுக்கடைந்த உடுப்புக்களைக் கழுவித் தேயிலைச் செடிகளில் சிறிது ஆலாட விட்டனர். பின்னர் பீலிக் குளிப்பு ஆரம்பமானது.

மலையகத்தின் தாழ்ந்த பிரதேசங்களில் மதுர மரங்களுக்கு அடியில் தோண்டித் துரவுகள்போல் கிணறுகளிருக்கும். அதிலூறும் நீர் மிக்க குளிர்ச்சியானது. சில வேளைகளில் நண்பர்கள் அவற்றையும் அனுபவிக்கத் தவறுவதில்லை.

குளித்து முடித்து இருவரும் கடைக்கு வந்தனர். என்றுமில்லாதவாறு அன்று முதலாளி அப்புசிங்ஹோ கடை வாயிலில் இவர்களுக்காகக் காத்து நின்றார்.

வழக்கத்திற்கு மாறான அன்றைய அவர் வரவு நண்பர்களுக்கு வியப்பைத் தந்தது. கடையைத் திறந்து அவருக்கு வழிவிட்டனர். அவர்முகம் வாடியிருந்தது. காரோட்டி காளிமுத்துவுங் கூட நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேர அமைதி. அவர் பேசினார். "பியசீலி அக்காட்ட சனிப்ப நே". என்று தொடங்கித் தனது மனைவி சுகவீனமுற்றிருப்பதாயும், உடனடியாக மடவளைக்குச் சென்று மட்டக்களப்பு வைத்தியரை அழைத்து வரவேண்டும் என்றும் சொன்னார்.

முதலாளியிடம் ஒரு "மொறிஸ் மைனர்" காரிருந்தது. மேற்கொண்டு பேச்சில்லாமல் இருவரும் காரில் ஏறிக் கொண்டனர். காளிமுத்து காரை மடவளை நோக்கி விரையவிட்டான்.

அது கலஹா தாண்டிக் கண்டிக்கு வந்து, குருணாகல வீதியில் பறந்தது. கட்டுகஸ்த்தோட்டைக் சந்தியில் வலப்புறம் திசைமாறி, மாத்தளை வீதியில் வேகமாகப் பயணத்தைத் தொடர்ந்தது.

வாகனத்தில் இருந்த மூவருக்கும் முதலாளியின் மனைவியின் மீது அதிக அன்பும் மரியாதையும் இருந்தன. மூவரும் பியசீலி அக்காவைப் பற்றிய சிந்தனையில் இருந்ததால் அதிகம் அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. அவளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதெனத் தத்தமது தெய்வங்களை வேண்டிக் கொண்டனர்.

மடவளைச் சந்தியை அண்டிய வாகனம் நேரே வத்தேகம வீதியில் சில நிமிடங்கள் ஓடி ஒரு வளைவில் நின்றது. அங்குதான் மட்டக்களப்பு வைத்தியரின் வீடுஇருந்தது. காளிமுத்து முன்னர் ஒருமுறை அங்கு வந்திருந்ததால் இடத்தை மனத்தில் பதித்திருந்தான்.

அவன் வாகனத்திலிருக்க மற்றைய இருவரும் வீட்டுக் கதவைத் தட்டினர். கதவு திறந்து கொண்டது. ஒரு குண்டுக் கிழவி கதவைத் திறந்தார். வைத்தியரின் மனைவி.

காலை வேளையில் தனக்குப் பரிச்சயமான மகுமூதைக் கண்டதும் கிழவிக்கு ஆச்சரியம். "என்ன, வாங்க உள்ள. இரிங்கோ", என்று இருக்கைகளைக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுமூது பேசினான். "வைத்தியரப்பா இல்லைய" என்றான். "உள்ள காமராவில ஈர. பொறுங்க வரச்சொல்ற", என்றபடி உள்ளே செல்லத் திரும்பினார் அவர்.

பேச்சுச் சத்தத்துக்கே வைத்தியர் வெளியில் வந்துவிட்டார். மகுமூதைக் கண்ட அவருக்கு வியப்பாக இருந்தது.

"என்னம்பி, விடியக்குள்ளேயே வந்திரிக்கயள். என்னசெரி பிரச்சினைய" என்றார்.

மகுமூது வந்த விபரத்தைச் சொன்னான். கூட்டிக்கொண்டு போகக் கார் கொண்டுவந்ததையும் சொன்னான்.

நண்பனின் மனைவிக்குச் சுகமில்லை என்றதும் வைத்தியர் துரிதமானார். ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு சாறன்கள் இடுப்பேறின. கறுப்புநிற "மரீனாபெல்ட்" இடுப்பை இறுக்க, வெள்ளைக் கோட்டும் துருக்கித் தொப்பியும் வைத்தியரை அலங்கரித்தன.

கோட்டுப் பைக்குள் இரண்டு மருந்து, மந்திரக் குறிப்படங்கிய நோட்டுப் புத்தகங்களோடு, எழுத்தாணிக் கத்தியும் இருந்தது.

கூடவே தனது பெரும் பொக்கிஷமான குளிகைப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். மனைவியிடம் விடைபெற்றார் அவர். பதிலுக்கு "அல்லாட காவலா போயிட்டு வார" என வழியனுப்பினார். வாகனம் வந்தவழி மீண்டது.

❖❖❖❖

பட்டியகம நகர் தாண்டிக் காற்கல் தொலைவில் இருந்தது அப்புசிங்ஹோமுதலாளியின் வீடு. முன்பக்கப் பூந்தோட்டத்தோடு கூடிய விசாலமான வீடு.

பழங்காலத்தில் "வளவுக்காரர்கள்" வாழ்ந்த விசாலமான பெரிய வீடு. பெருந்தொகைப் பணங்கொடுத்து முதலாளி அதைத் தனதாக்கிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட வராந்தா. நெடுப்பத்திற்கும் வேலைப்பாட்டுடன் கூடிய நாற்காலிகள் அழகு செய்தன. தோட்டத்தில் பல வகையான பூஞ்செடிகள் வண்ணவண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்கி வீட்டிற்கு அழகு சேர்த்தன.

நீண்ட சாய்மனைக் கதிரையொன்றில் சாய்ந்து கிடந்த முதலாளி மொறிஸ்மைனரின் இரைச்சல் சத்தம் கேட்டதும் வைத்தியரின் வருகைக்காகக் காத்திருந்தவர்போல வாசலுக்கு விரைந்து வந்தார்.

"எண்ட வெதமஹாத்மையா, எண்ட," என்றவாறு உடல்மடித்து வரவேற்றார்.

வைத்தியரை உட்கார வைக்கவும் மனமில்லாத அவசரம் அவருக்கு. உள்ளே மனைவி படுத்திருந்த அறைக்கு அவரை அழைத்துச் சென்றார்.

கூட வந்த மற்றவர்கள் வாசலிலேயே தம்மை ஒதுக்கிக் கொண்டனர்.

முதலாளியின் மனைவி பியசீலி மிகவும் கனிவான பெண். பணக்காரத் திமிர் இல்லாத வடிகட்டிய பணக்காரி.

வயது ஐம்பதைத் தாண்டினாலும், வெள்ளை மனத்தால் இளமைக்கு விடைதர மறுத்திருந்தாள். தலையில் நரைத்தது ஓரிரு மயிர்கள்தான். அவையும் மருதோன்றி அரைப்பினால் சிவந்திருந்தன.

பெற்றதோ ஆணும் பெண்ணுமாய் இரண்டு மட்டுமே. மகள் பல்கலைக் கழகத்தில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவி. மகன் பத்தாம் வகுப்பில் பாடங்கற்றான்.

வேலைக்கிருப்பவர்களை மனிதர்களாக மதிப்பவள் பியசீலி. கடைச் சிப்பந்திகளும் அவ்வப்போது வீட்டுதவிக்கு வருவர்.

காளிமுத்து வீட்டின் காரோட்டி. அங்கேயே தனித்த கூடமொன்றில் வாசம் செய்தான். அப்புஹாமியும் மகுமூதும் தேவைக்கு வந்து உதவுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் பியசீலியைத் தாயாக மதித்தனர். அந்தத் தூய உறவு அவள் சுகவீனங் குறித்து முதலாளி சொன்னதிலிருந்து அவர்களையும் துன்பத்தில் ஆழ்த்தியிருந்தது.

உள்ளே சென்ற வைத்தியர் வெளியில் வரும்வரை அவர்களும் அங்கேயே அசையாது காத்து நின்றனர்.

வைத்தியர் நீண்ட நேரம் பியசீலியின் மணிக்கட்டைப் பற்றியவாறு சிந்தனையில் மூழ்கி இருந்தார். முகத்தில் எந்தவிதச் சலனமும் இருக்கவில்லை. மணிக்கட்டு நாடியில் ஒழுங்காகப் பயணிக்கும் குருதி உந்தல் அவள் தேக நிலைபற்றி அவருக்கு நம்பிக்கையூட்டியது.

நோயாளியைப் பரீட்சிக்கும் போது தாயின் பார்வை பலமுறை அவளுக்குப் பக்கத்தில் நிற்கும் அவளது மகளின் மீது பட்டு விலகியதை மருத்துவர் கண்கள் தப்பவிடாது கவ்விக் கொண்டன.

வெளித் தோற்றத்தின் தெளிவும் காரணத்தோடு கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களும் அவருக்குத் திருப்தியளித்ததும், அவர் பேசினார். சுற்றுச் சூழலும் நோய் நிதானத்திற்கு உதவின.

முதலாளியின் முகம் வெளிறிக் கிடந்தது. வைத்தியர் ஏதேனும் விபரீதமாகச் சொல்லிவிடக் கூடாதே என அவர் மனம் அங்கலாய்த்தது.

தனது வாழ்வின் அச்சாணி அவள்தான் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. வைத்தியர் பேசத் தொடங்கியதும் அவர் முகத்தை ஆவலாய் நோக்கினார்.

"பயவெண்ட எப்பா, முதலாளி", எனத் தொடங்கியவர், அவர் மனைவிக்குப் பயப்பட எந்தவித உடல்நோய் இல்லையென்றும், வெறும் மனக்குழப்பம் மட்டுந்தான் என்றும் சொன்னார்.

முதலாளிக்கு அடங்கவிருந்த நாடிநரம்பெல்லாம் உயிர்பெற்ற திருப்தி. வைத்தியரை நன்றியோடு பார்த்து அதற்குப் பரிகாரம் என்னவென்று அறிந்துகொள்ள அவசரங் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாக ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்றும், தான் தரும் மருந்துகளோடு, கழிப்புக் கழித்து மந்திரித்து நூல் போட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்றும், அதற்கான பொருட்களைக் கொண்டுவரும்படியும் சொன்னார்.

சாம்பிராணி, மணக்குச்சி, கருப்புக் கோழி, எழுவகைப்பூ, ஏழு கிணற்று நீர், ஏழு வாழைப்பழம் என்பன மட்டுந்தான். ஏழு கிணற்று நீர், கருப்புக் கோழி தவிர மற்றவை அனைத்தும் வீட்டில் இருந்தன.

நாட்டுக் கோழிக்கடையில் கருப்புக் கோழிவாங்கக் காரில் பறந்தான் காளிமுத்து. கூடவே கோழி பிடிக்க மகுமூதுவும் போயிருந்தான். கை படாமல் ஏழு கிணற்று நீர் சேர்க்க அப்புஹாமியும் பாத்திரங்களுடன் புறப்பட்டான்.

இவை அனைத்தையும் ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள் முதலாளியின் அழகிய மகள் ஹேமா.

தாயைப் பரீட்சித்துக் கொண்டிருக்கையில் வைத்தியரின் ஆழமான பார்வை பலமுறை தன்மீது பதிந்ததை அவள் காணத் தவறவில்லை. படித்தவள் காரணத்தைத் தேடினாள். யூகிக்க இயலவில்லை.

ஆழமான குழி வெட்டி, அதற்குள் சேர்த்தெடுத்த பொருட்களுடன் வைத்தியர் இறங்கினார். துணைக்கு மகுமூதைக் கூட்டிக்கொண்டார். அவனும் மட்டக்களப்பு என்பதால், அவனுக்கு மட்டக்களப்பு மாந்திரீகத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், ஓரளவு அறிமுகமிருந்தது.

பள்ளிக் காலத்திலேயே மூட நம்பிக்கைகளை வெறுத்த ஷரிபுத்தீன் வாத்தியாரின் மாணவன் அவன். தன்னையும் அவ்வாறே பழக்கி இருந்தான். பில்லி சூனியம், பேயோட்டல், கழிப்புக் கழிப்பது, அட்சிரம், துவாக்கூடு இவை அவன் வெறுத்தொதுக்கும் கைங்கரியங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சீலையால் மூடிய தட்டில் ஏழுவகைப் பூக்களும் பரப்பப்பட்டன.' மடை தயாரானது. ஒரு குடுவையில் தீயில் போடப்பட்ட சாம்பிராணி எரிந்தது. அதன் புகையால் குழியே குருடானது. கட்டப்படும் நூல் மஞ்சள் நீராடி பூக்களின்மேல் நீண்டு கிடந்தது.

வைத்தியர் மந்திரம் ஜெபித்து ஏழு கிணற்று நீரையும் ஒவ்வொன்றாக அதன்மேல் தெளித்தார். பின்னர் மணக்குச்சிகளை ஒன்றாக்கித் தீயிட்டுப் புகையவைத்துப், புகையை அதன்மீது ஊதினார்.

இறுதியாய் எழுந்து நின்று கறுப்புக் கோழியைக் கழிப்புக் கழித்துப் பலிகொடுக்கக் கையில் ஏந்தினார். உரத்த குரலில் மந்திரம் ஜெபித்தார், கழுத்தில் விரல்கள் ஊன்றி அமுக்கியதால் கோழி துடிதுடித்தது. மகுமூதுவியின் உதவியுடன் அதன் கழுத்தைத் துண்டாடினார். அதன் குருதியை மடையைச் சுற்றித் தெளித்தார். கறுப்புக் கோழி துடிப்படங்கிக் கிடந்தது.

அனைத்தும் ஆனதும் நூலைமட்டும் கையில் எடுத்தபடி குழியில் இருந்து வெளியில் மீண்டார். மகுமூதிடம் மடையில் எஞ்சியிருந்த பொருட்களை ஒன்று கூட்டி ஒரு நாற்சந்தியில் வைத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் வரும்படி கட்டளையிட்டார்.

எடுத்த நூலைக் கூறியபடி குளித்து வெள்ளை உடையில் இருந்த பியசீலியின் கையில் மந்திரம் ஜெபித்து மூன்றுமுறை சுற்றிக் கட்டினார். பின்னர் வலக்கரத்தின் நடுவிரலையும் பெருவிரலையும் ஒன்றாக்கி மூன்றுமுறை சொடுக்கினார். அத்தோடு அனைத்தும் முடிவானது.

காரியங்கள் அனைத்தும் முடியக் கால தாமதமானதால் வைத்தியரின் அன்றைய இராத் தங்கல் முதலாளி வீடானது. காரணத்தோடுதான் வைத்தியர் காலத்தை நீட்டினார் என்பது அவர் மட்டும் அறிந்ததே.



LEBETIT - SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரங்கால் மதி முக்கால்" என்பது வைத்தியர் விடயத்தில் யதார்த்தமானது. மந்திரத்தைவிட மதிக்கு முதன்மை தருவது அவரது அனுபவத்தில் அவர் கடைப்பிடித்த முறைமை.

இராப் போசனம் மாமிசம் இல்லாத மரக்கறி உணவு. மந்திரித்து நூல் போடும் வீட்டில் மாமிசம் புழங்கக் கூடாது என்ற பொதுவான நம்பிக்கை காரணமானது.

முதலாளி கூட இருந்தே பரிமாறினார். போசனம் முடிந்ததும் இருவரும் முற்றத்தில் அமரக் காளிமுத்து இருக்கை கொடுத்தான்.

நண்பர்கள் இருவரும் அமர்ந்து கொண்டனர். நாட்டுநடப்பு, மகுழூது பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன. சிறிது நேர உரையாடலின் பின் வைத்தியர் தன்னைச் சுதாரித்துக் கொண்டு பேச்சைத் திசை மாற்றினார்.

"முதலாளி, துவகே இகனீம இவறாய்த?" என்றவாறு மகளின் படிப்புப் பற்றி விசாரணையோடு தொடங்கினார்.

பியசீலிக்கு உடல் ரீதியான உபாதைகள் ஏதும் இல்லையென அனுபவத்தின் வெளிப்பாடக அவர் அறிந்து கொண்டாலும், பொருளாதார ரீதியாகவும் எந்தவிதக் குறைபாடும் இல்லாத அவளுக்கு, மனரீதியான அந்தத் தாக்கம் ஏற்படக் காரணம் எதுவாக இருக்குமென அறிய அவரது சிந்தனை தொழில்பட்டிருந்தது.

நோயாளியைப் பரீட்சிக்கும் போது பியசீலி அடிக்கடி மகளைப் பலமுறை கவலையோடு ஏறிட்டும் பார்த்தது அவரது மனத்திரையில் பதிவாகி இருந்தது. கவலைக்குக் காரணம் கன்னி மகளாக இருக்குமோ என அவர் ஐயுற்றார்.

"ஓவ் வெதமாத்தையா, என மாச அந்திம விபாகய தியனவா." மாத இறுதியில் பல்கலைக்கழகக் கடைசியாண்டுப் பரீட்சை உண்டென்றும் தனது மகள் கட்டாயம் உச்ச நிலையில் சித்தியடைவாள் என்றும் அவர் மகள்புகழ் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேர அமைதி. இருவரும் வெற்றிலையுண்டனர். தோட்டத்துப் பச்சைப் பாக்கும் தளிர் வெற்றிலையும்; சுண்ணத்துடன் கலந்து குதப்பிச் செஞ்சாற்றை உமிழ்ந்து பித்தளைப் படிக்கத்தை நிரப்பினர்.

திடீரென மகளைப் பற்றிய வெதமாத்தயாவின் கேள்வி, அவர் வினவிய விதம் முதலாளிக்குச் சிந்னை விரிவைத் தந்தது.

அவரைப் பொறுத்து அது வேண்டாத வினா. இருந்தாலும் நட்பு ரீதியாகக் குடும்பத்தைப் பற்றிக் கேட்கிறார் எனப் பதிலோடு நிறுத்திக் கொண்டார்.

"அப்படியானால் கல்லூரி முடிந்தால் கலியாணந்தான்," என்றார் தொடர்ந்து வைத்தியர். இந்த வார்த்தைகள் முதலாளியின் மனத்தில் எதையோ கிளறிவிட்டது போலிருந்தது.

பணம், செல்வாக்கு, குடும்பப் பெருமை இவையெல்லாம் ஒன்று கூடிய நிலையில் தனது ஒரே மகளுக்கு ஒரு பொருத்தமான வரனை அவர் மனத்தில் பதித்திருந்தார். அது அவரது நெருங்கிய உறவுக்குள். அதனை மனைவியிடமும் அண்மையில்தான் கூறியிருந்தார்.

பியசீலி பத்தாம் வகுப்பின் பின் பள்ளிக்குப் போகாதவள். அப்பு சிங்ஹோவும் அப்படித்தான். சின்னக் கடைவைத்துச் சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து இன்று இந்த நிலைக்கு உயர்ந்தவர். அவரது நாணயம், பரோபகாரம் அவருக்கு ஒரு நல்ல சமூக அந்தஸ்த்தையும் பெற்றுத் தந்திருந்தன.

சாதாரண நிலையில் இருந்தபோதுதான் பியசீலியைத் தனது விருப்பத்திற்க்கு இணங்கத் திருமணம் செய்துகொண்டார்.

ஊருக்குள் திருமணம். மாப்பிள்ளை வீட்டார் பியசீலியை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

விதிவசத்தால் ஒன்றாகிப் போனதால் போட்டுத்தாட்டுப் போகவேண்டி இருந்தது பியசீலிக்கு. ஒருவரைப் பற்றிய ஒருவரது புரிந்துணர்வு இல்லற வாழ்வை இடரின்றிச் செல்லவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் பின் பொருளாதார விருத்தியில் அவர் வேகமாக வளர்ந்தார். அதற்குக் காரணம் தனது முயற்சியின் பலன் எனபதைவிட, பியசீலியின் வருகை எனஅவர் எண்ணியதில் வியப்பில்லை. அதை அவர் வாய்விட்டே பேசி மகிழ்வார்.

எது எவ்வாறாயினும் பொருளாதார விருத்தி, கணவனின் குடும்பத்தாரின் கண்களை உறுத்தியது. பியசீலியின் சுகபோக வாழ்வைக் கண்டு பொறாமையுற்றனர்.

தமக்குக் கிடைக்க வேண்டிய வாழ்வைத் தட்டிப் பறித்ததாகவே காழ்ப்புற்றனர். இயன்றவரை குடும்பத்துள் அடிக்கடி பிரச்சினைகளைத் தோற்றுவித்தவாறிருந்தனர். பியசீலியின் பொறுமை, பிணக்கின்றிச் சார்ந்துபோக வைத்தது.

பிள்ளைகளின் அறிவுத் தேடலில் பியசீலியின் பங்கு அதிகம். தொழிலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த கணவனுக்கு மனைவியின் தோள்தாங்கல் பல வகையிலும் உதவியது.

கால நெகிழ்வு குடும்பத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. பன்முகப்பட்ட தொழில் விருத்தி, மக்கள் கல்வியில் காட்டிய ஈடுபாடு, மாளிகை போன்ற வீடு, வாகனம், கைக்குங் காலுக்கும் பணியாளர்கள். குடும்பம் சொர்க்கத்தில் திளைத்தது.

இருப்பினும் வறுமையில் இருந்து படிப்படியாய் உயர்ந்ததால், செல்வச் செருக்கில்லாத பெற்றோர் ஆடம்பரமற்ற வாழ்வுக்கு மகளையும் மகனையும் மற்றவர்களில் இருவர் போன்றே வளர்த்தனர்.

❖❖❖❖

பல்கலைக் கழக விடுதலை நாட்களில் ஹேமா கடைக்கு வருவாள். கல்லாவில் உரிமையோடு உட்காருவாள். வியாபார இரத்தம் வேகமாக இயங்கும். சிப்பந்திகளுக்கு "நோனம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



வந்தால் மிக்க மகிழ்ச்சி. அவளைத் திருப்திப்படுத்தவும் சுறுசுறுப்பாய் இயங்குவர்.

தந்தை தந்த முழுச் சுதந்திரத்தால், அவர்களுக்குக் கைக்குத் தாராளமாகச் சந்தோஷம் கிடைப்பது மட்டுமல்ல, ஹேமாவின் அன்பான வார்த்தைகளும் கூட. ஹேமா கடைக்கு வருவதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குக் கண்டி பஸ்ஸில்தான் போக வேண்டும். பட்டியகமவிலிருந்து தினமும் இரண்டு பேரூந்துச் சேவைகளே கண்டி நகருக்கு இருந்தன. அங்கிருந்து கலஹா வழியாக பேராதனையைக் குறுக்கறுத்துச் செல்லும்.

அது ஹேமாவுக்கு வசதியாக இருந்தது. இடைவழியில் புஷ்ப்பாவும் ஏறிக்கொள்வாள். இருவரும் உயிர்த் தோழிகள். பேருந்து தந்த பிணைப்பு. இருவரும் கலைப் பிரிவில்தான் கற்றனர். ஒரே ஆண்டுதான் எனினும் மொழி இரண்டு.

பகலுணவுவேளை புஷ்பாவைத் தேடி ஹேமா வருவாள். இருவரும் கொண்டுவந்திருக்கும் உணவைப் பாதிக்குப்பாதி பகிர்ந்துதான் உண்பர்.

ஹேமாவின் "அம்புல் தீயால்" மீன் அவியல் புஷ்பாவின் "பேவரிட்". அதுபோல புஷ்பா கொண்டுவரும் "தேங்காய்ச் சம்பல்" ஹேமாவுக்குப் பிடித்த "அயிட்டம்".

இவற்றோடு கூடி எவனெவனாவது ஒன்றிரண்டு கழக மாணவர்களைப் பற்றிய வம்புதும்பும் சேர்ந்து உணவுக்குச் சுவையூட்டும். மனம்விட்டுச் சிரிப்பார்கள். அதில் கள்ளமில்லா நட்புக் கரைந்திருக்கும்.

ஒன்றாக வருவதும் ஒன்றாகப் போவதுமான இவர்களின் இணைபிரியாத் தோழமை, பல கண்களுக்குக் குளிர்ச்சி ஊட்டினாலும், சிலவற்றிற்கு எரிச்சலையும் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருடைய நட்பை அவதானித்த பேராசிரியர் வித்திகூட ஒருநாள் புஷ்பாவிடம் சிரித்தபடி கேட்டார் "என்ன புஷ்பா நீங்கள் இரட்டைப் பிறவிகளா? ஒட்டிமட்டும் பிறக்கவில்லை," என்றார் நகைச்சுவையாக. அதில் பாசத்தின் நெகிழ்வை இருவரும் அவதானிக்கத் தவறவில்லை.

ஒருநாள் விரிவுரைகள் முடிந்து இருவரும் வீடு செல்ல பஸ்த்தரிப்புக்கு வந்தனர். அப்போது ஓர் ஆரேக்கியமான இளைஞன் புஷ்பாவை நோக்கி வந்தான்.

புஷ்பா அவனைக் கண்டதும் முகம் பூரித்தாள். அவளை அறியாமலேயே வார்த்தை விண்டது. "அண்ணா" என்றாள். அவன் கையைப் பற்றிக்கொண்டாள். பாதையோரம் என்றாலும் பாசம் விஞ்சியது.

ஹேமாவுக்குப் புரிந்தது வந்தவன் யாரென்று. ஏற்கனவே தனது அண்ணனைப் பற்றி புஷ்பா சொல்லி இருந்தாலும் அவனைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்திருக்க வில்லை.

"ஹேய் ஹேமா மெயா மகே அய்யாண்டி," என்றபடி புஷ்பராஜை ஹேமாவுக்கு அறிமுகப்படுத்தினாள்.

அவன் றுகுண பல்கலைக் கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன். வயதில் புஷ்ப்பாவை விட இரண்டு வயதே மூத்தவன். இளமைக் காலம் ஒன்றாய்க் கிடந்து, பிஞ்சுப் பருவத்தைப் பிறர்போல அனுபவித்தவர்கள்.

கல்லூரி வாழ்வு அவர்கள் சந்திப்பைத் தூரமாக்கி இருந்தது. இன்று ஒருவரை ஒருவர் கண்டதில் ஏற்பட்ட மகிழுச்சி முகங்களில் தெளிந்தது. ஹேமாவின் கண்கள் அண்ணனை ஆழமாகத் துழாவுவதை புஷ்ப்பா அவதானித்தாள்.

"எப்பண்ணே வந்தாய்?. கடிதம் போடல்லையே?" என்றாள் புஷ்பா. தான் தற்செயலாக பல்கலைக் கழக மாணவர் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததாகவும், வீட்டுக்குப் போக வாய்ப்பில்லாததால் அவளைச் சந்திக்க அங்கு வந்ததாகவும் சொன்னான். இருவரும் வீதி ஓரமாகிச் சிறிது நேரம் பேசினர். அதன்பின் அவன் விடைபெற்றான்.

புஷ்பராஜ், புஷ்பா இருவரும் இந்திய வம்சாவளியின் மூன்றாம் தலைமுறையினர். பாட்டனார் தோட்டத்துக் கங்காணியாக இருந்ததால் மகனின் படிப்பில் காட்டிய அக்கறை அவர்களின் தந்தையாரை ஒரு பள்ளி ஆசிரியர் மட்டத்துக்கு உயர்த்தியது. அவரும் படிப்படியாய் உயர்ந்து கலஹா தமிழ்ப் பாடசாலை ஒன்றின் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார்.

தோட்டத்து வாழ்க்கை எத்தனைக் கொடூரமானது! தான் தனது தாய் தந்தையரோடு பட்ட துன்பமும், தோட்டத்துப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு மட்டும் படித்ததும், மேற்கொண்டு வகுப்பின்மையால் நகரப் பாடசாலைக்குக் காலை உணவுமின்றி கால்நடையாக ஓடியதும், படிப்படியாய்க் கல்வியில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதும், வாத்தியார் தன் மக்கள் படிப்பில் கவனங்கொள்ள வைத்ததில் வியப்பில்லை.

ஒற்றை அறை வீடு. ஒட்டிய ஒரு திண்ணை. வெள்ளைக்காரனின் இருளடைந்த இதயத்தின் எடுத்துக் காட்டாய் விளங்குவன. இதற்குள்தான் அவர்கள் வாழ்வு சுருங்கிக் கிடந்தது. நீண்டு கிடந்த லயத்தின் ஒரு தொங்கல் "காம்பறா" கங்காணிக்குத் தரப்பெற்றிருந்த மாளிகை.

காமறாவை விட்டிறங்கினால் கழிவு நீரோடும் நீர்க்கான். ஓரிரு அடி நகர்ந்தாலோ இரத்தம் உறிஞ்சும் சருகட்டைகள். தாங்களும் பாம்பினந்தான் என்பது போன்று எவன் வருவான் இடுக்கிக் கொள்ள என்றபடி தலையுயர்த்தி ஆடும்.

பொருளாதாரத்தை ஊறிஞ்ச வந்த வெள்ளைப் பசாசுகள், பாட்டாளி மக்களின் குருதியுறிஞ்சக் கூடவே கொணர்ந்ததோ இந்த அட்டைக் கூட்டம்?......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை கங்காணி என்றாலும், வயிற்றை நிரப்பத் தாயும் கொழுந்து பறித்தாள். கங்காணி தேனீ போல் மாத வருவாயில் சொற்பம் சேர்த்தார். அதன்பயனாய் மகனையும் படிக்க வைத்ததிருந்தார்.

பிள்ளைகளைளை எப்படியேனும் தன்னிலும் உயர்வாய்க் கல்வியில் கொண்டுவர வேண்டும் எனத் தன் சக்திக்கும் மேலாய் முயன்றார் தலைமை ஆசிரியர்.

ஒரு கங்காணி தனது மகனைப் பள்ளி ஆசிரியனாக்கக் கொண்ட முயற்சியில் தான் தோற்றுவிடக் கூடாது என்பது அவரது வைராக்கியமாக இருந்தது.

ஒருவாறு தந்தையிடம் கற்ற பாடம் அவர் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. தான் செய்யுந் தொழிலுக்கு அவரது நேர்மையான உழைப்பு பலரைப் படியேற்றி விட்டதன் பயன் அவரது மக்களில் அவரால் காண முடிந்தது.

தோட்டப் பாடசாலையில் பாலபாடம் கற்றனர் மக்கள் இருவரும். பெரும்பாலும் ஐந்தாம் வகுப்போடு பள்ளிக்கு மாணவர்கள் விடைதரும் காலமது. மக்களின் கல்வியைக் கருத்தாய்க்கொண்டு பொன்னுத்துரை வாத்தியார் கிராம வாழ்க்கையைத் தேர்ந்து கொண்டார்.

கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் வாத்தியார் தலைமை ஆசிரியர். மலையகத்து மக்களின் கல்வி உயர்ச்சியில் அவர் காட்டிய ஆதரவு மாணவர்கள் பலரை உயர்கல்விவரை உயர்த்தியது. அவர்களில் இருவராகப் புஷ்பராஜும் புஷ்பாவும் ஆகினர்.

ஒழுங்காகக் கற்றதும், கல்வியில் ஆசிரியரான தந்தையின் ஒத்துழைப்பும், அவர்களை ஒவ்வொரு பாடத்திலும் முதல்தரத்தில் புள்ளிகள் பெறவைத்தன. அதுவே நகர்ப்புறத்துப் பள்ளிகளில் அனுமதிபெற உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட சாதாரண தராதரப் பத்திரப் பீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் இருவரும் சித்திபெற்றனர். பல்கலைக் கழகப் புதுமுகத் தேர்விலும் அதியுயர் தேர்வு பெற்றதால் பல்கலைக் கழகம் சென்று பெற்றோரின் ஆசைக்குப் பால்வார்த்தனர்.

❖❖❖❖

**க**ண்களை இறுக மூடிக்கொண்டாள் ஹேமா. ஏனோ அவளால் அவள் மனக்கதவை மூட இயலவில்லை. வருடங்கள் மூன்று வேற்று வேற்று இளைய தலைமுறை இளைஞர்களோடு பழகி இருந்தாலும், தானுண்டு தன் படிப்புண்டு என்றிருந்தவள்.

ஹேமா அழகானவள். "உடறட்ட சிங்ஹல" (மலைநாட்டுச் சிங்களவர்) -வேளாளர் குடும்பப்பெண்.

எப்போதும் மலைநாட்டுச் சிங்களவர்கள் தாங்கள் தமது மலையகப் பிறப்பையெண்ணிப் பெருமை பேசுவர். தாங்கள் பிறப்பால் உயர்குடியினர் என்றும் "பாத்த றட்ட" (கரையோரச் சிங்களவர்கள்) தாழ்ந்த வகுப்பார் எனவும் பேதம் காட்டுவர்.

அவர்கள் பெண்களை "மெனிக்கே" என்றும் "ஹாமினே" என்றும், தந்தையை "அப்பச்சி" என்றும் அழைப்பர். கரையோரத்தார் "நோனே" என்றும் " தாத்தே" என்றும் கூபிடுவர்.

உடையிலும் பெண்கள் வேறுபடுவர். பெரும்பாலும் "ஓசரி" அணிவது மலையகப் பெண்களின் வழக்கம்.

பியசீலி குடிப்பெருமைக்கேற்பத் தன் மகளைப் பண்போடு வளர்த்திருந்தாள். சற்று வளர்ந்த தேகவாகு. செம்மேனி கொண்டவள் ஹேமா. அடர்த்தியான கருங் கூந்தல். அழகிய நெற்றி. தீட்சண்யம் மிக்க கரிய விழிகள். எப்போதும் புன்னகை மாறாத பொலிவான வதனம் அவளுக்கு இறைவனளித்த பெருங்கொடை.

பல்கலைக் கழகத்தில் அவளது நேசிப்புக்காய் அலைந்தவர்ளை அறிந்தும் அறியாதிருந்தவள். இன்று ஏனோ அவளால் அவள் மனத்தை ஒருநிலைப்படுத்த இயலவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பின் அறியாத முகம். பார்த்த மாத்திரத்திலேயே மனத்துள் புகுந்தது எவ்வாறு? தோற்றத்தில் எத்தனை ஆஜானுபாகன்களைக் கல்லூரியில் கண்டும், பேசியும், பழகியுமிருந்தும் சபலமடையாத நெஞ்சுக்கு இன்று நடந்ததென்ன?

அவளையே அவள் வினவினாள். பதில் தோணாது கலைந்துபோன தூக்கம் மீண்டும் தொற்றிக் கொள்ள மறுத்துப் பின் பற்றிக்கொண்டது. கண்ணயர்ந்தாள்.

காலைச் சேவல் காதைக் குதறியது. கண் விழித்துக் கெண்டாள் ஹேமா. இன்னும் மனத்தில் பதிந்துகிடந்த நினைவலைகள் ஓய்ந்திருக்கவில்லை.

வழக்கத்திலும் மாறான புரியாத ஒரு புது உணர்வு அவளை அலைக்கழிக்கச் செய்தது. தன்னில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத் தாய் உணராதவாறு காலைக் கடன்களில் ஈடுபட்டாள்.

பேருந்தில் ஏறும்போது புஷ்பாவைக் கண்டாலும், மெல்லிய புன்னகையோடு நிறுத்திக் கொண்டாள். அன்று பஸ்ஸில் சனநெரிசல் அவளுக்குச் சாதகமானது.

நெருங்கிப் பேச வாய்ப்பிருக்கவில்லை. இருந்தும் தெளிவில்லாச் சிந்தனை வயப்பட்டாள். தனது மனத்துக்குள் ஏதோ ஒரு நெருக்கம் முன்னிலும் புஷ்பாமேல் ஏற்பட்டிருப்பதையும் அவள் உள்ளுணர்வு கூறியது.

இறங்கு தரிப்பில் இருவரும் இறங்கிக் கொண்டனர். ஹேமாவிடம் வழமையான கலகலப்பு. அன்றிருக்கவில்லை. புஷ்பாவும் கருத்தில் கொள்ளாது வளாக எல்லையில் "பாய்" சொல்லிக் கொண்டாள். ஹேமா தன்வழி நடந்தாள்.

பகலுணவுப் போழ்து. புஷ்பாவின் வருகைக்காகக் "கன்டீனில்" காத்திருந்தாள் ஹேமா. இருவரும் உணவைப் பரிமாறிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேமா தனக்கான பங்கில் பாதியே உண்டாள். மீதியைக் கழிவுத் தொட்டியில் போட்டதைக் கண்ட புஷ்பா- "ஏன் நீ சாப்பிடவில்லையா?" என வியப்போடு வினவினாள்.

"மட்ட படகினி நேபாங்," எனத் தனக்குப் பசியில்லாமையைச் சுட்டிய ஹேமாவின் வார்த்தைகளில் சோபை குன்றிக் கிடந்ததைப் புஷ்பா அவதனித்தாள்.

மேற்கொண்டு எதையும் கேட்க புஷ்பா விரும்பவில்லை. தனிப்பட்ட காரணங்களாக இருந்தால் தனது கேள்வி அவளுக்குச் சங்கடத்தை உண்டுபண்ணலாம் என எண்ணி அமைதியானாள்.

நாட்கள் மூன்று இவ்வாறே நகர்ந்தன. புஷ்பாவின் பொறுமை தோற்றுப் போக வார்த்தைகள் கேள்வியாய் வெளிப்பட்டன.

"அய்பாங், உம்பட்ட மொக்கத வுணே? தவஸ் துணக் மேம இன்னே? மாத்தெக்க தறஹாத?"- அவளின் அண்மைய மாற்றத்தக்குத் தான்தான் காரணமோ என்ற ஐயப்பாட்டைக் கேள்வியால் துழாவினாள் புஷ்பா.

ஹேமா பதில் சொல்லவில்லை. தோழியைச் சிறிது நேரம் கண்கொட்டாது பார்த்தவாறு இருந்தவள், சட்டெனச் சொன்ன பதில் புஷ்பாவை அதிர்வடையச் செய்தது.

❖❖❖❖

ஹேமா லீவு கிடைக்கும் போதெல்லாம் தந்தையின் கடைக்குப் போவதற்குத் தனிப்பட்ட காரணமொன்றும் இருந்தது. அது அவள் அறிந்துகொள்ள முயன்ற தமிழில் சரளமாகப் பேசிப் பழக வேண்டும் என்பதே.

ஏற்கனவே புஷ்பாவுடன் தாய்மொழியுடன் கலந்து பேசினாலும், அது தேவைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதே. பெரும்பாலும் புஷ்பா அறிந்த சிங்களமே அவர்களின் உரையாடல் மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கு வருவோர் பெரும்பாலும் தோட்டங்களில் குடியிருப்பவர்கள் என்பதால், கட்டாயம் அவர்களுடன் தமிழில்தான் பேச வேண்டி இருக்கும் என்பதை அவள் அறிவாள்.

தவிரவும் மரியாதையுடன் தன்னோடு பழகும் சிப்பந்தி மகுரூதுவின் தமிழ் அவளுக்குப் பிடித்திருந்தது. அது கிழக்கு மாகாண ஷரிபுத்தீன் வாத்தியாரிடம் கற்றதமிழ்.

மகுரூதுவுக்கு அவள் சிங்களம் சொல்லித் தந்தாள். கூடவே இருக்கும் அப்புஹாமி ஆரம்பத்தில் விளையாட்டாகக் கெட்ட வார்த்தைகளைக் கற்பிதம் செய்ததால், அவன்மீது நண்பனுக்கு நம்பிக்கை அற்றுப்போயிருந்தது.

மாதங்கள் மூன்றுக்குள் ஹேமாவுக்குப் பேச்சுத் தமிழ் சரளமாகிற்று. ஓரளவு எழுதவும் எட்டாம் வகுப்பில் தேறியிருந்த மகுரூது வழி காட்டினான். எதிர் காலத்தில் அதற்கான தேவைப்பாட்டை அவள் மட்டுமே அறிவாள்.

மகளின் வியாபார உத்திகள் அப்புசிங்ஹோ முதலாளிக்குத் தொழிலில் வருமானத்தைக் கூட்டியது. அதில் அவருக்குப் பரம திருப்தி. கடைக்கு வரும் நாட்கள் சிலவென்றாலும் மகுரூது, அப்புஹாமி போன்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான சிப்பந்திகள் அவர் வழிமுறைகளைத் தமதாக்கிக் கொண்டிருந்தனர். முதலாளி பெருநகரத்தை நோக்கித் தனது வியாபாரத்தை வியாபிக்கத் திட்டமிட அது ஏதுவானது.

மத்திய மாகாணத்தின் தலைநகர் கண்டி. சுற்றியுள்ள சிறுநகர வியாபாரிகள் மொத்தமாகப் பொருள் கொள்ளக் கண்டிக்கே வந்தனர். முதலாளி தனக்கான ஒரு கடையைக் கண்டி திருகோணமலை வீதியில் தேர்ந்தெடுத்தார்.

கிராமப் புறங்களில் விளையும் ஏலம், கராம்பு, சாதிக்காய் போன்ற மணப்பொருட்களோடு, கொக்கோ, கோப்பி, பாக்கு முதலானவற்றை நாட்டுப்புற மக்களிடம் சேகரித்து, பெருந்

தொகையாக கொழும்புக்கு அனுப்பும் "ஹோல்சேல்" வியாபாரம் அவருடையது.

தொழிலுக்குப் பழகியிருந்ததோடு, நம்பிக்கைக்கும் பாத்திரமான மகுமூதுவின் பொறுப்பில் நாட்டுப் புறங்களில் சேகரிக்கப்படும் பொருட்கள் பட்டியகமவில் களஞ்சியப்படுத்தப் பெற்றன. அங்குச் சேர்த்தெடுத்த பொருட்களை ஒவ்வொன்றாகத் தனித்தனி தரம்பிரித்து, நிறுத்துப் பொதிசெய்வர்.

நேசனைக் கண்டிக் கடைக்கு நிருவாகி ஆக்கி இருந்தார் அப்புசிங்ஹோ. நேசன் படித்தவன். பட்டியகம புடவைக் கடையில் பொறுப்பாக நெடுங்காலம் பணியாற்றியவன். திறைமைசாலி. வியாபார நுட்பங்கள் அறிந்திருந்தான். அவன் மலையக மக்களின் வாரிசு. நம்பிக்கையும், நேர்மையுங் கொண்ட உழைப்பாளி.

ஆரம்பத்தில் வாரம் ஒருமுறை வாடகை வாகனங்களில் அவை கொழும்புக்கு அனுப்பப்படும்.

❖❖❖❖

சட்டென ஹேமா சொன்ன பதில் புஷ்பாவைச் சங்கடத்துள்ளாக்கியது. எதிர்பாராத அவள் வார்த்தைகளால் நிலைகுலைந்து போனாள்.

எத்தனைதான் ஒன்றுபட்டு வாழ்ந்தாலும், இனம், மதம், மொழி கடந்த நிலையில் சாத்தியப்படாத அன்றைய சமூகக் கட்டமைப்பில் எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டாத முன்மொழிவு அது.

கண்டதும் தோன்றும் மன உந்துதலால் ஏற்பட்ட இளமை உணர்வின் காரணமாய் உருவான ஒரு வெளிப்பாடாக அவள் அதனை எண்ணினாள்.

அவ்வாறான ஐயப்பாடு மனத்தில் எழ, ஹேமாவோடு ஏற்பட்ட எதிர்பாராத சந்திப்பு, நட்பின் பெருவிருட்சமாய் இன்று வியாபித்திருப்பதும் அவள் நினைவில் நிழலாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேமா அழகானவள். அறிவும், குடும்ப கௌரவமும், பொருளாதார வசதியுங் கொண்டவள். பண்பானவள். வருடங்கள் மூன்று பலதரப்பட்ட இளைஞர் குழாத்தோடு பழகியிருந்தாலும் மன உறுதியோடு வாழ்ந்ததால், புஷ்பாவின் எண்ணங்களும் அவளோடு கூடிய நட்பினால் மனஞ்சிதறாது கல்வியோடு மட்டுப்பட்டிருந்தது.

புஷ்பா மத்தியதரப் பெண். வறுமை என்றில்லாவிட்டாலும், பொருளாதாரத்தில் வருவாய்க்குள் வாழுங் குடும்பம்.

அண்ணனுக்குந் தனக்குமான கல்விச் செயற்பாட்டுச் செலவுகள் சில சமயம் கையைக் கடிக்கும். அப்போது தாய் கையாளுஞ் சிக்கனக் கையாளல்களை அவள் அறிவாள். அதுவே அவர்கள் இருவரையும் கல்வியில் ஆழவைத்தது.

எப்படியேனும் படிப்பில் வென்று பெற்றோரின் குடும்பச் சுமையைத் தாம் தாங்கவேண்டும் என இருவரும் மனவைராங் கொண்டிருந்தனர்.

காலைப் பனிக்குளிரில் கனத்த கோணிச் சாக்கை இடுப்பில் சுற்றிக்கொண்டு, தலையில் கொங்காணியுடன் கூடை சுமந்து, மட்டக்கம்புடன் தேயிலைத் தோட்டங்களில் மாலைவரை மாரடிக்கும் தம்மை ஒத்த இளைய தலைமுறையினர் படும் பாட்டிலிருந்து அவர்கள் தப்பிக்கொண்டாலும், அந்த வாழ்வின் சுமையைப் புஷ்பா அறிவாள்.

பாட்டன் முயற்சியால் தந்தை பெற்ற கல்வி, மக்கள் அந்தச் சோக வாழ்விலிருந்து தப்பித் தமதுவழி தொடர்ந்து கல்விபயில உதவியதை அவர்கள் பாக்கியமாகக் கருதினர்.

"ஒயாத்தெக்க மம தறஹ நே." என்று தன்னுடன் அவள் கோபமில்லை என்பதை வார்த்தையால் உணர்த்த,

"ஏனங் அய் மேம பிஸ்ஸி வாகே இன்னே?" என்ற மற்றுமொரு கேள்விக்கான பதில்தான் புஷ்பாவுக்கு வியப்பைத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



"ஏக்கட்ட காரணாவ உம்பகே ஐயாமாய்!" - எந்தவித முகச்சலனமும் இல்லாமல், அமைதியாகவே ஹேமா பேசினாள்.

வீதியில் தங்கையைச் சந்திக்கப் புஷ்பராஜ் அன்று வந்தபோது எதிர்பாராத வகையில் ஏற்பட்ட சந்திப்பு, ஹேமா மனத்தில் திடீரென இப்படிப் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

குடும்பம் பற்றிய பேச்சுப் பரிமாற்றத்தில் அவனை ஏற்கனவே புஷ்பா மூலம் அவள் நன்கு அறிந்திருந்தாள். நேரில் கண்டபோது, அவனைப் பற்றிக் கொண்டிருந்த நல்லெண்ணம் அவ்வாறான ஒரு மோகத்தைக் கொள்ளக் காரணமாயிற்று.

வியப்பு ஏற்பட்டாலும் விபரம் புரிந்தாள் புஷ்பா. பாம்பின்கால் பாம்பறியும் என்ற முன்னோர் மொழி புஷ்பாவுக்கு ஹேமாவின் அன்றைய மன உணர்வுகளைப் புரியவைத்தது.

நீண்ட நேரம் இருவரும் பேசவில்லை. ஹேமா நிலத்தைப் பார்த்தபடி நிற்க, புஷ்பா அவள் மீது பொருள்பொதிந்த பார்வையைப் பதியவிட்டாள்.

அமைதியைக் குலைத்தவளாய்க் குனிந்தவாறிருந்த தன் தலையை உயர்த்தி ஹேமாவே மீண்டும் பேசினாள்.

"புஷ்பா என்னை மன்னித்துவிடு. உன் அண்ணனைப் பற்றி நீ எனக்கு முன்னர் சொன்னவைகள் என்மனத்தில் அவன்மீது ஒரு உயரிய எண்ணத்தை ஆழமாகப் பதிவிட்டிருந்தது. இருந்தும் நான் ஒருபோதும் இன்றைய மனநிலையில் அவனை எண்ணிப் பார்த்திருக்கவில்லை. உனக்கொரு நல்ல அண்ணன் வாய்த்துள்ளான் என்று மட்டுமே எண்ணி இருந்தேன்.

ஆனால் அன்று அவனை முதன்முதலாகச் சந்தித்த போது, என் மனம் என்னை அறியாமலேயே அவன்வயப்பட்டது. நான் அவனைக் காதலிக்கின்றேன் புஷ்பா. நீ என்னைப் புரிந்துகொள்,"
என நிறுத்தினாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

புஷ்பா, அப்போதும் ஒன்றும் பேசவில்லை. ஹேமாவின் முகத்தையே ஏறிட்டவளாய் அமைதியாக இருந்தாள். அவள் நெஞ்சத்தில் ஏற்பட்ட ஆயிரம் கேள்விகள் மட்டும் கண்வழி வழிந்தது.

தம்மிடையில் சாதி பார்த்துத் திருமணம் செய்யும் இரண்டு இனங்களுக்கிடையில், வேற்றினத்து, மொழியாலும் வேறுபட்ட இருவரிடையில் இவ்வாறான உறவின் உதயம் எவ்வாறு சாத்தியமாகும்?.

ஒருபுறம் கல்வியின் மேம்பாடு, மறுபுறம் பொருளாதார உச்சம். அந்த வகையிலும் பொருத்தப்பாட்டிற்குத் தோதிருக்கவில்லை. புஷ்பா குழப்பமடைந்தாள். அன்று மேற்கொண்டு எதுவும் பேசாது இருவரும் வினாக்களுடன் வீடு சேர்ந்தனர்.

❖❖❖❖

கையில் கிடைத்த கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தான் புஷ்பராஜ். தங்கையின் முத்தான எழுத்துக்கள் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

அன்பான அண்ணா! என்று தொடங்கியவள், வழமைக்கு மாறாகப் புதிரோடு கடிதத்தைத் தொடங்கி இருந்தாள்.

"தயவுசெய்து இக் கடிதத்தைப் பொறுமையோடு படித்துப்பார். முக்கியமான ஒரு விடயங் குறித்து இதனை எழுதுகிறேன். நிதானமாகச் சிந்தித்து உனது கருத்தை எழுது.

"இந்த விடயத்தில் நான் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன். உனது பதில் எதுவாக இருப்பினும் நான் கவலைப்படவில்லை. ஆயினும் இதனால் ஒரு இறுக்கமான நட்பை இழந்துவிட வேண்டுமோ என நான் அச்சப்படுகின்றேன்.

உனக்குத் தெரியும் எனக்கும் ஹேமாவுக்கும் உள்ள நெருங்கிய நட்பைப் பற்றி. பலமுறை அவள் பற்றி உன்னிடம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்விட்டுப் பேசி இருக்கின்றேன். இப்போது அந்த நட்பில் ஏதேனும் விபரீதம் நடந்துவிடுமோ என ஐயப்படுகின்றேன்."

இதுவரை கடிதத்தைப் படித்த புஷ்பராஜ் ஒருகணம் சிந்தனை வயப்பட்டான். இரண்டு இன இளம் சிட்டுகளிடம் ஏற்பட்டுள்ள இந்த இனம்புரியாத இணக்கம். எதிர்காலத்தில் சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு நல்ல தொடக்கமாக இருக்குமென அவன் எண்ணி இருந்தான்.

எது எப்படி இருப்பினும், இதற்குள் என்னை ஏன் சம்பந்தப் படுத்துகின்றாள் என்னும் புரியாத நிலையில் மீண்டும் கடிதத்தைத் தொடர்ந்தான். தொடர்ந்திருந்த வரிகள் அவனைக் கடிதத்தைத் தொடர மாட்டாது வியப்படையச் செய்தன.

"அண்ணா அவள் உன்னை விரும்புகின்றாள்." "உன்னை மனமாரக் காதலிக்கின்றாள்."

புஷ்பராஜ் திக்குமுக்காடிப் போனான். இது என்ன? இவளைப்பற்றி நான் ஏற்கனவே அறிந்திருந்தாலும், பார்த்ததுமில்லை. பழகியதும் இல்லையே. ஒரேயொரு நாள், ஒருசில நிமிடங்கள் பார்த்தது மட்டில் அவளுக்கு எப்படி இப்படி எண்ணம் ஏற்பட்டது.

அவன் புரியாத சூன்யத்துள் புதைந்தான். தொடர்ந்தும் அவனால் கடிதத்தைப் படிக்க முடியவில்லை. கடிதத்தின் தொடக்கத்தில் புஷ்பா சூசகமாகத் தொட்டிருந்த புதிரின் விளக்கம் இப்போது அவனுக்குப் புரிந்தது.

தான், தனது குடும்பம், எதிர்காலம்பற்றிய தனது எதிர்பார்ப்புக்கள் ஒவ்வொன்றாய் அவன் நினைவுக்குள் வந்தன. ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட இயலுமாயினும், "நிதானமாகச் சிந்தித்து உனது கருத்தை எழுது. இந்த விடயத்தில் நான் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன்," என்னும் தங்கையின் வார்த்தைகள் அவனை நிதானிக்கச் செய்தன.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் நோய்க்கு மருத்துவம் பார்க்க வந்த வைத்தியர், மனைவிக்கு எந்தவித உடல்நோயும் இல்லை என்றதோடு, மனரீதியான தாக்கம்தான் பியசீலியின் நோய்க்கான காரணம் என்ற வைத்தியர், மகளின் கற்கை பற்றிக் கேட்டதோடு "அப்படியானால் கல்லூரி முடிந்தால் கலியாணந்தான்" என்ற குறிப்போடு தன்னை ஓரக்கண்ணால் பார்த்ததும் அப்புசிங்ஹோவின் சிந்தனையைக் கிளறின.

ஓரிருநாட்களுக்கு முன்னர்தான் படித்து முடிந்ததும் மகளின் திருமணம் பற்றி அவர் பியசீலியிடம் பேசியிருந்தார். தந்தையின் பொறுப்போடு அவர் பேசிய தோரணை அவரளவில் சரியாக இருப்பினும் பியசீலியின் அமைதி அவருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

தான் எதைச் சொன்னாலும் சரியெனத் தலையாட்டும் தனது மனைவி அன்று அவரின் முன்மொழிவைப் பொருட்படுத்தாது மௌனித்திருந்தது அவரது எரிச்சலைத் தூண்டியது.

தனது மகளுக்காகத் தனது சொந்தத்துள் ஒரு இளைஞனை மனத்தளவில் தீர்மானித்திருந்தார் அவர்.

அவன் புதிதாகச் சித்தியடைந்த சட்டத்தரணி. தோற்றத்திலும் பொருந்தியிருந்தான். குடும்பம் என்பதால் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையும் இல்லாதிருக்கும் என்பதிலும் அவருக்கு நம்பிக்கை இருந்தது.

பியசீலியின் மௌனத்திற்கும் காரணமிருந்தது. அப்புசிங்ஹோவைத் திருமணம் செய்த நாளிலிருந்து அவள் அவர் குடும்பத்தவரால் பட்ட இன்னல்களைத் தனது மகளும் ஏற்கக் கூடாதே என்பதே அவள் குறியாக இருந்தது.

பொருளாதாரத்தில் சற்று நிலைபெற்றதும், தனது தம்பிக்குப் பணக்கார வீட்டில் நிலபுலன்களுடன் திருமணம் செய்துவைக்க அப்புசிங்ஹேவின் சகோதரி பொடிநோனா ஆசைப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு ஏற்றபடி பல இடங்களிலிருந்தும் பெருஞ் சீதனத்துடன் மாப்பிள்ளை கேட்டுப் பலர் வந்தனர்.

வந்தவற்றுள் எதனைத் தெரிவு செய்வது என்ற குழப்பத்தில் அவர்கள் குடும்பம் இருக்கும்போதுதான் தம்பி பியசீலியைக் கைப்பிடிக்க விரும்புவதான செய்தியை அக்காவிடம் தெரிவித்திருந்தார்.

அதனைக் கேட்ட பொடிநோனா கடும் கோபமடைந்தாள். பியசீலி வறுமைப் பட்டவள் என்றும், தங்களது சாதிக்குப் பொருந்தாத சாதிப்பெண் என்றும், தம்பியின் விருப்பத்திற்கு மாறாய்த் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினாள்.

"உனக்குப் பல நல்ல வரன்கள் வந்துள்ளன. அவற்றில் நீ விரும்பும் ஒன்றைத் தேர்ந்துகொள். அதில் நாங்கள் தலையிடமாட்டோம். உனக்கு என்ன வேண்டுமோ அவற்றைத்தர அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர்."

"பொருளாதாரம் மட்டுமல்ல நல்ல உயர் குலத்துப் பெண்களும் அதில் உள்ளனர். தம்பி! நீ திருமணம் செய்யும் பெண் நமது சாதிக்குப் பொருந்த வேண்டும். நம்மிலும் தாழ்ந்த குலத்தில் பெண் எடுத்தால் உலகம் நம்மைப் பார்த்து ஏளனம் செய்யுமல்லவா? சிந்தித்துப்பார்."

"தம்பி, நீ விரும்பும் பெண்ணை எனக்குத் தெரியும். அவள் நமக்குப் பொருந்தாச் சாதியில் பிறந்தவள். மிகவும் ஏழை. அவளைத் திருமணம் செய்வதால் உனக்கு எந்த நன்மையும் இல்லை."

"நீ இதுகாலவரை கஷ்டப்பட்டு உழைத்து எங்களையும் பார்த்தவன். நீ நன்றாக வசதியோடு வாழ வேண்டும். அதனால் குடும்பமும் நன்மை அடையும் என்பதற்காகவே நான் உன்னை நிர்ப்பந்தம் செய்கின்றேன்," என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றித் தாய்தகப்பன் காதிலும் ஊதினாள். அவளது கணவனும் அதற்கு ஒத்துப் பாடினான். அவர்களது விருப்பத்திற்குக் குடும்பமே ஆடியது.

யார் எது சொன்னாலும் தனது எண்ணத்தில் வலுவாக இருந்த அப்புசிங்ஹோ, தனது விருப்பப்படி குடும்பத்தின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பியசீலியைத் திருமணம் செய்துகொண்டார்.

அன்றிலிருந்து தொடங்கிய போராட்டம் நீண்டநாள் நீடித்தது. தனது பொறுமையாலும் தாராளத்தன்மையாலும், அத்தனை எதிர்ப்புக்களையும் பியசீலி எதிர்கொண்டாள்.

தனக்காகத் தனது பெற்றோரையும், குடும்பத்தையும் பகைத்துவந்த தனது கணவனின் தியாகத்தை எண்ணி மனநிறைவு கொண்டாள்.

இத்தகைய தியாகத்தைச் செய்த தன் கணவனுக்கு, வாழ்நாள் முழுதும் தான் கடமைப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அவரது அபிலாஷைகளுக்கு முற்றுமுழுதாய் அடிபணிய வேண்டும் என்றும் உறுதிகொண்டிருந்தாள்.

எத்தனைதான் பியசீலி பொறுமை கொண்டிருந்தாலும் பொடிநோனா அவ்வப்போது தனது நச்சரிப்பைக் கொட்டத் தவறியதில்லை. ஒரு முறை அது பூதாகரமாக வெடித்தது.

தனது மகளின் திருமணம் வந்தபோது, தம்பியிடம் கட்டாயப் பணம்பறிக்கத் தன் கணவனுடன் வந்திருந்தாள். அதற்கோர் காரணமும் இருந்தது.

அப்புசிங்ஹோ தொழில் தொடங்கிய காலத்தில், அவளது கணவன் அவருக்கு ஒருசிறு தொகைப் பண உதவி செய்திருந்தான். அதனைக் கூறிய காலத்தில் வட்டியுடன் பெற்றுக் கொண்டாலும், அதனைச் சாட்டாகக் கொண்டு பின்னரும் பலமுறை அவரிடம் திருப்பிக் கொடுக்காத கடன் வாங்கியிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சகோதரியின் குடும்பம் என்பதால், ஆரம்பத்தில் செய்த உதவிக்குப் பிரதிபலனாக அப்புஹாமியும் தருவதைக் குறைக்கவில்லை. அதுவே அவர்களுக்கு பணங்கறக்கவும் வாய்ப்பாகவும் அமைந்தது.

ஆனால் இம்முறை கேட்ட தொகை அவனால் என்றுமே ஈடுசெய்ய மாட்டாததாக இருந்ததால், அதனை மறுக்க வேண்டிய நிலைக்குள்ளாக்கியது.

தம்பி பணம் தர மறுத்ததை ஏற்றுக்கொள்ள மாட்டாத சகோதரி, அதற்குக் காரணம் பியசீலிதான் என எண்ணினாள்.

சினங்கொண்டு கத்தினாள். வார்த்தைகள் கடினமாகின. மனைவிக்குப் பக்கபலமாக கணவனும் சேர்ந்துகொண்டதால், அப்புஹாமி பொறுமை இழந்தார்.

எந்தவித சம்பந்தமும் இல்லாத தன்மனைவியைக் காரணங்காட்டி அவர்கள் பேசியது அவரது மனச்சாட்சியைக் கொன்றது.

இன்னும் பேசவிட்டால் நிலைமை கைகலப்பாய் மாறலாம் என உணர்ந்த அப்புசிங்ஹோ அவர்களை வீட்டை விட்டு வெளியேறும்படி கூறவைத்தது.

தாங்கொணாத அவமானத்தைத் தாங்கியவர்களாக, வாய்க்குவந்த வார்தைகளால் பீயசீலியை வசைபாடியபடி வெளியேறினர்.

இத்தனை நடந்தும் பீயசீலி தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டாளே தவிர, ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. அத்தோடு அன்று தொட்டு குடும்பத்துள் பெரியதொரு விரிசல் தோன்றியது. பியசீலி அந்தக் குடும்பத்தை வெறுக்கவும் அது காரணமானது.

இதுநாள்வரை வந்திராத சோதனை மகளின் திருமண விடயத்தில் வந்தபோது, அவளால் வாய்பேச இயலவில்லை. அதுவே அவளது மௌனத்திற்கும் காரணமானது.



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் ஏதும் பேசாது மௌனியாய் இருந்த மனைவின் தோற்றமே கணவனுக்குப் பதிலாய் இருந்தது. மௌனம் சம்மதம் என்பதற்கு மாறாய், அவள் தனது விருப்பத்தில் விருப்பமற்றிருக்கின்றாள் என்பதையே உணர்த்தியது.

என்றுமே எதிர்த்துப் பேசிப் பழக்கமில்லாதவள் பியசீலி. ஏற்கவும் முடியாமல், மறுத்துரைக்கவும் இயலாமல் மௌனித்திருப்பதே மார்க்கமென இருந்தாள். அதுவே அவளின் மனச்சுமையாகி நோய்வயப்படச் செய்திருந்தது.

உலக அனுபவம் முதலாளிக்கு வைத்தியரின் வார்த்தைகளை எடைபோடச் செய்தது. திருமணம் பற்றிய பேச்சே அவளின் அன்றைய நிலைக்குக் காரணம் என்பதும், தானே அதற்குப் பொறுப்பென்றும் எண்ணினார்.

சொல்ல வேண்டிய விபரங்கள் அனைத்தையும் சொல்லிவிட்ட பின்னர், இனி அவளே அவள் முடிவைச் சொல்லும்வரை அதுபற்றி அவளிடம் எதுவும் பேசுவதில்லை என்ற முடிவுக்கு வந்தார் அப்புசிங்ஹோ.

❖❖❖❖

நாட்கள் நகர்ந்தன ஒன்றிரண்டாய், நாகன்கைந்தாய், வாரமொன்றாய். இரண்டுமானது. வாரமொன்று ஆனதிலிருந்து அண்ணனிடமிருந்து பதிலுக்காகத் தபால் பெட்டியைத் துழாவத் தொடங்கினாள் புஷ்பா.

அது பரீட்சை இறுதிக் காலம். கழகத்தில் விடுமுறையாதலால், புஷ்பா வீட்டிலேயே தங்கியிருந்ததால் ஹேமாவைச் சந்திக்கும் வாய்ப்பும் இல்லாதிருந்தது. அது அவளுக்கு ஓரளவு நிம்மதியையும் தந்தது.

புஷ்பாவிடம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியதும் அவள் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை ஹேமா அவதானிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறவில்லை. தனது விருப்பத்திற்கு அவள் ஒப்புதல் தருவாளா என்ற ஐயப்பாட்டுடன்தான் வாய்விட்டுக் கேட்டாள்.

புஷ்பாவின் மௌனம் அவளைச் சங்கடத்துள்ளாக்கியது. ஏன் பேசாமல் இருக்கிறாய் என்றாள் சிறிது தாமதித்து. புஷ்பா பேசினாள்.

"ஹேமா, நமது நட்பு வேறு. நீ என் அண்ணனைக் காதலிப்பது வேறு. அதுவும் உனது காதல் ஒருதலைப் பட்சமானது. காதல் திருமண பந்தத்தால் குடும்ப உறவோடு கூடியது. அண்ணனின் மனநிலை என்ன என்பதும் எனக்குத் தெரியாத ஒன்று.

"நமது பெற்றோர்கள் இதற்கு உடன்படுவர் என்பதற்கு என்ன உத்தரவாதம் சொல். எதற்கும் உனது விருப்பத்தை முதலில் அண்ணனிடம் கூற வேண்டும். அதனை நான் செய்கின்றேன். அதன்பின் இறைவன் விட்டவழி." என்றாள்.

❖❖❖❖

புஷ்பராஜ் கடிதம் கிடைத்ததும் வழமைபோல் உடன் பதில் எழுதவில்லை. தனித்திருந்து சிந்தித்தான். தனது நெருங்கிய நண்பன் சிவாவிடமும் விபரம் சொன்னான்.

"அவளை நான் பார்த்திருக்கின்றேனடா. அழகானவள். புஷ்பாவின் நெருங்கிய தோழி அவள்பற்றி புஷ்பா என்னிடம் சொல்லி இருக்கின்றாள். நல்ல பெண்ணென்றும் சொல்லி இருக்கின்றாள்.

"ஆனால் இனத்தளவில் அவள் சிங்களப் பெண். பணக்காரி என்பதால் நமக்குப் பொருந்தி வராதே சிவா!" என்றான் நண்பனிடம்.

சிவாவுக்குச் சிரிப்பு வந்தது.

"ராஜ் நீயாகவா அவளை விரும்புகின்றாய்?. அவள்தானே உன்மேல் ஆசைப்படுகின்றாள்?. நீ விரும்பினால் ஆம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லு, இல்லையென்றால் உனது விருப்பமின்மையைக் கண்ணியமாகச் சொல்லிவிடு.

"வலிய வருவதால் நீ விழுந்துவிட மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் பணக்காரி, சிங்களப் பெண் என்ற காரணங்களைப் படித்தவன் நீ பேசக் கூடாதடா?," என்றான். அதில் ஆழமான அர்த்தம் பொதிந்திருந்தது.

"கண்டதும் காதலா? அட நானென்ன பெரிய அழகனா?" என்றான் ராஜ்.

மீண்டும் வாய்விட்டுச் சிரித்தான் சிவா. "பலநாள் திட்டமிட்டு புடம்போட்டு வருவதல்ல காதல். பார்த்ததும் பிறக்கும் மனத்துந்தல், பின்னால் புடமிட்டு வளர்க்கப்படுவது."

"உன்னைப் பற்றி அவள் அறிந்திருந்தாலும், பார்த்ததும் பிறந்த ஈர்ப்புத்தான் உன்பால் அவளை விரும்ப வைத்துள்ளது." என்றான் பதிலுக்குச் சிவா.

அன்றைய இரவுத் துயில் அவனை அந்தரத்தில் விட்டுவிட்டு அகன்று போயிற்று. காலையில் எழுந்ததும் தங்கைக்குக் கடிதம் எழுதினான்.

"புஷ்பா உன் கடிதம் கிடைத்தது. உடன் பதில் எழுத முடியவில்லை. திடீரென்று ஒரு பெண்ணின் விருப்பத்தில் மண் தூவுவது, அவளை மனம் வருந்தச் செய்யுமல்லவா? நீ படித்தவள். உன்னிடம் இது பற்றிப் பேசுவதில் தப்பில்லை என்று எண்ணுகின்றேன்.

"ஒரு பெண் விரும்பினாள் என்ற ஒரு காரணத்திற்காக, என்னை நான் இழந்துவிட இயலாதல்லவா?. அவள் நல்லவளாக இருக்கலாம், வசதி வாய்ப்புக் கொண்டவளாகவும் இருக்கலாம். ஆனால் நாம் நமது பின்னணியைச" சிந்திக்க வேண்டாமா?

"மொழி மட்டிலும் மாறுபட்டிருப்பின் பெரிதல்ல, ஆனால் மதமும், இனமும் மாறுபட்டிருப்பது இருவருக்கும் பின்னர் சிக்கல்களைப் பிறப்பிக்க வாய்ப்புண்டல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ ஒருநாள் இருவர் இணைவது இயல்பானது. என்னோடு உனது நண்பி இணைவதில் தனித்து, எனக்கு ஆட்சேபனை இல்லாது போகலாம். ஆனால் பெற்றோர், இனபந்துக்கள் என்னும்போது தோன்றும் சாதக பாதகங்களை எண்ணிப்பார்.

"நினைத்துப் பார்க்கவே இயலவில்லை. நீ இது பற்றி அவளுடன் பேசு. கற்ற பெண் புரிந்து கொள்வாள். இப்போதைக்கு இதைத் தவிர என்னால் எதுவும் சொல்ல இயலவில்லை,.

மிகச் சுருக்கமாக கடிதத்தை எழுதி முடித்த புஷ்பராஜ் சற்று நிம்மதியுற்றான். தன்னை அழகிய, செல்வந்தப் பெண் காதலிக்கின்றாள் என்பதில் உள்ளூரத் தனக்குத் திருப்தி ஏற்பட்டாலும், பின்விளைவுகளை எண்ணித் தான் எழுதிய பதில் அவனுக்கு அமைதியைத் தந்தது.

❖❖❖❖

IDIT தம் ஒன்று விடைபெற்ற பின்னர்தான் ஹேமா புஷ்பாவைச் சந்தித்தாள். வருடமொன்று மெல்லமெல்ல நகர்ந்ததுபோல் இருந்தது அவளுக்கு.

புஷ்பாவின் வீட்டில் தொலைபேசி இருந்திருந்தால், அந்த வெறுமை அவளுக்கு ஏற்பட்டிருக்காது. புஷ்பா அண்ணனுக்குக் கடிதம் எழுதியிருப்பதை ஹேமாவிடம் சொல்லி இருந்தாள்.

அவன் பதிலுக்காகக் காத்திருந்தவள் ஹேமாவே அன்றிப் புஷ்பா அல்ல. பதில் என்னவாக இருக்கும் எனத் தெரிந்து கொள்ளும் பதற்றம் அவளுக்கு.

புஷ்பாவைக் கண்டதும் அவள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவளைக் கட்டிக்கொண்டாள். அவள் அணைப்பில் கட்டுண்ட புஷ்பாவுக்குப் பேச்சு வரவில்லை.

என்ன பதில் சொல்வது?. ஆம் என்ற சம்மதத்தையோ, அன்றி இல்லை என்ற பதிலையோ தந்திராத நிலையில் அவன் எழுதி இருந்த பதில் கடிதம் அவளை ஊமையாக்கி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிரு வினாடிகள்தான். அமைதிக்கு இடங்கொடாத ஹேமா பதறினாள். "ஐயா லியும் தெம்மாத?" அவள் அண்ணன் கடிதம் போட்டானா என்ற கேள்விக்கு ஆம் என்னுந் தோரணையில் தலையை ஆட்டிய புஷ்பா, புஷ்பராஜ் எழுதி கடிதத்தை அவளிடம் நீட்டினாள்.

எழுத்துக் கூட்டி வார்த்தைகளைக் கோத்துப் படிக்க மட்டும் அறிந்திருந்த அவளுக்கு எப்படி ஒரு கடிதத்தை வாசித்துப் புரிந்துகொள்ள இயலும்?. ஹேமா கடிதத்தை வாங்கிக் கொண்டாலும், பிரித்துப் பார்க்க மாட்டாதளாய் அவளிடமே விபரங் கேட்டாள்.

அண்ணனின் கடித வரிகள் ஒவ்வொன்றாக மொழிமாற்றம் செய்யப்பட்டதும். ஹேமா நிதானமாகச் செவிமடுத்தாள். அதிலுள்ள யதாரத்தத்தைப் படித்த பெண்ணான அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

இருப்பினும் அவன் தன்னை மறுக்கவில்லை என்பதையும் உணர்ந்தாள். "என்னோடு உனது நண்பி இணைவதில் தனித்து, எனக்கு ஆட்சேபனை இல்லாது போகலாம்." என்ற வரியில் பொதிந்திருந்த மறைமுகமான பொருள் அவளுக்கு ஆறுதலைத் தந்தது.

தன்னை அவன் ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை என்பதையும், அவன் உலகுக்கு அஞ்சுகின்றான் என்பதையும் அவள் புரிந்துகொண்டாள்.

புஷ்பா பேசினாள். "ஹேமா, நிலைமையை நீ புரிந்திருப்பாய். நாமிருவரும் உணர்வுபூர்வமாய் ஒன்றிப்போனவர்கள். இருவரும் நண்பிகள். இது வாழ்நாள்மட்டுந் தொடரலாம். நம்மிருவருடன் மட்டுமானது."

"ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில்தோன்றும் காதல், திருமணத்தால் ஒன்றிப்போவது. பரம்பரை பரம்பரையாய்த் தொடரப்போவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் மதத்தால் வேறுபட்டவர்கள். மொழியால் வேறுபட்டவர்கள். இனத்தாலும் இரண்டானவர்கள். இங்குதான் பிரச்சினையே உருவாகின்றது.

"திருமணம் என்பது இரு தனி நபர்களுக்கிடையிலான பந்தமில்லையே!. நாம் பொருந்திப் போனாலும், நமது சமூகங்கள் பொருந்திப்போகும் என்பது என்ன நிச்சயம்?"

ஹேமா, இதனை முன்னரே உணர்ந்திருந்தாலும், புஷ்பாவின் கருத்தறியக் காத்திருந்தாள். புஷ்பா மீண்டும் பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஹேமா என் அண்ணனின் கடிதத்தில் அவன் விருப்பமின்மை தொனிக்கவில்லை. ஆனாலும் பெற்றோர்களைப் பற்றியே சிந்திக்கின்றான்போல் தெரிகின்றது.

"அவனது இறுதி ஆண்டுப் பரீட்சை முடிந்துவிட்டது. இன்னும் இரண்டு வாரங்களில் முடிவும் தெரிந்துவிடும். பெரும்பாலும் அவன் உயர்சித்தி பெறுவான். தொடர்ந்து உள்ளகப் பயிற்சி தொடங்கிவிடும். அதற்கிடையில் அவன் ஊருக்கு வருவான்.

"அவனிடம் நான் இது பற்றிப் பேசுவேன். அவன் விருப்பத்தை அறிந்து எனது பெற்றோரிடமும் உங்களுக்காக நான் பேசுவேன்," என்றவள் தொடர்ந்தாள்.

"எனது தந்தையார் படித்தவர். முற்போக்கான கருத்துடையவர். அவர் இவ்வாறான விடயங்களில் பிடிவாதம் செய்யப் போவதில்லை. தந்தை எவ்வழியோ தாயும் அவ்வழியென வாழ்பவர் என்தாய்.

"ஆனால் சமயத்தில் ஊறிப்போனவர்கள் உனது பெற்றோர். அது பற்றி நீ சிந்திக்க வேண்டும். நீ அண்ணனுக்கு வரனாகக் கிடைத்தால் சகலவற்றையுங் கடந்து அதில் மகிழ்ச்சியடைபவள் என்னைவிட வேறு யாரும் இருக்கமாட்டார்கள்,." என முடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு முடித்த ஹேமா சட்டெனப் புஷ்பாவின் கரங்களைப் பற்றிக்கெண்டாள். ஒருபுறச் சிக்கல் முழுமையாகத் தீர்ந்ததுபோல் இருந்தது அவளுக்கு. அவள் எதுவும் பேசவில்லை.

❖❖❖❖❖

கண்டிக் கடையில் வியாபாரம் களை கட்டியது. இலாபத்தில் கொள்ளையடிக்கும் கொள்கை இல்லாதவர் முதலாளி என்பதும், வியாபார நுட்பமும், மிக்க நம்பிக்கையும், நாணயமுங்கொண்ட மகுமூதுவும், நேசனும் கடைப்பொறுப்பை முற்றிலும் ஏற்றுக்கொண்டதாலும் அது சாத்தியமாகிற்று.

கொள்வனவு செய்தவற்றைக் கொழும்புக்கு ஏற்றி மொத்த வியாபாரிகளிடம் கையளிக்கும் வியாபாரம் வருவாய் தந்தாலும், தாமே ஒரு மொத்த வியாபாரியானால் என்ன என முதலாளியின் வியாபார மூளை இயங்கி, அதற்கான நடவடிக்கைகளிலும் அவரை இறங்கவைத்தது.

எண்ணியது போல் கொழும்பில் ஆட்டுப்பட்டித் தெருவில் ஒரு வாய்ப்பான இடமும் கிடைத்தது. இந்துக்களும் இஸ்லாமியரும் செறிந்து வாழும் பிரதேசம். வியாபாரத்துக்கும் தோதாக அமைந்தது முதலாளியின் அதிர்ஷ்டமே.

சில்லறைச் சிப்பந்திகளுடன் நேசனின் பொறுப்பில் கண்டி வியாயாரம் தொடர, மகுமூதுவின் பொறுப்பில் கொழும்பில் வியாபாரம் தொடங்கியது.

இதனிடையில் முதலாளி இரண்டு "லொறி"களுக்கும் சொந்தக்காரர் ஆனார். யாரையும் நம்பி இல்லாது அனைத்தும் அவர்வயமானது.

நகர்ப்புறப் பெருந்தொகை வியாபாரம் வருமானத்துக்கு உரமூட்டியதால் ஊர்க்கடையைத் தொடர அவருக்குக் காலம் போதாதிருந்தது. அவ்வூர் அபூஸாலி முதலாளிக்குக் கடையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகைக்கு விட்டுவிட்டார். அது நிரந்தரப் பக்க வருமானமாகிற்று.

மகுமூது கடையில்தான் அறையொன்றை அமைத்துக் கொண்டான். உணவு வெளியில்தான். ஆரம்பத்தில் கடைகடையாய்ச் சுவை பார்த்தவன், இறுதியாய் ஒரு நடுத்தர "ஹோட்டலை" நிரந்தரமாக்கிக் கொண்டு மூவேளையும் பசியாறினான்.

ஹோட்டல் முதலாளி ஒரு முஸ்லிம். அவரை அங்குள்ளவர்கள் கலீல் காக்கா என்றழைத்தனர்.

குடும்பத்தைப் பிரிந்து தனித்திருக்கும் மகுமூதுக்கு உளத்தளவிலும் அவர் உறவானார். காலப் போக்கில் உறவில் ஏற்பட்ட நெருக்கம் கடைச் சாப்பாடு, முதலாளியின் வீட்டுச் சாப்பாடாகத் தங்கும் இடத்துக்கே அனுப்பி வைக்கப்பட்டது.

கலீல் காக்கா ஒரு நாள் இரவுத் தொழுகையின்பின் மக்காவுக்குச் சென்றுவந்த அவரது மைத்துனரைப் பார்க்கப் பள்ளியில் இருந்து புறப்பட்டார்.

பள்ளிக்கு வந்திருந்த மகுமூது அவரைக் கண்டதும் சலாம்சொன்னான். "வஅலைக்குமுஸ்ஸலாம்" என்று பதிலிறுத்தவர் "எங்க புள்ள போற நீங்க? வேல ஒண்டுமில்லாட்டி வாங்க, ஹாஜியார் ஒராளுக்கு ஸலாங் குடுத்திட்டு வருவம்," என்றார்.

இராப்பொழுது. வேலை ஒன்றும் இல்லை என்பதால் மகுமூது சரியென்றான். இருவரும் ஹாஜியார் வீடு நோக்கி நடந்தனர்.

வெளிவாசல் கதவில் நின்றபடி "அஸ்ஸலாமு அலைக்கும். ஊட்டில தாரு ஈக்கிய?" என்றார் கலீல் காக்கா. கதவு குரல் கேட்டுத் தானாகத் திறந்து கொண்டது போல் திறந்து கொண்டது.

யாராவது வரவேண்டும், அஸ்ஸலாமு அலைக்கும் ஹாஜியார் என்று சொல்லி அழைக்க வேண்டும் என்ற ஆவலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்தவர்போல் பரீது ஹாஜியார் வெளியில் வந்தார். அவருக்குத் தெரியும் "இஷா" தொழுகைக்குப் பின் யாராவது வருவார்கள் என்று.

இருவரும் கட்டித் தழுவி "முஸ்ஸஃபா" செய்து கொண்டனர். முகுழுதும் கைகளை நீட்டி ஸலாம் கொடுத்துக் கொண்டான். மூவரும் வரவேற்பறையில் தம்மை இருத்திக் கொண்டனர்.

"என்ன ஹாஜியார், எப்பிடி பயணமெல்லாம்? ஹைர்தானே?" என்றார் கலீல் காக்கா.

பரீது ஹாஜியார் கதிரையில் நிமிர்ந்து தன்னை ஒருநிலைப் படுத்திக்கொண்டு விபரம் சொல்லத் தயாரானார்.

பலரிடம் மீண்டும் மீண்டும் ஒன்றையே சொல்லிச் சொல்லி அனைத்தும் மனப்பாடமாகி இருந்தது அவருக்கு.

முன்னர் பள்ளிக் கதவையே காணாதிருந்தவர் இப்போது ஹாஜியாராகிப் பள்ளியுங்கையுமானார். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமாமே.

அந்தப் பகுதி "மஹல்லா" வாசிகளின் அடுத்தடுத்த "கஸ்த்து" முயற்சிகள் கல்லைக் கனிய வைத்திருந்தது. அவர் பேசத் தொடங்கினார்.

"அங்க பாக்க ஓணும் சீதேவி வந்திருந்த சனங்கள், சுபுஹானல்லாஹ்! லெச்சோப லெச்சம். கஃபாவ சுத்த நாலு பொறத்திலிருந்தும் வாறானுகள் வாறானுகள் வறானுகள் வாப்பா."

"செவப்பனும் வாறான், வெள்ளையனும் வாறான், கறுப்பனுகளும் வாறானுகள். செல்லி வேலல்லவா."

"மவனே, ஒவ்வொருத்தனும் ஒரு தரமாக்கிலும் ஹஜ்ஜுக்குப் போகாட்டி அவன் மனிசனில்லவா!."

"போன சீருக்கு "கஃபா"வைத்தான் காட்டினானுவல். பாத்ததும் எல்லாரும் அழத் தொடங்கிட்டாங்க. எனக்கும் அழுக வந்திடிச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அழுதிட்டேன். நீங்க கண்டாலும் அழாம உடமாட்டியள் மக்காள்."

ஹாஜியார் அடுக்கிக் கொண்டே போனார். அப்போது ஒரு பையன் பேரீத்தம் பழமும், "ஸம்ஸம்" தண்ணியைச் சின்னக் கண்ணாடிக் குடுவையிலுங் கொண்டுவந்து வைத்துவிட்டுச் சென்றான். தண்ணீரோடு பழத்தில் ஒன்றும் இருவரும் புசித்தனர்.

மீண்டும் ஸலாம் சொல்லி விடைபெற எழுந்தபோது ஹாஜியார் கலீல் காக்காவுக்கு ஒரு தொப்பியும், ஒரு மணிக்கோவையும் தந்து வழியனுப்பினார்.

வீட்டுக்குப் போக இருவரும் வாசலுக்கு வந்தனர்.

"தம்பி, நீங்க கடைக்குத் தானே போறியள்?." என்றார் கலீல் காக்கா. மகுமூதும் ஆம் என்றான்.

"அப்ப சாப்பாடு அனுப்பத் தேவல, எங்கட ஊட்டுக்கே வந்து சாப்பிட்டுட்டுப் போங்களன்," என்றதும் முதலில் மறுத்தவன் சரியென்று கூட நடந்தான்.

ஹோட்டல் முதலாளியின் வீடு குறுகிய வீதியோடு கூடிய வீட்டுத் தொடரில், மற்றவற்றிலும் சற்றுப் பெரிதாக இருந்தது.

சன நெரிசலுக்குக் குறைவில்லை. இரவும் விழித்திருக்கும் வீதி. வீடு சுத்தமாக இருந்தது. முன் வாசல் அலங்காரத்தோடு அழகாய் அமைந்திருந்தது. வெளியில் ஆங்காங்கே சில பூந்தொட்டிகள். பூத்துக்கிடந்தன.

நீண்ட கண்ணாடி அலுமாரியில் பீங்கான் கோப்பைகளின் அடுக்கு. மேலே ஒரு "மார்க்கோனி" வானொலிப் பெட்டி. கூடவே சுவரில் ஒரு ""றெடிபியூஷன்" பெட்டியும் பாட்டும், செய்தியும் கேட்கவெனப் பொருத்தப்பட்டிருந்தன.

பரம்பரைச் சொத்துப்போல பக்கவாட்டுச் சுவரில் ஓடாத "பிக்பென்" கடிகாரம். பழைய வேலைப்பாடுகளுடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கைந்து கதிரைகள். ஒரு மூலையைத் தனதாக்கிக் கொண்ட சாய்மனைக் கதிரையுடன் ஒன்றி இருந்தன.

"வாங்க மவன், இரிங்கோ," என்றார் கலீல் காக்கா. ஒரு நாற்காலியைக் காட்டி. தன்னைச் சாய்மனைக் கதிரையில் இருத்திக் கொண்டார். அதுதான் வீட்டில் அவரது அரியாசனம்.

வேறு யாரும் அதில் அமருவதில்லை. அதற்கு அத்தனை மரியாதை. ஆனால் தங்கை வீட்டுப் பேரக் குழந்தைகள் அதில்தான் போட்டியிட்டு அமர்வார்கள். "அப்பாவின் புட்டுவம்" என்று அதற்குப் பெயரும் வைத்திருந்தனர்.

மகுமூதும் அமர்ந்து கொண்டான். முதல்முறை வரவு. அவனது கண்கள் ஒரு முறை மீண்டும் வீட்டைத் துழாவின. அவர் உலோபித்தனமற்று வரும் வருமானத்தில் வாழ்க்கையை அனுபவிக்கும் ஜீவன் என எண்ணிக்கொண்டான்.

அப்போது அவன் அப்புசிங்ஹோ முதலாளியை நினைவில் கொள்ள மறக்கவில்லை. அவரும் இவரைப்போல் தனது வசதிக்கேற்ப அனுபவித்து வாழ்பவர் என அவனது உள்மனம் உணர்த்தியது.

"மவள், மகுமூது தம்பிக்கு கடைக்கு சோறு அனுப்ப வாணாம். இஞ்சயே வையுங்கோ," என ஒரு குரலெழும்பியதும் மகுமூது தன்னிலைக்கு வந்தான். காக்காதான் மகளுக்குக் கட்டளை போட்டார்.

மேசையில் உணவு பரிமாறப்பட்டது. இருவரும் சேர்ந்து பசியாறினர். வழக்கமாக அந்த வீட்டுச் சாப்பாட்டைத்தான் உண்டாலும், அன்றைய உணவில் ஏதோ சிறப்பு இருப்பதாக அவன் உணர்ந்தான்.

கலீல் காக்காவின் உபசரிப்பு ஒரு காரணம் என்றாலும், சொந்த வீட்டில் குடும்பத்தோடு சேர்ந்துண்ட காலத்தை மறந்திருந்த அவனுக்கு அது ஒரு நல்ல அனுபவமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை விட்டு விடைபெற்று வெளிவரும் போது வாசல் பூச்செடிக்கு ஒரு இளம்பெண் நீர் வார்த்துக் கொண்டிருப்பதை மகுமூதுவின் கழுகுக்கண்கள் நுகர்ந்துவிட்டன.

பூத்துக் குலுங்கும் அந்த மலர்ச் செடிக்கு இராப்பசி போலும் என அவனது உள்மனம் பேசியது.

முக்காடிட்டிருந்தாலும் பாதிமுகம் பார்வையில் பட்டது. அந்த அழகிய பூச்செடிபோல் இருந்த அவளும், அவனை ஓரக் கண்ணால் உள்வாங்கிக் கொண்டதை அவன் அறிந்திருக்கவில்லை.

❖❖❖❖

கண்டிக் கடையில் வியாபாரம் அமோகம். நேசனால் தனித்தியங்க இயலவில்லை. அப்புசிங்ஹோ முதலாளி தினமும் கடைக்கு வரவேண்டியதாயிற்று.

பட்டியகம கடையைக் குத்தகைக்குக் கொடுத்ததால் அது அவருக்குச் சாத்தியமானாலும், தினமும் பத்துப் பதினைந்து மைல்கள் காலையும் மாலையும் பயணிப்பது அவருக்குச் சிரமமாக இருந்தது.

வாகனத்தில்தான் என்றாலும், உடற்களைப்பும் தொழில் சுமையால் மனக்களைப்பும் அவரைப் பற்றிக்கொண்டன. அத்தோடு பட்டம்பெற்ற தனது மகளின் எதிர்காலம் பற்றிய கவலையும் அவருக்கு மேலதிக சுமையாகியது.

மகளுக்காகத் தான் தேர்ந்திருந்த சொந்தக்கார இளைஞனைப் பியசீலி விரும்பவில்லை என்பதை அவளது வார்த்தைகளில் இருந்தும் அவர் புரிந்துகொண்டிருந்தார். 13812

மனைவியைப் பகைத்து அவர் எக்காரியத்தையும் செய்ததில்லை. அதுவும் இருவரும் ஒருமித்து முடிவுசெய்ய வேண்டிய பொறுப்பின் யதார்த்தத்தை அவரால் மறுக்க இயலாதிருந்தது.



PUBLIC LIBRARY
MARUTHAMUNA
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி இரத்த அழுத்தமும், சர்க்கரை வியாதியும் பரம்பரையில் இல்லாவிட்டாலும், உடல் உழைப்பற்றவர்களுக்கும் வரும் பொதுவான நோய்.

முதலாளி அதற்கொன்றும் விதிவிலக்கல்லவே. நாற்பது வயதிலேயே அவை அவரின் உடலோடும் ஒன்றிக்கொண்டன.

திடீரென ஒருநாள் கடையில் இருந்தபடி தனது நெஞ்சைத் தடவிக்கொண்டு குடிக்கத் தண்ணீர் கேட்டார் முதலாளி. உடல் வியர்க்கத் தொடங்கியது. நடு மார்பில் சொல்லிக்கொள்ள இயலாத ஏதோ ஒன்று தனக்குள் நடப்பதாக அவர் உணர்ந்தார்.

மார்பில் வலிப்பதாகவும், தன்னை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்படியும் அந்தரப்பட்டார். வாகனம் காற்றாய்ப் பறந்தது. அரை மணிக்குள் அவசரச் சிகிச்சைப் பிரிவினுள் அது அடைக்கலமானது.

ஏற்கனவே மருந்து மாத்திரைகளுடன்தான் வாழ்ந்தாலும். பொறுப்புகளும் மனச்சுமையும் அவற்றை மிகைத்து வென்றன.

பரீட்சித்த மருத்துவ நிபுணர்கள் இருதயக் கோளாறு என முடிவுக்கு வந்தனர். பத்து நாட்கள் விசேட கண்காணிப்பில் காவல் கைதிபோல் இருக்க நேர்ந்தது. பத்து நாட்கள் பொதுவான "வார்ட்"டிலும் நாட்கள் கழிந்தன.

"வார்ட்"டில் இருந்த நாட்களில், பயிற்சிக்கால மாணவர்கள் போதனாசிரியர்களுடன் வருவர். ஒவ்வொரு நோயாளர் பக்கத்திலும் வட்டமாய்ச் சுற்றிநிற்க அந்நோய்கள் பற்றிய விளக்கங்களும், கேள்வி பதில்களும் நடக்கும். ஆங்கிலத்தில் அத்தனையும் நடந்ததால் முதலாளிக்கு எதுவும் புரிந்திருக்கவில்லை.

தன்னுடைய நோய் பற்றி அறிய ஆசைப்பட்டார். தாமதித்துச் சென்ற ஒரு மாணவனைச் சைகையால் அருகழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொஸ்த்தர மாத்தையோ," என்று பணிவோடு விளித்த அவர் வார்த்தையில் கனிவு கசிந்தது. "எனக்கு வந்துள்ள நோயைப் பற்றிக" கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றார்.

பயிற்சி மாணவருக்கு அவர்மேல் பரிவு பிறந்தது. "பயப்படாதீர்கள். உங்கள் இருதயத்தில் இரத்தக் குழாய் ஒன்றில் ஏற்பட்டுள்ள அடைப்புத்தான் உங்கள் வருத்தத்திறகுக் காரணம்.

"நீங்கள் நீண்டகால சர்க்கரை வியாதிக்காரர். உங்களது கட்டுப்பாடற்ற தன்மையும் ஒழுங்கற்ற மருந்துப் பாவனையும், தேவைப்படும் போது வேண்டிய மருத்துவ ஆலோசனைகள் பெறாமையும் இதற்குக் காரணமாகலாம்.

"அவசியம் ஏற்படும் போது மேற்கொண்ட சிகிச்சைகளும் தேவைப்படலாம். தற்போதைக்கு நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் முன்னர் சொன்னவற்றில் கவனங்கொள்ள வேண்டும்", என்றார் அவர் அச்சப்படாதவாறு.

முதலாளிக்கு விளக்கம் ஓரளவு புரிந்தாலும், நோயின் பாரதூரத்தை முழுமையாக அவரால் உணர முடியவில்லை.

பொறுப்போடும் பரிவோடும் விபரம் சொன்னவர், சிங்களம் பேசிய விதத்தில் இருந்து, அவரொரு தமிழ் இளைஞர் எனப் புரிந்துகொண்ட முதலாளிக்கு, அவர் மீது ஒருவகைப் பற்றுதல் உண்டாகிற்று. மருத்துவத் தொழிலுக்கு மிகப்பொருத்தமான இளைஞர் என மனத்துள் எண்ணிக் கொண்டார்.

❖❖❖❖

**நா**ட்களுக்கென்ன, காத்துக்கொண்டா இருக்கப் போகின்றன?. கால்களில் கட்டிய சக்கரச் சுழற்சிக்கேற்பக் கடிதாய்க் கழிந்தன.

பல்கலைக்கழகத் தேர்வு முடிந்தால் எப்போது இங்கிருந்து ஓடிப் போவது என்றிருப்பதும் சிலகாலங் கடந்ததும் அந்த இன்பகரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை எண்ணி ஏங்குவதும் வழக்கமானது தானே!. "பட்டவருக்குத் தெரியும் பழசும் புதுசும்".

பல்கலைக்கழக வாழ்வு இறுதியானதும் ஹேமாவும் புஷ்பாவும் முன்போல சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஒருநாள் தற்செயலாகக் கண்டிமா நகரில் சந்தித்துக் கொண்டனர். சந்திப்பு இருவருக்கும் பெருமகிழ்வைத் தந்தது.

நினைத்தால் சந்திக்கும் அருகாமையில்தான் ஊர்கள் இருந்தன. என்றாலும் ஆண்பிள்ளைக்கு இருக்கும் சுதந்திரம் இளம் பெண்களுக்கில்லையே.

அப்பாவுடன் கடைக்கு வந்ததாக ஹேமா சொன்னாள். தந்தைக்கு வந்த நோயும் அது பற்றிய விபரங்களையும் அறிந்திராத புஷ்பாவுக்குச் சொன்னாள்.

இப்போது அப்பாவைத் தனித்து எங்கும் அனுப்புவதில்லை என்றும் தான் அல்லது அம்மா கூட வருவதாகவும் கூறினாள். கண்டி பெரிய வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றதாகவும் சொன்னாள்.

கண்டி பெரிய வைத்தியசாலை என்றதும், சொல்ல மறந்ததொன்றைச் சொல்லுபவள் போல புஷ்பா பேசினாள். "ஹேமா அண்ணன் புஷ்பராஜ் இப்போது அங்குதான் பயிற்சிக்கு வந்துள்ளான்", என்றாள். அவனைப் பார்க்கத்தான் தான் கண்டிக்கு வந்ததாகவும் சொன்னாள்.

அவள் சொன்னதைக் காதுள் வாங்கிய ஹேமாவின் மனத்துள் ஏதோ இனம்புரியாத மகிழ்வு தோன்றித் திளைத்தது. அதனை அவளால் மறைக்க இயலவில்லை.

சட்டென அவளது முகத்தில் தோன்றிய மின்னல் கீற்றைப் புஷ்பாவும் அவதானிக்கத் தவறவில்லை.

பயிற்சிக்கு வந்து மாதம் ஒன்றுதான் என்றும் விடுதியில் தங்குவதாகவும் சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புஷ்பா! அப்பா கடையில்தான் இருக்கின்றார். வா, அவரைப் பார்க்கப் போகலாம். உன்னை நான் அவருக்கு அறிமுகஞ் செய்யவேண்டும். நடந்தே போயிடலாம் வா", என அழைத்தாள் ஹேமா.

நோயுற்றிருந்தவர் என்பதால் அவள் அழைப்பைப் புஷ்பாவால் மறுக்க இயலவில்லை. கூடச் சென்றாள்.

முன்னரே புஷ்பாவைப் பற்றி ஹேமா சொல்ல அவர் அறிந்திருந்தாலும் நேரடிச் சந்திப்பு அதுவாக இருந்ததால், அறிமுகமும் புதிது போலிருந்தது.

"எண்ட. வாடிவெண்ட துவே", என்றார் முதலாளி.

தனி அறையொன்றில் அவர் தனித்திருந்ததால் வியாபாரத்திற்கு இடைஞ்சல் இருக்கவில்லை.

"இப்போது உடம்பு எப்படி தாத்தே?" என்ற புஷ்பாவின் வினாவுக்கு, விலாவாரியாக அனைத்தையும் சொல்லி முடித்தார் முதலாளி.

முதலாளி நோய் பற்றிய விபரங் கேட்டபோது ஒரு இளம் தமிழ் டாக்டர் நோய் விபரங்களெல்லாம் விபரமாகச் சொன்னதாகவும், அதன்பின் தான் அங்கிருந்து வரும்வரை தன்னை அவர் தினமும் வந்து பார்த்ததாகவும் நன்றியோடு புஷ்பாவுக்குக் கூறி மகிழ்ந்தார்.

சிறு பொழுதில் புஷ்பா விடைபெற்றுக் கொண்டாள். அண்ணனைப் பார்க்க வரும்போது கடைக்கு வரும்படியும், பெரும்பாலும் தான் அப்பாவுடன் வருவதாகவும் கூறி ஹேமா அவளை வழியனுப்பி வைத்தாள்.

மீண்டும் தன் எண்ணத்திற்குப் புத்துயிரளிக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி அவள் மனம் புளகாங்கிதங் கொண்டது. இந்த அழைப்பில் ஆழப் பதிந்துள்ள அவளின் சுயநலத்தைப் புஷ்பாவும் புரிந்து கொள்ளாமலில்லை.

❖❖❖❖



LENDING SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதி முகந்தான் பார்வையில் பட்டாலும் நெஞ்சுள் பதிந்து போனது அந்தப் பாவையின் வதனம்.

யாராக இருக்கும் அவள்? முகத்தைக் கொண்டே நிறத்தைத் தெரிந்து கொண்டான் மகுமூது. பொது நிறந்தான் கலீல் காக்காபோல. அவரது வீட்டின் வாயிலில் நின்ற பூமரத்துக்கு நீர் பொழிந்ததால், நிச்சயமாக அவள் அவர் சொந்தமாகத்தான் இருக்க வேண்டும்.

தீவிரமாகத் தேடியது மகுமூதுவின் மனம். தினமும் ஆயிரம் பெண்களைக் கண்கள் கண்டாலும், எல்லாமே கருத்தில் உறைவதில்லையே.

ஆனால் அன்று கண்ட அவள் முகத்தை அவனால் மறக்க முடியவில்லை. வயதுக் கோளாறு என்று எண்ணி எறிந்து விடாதவாறு இரும்பாக எண்ணத்தில் உறைந்திருந்தாள்.

வாரம் ஒருமுறை அப்புசிங்ஹோ கொழும்புக்கு வருவார். ஹேமாவும் கூடவே வருவாள். பெண் மக்களின் பிறவிக்குணம் தாயைவிடத் தந்தைமேல் அதிகம் பரிவு காட்டுவது.

மாறாக ஆண்மக்கள் அன்னை மீதுதான் அன்பைப் பொழிவர். ஹேமாவும் அதற்கு விலக்கில்லாதவாறு தந்தைக்கு நிழலானாள்.

கடைக்கணக்குகளைச் சரிசெய்து, கொடுக்கல் வாங்கல்களில் குறைகளைக் கவனித்துத் தந்தைக்கு உதவுவாள்.

கணக்காளர் கருத்தாய் இருந்தாலும், காசு ஒருசிறு கூட்டல் கழித்தலுக்குள்ளேயே கண்ணுக்குள் பொடி தூவி விடும் என்பது முதலாளியின் தொழில் அனுபவம்.

வழக்கம் போல் வாராவாரம் வரும்நாளில் தந்தையும் மகளும் வந்தனர். வாசலில் மகுமூது வரவேற்றான். பெரும்பாலும் முதலாளியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்காதவன் ஹேமாவுடன் பாசமாய்ப் பேசுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் அவள் தமிழில்தான் பேசுவாள். அவனோடு தமிழில் பேசுவது அவளுக்குப் பிடிக்கும். அவளது கொச்சைமொழி அவனுக்கு மூத்தவள் ஜமீலாவின் மூத்த குழந்தையை நினைவூட்டும்.

வீட்டில் இருந்து வரும்போது தந்தைக்கும் மகளுக்கும் தனித்தனி பியசீலி உணவு தயாரித்து அனுப்புவது வழக்கம். நோய் வந்தபின் கணவன் கண்டகண்ட கடைகளில் கண்டதைச் சாப்பிடக் கூடாதென்ற கரிசனை அவளுக்கு.

ஆனால் அன்று மகளுக்கு உணவு தயாரிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டதால், ஹேமா கொழும்பில் கோழிக்கறிச் சாப்பாடு சாப்பிடுவதாகக் கூறிப் புறப்பட்டு வந்துவிட்டாள்.

வந்ததும் வராததுமாக மகுமூதிடம் தனக்குப் பகலுணவாய்க் கோழிக்கறிச் சாப்பாடு வாங்கி வரும்படி கூறி இருந்தாள். கொழும்பில்தான் அதற்குக் குறைவில்லையே.

அவனும் முன்னதாகவே கலீல் காக்காவின் கடையில் சொல்லிவிட வேண்டுமெனக் கடைக்குச் சென்றான். அவனுக்கு அன்று வேலைக்கு விடுதலை என்பதால் அது இலகுவாகிற்று.

அன்றும் வழமைபோல கலீல் காக்காவின் ஹோட்டலில் காலையுணவுக் களேபரம். சிப்பந்திகள் பம்பரமாய்ச் சுழன்றனர்.

கல்லாவில் இருந்த அவர் மகுமூதைக் கண்டதும் காரணங் கேட்டார். வந்த காரணத்தை அவன் அவருக்குச் சொன்னான்.

"ஆருக்குப் புள்ள மொதலாளிட மவளுக்கு கோழிக்கறிச் சாப்பாடு? என்ன ஒருநாளும் இல்லாம!. குடுத்திட்டாப் போகுது", என்றவர். சற்று யோசித்துவிட்டு,

"எங்கட ஊட்டில சொன்னா ஒங்கட சாப்பாட்டோட அந்த நோனாக்கும் செய்யச் சொல்லலாம்," என்றார்.

சிங்களப் பெண். விரும்பிக் கேட்கிறாள். சற்று வித்தியாசமாகத் தரவேண்டும் என்ற எண்ணத்தில்.



PUBLIC LIBRARY MARUTHAMUNAI URBAN COUNCIL KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னதாகவே சொல்ல வேண்டும். சனக்கூட்டம் அதிகம் என்பதால் அங்குள்ள சிப்பந்திகளில் ஒருவரைத் தகவல் சொல்லி அனுப்ப முடியாத அவர்

"தம்பி, கோவிக்காம நீங்களே போய் சொல்லிட்டு வரலாமே. எங்கட மாமி இருப்பாங்க," என்றார்.

மகுழுது எதிர்பார்க்கவில்லை இப்படி ஒரு வாய்ப்புத் தனக்குக் கிடைக்கும் என்று. மீண்டும் ஒருநாள் அவர் தன்னோடு வீட்டுச் சாப்பாட்டுக்கு அழைக்கக் கூடாதா என்றிருந்த அவனுக்கு, வேறு விதமாக் தனித்துச் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி ஆச்சரியப்பட்டான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த மகிழ்வு அவனுக்கு. இருந்தும் அதனை வெளிக்காட்டாதவனாகச் சரியெனச் சம்மதித்துச் சட்டென அங்கிருந்து அகன்றான்.

எங்கே காக்காவின் மனம் மாறி வேறு யாரையாவது அனுப்பிவிட்டால், கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டவனாகி விடுவோமோ என்ற அச்சம் மகுழுதுவிற்கு.

கால்கள் வேகமாக நகர்ந்தன. நொடிக்குள் வந்துவிட்டது போன்ற உணர்வுடன் வீட்டு வாசலில் நின்றபடி "ஊட்டுல யாரு" எனக் குரல் கொடுத்தான். மனம் நிலையற்றுத் தடுமாறியது வரப்போவது யாரென்று அறிய.

"மவள் தாரெண்டு பாருங்க. தாரோ வாசல்ல கூப்பிடுறாங்க" எனக் குரல் ஒன்று அவன் காதுகளில் தகவலொன்றைக் கூறியது.

அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். வரப்போவது மாமியல்ல இளைய தலைமுறைதான் என்று. மனம் ஏங்கியது. வருபவள் அவளாக இருக்க வேண்டுமே என்று.

அவன் ஆசைப்படி வந்தவள் அவள்தான். பாதிமுகங் காட்டிய அந்தப் பாவை. கதவைத் திறந்தாள். கண்ணிமைப்புள் மறைந்தாள். அதற்குள் மகுழுதுவின் கழுகுக்கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக அவளைக் கவ்விக் கொண்டான. அதன் பின் கதவின் பின்னாலிருந்து ஒரு குயில் குரல் கொடுத்தது.

"தாரு? என்ன ஒணும். வாப்பா ஊட்டில இல்ல". இல்லை என்ற பதில் இனித்தது அவன் செவிகளுக்கு.

"நான்தான் மகுமூது வந்திரிக்கன். ஒங்கட வாப்பா சென்னாங்க இண்டைக்கி எண்ட கடைக்கி ரெண்டு சாப்பாடு அனுப்பட்டுமாம். கோழிக்கறிச் சாப்பாடு ஆக்கச் சென்னாங்க."

சொல்லும் போது வாய் கொஞ்சம் குளறியது. காண வந்தவளை முழுமையாகத் தரிசித்த குளுகுளுப்பில். அவன் குழம்பிப்போயிருந்தான்.

"செரி நான் உம்மம்மாவுக்கு சொல்லுறன்" மீண்டும் மகுமூதுவின் காதுகளுக்குள் தேன் பாய்ந்தது. ஒரு வினாடி நின்ற இடத்தில் நின்றவன். இனிமேல் பேச்சுக்கு எதுவிமில்லை என்பதால் நிதானித்துப் பின் திரும்பி நடந்தான்.

❖❖❖❖

இதய நோய் வந்தபின் கண்டி பெரிய வைத்திய சாலைக்கு மூன்று மாதாத்திற்கு ஒருமுறை "க்ளினிக்" போய்வருவது அப்புசிங்ஹோ முதலாளிக்கு வழக்கம். அன்றும் அப்படித்தான் ஹேமாவுடன் போயிருந்தார்.

கூட்டம் அதிகம் என்றாலும். அதிகாலையிலேயே கண்டிக் கடைக்குப் பொறுப்பாக இருக்கும் நேசன் வைத்திய சாலைச் சிற்றூழியனுக்குக் கைக்குள் பொத்தி முன்னதாக இலக்கத்தை வாங்கி வைத்திருந்ததால், அதிகம் காத்திருக்க வேண்டி இருக்கவில்லை.

இலக்கத்தை அழைத்ததும் தகப்பனும் மகளும் உள்ளே சென்றனர். வைத்திய நிபுணருடன் உதவி மருத்துவரும், ஒரு தாதியும் உள்ளே இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி மருத்துவரைக் கண்ட ஹேமா அதிர்ந்து போனாள். அவளுக்கு அது எதிர்பாராத சந்திப்பு. அவருக்கும் அந்த உணர்வே ஏற்பட்டாலும், அவளைக் கண்டதும் அவர் புன்னகைத்தார்.

ஹேமாவுக்கு உடல் வியர்த்தது. வலிந்து ஒருபுன்னகையை முகத்தில் தவழவிட்டாள்.

அது அப்புசிங்ஹோ முதலாளியின் அவதானிப்பில் பட்டாலும், அதை ஒரு மரியாதைக்குரிய சம்பிரதாயப் புன்னகை என்றே எண்ணிக்கொண்டார்.

அந்த இளைய மருத்துவரின் இருப்பு முதலாளிக்கும் மகிழ்வைத் தந்தது. வைத்தியசாலையில் இருக்கும் போது தனக்கு நோய் விபரம் சொன்னதோடு, தன்னை இடையிடையே வந்து சுகம் விசாரித்த தமிழ் இளைஞர்தான் அவர்.

அவர்கள் இருவரும் தமக்குள் புன்னகையைப் பரிமாறிக்கொண்டனர். அனைத்தும் முடிந்து இருவரும் வெளியில் வரும்போது ஹேமாவின் கருத்தோடொன்றிய பார்வை டாக்டர் புஷ்பராஜுக்கு ஒருவித மனச் சலனத்தை ஏற்படுத்தியது.

தந்தையும் மகளும் வாகனத்தை நோக்கி நடந்தனர். ஹேமா தனக்கு ஏற்பட்ட அதிர்வில் இருந்து மீளமாட்டாது முடுக்கிவிட்ட பாவைபோல் நடந்தாள். வாகனக்கதவைக் காரோட்டி காளிமுத்து திறந்துவிட்டதும் பின்னிருக்கையில் இருவரும் அமர்ந்துகொண்டனர்.

மொரிஸ்மைனர் பட்டியகமவை நோக்கிப் பறந்தது. வாகனம் பேராதெனிய தாண்டும்வரை ஹேமா எதுவும் பேசவில்லை. அவள் சற்றுத் தன்நிலைக்குத் திரும்பியதும்....

"அப்பச்சி! அர பொடி தொஸ்த்தர மாத்தையா கவ்த கியலா ஒயாட்ட தன்னவாத?" என்றாள். அந்தச் சின்ன மருத்துவர் யாரென உங்களுக்குத் தெரியுமா என்ற அவள் கேள்விக்கு,

"அவர்தான் நான் வைத்தியசாலையில் இருந்தபோது எனக்கு உதவிசெய்த தமிழ் டாக்டர் என்று உங்களுக்குச் சொன்னவர்", எனத் தந்தை பதிலளித்தார். அவள் தொடர்ந்தாள். அவள் சொன்ன விளக்கம் முதலாளிக்கு வியப்பைத் தந்தது.

"அதுவல்ல அவர். அன்று நான் உங்ளுக்கு அறிமுகம் செய்தேனே எனது நண்பி புஷ்பா, அவளின் அண்ணன்"

"அட அப்படியா! அப்படியானால் நீ ஏன் எனக்கு அங்கு வைத்தே சொல்லவில்லை. அவரை உனக்குத் தெரியுமா?" என்றார்.

"அவரை நான் ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கின்றேன். பெரிய டாக்டர் முன்னால் நமது சொந்த அறிமுகங்கள் பேசப்படக் கூடாதல்லவா. அதனால்தான்."

"ரத்திரம் புத்தெக். ஹறி கருணாவந்தாய்," என்றார் ஹேமாவின் முகத்தைப் பார்த்தவாறே. ஹேமாவும் பதிலுக்கு..

"புஷ்பாவும் அப்படித்தான். தங்கமானவள். கருணை உள்ளவள்," என்றவள் புஷ்பாவின் குடும்பத்தைப் பற்றியும் வானளாவப் புகழ்ந்தாள்.

இரவு மணி ஏழாயிற்று. இருவரும் வீட்டை அடைந்தனர். பியசீலி வாசலில் காத்திருந்தாள். பெண்மகளை வெளியில் அனுப்பினால் வரும்வரை தாய்க்குத் தலைப்பிரசவத்திற்குப் பிரசவ அறைக்குள் மனைவியை அனுப்பிவிட்டு வெளியில் காத்துக் கிடக்கும் கணவனின் நிலைதான்.

மகளைக் கண்டதும் அவளை அணைத்துக் கொண்டாள். ஹேமாவின் முகத்தில் அன்று ஏனோ புதுப் பொலிவு பொங்கித் திளைத்ததை அவளால் அவதானிக்க இயலவில்லை. அக்கறையோடு மகளை வினவினாள்.

"பகல் என்ன சாப்பிட்டாய்? கோழிக்கறி புரியாணி கிடைத்ததா?" என்றாள் கேலியாக. உள்ளூர மகளுக்குப் பகலுணவு தரத் தாமதித்த மனத்துயரை மறைத்தவளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோழிக் குறுமா ஹரிம ரசாய். மகுமூது அங்கே ஒரு வீட்டில் சாப்பாடு அழைப்பித்துச் சாப்பிடுகின்றான். அங்கிருந்துதான் சாப்பாடு எனக்கும் வரச்செய்தான்.

இனிமேல் கொழுபுக்குக்குப் போகும் நாட்களில் கோழிக்கறிச் சாப்பாடுதான். உனக்கும் வேண்டுமா?" என்றாள் நையாண்டி கலக்க.

அம்மா "இன்று இரவைக்கு உனக்குச் சாப்பாடு கிடையாது. மகுமூதிடம் வாங்கிச் சாப்பிடு," என்றபடி பொய்க்கோபம் காட்டித் தன்னைத் திருப்பிக்கொண்டாள். ஹேமா அவளை இறுகக் கட்டித் தரையில் கொட்டிய முத்துக்களனையச் சிரித்தாள்.

இரவு நெடுநேரம் ஹேமாவுக்குத் தூக்கம் தூரமானது. அவனைப் பார்த்தும் ஒரு வார்த்தையேனும் பேச முடியவில்லையே என்ற ஆதங்கம் அவளைக் குடைந்தது. பேச வாய்ப்பில்லை என்பது தெரிந்தும் மனம் அங்கலாய்த்தது.

கண்டதும் இனங்கண்டு அவன்தான் முதலில் சிரித்தான். பின்னர்தான் அவளுஞ் சிரித்தாள். எதிர்பாராத நிகழ்வினால் பெண்மனம் மகிழ்ந்து பதிலுக்காய்ப் புன்னகைத்தது.

"அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள்" முதலில் பார்த்தது கார்வண்ண அழகன் ஸ்ரீஇராமன் தானே. பார்த்ததும் பதிலுக்குத் தானே கேகையன்மான், சீலத்தரசி சீதையும் நோக்கினாள். அதுவே அன்றும் நடந்தது.

இராம காதை அறிந்திருந்தால் ஹேமாவுக்கும் மிதிலைப் படலம் நினைவில் வந்திருக்கும்.

புஷ்பாவைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது அவளுக்கு. அவள் வீட்டிலும் தொலைபேசி இருந்திருந்தால் இரவெல்லாம் பேசியிருப்பாள்.

எப்படி இந்தச் சந்திப்பை அவளிடம் கூறுவது என்ற அவா மேலிட, உள்மனம் உரைத்தது, "பொறு அதனை அவனே அவளுக்குச் சொல்வான்," என.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் எதிர்காலத்தை எண்ணி அவள் ஐயுற்றாள். அவன் விரும்பினால், என்ற எண்ணம் மேலிட உள்மனம் உறுத்திது. அவன் விரும்புவான்.... விரும்ப வேண்டும்.... என்னை ஏன் அவன் விரும்பக் கூடாது?. விரும்ப வைப்பேன்.... இல்லை விரும்புவான்!.

அவன் பார்வையில் இருந்த கனிவு. கண்களில் மிளிர்ந்த தாபம். ஒற்றை நொடிக்குள் என்னுள் புகுந்துகொண்ட கம்பீரம் அவன் என்னை விரும்பிவிட்டதாகக் காட்டினவே. ஹேமா மனதுக்குள் சிரித்துக்கொண்டாள். தானே தனக்குள் துணிவுகொள்வதை எண்ணி.

மொழியால், இனத்தால், மதத்தால், கலாசார பண்பாடுகளால் முற்றிலும் மாறுபட்ட இருவர் ஒன்று சேர்ந்தால் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய இடர்ப்பாடுகளைப் படித்த பெண்ணால் ஊகிக்க இயன்றும், அவன் மீது கொண்டுள்ள காதல் அனைத்தையும் வென்று நின்றது.

தன்னளவில் எனது எதிர்கால மகிழ்வொன்றையே குறியாய்க் கொண்டுள்ள அன்னை என் எண்ணத்திற்கு எதிர்ப்பளிக்காது போயினும், தந்தையை எண்ணி அவள் மனம் துணுக்குற்றது.

சமூகத்துக்கு அஞ்சி வாழும் அவர் எந்த அளவில் தன் விருப்பத்திற்கு இணங்குவார் என்பதை அவளால் எண்ணிப் பார்க்க இயலவில்லை.

ஒருவனைத் தன்னுள் வரித்துக்கொண்ட மனம், மற்றவர்களின் அபிலாஷைகளுக்காக விட்டுக்கொடுத்து, மற்றொருவனுடன் வாழ்வதெப்படி?.

"புஷ்பராஜ் என்னுள் முற்றாய் உறைந்து போனான் என்பதைப் புஷ்பா மட்டுமே அறிவாள். தாய்தந்தையர் அறிந்தால் மட்டுமே எண்ணம் ஈடேற வழியுண்டு. அதற்கான வழிதான் என்ன?" என அவள் தன் சிந்தனைக்குத் தீனியிட்டாள்.

❖❖❖❖



LENDING SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய கலீல் காக்கா வீட்டுச் சாப்பாடு, வழமைக்கு மாறாக இருந்தது. பொடி நோனாவின் விருப்பத்திற்குக் கோழிக்கறி என்றாலும், வகையறாக்கள் அதிகம்.

நெய்ச்சோறு, கோழிக் குறுமாவுடன் "க்றீன்பீஸ்" அவியல், கத்தரிக்காயும் வாழைக்காயும் பொரித்து அதனுடன், அவித்த உருளைக் கிழங்கும், ஈரல் துண்டங்களும் மரமுந்திரிகைப் பருப்புங் கூட்டிய "களியா".

வெங்காயம், பேரீந்து, பெரிய மிளகாய் சேர்த்து வினாகிரியில் பதமிட்ட "அச்சாறு" என வேறுவேறு பாத்திரங்களில் பரிமாறப்பட்டிருந்தன.

அவித்துத் தட்டிப் பொரித்த மாட்டிறைச்சித் துண்டொன்றை உணவு கொண்டுவந்த சிறுவன் மகுமூதிடம் தனித்து வேறாய்த் தந்துவிட்டும் சென்றான்.

ஹேமா தனக்குத் தானே பரிமாறி வயிராற உண்டாள். அவள் ருசித்து ருசித்து அனுபவித்து உண்பதிலிருந்தே சாப்பாட்டின் சுவையை மகுமூதுவினால் உணர முடிந்தது.

அவன் அறிந்திருக்கவில்லை அத்தனைச் சுவையான தயாரிப்புக்கள் அவளுக்காக அல்ல அவனுக்காகச் செய்யப் பெற்றவை என்பதை.

கலீல் காக்காவின் மகள் கதீஜா. தனது பெயரின் முதலெழுத்து தனது மகளின் பெயரில் முதலெழுத்தாக வந்தால் அவருக்கு நல்லதென ஒரு ஆலிம்சா "பால்பார்த்துச்" சொன்னார் என்று வைத்த பெயர்.

சில பழைய குருட்டு நம்பிக்கைகளுக்கு அன்றைய மக்கள் அடிமையாய்ப் போனதன் விளைவுதான் அது.

இருந்தும் மகள் பிறந்த பின்னர் வியாபாரத்தில் கலீல் காக்கா கொஞ்சம் உச்சம்தான். அதற்கு அவர் உழைப்பே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதீஜா பார்வைக்கு அழகானவள். பள்ளிப் படிப்பு பத்து வரைதான். பெண் பிள்ளைகள் அதிகம் படித்தால் மாப்பிள்ளை தேடுவது கஷ்டம் எனப் பெண்கள் பரிமாறிக்கொண்ட பொய்ப் பிரசாரம். அதனால் தொடர்ந்து அவளால் படிக்க முடியவில்லை.

எது எவ்வாறாயினும் கதீஜா இளமையிலேயே தாயை இழந்தவள். தந்தை மறுமணம் செய்யாமையால், பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்தவள். வேறு உடன் பிறந்தார் இன்மையால் தந்தை முற்றிலும் தன் பாசத்தை அவள் மீது பொழிந்தார்.

வயது பதினெட்டு ஆகுமுன்னரே, பாட்டி அவளைப் பூரணப் பெண்மைக்குரிய சகல வாழ்வு முறைகளையும் தனது அனுபவ முதிர்ச்சியால் கற்றுத்தந்து வளப்படுத்தி இருந்தார்.

நாகரிகம் என்ற பெயரில் இளைய தலைமுறையினரால் பின்பற்றப்படும் அர்த்தமற்ற அலங்காரங்களிலும் செய்கைகளிலும் அவளைத் தடுத்தாள்.

எங்குச் சென்றாலும் இடத்திற்கேற்ப வாழப் பழக்கி இருந்தமை பிற்காலத்தில் அவளுக்குப் பலமாக அமைந்தது.

சில காலமாகத் தந்தையின் விருப்பத்திற்கு இணங்கவே மகுமூதுவுக்கு உணவு தந்து உதவினர்.

நல்ல குணமுடையவனாக இருந்ததால், தனித்து வாழும் அவனைக் கலீல் காக்கா தம்மில் ஒருவனாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

அவன் லீவு கிடைக்கும் போதெல்லாம் ஹோட்டலுக்கு வந்து உதவுவதும் அதற்கொரு காரணமாகிற்று. அவனுக்கும் அந்தத் தொழில் பரிச்சயமானது.

பேர், உருவம் அறியாத அவனை வாப்பாவுடன் வீட்டுக்கு வந்த அன்றுதான் கண்டுகொண்டாள் கதீஜா.

யாரவன் என்றறிய வாசல் பூஞ்செடிக்கு நீர் வார்ப்பதுபோல் வாய்ப்பை அமைத்துக் கொண்டு ஓரக்கண்ணால் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மகுமூது அவளை அவதானித்ததை அவள் அறிந்திருக்கவில்லை.

இரண்டாம் முறை இருவரும் ஒருவரை ஒருவர் முழுமையாகக் கண்டுகொண்டனர். ஒற்றைப் பார்வைதான் என்றாலும் அவரவர் உள்ளத்தில் வேரூன்றும் நோக்காயிற்று. அதன் பிரதிபலிப்பே அவனுக்கென்று தனியாக அனுப்பி வைக்கப்பட்ட இறைச்சிப் பொரியல்.

அன்றிலிருந்து கதீஜாவும், மகுமூதும் மனத்திடை மீண்டும் எப்போது சந்திக்கும் வாய்ப்பு வருமென ஆவலுற்றிருந்தனர். அதற்கான வாய்ப்பும் வந்தது.

❖❖❖❖

**பெ**ற்றோருக்குத் தனது எண்ணத்தைப் பரிமாறுவது எவ்வாறு என்ற தேடுதலில் இருந்த ஹேமாவுக்கு இறுதியாகக் கிடைத்த முடிவு புஷ்பாவைச் சந்திக்க வேண்டும் என்பதுதான்.

கலஹா தொலைதூரம் இல்லையென்றாலும், தனித்து அவள் கல்லூரியைத் தவிர எங்குஞ் சென்றதில்லை.

வாகனம் இருந்தது. வழித்துணைக்குக் காளிமுத்து இருக்கின்றான். ஆனால் அம்மா அனுமதிக்க மாட்டாளே. இறுதியாய் அம்மாவையும் அழைத்துக்கொண்டு செல்லுவதென முடிவு செய்தாள்.

புஷ்பாவைப் பற்றி ஹேமா சொல்லக் கேட்டிருந்த பியசீலி அவளைக் காண விரும்பினாள். முதலாளி எதிர்ப்பெதுவும் சொல்லவில்லை.

அவர் முன்னரே புஷ்பாவைச் சந்தித்திருந்தார். தாயும் மகளும் புறப்பட்டனர். அது ஒரு சனிக்கிழமை. பொது விடுமுறை நாள்.

புதிதாக ஒரு குடும்பத்தைச் சந்திக்கச் செல்வதால் பியசீலி சில பலகார வகைகளை ஆயத்தம் செய்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டைப் பணியாரம், கொக்கீஸ், ஆஸ்மி போன்றவற்றோடு வீட்டில் பழுத்த மாம்பழங்களையும் ஒரு கூடையில் சேர்த்துக் கொண்டாள்.

காரோட்டி காளிமுத்து சுமக்கமாட்டாது அவற்றைச் சுமந்து வாகனத்தின் "டிக்கி"யில் ஏற்றிக் கொண்டான். ஒழுங்கில்லாப் பாதையில் உருண்டது வாகனம்.

மாலைப் பொழுது. வாசல் தோட்டத்தில் ரோஜாச் செடிகளுக்கு நீர் புகட்டிக் கொண்டிருந்தாள் புஷ்பா.

வீதியில் காரொன்று வந்து நின்றதும், புஷ்பாவின் கவனம் வாகனத்தை நோக்கி நகர்ந்தது. ஹேமாவும் மற்றுமொரு பெண்ணும் அதிலிருந்து இறங்கியதைக் கண்ட அவளுக்கு வியப்பை அடக்க இயலவில்லை.

நனைந்திருந்த கைகளை பாவாடையில் துடைத்தபடி அவர்களண்டை ஓடினாள். ஹேமாவுடன் வந்தபெண் சாயலில் அவளைப் போன்று இருந்ததால் அது அவளின் தாயென அவளால் ஊகிக்க முடிந்தது.

ஹேமா அவளது கைகளைப் பற்றிக்கொள்ள "அம்மே, எண்ட அம்மே," எனப் பியசீலியைப் புஷ்பா ஆதரவோடு வரவேற்றாள்.

மூவரும் வராந்தவுக்கு வந்தனர். இருக்கை தந்தாள் புஷ்பா. மூவரும் அமர்ந்து கொண்டனர். சிறு பொழுதில் புஷ்பா வீட்டினுள் நுழைந்து அவளது தாயுடன் வந்தாள். அழகிய அறிமுகமொன்று அவர்களுக்குள் நடந்தது.

வயதானவர்கள் இருவரும் பழங்கதை பேச, நண்பிகள் இருவரும் தோட்டத்துக்கு வந்தனர். சிறிது நேரம் உலவிவிட்டு ஒரு கல்லிருக்கையில் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

சென்ற வாரம் அண்ணன் வந்ததாகவும், எதிர்பாராத விதமாக வைத்தியசாலையில் ஹேமாவைச் சந்தித்த செய்தியை அவன் அவளுக்குச் சொன்னதாகவும் புஷ்பா கூறினாள்.



PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேறென்ன சொன்னார்?" என்றாள் ஹேமா.

"எல்லோரும் போல்தான் "அம்மாஅப்பா விரும்பாமல் நான் எதுவும் செய்யமாட்டேன்" என்பதுதான்." என்றாள் புஷ்பா.

அவனுடைய பதில் ஹேமாவுக்கு மனத்தெம்பைத் தந்தது. அது அனுகூலமான பதிலாகவே எண்ணினாள்.

"ஏன் நீ எனது விருப்பத்தை உன் பெற்றோருடன் சொல்லக் கூடாது? எனக்காக அதை நீ செய்வாயா?" என்றாள் புஷ்பாவின் கையைப் பற்றியவளாக.

வெறும் ஒருதலைக் காதலாக அது தொடரக் கூடாதே என அவள் ஆதங்கித்தாள்.

புஷ்பா பேசினாள் "ஹேமா, என்னளவில் நீ என் அண்ணனுக்குப் பொருத்தமானவளே. தான் பழகும் பண்பட்ட சமூக ஒருமைப்பாடு என் தந்தையையும் நெகிழச் செய்யும்."

"அப்பாவின் வழியே அம்மாவின் பாதங்கள் தொடரும். இந்நிலையில் உனது பெற்றோர்களை எண்ணியே நான் ஐயங் கொள்கின்றேன்."

பேச்சினிடையில் தேநீருக்காக அம்மாவின் அழைப்பு வந்ததும், அதை அந்த அளவில் துண்டித்துக் கொண்டு இருவரும் எழுந்து சென்றனர்.

மேசையொன்றில் பலகாரங்கள் சிலவற்றோடு, மூடிய குவளையில் தேநீரும் இருந்தது. புதிதாக வந்தவர்களை மூத்தவர்களே உபசரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நண்பி அருகில் மகளை இருக்கச் சொல்லிவிட்டு அம்மாவே பரிமாறினாள். காளிமுத்துவுக்கும் தனியாகப் பரிமாறப்பட்டது.

புதிதாகச் சுட்டெடுத்த வடையும். தொட்டுக்கொள்ளச் சம்பலும் நால்வரின் நாக்கு நரம்புகளுக்கும் நல்விருந்தளித்தன.

வட்டமாய் வெட்டிய வாழை இலையைத் தட்டத்தில் பரத்தி, மத்தியில் வைத்த வடையருகில் இடித்த புதினாச் சம்பலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறப்பட்டன. எத்தனை பொருத்தமான கூட்டு!. சுள்ளென நாக்கைச் சுடும் சம்பலும், பரும்பு வடையும். ஹேமா இரசித்து உண்டாள்.

உண்ணும்போது ஹேமா புஷ்பாவைப்பார்த்துச் சொன்னாள் "இவை இரண்டும் உன்னையும் என்னையும் போல", என்று. அனைவரும் அவளது நகைச்சுவையைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தனர்.

தாய்மார் இருவரும் தோழியராகினர். பலதும்பத்தும் பேச்சுக்குத் துணைநின்றன. இரண்டு பெண்கள் சேர்ந்தால் இரண்டு ஊர்கள் சேர்ந்தது போல்தான். பேசவா செய்தி வேண்டும்?.

இருவரினதும் பூர்வீகம் தொட்டு, அன்றைய நாள்வரை பேசி முடித்திருந்தனர். புஷ்பாவின் அம்மாவுக்குச் சிங்களம் தண்ணீர்பட்டபாடு என்பதால் பேச்சிடையில் தொய்வுக்கு வழியிருக்கவில்லை.

மாலைமணி ஐந்துக்கு விடைதந்து அரைமணியும் கடந்தது. இருள் சூழுமுன் வீட்டை அடைய வேண்டும் என்ற தாய்மையின் உந்தல். நண்பிகளின் பேச்சைத் தொடர முடியாதபடி பிரியச் செய்தது.

நீண்டநாள் பழகிய நட்பின் இறுக்கத்தோடு அம்மாக்களும் விடைபெற்றுக் கொண்டனர். அவர்கள் இருவரதும் நெருக்கத்தை அவதானித்த நண்பிகள் நெஞ்சங்களில் நம்பிக்கை துளிர்த்ததை இருவரும் தனித்தனி உணர்ந்தனர்.

❖❖❖❖

குடும்பத்துள் ஒரு திருமண வீடு. ஒன்றுக்குள் ஒன்றாகப் பழகிவிட்டதால், கலீல் காக்கா மகுமூதுக்கும் அழைப்பு விடுத்தார்.

சொந்தத்துள் என்பதால் கதீஜாவும் கல்யாணத்திற்கு வருவாளென்ற நம்பிக்கை உள்மனத்துள் உந்தியதால் மனத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைக்காணும் அவாவுடன் மறுக்காது அவனும் அழைப்பை ஏற்றுப் போயிருந்தான்.

கல்யாண வீடு களைகட்டிக் கிடந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுவேறாய் மண்டபங்கள் உணவுக்காக ஒதுக்கப்பெற்றிருந்தன.

உள்ளே போகவும் வரவும் ஒரே வழிதான். முன்னதாகவே வந்துவிட்டான் மகுமூது. தொழுகைக்காகப் பள்ளிவாயிலில் காணும் நண்பர்கள் பலரைக் கண்டாலும், சலாத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டான்.

கண்கள் மட்டும் பார்த்தும் பாராததுமாய்ப் பெண்கள் குழாத்தைத் துழாவின. கதீஜா கண்ணில் படவில்லை.

"வாங்க தம்பி மகுமூது, சாப்பிட வாங்க" என்ற குரலோடு அவனது தேடுதலுக்கு முத்தாய்ப்பு இடப்பட்டது, அவன் குரல்வந்த திக்கை நோக்கினான். கலீல் காக்காதான் அவனை அழைத்தார். அழைத்துச்சென்று ஆறு பேருடன் அவனையும் ஒருவனாக்கினார். இருந்தவர்கள் தெரிந்தவர்கள்தான்.

"சஹன்" வந்தது. கோழிப்பொரியல், நெய் மணக்கும் பாஸ்மதி அரிசி ஆட்டிறைச்சி புரியாணி, புதினாச் சம்பல், அச்சாறு, ஆட்டுக்கால்சுப், அன்னாசித் துண்டுகள், வட்டிலப்பம் இத்தியாதி இத்தியாதி. முதலில் கண்ணும் மூக்கும் களிகொள்ளும் உணவுவகை.

கண்டதும் நாவூற கைகளைப் பிசைந்தனர் விருந்தினர். மகுமூது மட்டும் கல்லாய்ச் சமைந்திருந்தான். தேடிவந்தது கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனுக்கு.

மற்றவர்கள் நாக்குச் சுவை மறந்து, நாளைக்குக் கிடைக்காத உணவு என்பதால் நீட்டிநிமிர்ந்து கொட்டிக்கொண்டனர்.

கடமைக்குக் கொறித்துவிட்டு, கையலம்பிக் கொண்டு வாசலுக்கு வந்தான் மகுமூது. அங்கு அவன் கண்ட காட்சி அவன் பசியைப் பொசுக்கியது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, இது எண்ட மாமி. அதான் "வைப்"ட உம்மா. இது எண்ட மகள் கதீஜா." என்று மாமியையும் மகளையும் அவனுக்கு அறிமுகஞ் செய்தார் கலீல் காக்கா.

கிழவிக்கு முதல் அறிமுகம். மகளுக்கும், மகுமூதுக்கும் அதுதான் முதல் சந்திப்பு என அவர் எண்ணினார். புன்னகைப் பரிமாறல் மட்டும்தான் என்றாலும், இளைய மனங்களுக்குள் ஏற்பட்ட எண்ணப் பரிமாற்றங்கள் அவருக்குள் அறியப்படாதவை.

"போவோம் போவோம்," என்றாள் மூத்தம்மா. நீண்ட நேரம் நெருப்பையும் பஞ்சையும் நெருக்கிவைக்கக் கூடாதென்பதால். அவள் அறிவாளா அந்தச் சொற்ப கணத்துள் பார்வைக்குள் பரிமாறப்பட்ட பலகோடி எண்ணங்களை.

❖❖❖❖

பதறிப்பதறி உபசரித்தாள் ஜமீலா. திண்ணையில் பாய் விரித்தாள். தாகந்தீர்க்க முதலில் தண்ணீர் தந்தாள். வருடங்கள் தாண்டிவந்த தம்பியைக் கண்ட அவளுக்கு ஏற்பட்ட மகிழ்வின் உச்சம் அவளைப் பம்பரமாக்கியது,

அவனுடன் வேற்று மனிதர் ஒருவர் வந்திருப்பதைக்கூட நோட்டமிட முடியவில்லை அவளால்.

"வாடா தம்பி வா. நீ எப்படா வந்த கிளி," என்றாள். முக்காட்டால் மூடியிருந்த தலைக்குள் பாதி தெரிந்த முகத்தின் பொலிவு. அவளது மனத்தின் கிளர்வை மெல்லிய நகையோடு அப்பட்டமாக்கியது. பூரித்துப் போனாள்.

மாதந் தவறாமல் அவனது பணத்தை மட்டும் கண்ட அவளுக்கு, அவன் வருகை பேருவகை தந்தது. இரத்த உறவின் இறுக்கத்தை வார்த்தைகள் காட்டின.

மகுமூது கூட ஒன்றிவந்த கலீல் காக்காவைப் பாயில் அமரவைத்தான். சட்டையும் சாரமும் உடுத்து வந்திருந்த அவருக்குப் பாயில் உட்காருவது சுகமாக இருந்தது.

வண்ணப்பன் கொண்டு இழைக்கப்பட்ட புத்தம்புதுக் கற்பன்பாய். மருதமுனைப் பெண்களின் கைவண்ணத்தை ஜமீலா பாயில் பதித்திருந்தாள்.

பாயில் அமர்ந்த கலீல் காக்காவுக்கு மனத்துக்குள் ஏதோ ஒரு நினைவு வர வாய்க்குள் மெல்லச் சிரித்தார். "மட்டக்களப்பார் மந்திரத்தால் பாயில் ஒட்ட வைப்பார்கள்" என்ற நகைச்சுவை தானது.

மட்டக்களப்புக்குப் போகும் வேற்றுப் பிரதேசத்தாரை அவர்கள் மந்திரத்தால் பாயில் ஒட்டவைத்து மாப்பிள்ளையாக்கி விடுவார்களாம்.

இப்படி மட்டக்களப்பாரின் விருந்தோம்பலில் மயங்கிபபோய் அங்கேயே தங்கிவிட்ட சிலர் தமது ஆற்றாமையை மறைக்கக் கட்டிவிட்ட புரளியது.

"ராக்கோச்சில வந்தக தாத்தா. காக்காட ஊட்ட போய் குளிச்சிக்கிளிச்சி படுத்துக் கெடந்து, பகல் சாப்பாடும் திண்டுட்டுத்தான் வாறம்". சகோதரியின் கேள்விக்குத் தம்பியின் பதிலது.

கதவிடுக்கில் கண்களைச் சொருகிய ஜமீலா, கூட வந்திருப்பவர் யாரென விழிகளால் விசாரித்தாள். அவனும் புரிந்துகொண்டு, "இது கலீல் காக்கா. கொழும்பில ஹோட்டல் வெச்சுக்கிரிக்கார். இவர்ர கடையிலதான் நான் மூணு நேரமும் சாப்பிடுற தாத்தா".

வீட்டில் சாப்பாடு என்றால் விபரீதம். கிராமப்புறப் பெண்கள் அதனை ஜீரணிக்க மாட்டார்கள் என்பதால் கடைச் சாப்பாடு என்றான். அதனைக் கலீல் காக்காவும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் மௌனமானார்.

கலீல் காக்காவுக்கு ஊர்புதிது. சுற்றாடலும் புதிது. சுற்ற எங்கிலும் பார்வையைச் சுழற்றினார். சிறிய வீடு. வீட்டு முற்றத்தில் கிணறு. அதனைச் சுற்றிய பசுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காகப் பெருக்கப்பெற்ற மணல் முற்றம். பரந்த காணியைச் சுற்றிய ஓலை வேலி. ஒட்டு மாமரத்தில் காய்த்துத் தொங்கும் மாங்குலைகள், ஓங்கி வளர்ந்து காய்த்துக் குலுங்கும் தென்னை மரங்கள்.

கொழும்பில் காணமுடியாத கண்குளிர் காட்சிகள். இருந்த இடத்திலிருந்தே அனைத்தையும் அவர் கண்கள் உண்டு மகிழ்ந்தன.

தம்பி மாதாமாதம் அனுப்புகின்ற பணத்தைக் குருவிபோல் சேகரித்து, கொட்டுக் கிணற்றைக் கற்கிணறாக்கி இருந்தாள் ஜமீலா.

வீட்டையும் புதுப்பித்திருந்தாள். மகுமூது மனத்துக்குள் மகிழ்ந்தான்- தான் அனுப்பும் பணம் வீண்போகவில்லையென.

கொழுத்த கோழிக்கூட்டு வாழைப்பழமும், பாகிட்டுப் பொரித்த சோவிப் பணியாரமும், கோப்பியும் பரிமாறப்பட்டன.

எப்போதுமே விருந்தினரின் வருகையை மனத்தில்கொண்டு பலகாரங்கள் அடுக்கனைப் பானையடுக்கில் சேர்த்து வைப்பது விருந்தோம்பலில் மகிழும் மருதமுனை மக்களின் சம்பிரதாயம்.

சாப்பிடச் சொல்லும்படி தம்பியை ஏவினாள் சகோதரி.

"மச்சான் வட்டைக்க போயிரிக்கார் தம்பி. "மகிரி" தொழ வந்திருவார். நீ அவியளோட கதைச்சிக்கிரி. நான் ராவைக்கி ஒங்களுக்கு சோறாக்கிறன்."

என்றபடி வீட்டுக்குள் நுழைந்தாள் ஜமீலா. புதிதாக வந்தவர்களைக் கருத்தோடு உபசரிக்கும் அவளது அன்பான உபசரிப்பு கலீல் காக்காவின் மனத்தில் ஆழப்பதிந்தது.

சொன்னபடி மேற்கு நோக்கிப் பொழுது சாயும் வேளை, மீராப்பிள்ளை தோளில் மண்வெட்டியுடன் மூங்கில் கடவலைத் தாண்டி வளவுக்குள் நுழைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேறு படிந்த சிறுவாலும் சட்டையும், தலையைச் சுற்றிய "துவாய்"த் துண்டும் அவரது ஆஜானுபாகங்களான உடலை மூடி இருந்தன. உழைப்பின் ஒவ்வொரு துளியும் வியர்வையாய் மேல் சட்டையை நனைத்திருந்தது.

கலீல் காக்காவின் கால்கள் அவரைக் கண்டதும், தானாகவே எழுந்துகொண்டன. கல்லாப் பெட்டியில் காசை எண்ணும் அவரது விரல்கள், மீராப்பிள்ளையின் காய்த்துக் கறுத்த விரல்களைக் கண்டு கூசின.

கொழும்பில் தினமும் கரத்தை தள்ளும் கூலியாட்களும், முதுகு வளைய மூட்டை தூக்கும் அன்றாடங் காய்ச்சிகளும் அவரது மனக்கண்ணில் தோன்றி மறைந்தனர்.

மைத்துனனுடன் புதிதாக ஒருவர் வீட்டில் இருப்பதும், அவர் தன்னைக் கண்டதும் எழுந்து மரியாதை செய்ததும் மீராப்பிள்ளையின் கவனத்தை ஈர்த்து, வழமையான முகமனை மொழிய வைத்தன. "அஸ்ஸலாமு அலைக்கும்" என்றார் முகம் பொலிய. பதிலுக்கு இருவரும் "வஅலைக்குமுஸ்ஸலாம்" என்று ஒன்றி ஒலித்தனர்.

"தம்பி நீ ஊருக்கு வந்ததெண்டு காக்கா றோட்டில கண்டு சென்னார். இவியளும் ஒன்னோடதான் வந்தத?" என்றவர் மகுமூதிடம் "தேத்தண்ணி கீத்தண்ணி குடிச்சயள?" என வினவினார்.

"ஓம் மச்சான் குடிச்சம்" என்ற பதிலோடு கலீல் காக்கா பற்றியும், தனக்கும் அவருக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றியும் விபரமாய்ச் சொன்னான்.

"சரி கதச்சிக்கிட்டு இரிங்க, குளிச்சுக்கிட்டு வாறன். ராவைக்கி சோறு திண்டிட்டுத்தான் போகவேணும்," என்ற உபசரணையுடன் மீராப்பிள்ளை கிணத்தடி நோக்கி நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீல் காக்காவின் மனம் மலர்ந்தது. தான் வந்த நோக்கத்தில் பெரும்பங்கு நிறைவு பெற்றதாக எண்ணினார்.

மட்டக்களப்பு என்றாலே, தொலைவில் கிட்டாத சீமை என்றிருந்தவர், மருதமுனைக்குத் தானும் வரவேண்டும் என்ற எண்ணத்தை இறுகப் பற்றிக்கொள்ளக் காரணமிருந்தது. அதனை மகுமூது அறிந்திருக்கவில்லை.

❖❖❖❖

கல்யாண வீட்டில் மகுமூதின் சந்திப்பு, பாட்டிக் கிழவியின் மனத்தில் பட்டென ஒரு மின்னலைப் பதிவாக்கிவிட்டது.

"வீட்டிற்குள் குமரிருந்தால், வருபவன் போபவனெல்லாம் மாப்பிள்ளை போல்தான் கண்ணுக்குத் தோன்றுவான் பெற்றோருக்கு" என்பது போலில்லாமல், பேத்திக்கு இவன் பொருந்துவான் என்ற எண்ணமே அவளுக்குள் பதிந்து போன எண்ணக் கீற்று.

தோற்றத்தில் பொருத்தப் பாடாகவும், பணிவான அவன் சுபாவமும் அவளுக்குப் பிடித்திருந்தன.

ஏற்கனவே வீட்டில் உணவு கொள்ளும் அவனைப் பற்றி மருமகன் சொல்லி இருந்ததால், அந்த எண்ணத்தின் வலுக்கூடிற்று.

நாட்கள் நகர்ந்தன. பாட்டியின் மனத்தில் பதிந்த எண்ணம் படிய மறுத்தது. ஒருநாள் இராப்பொழுது. கலீல் காக்கா "றெடிபியூஷனில்" பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார். அந்தப் பாட்டொலிக்குள் பேத்தியின் காது படாமல் மருமகனுடன் பேசத் துணிந்தாள் கிழவி..

"தம்பி, கதீஜாவுக்கு வயசு ஏறிக்கிட்டுப் போகுது." என்று நிறுத்தினாள். மருமகன் செவிகள் மாமியின் வார்த்தைகளை உள்வாங்கியதும், தன் பார்வையை அவர்புறம் திருப்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கிழவி நேரடியாகவே விடயத்திற்கு வந்தாள் "தம்பி, அந்த மகுமூதுத் தம்பிய பேசிப் பார்த்தா என்ன?"

ஒரு பொறுப்புள்ள தாயின் நேர்மையான ஆதங்கம். புரிந்தது அவருக்கு. தாயை இழந்த தனது மகளைத் தாய்க்குத் தாயாக இருந்து வளர்த்தெடுத்த ஜீவன், தன் கண்காணும் போதே தனது கடமையை நிறைவேற்ற வேண்டுமென அவாவுறுவதில் உள்ள நியாயத்தை அவர் உணர்ந்தார்.

தன்னோடு நெருங்கிப் பழகியும் இதுவரை தனக்குத் தோன்றாத ஒன்றை மாமி தொட்டுக் காட்டியதும், அவர் தன்னைச் சுதாரித்துக் கொண்டார்.

"மாமி அந்தப் புள்ள மட்டக்களப்பு. நாம கொழும்பு. சரிப்பட்டு வராதே?"

"ஊரப்பத்தி நாம எனாத்துக்கு யோசிக்கோணும?. மாப்பிள்ளைய இங்கைய வெச்சுக்கலாந் தானே."

"இல்ல மாமி, மட்டக்களப்பில மாப்பிள்ளைக்கி ஊரில ஊடு, காணி கேப்பாங்களாம்."

"நமக்குத்தான் ஊடு இங்க இரிக்கே. தொழிலுக்கு ஹோட்டல்ல இரிக்கலாம். வேற தொழிலுக்குக் போகத் தேவல".

"அவர்ர குடும்பத்த பத்தி ஒண்டுந் தெரியாம நாம எப்பிடிப் பேசுறது. பொறத்தி ஊருக்கு மட்டக்களப்பார் மாப்பிள்ள குடுக்க மாட்டாங்களாம். அது மட்டுமில்ல பொடியன் விரும்புவாரோ தெரியாதே!"

"பொடியன் விரும்பாமலேன்?. ஏண்ட புள்ளைக்கி என்ன கொறச்சல்?. விரும்புவான். எதுக்கும் நீங்க ஒருதரம் பொடியன் ஊருக்குப் போறப்போ கூடப்போய் எல்லாத்தையும் பாத்திட்டு வாங்களேன் மவன்"

கிழவியின் கட்டுக்கடங்காத ஆசை கலீல் நானாவுக்குப் புரிந்தது. கையில் இருக்கும் கனியைக் காகம் கொத்திக்கொண்டு போய்விடக் கூடாதே என்ற ஆதங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் உள்ள யதார்த்தத்தை விளங்கிக் கொண்ட அவர், அது பற்றி மகுமூதுவுடன் பேசுவதாகப் பேச்சை முடித்துக் கொண்டார்.

அதன் விளைவுதான் ஊர் பார்க்க ஆசை எனக் கூறி மகுமூதுடன் மருதமுனைக்கான விஜயம். மூன்று நாட்கள் அங்குத் தங்கி அவர் கொழும்பு திரும்பினார்.

குடும்பத்தைப் பற்றிய அவரது தேடுதல் அவருக்குத் திருப்தி அளித்திருந்தது. தனது மாமியாரின் விருப்பத்தை முதலில் மகுமூதுடன் பரிமாறி அவனது விருப்பத்தை அறிந்த, பின்னர் மீண்டும் மருதமுனை போவதை அவர்மனம் உறுதி செய்துகொண்டது.

❖❖❖❖

தொட்டதைத் தொடர்ந்து பேச முடியவில்லையே என்ற ஏமாற்றம் மனத்திலெழுந்தாலும் புஷ்பாவின் பேச்சிலிருந்து ஹேமா பல விடயங்களைப் புரிந்து கொண்டாள்.

ஒன்று தந்தையின் எதிர்ப்பு இருக்காதென்பது. மற்றொன்று தந்தை விரும்புவதைத் தாய் ஆதரிப்பாள் என்பது.

மற்றொன்று தாயும் தந்தையும் விரும்பினால் புஷ்பராஜ் மறுக்க மாட்டான் என்பது. இதனிடையில் புஷ்பாவின் முழுமையான சம்மதம்.

ஹேமா சிந்தனை வயப்பட்டாள். இறுதியில் இனிக் காயை நகர்த்துவது தனது பொறுப்பில் என்னும் முடிவுக்கும் வந்தாள். அப்போது சட்டென அவள் மனக்கண்முன் மகுமூது தோன்றினான்.

முந்திய வாரம்தான் நீண்ட நாட்களின் பின் தான் ஊருக்கு ஒரு முறை போய்வர வேண்டும் என்று, அவள் மூலம் அப்புசிங்ஹோ முதலாளியிடம் விடைபெற்றுச் சென்றிருந்தான்.

நேரடியாக அவரிடம் கேட்க மாட்டாது, பொடிநோனா மூலம் தகவல் தரப்பட்டது. அவளுடைய பரிந்துரையும் பயன்படும் என்றுதான். அது பலித்திருந்தது.

அவ்வேளை அவன் சொன்ன அவனது விருப்பத்தைக் கருவாக்கிக் கொள்ள அவள் எண்ணினாள். தான் சொந்த ஊருக்குப் போய்க் கடையொன்று போட்டு வியாபாரம் செய்ய வேண்டும் என்பதுதானது.

வியாபாரத்தில் நல்ல அனுபவம் கிடைத்தபின், தனது சொந்தக்காலில் அவன் நிற்க முயல்வதில் தப்பில்லை என்பதை அவள் உணர்ந்திருந்தாள்.

தானே வாய்ப்பு வரும்போது தகப்பனாரிடம் அதனைச் சொல்லி, அதற்கான பொருளுதவி பெற்றுத் தருவதாகவும் அவனுக்கு வாக்களித்தது அவள் நினைவுக்கு வந்தது. அவன் ஊரிலிருந்து திரும்பும் நாளுக்காக ஹேமா காத்திருந்தாள்.

வாரமொன்று வருடமாய்க் கழிந்தது ஹேமாவுக்கு. மகுமூதும் வந்தான். வழைமைபோல் வியாபாரத்தில் அவன் கவனம் பொதிந்தது.

முதலாளி கொழும்புக்கு வரும்நாள் ஹேமா என்றும்போல் கூட வந்திருந்தாள். பயண விடயங்கள் பற்றிக் கேட்டாள். முதலாளி கணக்குவழக்கில் கவனமானார்.

எல்லாம் கிடைக்கும் கொழும்பில், புத்தம் புதிதாய் எல்லாம் கிடைப்பதில்லை. கிராமப்புறச் சிங்கள மக்கள் விரும்பி உண்ணும் சுவையான கூட்டு, நாட்டரிசிச் சோற்றுடன், "பொல் சம்பல்" "பல மாளு அம்புல்தியால்" பொரித்தெடுத்த கட்டிக் கருவாடு என்பன.

இந்த உணவில் சில காலம் நன்கு பரிச்சயமானவன் மகுமூது. ஊருக்குச் சென்றபோது மச்சான் மீராப்பிள்ளை மீன் கொண்டுவந்திருந்தார். ஊர்க்கடலில் பிடித்த பாரைமீன்.

அதனை உப்பிட்டு அக்காவின் கைப்பதத்தில் காய்ச்சிய கருவாடு கண்ணில் பட்டதும், முதலாளி குடும்பத்திற்கு என்று சிலவற்றைப் பொதி செய்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசலம் விசாரித்த பொடிநோனாவிடம் தான் கொண்டு வந்திருந்த கருவாட்டுப் பொதியைக் கைமாறினான். பிரியத்தோடு பெற்றுக்கொண்ட அவள், அவனிடம் "மிக்க நன்றி" என்றாள் புன்னகையோடு.

அன்று அவனுக்கு விடுதலைநாள் என்பதால், அவனுடன் பேச்சுக் கொடுக்க அவளால் முடிந்தது. மகுமூது நம்பிக்கைக்குரியவன். கொழும்பில் தொடங்கிய தொழிலை நேர்த்தியாக நடத்திய அனுபவமுள்ளவன்.

பழக்கப்பட்ட அவன் அந்தப் பொறுப்பிலிருந்து நீங்கினால், அவனைப் போன்று நம்பிக்கைக்குரிய ஒரு நிருவாகியைத் தேடுவது கடினம் என்பதை ஹேமா அறிவாள்.

தந்தைக்குக் கொழும்பில் தரித்திருந்து தொழில் செய்வது சாத்தியப்படாத ஒன்று என்பதால், அந்த இடத்தை நிரப்ப மற்றொரு துணை தேட வேண்டிவரும்.

இந்நிலையில் குடும்பத்திற்குள் ஒருவரைச் சேர்த்துக்கொள்ளும் கட்டாயம் ஏற்படும் பொழுது, அது தனக்கான ஒரு துணையைத் தேடும் படலமாக மாறலாம். அதனையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என அவள் எண்ணினாள்.

தொழில் நிருவாகத்தைத் தன்னால் கொண்டுநடத்த முடியும் என்பதைத் தந்தை அறிவார். ஆனால் கொழும்பில் தனித்து வாழ இயலாதென்பதைக் காரணமாகக் கொண்டு திருமணம் சாத்தியமாகலாம் என, அவளது பல்கலைக் கழகச் சிந்தையை தெளிய வைத்தது.

❖❖❖❖

**ம**குமூது ஊரிலிருந்து வந்து வாரமொன்று கழிந்திருந்தது. ஒருநாள் இரவுத் தொழுகை முடிந்து, பள்ளியில் கூட்டம் கலையத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீல் காக்காவைக் கண்ட அவன், அவருக்குச் சலாம் கூறினான். ஊர்ச் செய்திகள் பரிமாறப்பட்டன. ஒவ்வொருவரைப் பற்றியும் தனித்தனி தேகசுகம் விசாரித்தார்.

பள்ளியின் வெளி வராந்தைக்கு வந்ததும், "தம்பி, ஒங்களுக்கு அவசரம் இல்லையெண்டால் கொஞ்சம் இருந்து பேசலாமே?" என்றார் கலீல் காக்கா.

எப்போதும் இல்லாத அந்தச் சொற்கள், ஏதோ ஒரு தேவை கருதியென எண்ணிய மகுமூது, சரியென்றான். இருவரும் வராந்தாவின் ஒதுங்குப் புறத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

"தம்பி ஒரு முக்கியமான செய்தி பேச வேணும். நீங்க விருப்பம் இல்லேண்டா விருப்பம் இல்லையெண்டு சொல்லிடலாம்" என்றவாறு நிறுத்தினார்.

ஒரு புதுமையான பீடிகையோடு அவர் பேச்சு இருப்பதை அவதானித்த மகுமூது பதில் ஏதும் பேசாது அவரது முகத்தை ஊன்றி நோக்கினான். அவர் பேச்சைத் தொடர்ந்தார். பள்ளிவாசல் என்பதால் சுற்றி வளைக்காது நேரடியாகவே விடயத்திற்கு வந்தார்.

"தம்பி, எங்கட மாமி ஒங்களுக்கிட்ட ஒரு விசயத்தைக் கேக்கச் சொன்னாங்க. ஊருல ஒங்களுக்கு எதாவது கலியாணம் கிலியாணம் பேசி இருக்கிறாங்களா எண்டு".

திடீரென அவர் அவனிடம் கேட்ட கேள்வி அவனை அதிசயிக்க வைத்தது. இருந்தும் தன்னைச் சமாளித்துக் கொண்டு மகுமூது "ஏன்?" என்றான்.

"ஒரு முக்கியமான விசயத்திற்குத்தான். அப்பிடி ஏதாவது இருந்தா நான் கேக்கப் போறத, கேக்காமலே உட்டுறலாம் அதான்."

அவர் பேச்சு அவனுக்கு வியப்பைத் தந்தது. எனது கல்யாணத்தைப் பற்றி இவர்கள் ஏன் இத்தனை அக்கறையோடு வினவுகின்றார்களென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானறிய இல்லை," என்றான் பதிலுக்கு.

இந்தப் பதில் கலீல் காக்காவின் முகத்தில் ஏற்படுத்திய மகிழ்ச்சியை அவனும் அவதானித்தான். கலீல் காக்கா பேச்சைத் தொடர்ந்தார்.

"தம்பி, எனக்கொரு மகளிருக்கிறாள். அவள்தான் அண்டைக்கி கலியாண ஊட்டில நீங்க கண்டிங்களே. அவதான். வயதுவந்த அவவுக்கு ஒரு கலியாணம் முடிச்சிப்பாக்க மாமிக்கு கொஞ்ச நாளா ஆசை.

"வயசான பொம்புள தானே. மவுத்துக்கு மொதல்ல பேத்திட கலியாணத்த முடிச்சிட்டா "கல்புக்கு றாகத்து" எண்டு சொல்லுறா. அதனால அவவுக்குப் புடிச்ச, குடும்பத்துக்கும் தெரிஞ்ச ஓங்கள கலியாணம் பேசிப் பாக்க மாமி ஆசப்படுறாங்க.

"ஓங்கட விருப்பத்தை தெரிஞ்சா நாங்களே மருதமுனைக்குப் போய் மாப்பிள கேக்கலாம்." எனத் தொடங்கி, தொடர்ந்து, ஈற்றில் முடிவையும் அவரே சொல்லலானார்.

மகுமூதுவுக்கு உடம்பு வியர்த்துப் போட்டது. திடீரென இப்படி ஒரு குண்டை அவர் தூக்கிப் போடுவார் என அவன் எதிர்பார்க்கவில்லை. பேச நாவெழாமல் அவரையே சிறிது நேரம் பார்த்தவாறு இருந்தான்.

கதீஜாவைப் பற்றி மனதுக்குள் ஆழமான பதிவிருந்தாலும், இப்படிப் பழங்கனிந்து மடியில் விழுமென அவன் எண்ணியிருக்கவில்லை.

எப்படி இது சாத்தியமானது என்பதையும் அவனால் யூகிக்கவும் இயலவில்லை. மறுப்போ, அன்றிப் பதிலெதுவுமோ சொல்லாமல், இரண்டுநாள் அவகாசம் தரும்படி கூறிவிட்டு, சலாம் கூறிப் பள்ளியை விட்டு நகர்ந்தான்.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியசீலி இரவுக்கான உணவுகளைத் தயார் செய்துவிட்டு, கடையில் இருந்துவரும் கணவனுக்கும் மகளுக்குமாகக் காத்திருந்தாள். வீட்டு முற்றத்தில் வாகன ஒலி கேட்டதும், வெளியில் வந்தாள்.

நிறுத்தப்பட்ட "மொறிஸ் மைனரின்" "டிக்கி"யில் இருந்த பொருட்களைக் காளிமுத்துவும் ஹேமாவுமாக வீட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அடுத்த வாரத்துக்குரிய அனைத்துப் பொருட்களும் பியசீலி போட்டுக்கொடுத்த "லிஸ்ட்"படி அதில் அடங்குவன.

தந்தையும் மகளும் உடை மாற்றிக்கொண்டு வருவதற்குள் வீட்டு வேலைக்காரி மங்கம்மாவின் உதவியோடு பியசீலி பொருட்களை அந்தந்த இடங்களில் பத்திரப்படுத்தினாள்.

எட்டு மணியளவில் மேசையில் உணவுகள் பரிமாறப்பட்டன. மூவரும் சாப்பிட அமர்ந்தனர். வழக்கமான பேச்சுக்களிடையில் ஹேமா மகுமூது தன்னிடம் பரிமாறிக்கொண்ட செய்தியையும் தெரிவித்தாள்.

சொந்த ஊரில் கடையொன்று போட்டுத் தானுமொரு சிறிய வியாபாரத்தைத் தொடங்க அவன் விரும்புவதாயும், அதுபற்றி முதலாளியிடம் பேச அவன் விரும்புவதாகவும் சொன்னாள்.

தொடக்கத்தில் அந்தச் செய்தி முதலாளிக்கு ஜீரணிக்க முடியாதிருந்த போதும், தனிமனிதனின் விருப்பத்திற்கும் இடமளிக்க வேண்டும் என்ற அவரது பரந்த உள்ளம், அதுபற்றிச் சிந்திக்கவும் செய்தது.

வந்தநாள் தொட்டுத் தனக்கு நம்பிக்கையோடும், நாணயமாகவும் உழைத்த மகுமூது, தன்னை விட்டுப்போனால் ஏற்படும் இடைவெளியை யார் நிரப்புவது என அவரது மனம் அங்கலாய்த்தது.

பியசீலி கேட்டாள். கடைவியாபாரம் அவனுக்குப் பழக்கப்பட்டதுதான் என்றாலும், கடையொன்று போட முதலுக்கு என்ன செய்வான்.

ஹேமா குறுக்கிட்டாள். "இத்தனைக் காலமும் நமக்காக உழைத்தவன். நாணயமானவன். நாமே கைமாற்றாக அவனுக்கு உதவலாமே. அது நமது கடமையுமல்லவா?" என்றாள்.

அதற்குள் ஒரு உட்பொருள் பொதிந்திருப்பதை அவள் மட்டுமே அறிவாள். அது பற்றி யோசிப்போம் என்று கூறியவாறு முதலாளி இருக்கையிலிருந்து விடுபட்டார்.

நாட்கள் சில கழிந்தன. அந்த விடயமாக யாரும் பின்னர் பேசிக்கொள்ளா விட்டாலும், முதலாளியின் மனத்தில் அது ஒரு சுமையாக இடம்பிடித்துக் கொண்டது. தன்னகத்தின் நீண்ட வாதப் பிரதிவாதங்களின்பின், அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தார்.

ஒருநாள் மாலைப் பொழுது, மனைவியை வாசலுக்கு அழைத்துவந்து தன்னோடு இருக்கையில் அமர்த்திக் கொண்டார். வழமையாய் நடைபெறுவதுதான்.

ஆனால் அன்று ஒரு முக்கிய உரையாடலுக்கு என்றதும் பியசீலி கேட்க அவாவுற்றாள்.

"ஹாமினே," என்று தொடங்கிய அவர் பொறுப்போடு மிக நிதானமாகப் பேசினார். மகளுக்குப் படிப்பு முடிந்துவிட்டது. திருமண வயதும் ஆகிவிட்டதால், அதற்கான முயற்சிகளில் நாமிருவரும் ஒன்றிப்போக வேண்டும் என்றும் கூறிய அவர், அவளுக்கு விரும்பாத எதையும் தான் செய்யப் போவதில்லை என்று கூறியதோடு அவள் முகத்தை ஆழமாக நோக்கினார்.

முன்னர் ஒரு முறை அவளுக்கு விருப்பமில்லாத ஒரு வரனைப் பேசி அவள் மன உளைச்சலுக்கு உட்பட்டு மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் சிகிச்சை செய்ததும் அவர் மனத்தில் வேரூன்றி இருந்ததால் பேச்சில் வார்த்தைகள் கவனத்தோடு பரிமாறப்பட்டன.

பியசீலியின் முகத்தில் பல்வேறு தோற்ற மாற்றங்கள் தோன்றி மறைந்தன. தனக்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை உறுதியாயினும், மகளின் விருப்பத்திற்கும் அவர் உடன்பட்டுப் போக வேண்டும் என்பதில் அவரது நிலைப்பாடு எவ்வாறு அமையும் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இருந்தது.

அவளது மனத்தை எடைபோட்டாரோ என்னவோ, அப்புசிங்ஹோ பேசினார். நான் நோய்வாய்ப் பட்டிருக்கின்றேன். யாருடைய விருப்பத்திற்கும் மாறாக தனித்து ஒரு தீர்மானத்தை எடுத்துப் பிரச்சினைகளை உருவாக்க நான் விரும்பவில்லை. பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து மகளின் சம்மதத்துடன் திருமணத்தை நடத்தலாம்.

"மகுமூது கடையை விட்டுப்போவது ஒரு சுமையை என்மீது சுமத்திவிட்டுப் போவது போன்றதுதான். அவனைப் போன்று ஒரு நம்பிக்கைக்குரிய உழைப்பாளி கிடைப்பது கஷ்டம்.

"ஹேமா தொழிலில் பொறுப்போடு உழைக்கப் பழக்கப்பட்டவள். இந்நிலையில் திறமையுள்ள ஒருவரை மகளுக்குத் திருமணம் செய்து வைத்தால் கொழும்புக் கடையின் பரிபாலிப்பை அவளால் இயக்கமுடியும். இதுபற்றி அவளோடு பேசுவோம்," என்றார்.

அவர் பேச்சிலிருந்த யதார்த்தத்தைப் பியசீலியால் புரிந்துகொள்ள முடிந்தது. தன்னை மீறியோ, மகளின் விருப்பத்திற்கு மாறாக ஒன்றைச் செய்வதில்லை என்ற முடிவில் அவர் உறுதியாக இருப்பதை உணர்ந்த அவள் பதில் ஏதும் பேசாது மௌனமானாள்.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னபடி நாட்கள் இரண்டு நிறைவுற்றதும், மகுமூது கலீல் காக்காவை "இஷா"த் தொழுகையின்பின் சந்தித்தான். அன்று அவரும் பள்ளியில் அவனுக்காகக் காத்திருந்ததுபோல் சலாம் கூறினார்.

மகுமூது முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாது பதிலுரைத்தான். இருவரும் ஓரிடத்தில் அமர்ந்து கொண்டனர்.

"என்ன தம்பி, நான் சொன்னதப்பத்தி யோசிச்சிங்களா? ஒங்கட முடிவச் சொன்னா மேல்கொண்டு என்ன செய்யிறதெண்டு பாக்கலாம். விருப்பம் எண்டால் சரி இல்லாட்டியும் பிரச்சினையில்ல. வாழப்போறது நீங்க. யாருக்காகவேனும் எதையும் ஒப்புக்கொள்ளக் கூடாது." என்றார் கலீல் நானா.

அவரது வார்த்தையில் தொனித்த சுயநலமின்மை மகுமூதுவுக்குப் புரிந்தது. அவர்மேல் மரியாதையையும், எதிர்காலத்தில் அவர் தனது மகளுக்காக மட்டுமில்லாது தனக்காகவும் வாழுவார் என்ற நம்பிக்கையையும் ஊட்டியது.

"ஒங்கட உம்மாட விருப்பத்துக்கு நான் ஓம் எண்டாலும், ஊரில என்ர சொந்தக்காறர் புறியத்தையும் கேக்க வேணும். அத நீங்கதான் செய்யோணும்" என்றான் பதிலுக்கு.

"அதொண்டும் பெரிய விசயமில்ல, நான் பள்ளியில இரிக்கிற காத்தான் குடி மௌலவியையும் கூட்டிக்கிட்டுப் போய் பேசுறன். அவரும் இந்த நாளையில ஊர்ப்பக்கம் போகவேணுமென்றார்," என்றார் உள்ளூர மகிழ்ச்சியோடு கலீல் காக்கா. அத்தோடு மகுமூது பள்ளிக்கு விடைதந்தான்.

பேச்சோடு நின்றுவிடாது "ஆறிய கஞ்சி பழங்கஞ்சி" என்ற முதுமொழி அறிந்த கலீல் காக்கா, மௌலவி சுன்னத்தான தொழுகைகளை முடித்துவிட்டு வரும்வரை காத்திருந்தார்.



PUBLIC LIBRARY MARUTHAMUNA MUNICIPAL COUNCIL KALMUNAI
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடச்சுடக் காரியங்கள் ஆற்றுவதில் அவர் சமர்த்தர். அதனால்தான் அவரால் வியாபாரத்தில் வெல்ல முடிந்தது.

எல்லோரும் போனபின்னும் தனித்து நின்ற அவரைக் கண்ட பள்ளிமௌலவி அவருக்குச் சலாமுரைத்தார். சலாத்துக்குப் பதில் சொன்னதோடு, தான் தாமதித்த காரணத்தையும் விளக்கினார்.

அத்தோடு காரியம் கைகூடும் வரை விடயம் வெளிவராமலிருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கலீல் காக்கா மீது மௌலவிக்கு ஒரு தனிப்பட்ட மரியாதை இருந்தது. அவரது சொந்த விடயங்கள் போக, பள்ளிவாசல் தேவைகளிலும் அவ்வப்போது கையிறுக்கமில்லாமல் பங்களிப்பவர் என்பதால்.

தான் கேட்டால் தன்னோடு வர அவர் சம்மதிப்பார் என்பதும் கலில் காக்காவின் நம்பிக்கை. அவர் நம்பிக்கை வீண்போகவில்லை. அது போலவே நடந்தது.

"செரி. நானும் வெள்ளிக்கிழமை கொத்துவாவுக்குப் பொறகு ஊருக்குப் போறெண்டுதானிரிக்கன். பொறகென்ன எங்கட ஊரில நிண்டு, அப்பிடியே மருதமுனைக்குப் போய் விசயத்தைப் பேசி முடிப்பம்." என்றார் மௌலவி.

இருப்பினும் அதில் நேரவுள்ள நடைமுறைச் சிக்கல்களை அவர்கள் இருவரும் அப்போது அறிந்திருக்கவில்லை.

❖❖❖❖

**வெ**ள்ளிக்கிழமை இரவு ஏழு மணிக்குக் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து "உதய தேவி" புறப்பட்டாள். சற்று முன்னதாகவே வந்துவிட்டதால் கோச்சியின் எஞ்சினுக்கு முதுகைக் காட்டியபடி இருவரும் அருகருகே இருக்கைகளைத் தேர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிக்கோச்சியின் பக்கவாட்டுக் கண்ணாடியைத் திறந்தால் நேராகவே கரித்தூள் கண்ணுக்குள் விழுமென்பதால் போய்வந்து அனுபவமுள்ள மௌலவியே இருக்கைகளைத் தேர்ந்து கொண்டார்.

தூக்கம் வரவில்லை கலீல் காக்காவுக்கு. முன்னர் மகுமூதுடன் ஒருமுறை மட்டக்களப்புக்குப் போயிருந்தாலும், இன்றைய மனநிலை வேறாயிருந்தது.

போகுமுன் சில முன்னெச்சரிக்கைகளை மகுமூது அவருக்குச் சொல்லி இருந்தான். இவ்வாறெல்லாம் கேள்விகள் வரும். நாசூக்காகப் பதில்சொல்ல வேண்டிவரும் என்றெல்லாம் அவன் எச்சரிக்கை செய்திருந்தான்.

நீதிமன்றம் செல்லும் ஒரு சாட்சியின் நிலைபோலிருந்தது மனம். எது எவ்வாறாயினும் தன்னுடன் மௌலவி வருவதால் ஒருவாறு சமாளிக்கமுடியும் என்ற மனத்தெம்புவரக் கண்கள் சோரத்தொடங்கின.

காலைப் பொழுது. பொலபொலத்து விடிய, கிழக்கில் செம்பரிதி இராத்துயில் கலைந்து சோம்பல் முறிக்கத் தொடங்கினான். சேவல்கள் மாறிமாறிக் குரல் கொடுத்தன.

கிழக்கில் கடலலை முரசொலிக்க, முஸ்லிம்கள் காலைத்தொழுகை முடித்துக் கலைந்துவர, இந்துக்கள் சூரிய நமஸ்க்காரம் செய்ய, தனது தூய ஒளி வாட்கள் புடைசூழ ஒளித்தேரில் பகலவன் புறப்பட்டான். கம்பனின் கவிநயம் காலத்தை வென்றுநின்ற காட்சியது.

இரவெல்லாம் ஓடிக் களைத்த "உதய தேவி" தனது வரவுக்கான கட்டியங் கூறுமாப்போல் பெருங்குரலெடுத்துக் கூ...,ஊஊஊ எனக் கூவியவளாய்க், களைப்பைப் போக்க நீண்டதொரு பெருமூச்சுடன் மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் தன் பயணத்தை முடித்துக்கொண்டாள்.

திறந்துகிடந்த பெட்டிகளின் வாயில் வழியாகச் சடசடவென்று பிதுங்கிய பயணிகள் பேருந்தைப் பிடிக்க ஓடத் தொடங்கினர்.

அவர்கள் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மான்துறை போன்ற ஊர்களின் தூரத்துப் பயணிகள். வாகனத்தில் நெடுந்தூரம் போகவேண்டி இருந்ததால், உட்கார்ந்து செல்லவேண்டி இருக்கை பிடிக்கும் போராட்டமது.

மௌலவி நிதானமாக இறங்கினார். சென்றமுறை மகுமூதுடன் ஓட்டப் பந்தயம் நடத்திய கலீல் காக்காவுக்கு மௌலவியின் அவசரமற்ற வெளியேறல் வியப்பைத் தந்தது. அவருக்குத் தெரிந்திருக்கவில்லை காத்தான்குடி அதிதொலைவில் இல்லை என்பது.

இருவரும் நிலையத்தைவிட்டு வெளியில் வந்தனர். பேருந்து ஒன்று இவர்களுக்காகக் காத்திருப்பதுபோல் விசைக்கப்படாமல் நின்றுகொண்டிருந்தது. ஓட்டுனன் தேநீரருந்தப் போயிருந்தான்.

இருவரும் உள்ளே நுழைந்தனர். கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு நின்றுகொள்ள இடங்கிடைத்தது. இருந்து கொண்டிருந்த இளைஞன் எழுந்துகொண்டு மௌலவிக்கு உட்கார இடங்கொடுத்தான்.

அதனை அவர் மறுத்தாலும், அவர் போகுமிடம்வரை இருக்கும்படி வற்புறுத்தினானகாத்தான்குடி அண்மியபோது "கொழந்தம்மாட கவுத்தடியில நிப்பாட்டுங்க தம்பி," என்றார் மவுலவி நடத்துடனிடம். மணி அலறியது.

தரித்த பேருந்தில் இருவரும் இறங்கிக்கொள்ள, நடத்துனன் "றைற்" என்றதும் வாகனம் ஊர்ந்து பின் பறந்தது.

நடைத்தூரந்தான் மௌலவி வீட்டிற்கு. வீடு சென்றதும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, பாலப்பம், சீனி, வாழைப் பழத்துடன் காலையுணவை உண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இருவரும் சில மணிகள் தூங்கிக் களைநீக்கிக் கொண்டனர். பகல் தொழுகையின் பின் உணவை அடுத்து மருதமுனை செல்வதாக உத்தேசம்.

பிற்பகல் நாலு மணியளவில் கல்முனைக்குச் செல்லும் பேருந்தில் பிரயாணம் தொடங்கியது. காத்தான்குடி முற்றிலும் முஸ்லிம் கிராமம். தொடர்ந்து ஆரைப்பற்றையில் இருந்து மருதமுனைவரை குருக்கள்மடம், களுவாஞ்சிக்குடி கல்லாறு போன்ற தமிழ்க் கிராமங்கள். மருதமுனையைத் தாண்டினால் பாண்டிருப்பு.

இது போன்று தமிழ் முஸ்லிம் கிராமங்களின் தொடர்ச்சி மாறிமாறி இருப்பது மொழியால் ஒன்றுபட்ட மட்டக்களப்பு மக்களின் பூர்வீகம்.

அதனால் கலாசார பண்பாட்டிலும் அவர்களிடை பெரும் ஒற்மையும், அண்ணன்தம்பி உறவும் நீடித்து நிலைத்திருந்தன.

மருதமுனையை அடைந்ததும், சின்னப்பள்ளி இறங்குதலத்தில் இருவரும் இறங்கிக்கொண்டனர். ஆலையடி வீதி வழியாக நேராக மீராப்பிள்ளையின் வீட்டுக்கே சென்றனர்.

முதலில் அங்குதான் போகும்படி மகுமூது கூறியிருந்தான். வேளைக்கு அவர் வீட்டில்தான் இருந்தார்.

திடீரென வந்த அவர்களைக் கண்டதும், ஆச்சரியம் மேலுற "அஸ்ஸலாமு அலைக்கும்!" என்றபடி அன்போடு அவர்களை வரவேற்றார் மீராப்பிள்ளை.

ஏற்கனவே மைத்துனனுடன் வந்திருந்ததல் கலீல் காக்காவை அவர் அடையாளங் கண்டுகொண்டார். மௌலவியை அவர் அறிமுகஞ் செய்யத் திண்ணையில் பாய் விரிக்கப்பட்டது.

மாலைப் பொழுது என்பதால் கடல்காற்றின் உட்டணம் தணிந்திருந்தது. வந்த காரணம் முக்கியமாக இருக்கும் என்பதை



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூகித்தாலும், அறிந்து கொள்ளுமுன் மருதமுனைக்கே சொந்தமான விருந்தோம்பல் முதன்மைப்பட்டது.

வேறு எதற்கோ செய்யப்பட்ட, பயத்தங்கொட்டைப் பணியாரம், கோழிச்சூடன் வாழைப்பழத்துடன் சேர்த்து ஜமீலா கொடுத்தனுப்பினாள். "போஸ் கோப்பை"யில் "கொழுக்கு"டன் குடிக்கத் தண்ணீரும் வந்தது.

இவற்றோடு இஞ்சிக் கோப்பியும் பொழுதுக்குப் பொருத்தமாய் உற்சாகத்தைக் கூட்டின. கொழும்பில் கலீல் காக்கா காணாத பயத்தங்கொட்டைப் பணியாரம் அவரின் நாக்கு நரம்புக்கு நல்விருந்தாகிற்று.

பாசிப்பயறை வறுத்தெடுத்துத் தோல் நீங்கப் புடைத்து அதை இடித்து மாவாக்கி, சீனிக் கரைசலுடன் உருட்டி, பின்னர் அரிசிமா கரைசலில் தோய்த்து, தேங்காய் எண்ணெய்யில் பொரித் தெடுக்கும் சுவையான பண்டம் அது. ஒன்றோடுஒன்று ஒன்றி தட்டுப்போலிருக்கும்.

வந்தவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். மௌலவி தன்னைத்தானே அறிமுகஞ் செய்துகொண்டிருந்ததால், பேச்சுவாக்கில் வந்த காரணத்தை அவரே அவிழ்த்துவிட்டார்.

"என்ர ஊர் காத்தங்குடி. இவயளத்தான் ஒங்களுக்குத் தெரியுமே. ஒங்கட மச்சினனோட வந்தவிய. எனக்கு மிச்ச நாளா பழக்கம்.

"இவயட பள்ளில தான் நான் பத்து வரிசமா "பேஷ் இமாமா" வேலை செய்யிறன்", என்றவர், தொடர்ந்து வீட்டுக்காரரர் எதிர்பாராத ஒரு விடயத்தை முன்மொழிந்தார்.

"கலீல் காக்காவுக்கு ஒரு மகளிரிக்கா. சொந்தமா ஊடுவாசலோட ஒரு ஹோட்டலும் வெச்சி நடத்துறார். அவருக்கு ஒங்கட மச்சினன மகளுக்குக் கலியாணம் பேசப் புறியம். அதப்பத்திக் கேக்கத்தான் என்னையுங் கூட்டிக்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரிந்த குடும்பம் நல்ல மனிசர்கள்," என்றார் சுருக்கமாக.

மகுமூதுவின் திருமணம் பற்றி அவர்களே சிந்தித்திராத போது. இப்படியொரு பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வந்திருப்பது அவருக்கு அதிர்ச்சியைத் தந்தது. நீண்டநேர மௌனம். அதன்பின் மீராப்பிள்ளை பேசினார்.

"சட்டுப்புட்டெண்டு இதுக்கு பதில் செல்ல ஏலாதே மகிலவி. நால்லா ரோசிச்சி குடும்பத்தோட பேசி அவியள்ள நெனப்பு என்னண்டு தெரிஞ்சிதானே "ஜவாபு" செல்ல வேணும்." என்றவாறு தலையைத் தடவினார்.

மௌலவிக்கு அவர் பேச்சிலுள்ள நியாயம் புரிந்தது. அவர் பேசினார்.

"நீங்க செல்லுறது செரிதான். எதுக்கும் மொதலாளிய நான் ரெண்டுநாளைக்கி எங்கட ஊரில நிப்பாட்டிக்கிறன். நீங்க திங்கக்கெழம வாக்கில எல்லாரோடையும் பேசிவெய்யுங்க. நாங்க அண்டைக்கிப் பினனேரம் இஞ்ச வாறம். எல்லாரும் சேந்து பேசி ஒரு முடிவுக்கு வருவம்,"

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வருவதிலுள்ள சிரமங்களை நாசூக்காகச் சுட்டிக்காட்டியபடி, மௌலவி சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்ட மீராப்பிள்ளை, அவரது கருத்துக்கு இசைந்தார்.

இவற்றையெல்லாம் கதவிடுக்கில் காதுவைத்துக் கேட்டுக் கொண்டிருந்த ஜமீலாவின் மனத்தில், மகுமூதுவின் கடந்தகால நாட்கள் நாடகம்போல் நகர்ந்தன.

எந்தவிதத் தொழில்துறவும் இல்லாமல் வீணே காலத்தைக் கடத்திய தனது தம்பி, கூடப் பிறந்தவனாலும், அவன் மனைவியாலும் சோத்துப் பிண்டமாக அவமானப்பட்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று திசைகடந்து சென்று தொழில் பழகி, பொறுப்புள்ளவனாக மாறி இருப்பதும், கொழும்புச் சீமையிலிருந்து மாப்பிள்ளை கேட்டு வருமளவு உயர்ந்திப்பதும், அவளுக்கு வியப்பாகவும், எல்லையில்லா மகிழ்வையும் தந்தன.

கண்கள் பனித்தன. இதற்கெல்லாம் ஆண்டவனுக்கு அடுத்தபடி காலாக அமைந்த "கண்டியார்" வைத்தியரை மனத்திருத்தி அவருக்கு மானசீகமாகத் தனது நன்றியைத் தெரிவித்தாள்.

❖❖❖❖

கட்டுக்கல விநாயகர் கோயில் தேர்த்திருவிழா. கட்டுக்கடங்காத மக்கள் வெள்ளம். விநாயக பக்தர்கள் நெறுதூளிப் பட்டனர்.

விபூதி சந்தனப் பூச்சோடு, வெற்றுடலுடன் "அரோகரா" "அரோகரா" என்ற பக்திக் கோஷமிட்டபடி கோயிலைச் சுற்றிச்சுற்றி வலம் வந்தனர்.

இந்து சமயத்தாரோடு இடையிடையே பௌத்தர்களும் ஒன்றி இருந்தனர். புத்தபெருமானின் பூர்வீக மார்க்கம் அதுவாக இருந்ததால், இன்னும் அந்த மக்களிடை இந்துத் தெய்வ வழிபாட்டு நம்பிக்கை முற்றாக அற்றுப் போகாதிருந்தது. பெரும்பலும் ஏதேனும் ஒரு நேர்ச்சையுடன், கடனிறுக்கக் கோயில் தரிசனம் செய்வர்.

அன்று கோயிலுக்கு வெள்ளைத் துணியில் "ஒசரி" கட்டி பியசீலியும், வெள்ளைக் கைலி, வெள்ளைச் சட்டையுடன் அப்புசிங்ஹோ முதலாளியும் வந்திருந்தனர். பெற்றோரின் நிழலாய் ஹேமாவும் வெள்ளைப் பாவாடை சட்டையுடன் கூடவே காணப்பட்டாள்.

கருப்பக்கிரகத்தில் விநாயக விக்கிரகத்திற்குத் தீபாரதனை நடந்தது. பக்தர்கள் பக்திக் கோஷமிட்டனர். கூடவே கணவன் மனைவி இருவரும் சேர்ந்துகொண்டாலும் ஹேமா வாய் திறக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் தேக ஆரோக்கியத்திற்காக அம்மா செய்திருந்த நேர்த்திக்கடனை நிறைவேற்ற வேண்டி அவர்கள் வந்ததால் உதவிக்கெனக் கூடவே அவளும் சேர்ந்திருந்தாள்.

தனது கணவருக்கு ஏற்பட்டுள்ள நோயை முற்றாக நீக்கிவிட வேண்டும் என்பது விநாயகர் மீது பியசீலி கொண்ட வேண்டுதலாகும்.

பௌத்த தர்மம் இறை வணக்கத்திற்குப் புறம்பானது. இருந்தும், பௌத்தர்கள் இந்து சமயக் கடவுள்களை கணதெய்யோ, கதரகம தெய்யோ, விஷ்ணு தெய்யோ என்றும், மனிதப் பெண்ணான கண்ணகியைப் பத்தினி தெய்யோ என்றும், இந்துக்கள் வணங்கும் அனைத்துத் தெய்வங்களுக்கும் அதுபோன்ற பெயர்கள் சொல்லி வணங்குவர்.

ஆனால் அதே தெய்வங்களை வணங்கும் தமிழ் மக்கள் மீது பகைகொண்டு வாழும் சிலரின் முரண்பாடான செய்கைகளில் ஹேமா பொருத்தப்பாடற்றவளாய் இருந்தாள்.

அது மட்டுமன்றி அந்த மக்களுடன் ஒன்றி வாழவும் தலைப்பட்டாள். அதன் குறியீடே புஷ்பாவுடனான நெருக்கமான நட்பாகும்.

கூட்டத்துள் கூட்டமாய்ப் பொன்னம்பலம் மாஸ்ட்டரும், மனைவி மக்களுடன் "அரோகரா" கூறினார். அவர் தீவிர விநாயக பக்தர். மகன் புஷ்பராஜும், மகள் புஷ்பாவும் நல்லபடி பரீட்சைகளில் தேறவேண்டும் என அவர் விநாயகரை மனத்திருத்தி வேண்டுதல் வைத்திருந்தார்.

தத்தமது நேர்த்திக்கடன்கள் அனைத்தும் நிறைவுற்றதும், மக்களில் சிலர் கோயிலை விட்டு வெளியேறினர். அவர்களுடன் அந்த இரண்டு குடும்பங்களும் கூடி இருந்தன.

எதிர்பாராத விதமாக ஹேமாவும், புஷ்பாவும் ஆளையாள் கண்டுகொண்டனர். ஓடிவந்து இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பாசத்தின் பிணைப்பு குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, கண்ட மற்றைய கண்களுக்கும் வியப்பைத் தந்தது.

பூவும்பொட்டுமாய் ஒரு தமிழப் பெண்ணும் "ஒசரி" அணிந்த தாயுடன் வந்த சிங்களப் பெண்ணும் ஒருவரோடு ஒருவர் நெஞ்சாரக் கட்டித் தழுவும் காட்சி வஞ்சமற்ற மனிதநேயத்தின் அப்பட்டமான வெளிப்பாடாக இருந்தது.

பியசீலியும் கோதை அம்மாளும் முன்னர் அறிமுகமாகி இருந்ததால் கண்டதும் கைகூப்பிக் கொண்டனர். முதன் முதலாகச் சந்தித்த அப்பாக்களை புஷ்பாவே அறிமுகஞ் செய்துவைத்தாள். அவர்களும் பூரித்த முகத்தோடு வணக்கம் சொல்லிக் கெண்டனர்.

இந்த அறிமுகங்களுக்கிடையில் கண்டும் காணாதவாறு நான்கு விழிகள் நயனமொழி பேசியதை யாரும் கவனிக்கவில்லை.

பொன்னம்பலத்தாரும் கலஹாவிலிருந்து குடும்பத்தோடு வாகனம் பிடித்து வந்திருந்தார். அனைவரும் கண்டியின் இதயப்பகுதியில் இருந்த பிரபலமான முஸ்லிம் ஹோட்டலுக்குத் தேநீர் அருந்தப் போகவேண்டுமென முதலாளி கேட்டுக் கொண்டார். ஒன்றிய உள்ளங்கள் அனைத்தும் ஒன்றாயின.

உறைப்புக்கு உறைப்பும், இனிப்புக்கு இனிப்புமாய்ப் பல்வகைப் பண்டங்களும் பரிமாறப்பட்டன. முதலாளி இனிப்பைத் தூரப்படுத்திக் கொண்டார். வாத்தியாரோ வேண்டியதை உண்ணும் உடல்வாகு கொண்டவர். அம்மாக்கள் ஒன்றாகிப் பேச்சுக்களின் பரிமாற்றம் தொடர, வாய்களும் அசைபோட்டன.

புஷ்பாவும் ஹேமாவும் அருகருகே நாற்காலிகளை நகர்த்திக் கொண்டனர். ஹேமாவுக்கு எதிர்நேராக புஷ்பராஜ் அமர்ந்திருந்தான்.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதனன்று சொன்னபடி நான்கு மணிக்கே மௌலவியும் கலீல் காக்காவும் வந்துவிட்டனர். மீராப்பிள்ளை அவர்களை அன்போடு வரவேற்றார். வழமை போன்ற தேநீர் உபசாரம்.

"மக்ரிப்"தொழுகைக்குப் பின், மூத்த மைத்துனன் சேகுமதாரும், அவரது மனைவி பாத்துமுத்துவும் வரவிருப்பதாகவும், வந்தபின் அவர்களுடன் சேர்ந்து மௌலவி சொன்ன விடயத்தைக் கலந்து பேசலாம் என்றும் அவர் சொன்னார்.

இடைப்பட்ட நேரத்தை எப்படிக் கழிப்பது என்று அவர்கள் சிந்திக்கையில், கடற்கரைப் பக்கம் போய்வரலாம் எனக் கலீல் காக்கா சொன்னதும் இருவரும் புறப்பட்டனர்.

கடலோடு கூடிய பரந்த மணற்பரப்பு. அடம்பன் கொடியும், ராவணன் மீசைப் புல்லும் ஆங்காங்கே பரவிக் கிடந்தன. அலைவாய்க் கரையோரமாக இருவரும் நடந்து சென்றனர்.

அவர்களின் காலதிர்வுக்கு அஞ்சிய வெள்ளை நண்டுகள் தத்தம் வளைகளுக்குள் ஓடிப் பதுங்கின. சில உள்ளிருந்தவாறே கள்ளமாய்ப் பார்த்தன.

உப்பு நீரில் கால் நனைத்த மகிழ்வோடு கலீல் காக்கா நடந்தார். இருவரும் வண்ணார்கள் துணி துவைக்கும் தோணாவைத் தாண்டி யூசுப் தண்டையலின் தென்னைமர வாடியை அடைந்ததும் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தனர்.

அன்று கடற்சீற்றம் சற்று அதிகம். கரைக்குச் சற்றுத் தொலைவில் பேரலைகள் வானுயர உயர்ந்து தரையைத் தொட்டு மீண்டன. கொச்சத்தில் ஒருவர் வலை வீசிக்கொண்டிருந்தார். கடற் கயல்மீன்கள் அலைமடிந்து வீழும் கொச்சத்தில் கைவலைக்குள் அகப்படும்.

எப்போதாவது ஒருமுறை வாய்ப்பு வந்தால் காலிமுகக் கடற்கரைக்கு வந்து கடலை கொறித்த கலீல் காக்காவுக்கு அது அழகிய அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் நாளைக் காலை மீன்பிடிக்குத் தயாராக, ""காக்கா மொட்டையன்" தோணி வலைஞர்கள் நூல்வலையில் தோன்றிய பீத்தல்களை நூல்கொண்டு பீத்தல் பொத்தினர். கற்களையும் மிதப்புக் கட்டைகளையும் ஒழுங்குபடுத்தினர்.

பச்சைவடச் சறுவால், தோள்பட்டையில் முடிச்சுப் போட்ட பாதிக்கைச் சட்டை, தலையைச் சுற்றிய துண்டுச் சால்வை, எல்லோரும் ஒன்றுபோல் பார்க்கப் படைவீரர்போல் தோன்றினர்.

கடல்தொட்டு வெளிவந்த குளிரான கடல்காற்று உடலுக்கு இதமளிக்க இருவரும் மேற்குவானை நோக்கினர்.

மாலை மயங்கும் நேரம். செம்பரிதி மெல்லமெல்லக் குடைசாய்ந்தான். கடும்போர் நடந்த களம்போல சிவந்து கிடந்தது கிழக்கை எதிர்த்த ஆகாயம்.

கடற்பணி முடித்த ஊரவர், காலாற வந்த இளைஞர்கள், அனைவரும் வீடு நோக்கி நகர்ந்தனர். புதியவர்களும் வந்தவழி மீண்டனர்.

இரவு மணி ஏழு. முன்னிராத் தொழுகை முடித்துக்கொண்டு எல்லோரும் ஒன்று கூடினர். சேகுமதாரும், அவரது மனைவி பாத்துமுத்துவும் வந்திருந்தனர். பெண்கள் தம்மை மறைவாக்கிக் கொள்ள, மற்றவர்கள் பேசத் தயாராகினர்.

மீராப்பிள்ளை சம்பிரதாய பூர்வமாக "மகிலவி, நீங்க வந்த விசகளத்தைச் செல்லுங்க," என்றார்.

ஒரு சில நிமிட மௌனம். மௌலவி ஏற்கனவே மீராப்பிள்ளையிடம் சொன்னவற்றை எல்லோர் முன்னிலையிலும் மீண்டும் ஒப்புவித்தார்.

ஊர்வழமை எதுவும் தெரியாத கொழும்பார், நடப்பதைப் பார்த்துக்கொண்டு தனக்கான சந்தர்ப்பம் வரும்வரை மௌனமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே மீராப்பிள்ளை மூலம் விடயம் அறிந்திருந்த சேகுமதார், வீட்டில் மனைவி ஓதிய மந்திரங்களைத் தன் சொந்த வினாக்கள்போல் கேட்கலானார்.

"கல்யாணம் பேசுறது செரி, மாப்பிள்ளைக்கி என்ன குடுப்பையள்?" என்றதோடு, அன்றைய ஊர்நடப்பென்று, ஒரு பட்டியலைக் கோத்தும் கூறினார்.

"ஊரில கெணறும் கல்லூடும் வளவும், கொறஞ்சது மோட்டு வட்டைக்கெ அஞ்சேக்கர் காணியும், கக்கிலியும் தரவேணும்," என்றார். இதைக் காதில் வாங்கிய கலீல் காக்காவுக்கு கிலிபிடித்தது. பேயறைந்தது போலாகிவிட்டார்.

மௌலவி இந்த வழமையான பாட்டிற்கு அசைந்து கொடுக்கவில்லை. வரும்போது மகுமூது இப்படியெல்லாம் கேட்பார்கள் அதற்கு நீங்கள் பயப்பட வேண்டுமென கலீல் நானாவுக்குத் தெரியாமல் அவருக்குச் சொல்லி இருந்தான்.

ஏற்கனவே மனதில் உறைந்துவிட்ட கதீஜாவைக் கைப்பிடிக்க வேண்டும் எனத் தனது மனத்துக்குள் கோட்டை கட்டியவனல்லவா அவன்.

பதிலுக்கு மௌலவி பேசினார். "மொதலாளிக்கி இந்தப் பொண்புள்ள மட்டுந்தான். அவியளுக்கு கொழும்பில சொந்த ஊடுவாசல் இரிக்கி. ஹோட்டல் ஒண்டும் வெச்சி நடத்திறார். நல்ல யாவாரமும் இரிக்கி. அதெல்லாம் வாப்பாவுக்குப் பொறகு புள்ளைக்கிம் அவட புரிசனுக்குந் தானே, அது போதாத தம்பி?" என்றார்.

"கொழும்பில ஊடுவாசல் எங்களுக்கு என்னத்துக்கு?. எங்களுக்கு அதால என்ன பெரயோசனம்?. எங்கட தம்பிக்கி ஊடுவாசல், காணி வளவு இங்கதான் வேணும்," என்றார் சேகுமதார்.



LENDI... SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றையும் நேர்த்தியாகப் பாத்துமுத்து படிப்பித்து அனுப்பி இருந்தாள். இது காக்காவின் பேச்சல்ல, காக்காபொண்டியின் ஊட்டுதல் என்பதை அவர் பேசும் தோரணையில் இருந்து ஜமீலா புரிந்துகொண்டாள்.

மௌலவி பதிலிறுத்தார். "தம்பி, மாப்புள்ளைக்கித் தொழில் கொழும்பில. கலியாணம் முடிச்ச பொறகும் அவர் கொழும்பில தானே இரிக்க வேணும்?. அப்பிடியெண்டா ஊடுவாசல் அங்கதானே இரிக்கோணும்? அதெல்லாந்தான் மொதலாளி அங்க குடுக்கதெண்டு செல்லுறாரே!"

"அது அவர்ர மகளுக்கு அவர் குடுக்கது. எண்ட தம்பிர பேருல ஊருல ஏதாச்சும் எழுதினாத் தானே ஊரொலகம் ஒத்துக்கும்!"

"பொறத்தி ஊருல கலியாணம் முடிச்சா கேவளம் எண்டு நெனக்கிறவங்க நாங்க. எண்டாலும், ஒண்டுமில்லாம கலியாணம் முடிச்சா அதிலுங் கேவளம் மகிலவி!" என்றார் வாய் கூசாமல்.

இதனிடையில் "இஞ்சயிங்க! புள்ளர வாப்பா ஒள்ளுப்பம் இஞ்சால வாறியள?" என்றொரு குரல் உள்வீட்டையும் வாசல் திண்ணையையும் பிரிக்கும் தட்டுவேலிக்கு மறுபுறம் இருந்து வந்தது. குரல் கொடுத்தது ஜெமீலாதான்.

மீராப்பிள்ளை மெல்ல எழுந்து மறுபக்கம் சென்றார். அவரை ஆலஉட்டுக்குள் அவசரமாக அழைத்துச் சென்ற அவள், அவருக்கு மட்டும் கேட்கும்படி காதுக்குள் குசுகுசுத்தாள். வார்த்தைகளில் இறுக்கம் இருந்தது.

"என்ன, கலியாணம் பேசுறயள, மீன் யாவாரம் பண்ணுறயள? அது வேணும் இது வேணும் எங்கிறவர் அவர்ர பேரில என்னத்த வாங்கிக்கிக் கலியாணம் முடிச்சதாம்? அவளப் புறியப்பட்டு கலியாணம் பண்ணி. அவள் செல்லுறதுக்கெல்லாம் ஆடுறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள்ள உம்மா வாப்பா ஊடுவளவு, காணி எல்லாத்தையும் இவரில நம்பிக்கை இல்லாமத்தானே அவள்ள பேரில எழுதிக் குடுத்தாங்க. இவர் அங்கயொண்டும் வாலாட்ட ஏலாதாக்கும். அது அப்பிடி இரிக்க, இப்ப தம்பிக்கெண்டு கொழும்பாருக்கிட்ட உறுஞ்சப் பாக்கிறார்."

"தம்பிக்கிப் புறியமெண்டா அவிய அவியட புள்ளைக்கிக் குடுக்கத குடுக்கட்டும் எண்டு பேசி முடியுங்க. ஒங்களுக்கு என்ன குடுத்தாம் எனக்கி கலியாணம் பண்ணி வெச்சாங்க? நாங்க நல்லாத்தானே, கெடச்சத திண்டுக்கிட்டு இரிக்கம். நான் செல்லிறத்த ஒள்ளுப்பம் ரோசிச்சுப் பாருங்க."

ஜமீலாவின் வார்த்தைகளில் தொனித்த யதார்த்தத்தை மீராப்பிள்ளையால் புரிந்துகொள்ள முடிந்தது. எதையுங் கேட்டுவாங்காமல் திருமணம் முடித்ததால்தான் தன்னால் இப்போது தலைநிமிர்ந்து வாழ முடிகிறது.

மூத்த மைத்துனன் சீதனம் வாங்கிக் கலியாணம் பண்ணி, பொண்டாட்டிக்கி அடங்கி, பாவாடை ஆட்சிக்குள் பதுங்கித் திக்குமுக்காடுவது அவருக்குத் தெரிந்தது.

சிறிது நேரங் கழித்து அவர் மீண்டும் சபைக்கு வந்தார். இதற்கிடையில் பரிமாறப்பட்ட சிற்றுண்டிகள் காலத்தைக் கழிக்க உதவின. அவர் வரும்வரை மற்றவர்கள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

பேச்சை மௌலவியே மீண்டும் தெடங்கினார். முற்றிலும் கலீல் காக்காவின் சார்பில் அவர் பேசினாலும், மார்க்கத்திற்கு ஒப்புதலாய் அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் இருந்தது.

"தம்பி, கைக்கிலி, சீதனம் மார்க்கத்தில இல்லாத வெசயம். கலியாணம் எண்டா பொண்ணாப் பாத்துப் புறியமெண்டா, மாப்பிள்ள "மகர்" குடுத்துச் செய்யிறதுதான். அத உட்டுப்போட்டு பொம்பிளைக்கிட்ட அதஇத கேக்கிறது மார்க்கமில்ல."

"பொண் ஊட்டார் அவங்கட புள்ளைக்கிக் குடுக்கிறத குடுப்பாங்க. அது பொண்ணுட சொத்து. அத அவக்குப் புறியப்படி செலவளிக்கலாம். அதில்லாம கைக்கிலி கிய்க்கிலி கேட்டு மாப்பிளர மரியாதைய கொறைக்கப்படாது தம்பி!" மௌலவி பேசி அமைந்தார்.

இவற்றை எல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சேகுமதாருக்கு எரிச்சலாய் இருந்தது. "என்ன மகிலவி எங்கட ஊர் வழும புதும தெரியாம பேசுறயள?. இஞ்ச கைக்லி, சீதனம் எல்லாருந்தான் வாங்கிறாங்க."

"பிச்சக்காறனும் பொண்ணக் குடுக்கக்க குடுத்துத்தான் மாப்பிள எடுக்கான். ஏன் என்ர தம்பி வெலையில்லாத சரக்க?" என்றார் அலட்சியப் புன்னகையுடன்.

அவரது வார்த்தையில் இருந்த நையாண்டியைத் தாங்கிக்கொள்ள மாட்டாத கலீல் காக்காவின் மனம் புண்பட்டதால், முகம் வாடிப் போனதை அவதானித்த மீராப்பிள்ளை. பேச்சுவார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாகிற்று.

இதற்கு மேலும் பேசவிட்டால் விருந்தாளிகளை அவமதிக்கும் படியான நிலைமை தோன்றலாம் என அவர் உள்மனம் கூறியது. "செரிசெரி. இதோட கதைய முடிப்பம். இதப்பத்தி மாப்பிள்ளையோட பேசிப்போட்டு ஒரு முடிவுக்கு வருவம்." என்றார்.

இடைநடுவில் பேச்சுவார்த்தையைத் துண்டிக்கத் தானே காரணம் என மச்சான் நினைத்துவிட்டார் என மனம் புழுங்கிய சேகுமதார்,

"புள்ள பாத்துமுத்து. எழும்புகா. வாகா நாம போவம்," என்றவாறு எழுந்து கொண்டார். இருவரும் வெளியேறினர். யாரும் அவர்களைத் தடுக்க முயலவில்லை.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புசிங்ஹோ முதலாளி பொன்னுத்துரை வாத்தியாரின் குடும்பத்தை ஒருநாள் பகல் போசனத்துக்கு அழைப்பு விட்டிருந்தார். அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் புஷ்பராஜும் வீட்டிலிருந்தான்.

கலஹாவிலிருந்து ஒரு வாடகை வாகனத்தை அமர்த்திக் கொண்டு குடும்பத்தின் நால்வரும் பட்டியகம புறப்பட்டனர்.

பட்டியகம வீட்டைச் சுற்றியிருந்த பூந்தோட்டம் புதுப்பொலிவு பெற்றிருந்தது. பல்வகை வண்ணங்கொண்ட பூக்கள் புத்தம் புதிதாய்ப் பூத்தனவோ, புதியவர்கள் வரவேற்க என்னும் பாங்காய் புன்னகைத்து நின்றன.

தோட்டக்கார முனியன் காலைப்பனி காயும் முன்னரே குளிர்நீரால் செடிகளைக் குளிப்பாட்டி இருந்தான்.

புஞ்சி நோனா ஹேமா முதல்நாளே அவனுக்குக் கட்டளை இட்டிருந்தாள். வருபவர்களை வாசலிலே வரவேற்க வேண்டும் என்பது அவள் மனத்துதித்த திட்டம்.

வீட்டுப் புறத்திண்ணை தொட்டு, உட்புறம் ஈறாகத் தரையும், தளபாடங்களும் மினுங்கின. சோபாக்களுக்கு வண்ணப்பட்டுத் தலையணைகள். முற்றுமே முதலாளியின் செல்வத்தைச் செப்புமாறு கண்களுக்கு விருந்தாகின. 13812

பகல் பதினொரு மணி. முதலாளி வாசலில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்தரர். விருந்தாளிகளை வரவேற்கும் காரணத்தோடு.

சமையற்கட்டில் சாப்பாட்டு வேலையை மேற்பார்வை பார்த்துவிட்டு உடை மாற்றிக்கொண்ட பியசீலியும் மற்றொரு நாற்காலியில் தன்னை அமர்த்திக் கொண்டாள்.

"நல்ல குடும்பம், மூன்று தலைமுறையாக மலையகத்தில் வாழ்பவர்கள். இந்தியாவின் கேரள நாட்டின் பரம்பரையினராம்," என்றாள் பியசீலி.

"ஆமாம், தகப்பனார் வாத்தியார் என்பதால், பிள்ளைகளின் படிப்பில் கறாராக இருந்ததால் இருவரும் உருப்பட்டுப் போனார்கள்," என்றார் முதலாளி பதிலுக்கு.

"பையன் வாட்டசாட்டமாய் இருக்கின்றான். பொண்ணும் அழகாக இருக்கின்றாள். தாயும் தகப்பனும் பண்பானவர்கள்" என்றாள் பியசீலி. முதலாளி ஒத்துப் பாடினார். அந்த நேரம் பார்த்து வாசல் "கேட்"டை முனியாண்டி அகலத் திறந்தான்.

இருவரும் எழுந்துகொண்டனர். விருந்தாளிகள் தோட்டத்தைக் கடந்து வீட்டு முற்றத்தை அடைந்தனர். காத்திருந்த கண்கள் பொலிய ஹேமாவும் வீட்டினுள் இருந்து வெளியில் வந்தாள். தோழிகளின் கைகள் பிணைந்து கொண்டன. பெற்றவர்கள் கைகூப்பி அன்பைப் பரிமாறிக் கொண்டனர்.

"எத்துலட எண்ட," என்று உள்ளே அழைத்தார் முதலாளி. போதாமைக்குப் பியசீலியும் "எண்ட எண்ட மஹத்தையா. எண்ட நோனா, எண்ட புத்தே, எண்ட துவே," எனத் தனித்தினி ஒவ்வொருவரையும் வரவேற்றாள்.

குதூகலமான வரவேற்பு வந்தவர்களை மகிழ்ச்சிகொள்ள வைத்தது. அனைவரும் இருக்கையறைச் சோபாக்களை அலங்கரித்தனர்.

முதலில் அனைவருக்கும் ஹேமா குளிர்பானம் பரிமாறினாள். கடைசியாகவே புஷ்பராஜிடம் போனாள். விழிகள் மோதக் கரங்கள் சற்று நடுங்கின.

எத்துணை துணிகரம் இருந்தாலும் ஆணருகில் செல்லும்போது பெண்மை துவளுவது இயல்பு என்பதை நிரூபித்தது அந்தச் சில நொடிப் பொழுதுகள். புஷ்பா அக்கணத்தை நோட்டமிடத் தவறவில்லை. "பாம்பின் கால் பாம்பறியும்" என்பது எத்தனை உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப விவகாரங்கள் பற்றிப் பெரியவர்கள் பேசிக் கொண்டனர். நண்பிகள் தோட்டத்திற்கு வந்து. தமது கழிந்து போன கல்லூரிக் காலத்தை ஒரு முறை மீட்டிப் பார்த்தனர்.

பல்கலைக் கழக வாழ்க்கை ஒருபுறம் இரம்மியமானதுதான். அதேவேளை சில சந்தர்ப்பங்களில் எப்போது இங்கிருந்து போவது என்னும் விரக்தியும் வருவதுண்டு. இருந்தும் வெளியில் வந்த பிறகுதான் அந்த நாட்கள் எம்மை நினைத்து ஆதங்கப்பட வைக்கும்.

எத்தனை உறவுகள். எத்தனை வாய்ச்சண்டைகள். காதல். பிரிவு. கவலை. கண்ணீர். கூடிக் காணும் குதூகலம். ஆட்டம்பாட்டு. அடிதடி. இப்படிஇப்படி எத்தனை இன்ப துன்ப நிகழ்வுகள்.

பின்னாளில் எண்ணிப் பார்க்கையில் அனைத்தும் இனிமையாக, மனத்திற்கு இதமான அனுபவங்களாகத் தோன்றும். மீண்டும் அக்காலம் மீளாதா என்ற ஆவலைத் தோற்றுவிக்கும். சிறிது நேரம் அந்தப் போதையில் அவர்கள் மிதந்து கிடக்கப் புஷ்பராஜ் தனித்து விடப்பட்டான்.

தன் தனிமையைப் போக்க. பூங்காவைச் சுற்றி வலம்வந்தான். தோட்டத்தின் ஒவ்வொரு மலரையும் தேடித்தேடித் தேன் நுகரும் வண்டுகளின் ரீங்கார ஒலி, நெட்டுயர்ந்த மரங்களில் இணையுடன் ஒன்றிக் கூவும் குயில்களின் குரலொலியும் கூடி அவன் காதுகளில் தேனாக இனித்தன.

பியசீலி உணவுக்கு அழைத்தாள். மூவரும் ஒன்றாகி உள்ளே சென்றனர். அதுவரை முகஸ்துதிக்காக புஸ்பராஜும் ஹேமாவும் புன்னகைத்தார்களேயன்றி ஒருவரோடு ஒருவர் ஒரு வார்த்தையேனும் பேசிக்கொள்ளவில்லை. தன்னளவில் தான் தயங்கினாலும் அவனாவது பேசுவான் என்றே ஹேமா எதிர்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பராஜ்ூம் தங்கை மூலம் அவள் பேசினால், தனக்கும் மனம்விட்டுப் பேசும் வாய்ப்பு இந்தச் சந்திப்பில் கிட்டலாம் என மனங்கொண்டாலும், முந்திக்கொள்ள முயலவில்லை.

அவள் புறத்தில் இருந்து வந்த விண்ணப்பம் முதலில் ஒருபக்கக் காதலாய் முகிழ்ந்தாலும், இப்போது அவன்புறத்தும் ஊற்றுப்பெற்று வளர்ந்திருந்தது.

மொழியும், மதமும் இடையில் இடைப்பட்டாலும் அதனைப் புறந்தள்ளும் மனநிலையில் அவன் உறுதியாக இருந்தான்.

ஹேமா புறத்தில் அது ஒரு பொருட்டே இல்லாவிடிலும், அவளது பெற்றோரின் உளப்பாங்கு எவ்வாறிருக்குமோ? என அவன் சிந்தனையில் முளையிட்ட அந்த வினாவே அவனை முந்திக்கொள்ளாது தடுத்தது.

உணவு மேசையில் அனைத்தும் பரிமாறப் பெற்றிருந்தன. அனைவரும் அமர்ந்து கொண்டனர். தாயை முந்தி அனைவருக்கும் ஹேமாவே பரிமாறினாள். விருந்தாளியாக வந்தும் வீட்டுப் பெண்போல் புஷ்பாவும் அவளோடு இணைந்து கொண்டாள்.

முல்லை மொட்டுகள்போல் தட்டுகளில் பூத்திருந்தது முத்துச்சம்பாச் சோறு. இந்துக்கள் வழக்கம் அறிந்த பியசீலி, சூடான சோற்றின்மேல் நெய்யை வார்த்தாள்.

தொடர்ந்து மீன்குழம்பு, சுரைக்காய்க் கூட்டு, மைசூர் பருப்புக் கறி, வல்லாரைச் சம்பல், பொரித்த மீன் முதலியன பரிமாறப்பட்டன.

அனைவரும் வயிராற உண்டனர். அண்ணன் புறம் புஷ்பா எதுவும் பங்கிடவில்லை. முற்றும் ஹேமாவே செய்யட்டும் என்று மற்றவர்களை அவள் கவனித்தாள்.

காதலரிடையில் கண்கள் பேசிக் கொண்டன. வள்ளுவனின் குறளடிகள் உயிர் பெற்றன. "ஹொந்தட்ட பெதண்ட துவே" நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறும்படி புஷ்பராஜ் அருகில் சென்ற மகளிடம் பியசீலி கூறினாள்.

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டாள் ஹேமா "போதுமா, இன்னும் போடவா?" என்றாள்.

தமிழில் அவள் மழலை கேட்டு அனைவரும் ஒன்றிச் சிரித்தனர்.

"போதும் ..போதும்! எத்தி எத்தி." என்றான் புஷ்ாராஜ்.

"போதும் ..போதும் என்று சொல்லுங்க. அது எனக்குப் புரியும்." என்றாள் மீண்டும் ஹேமா. மீண்டும் நகைப்பொலி நிலைத்தது அங்கே.

உணவின்பின் உண்ணக் கட்டித்தயிரும் "கித்துள்பணி"யும் காத்துக் கிடந்தன. அனைவரும் தத்தமக்கு வேண்டிய அளவில் பரிமாறிக்கொண்டனர். அப்புசிங்ஹோ அருகில் சென்றார். டாக்டரின் பார்வை அவர்மேல் ஊன்றியதும் அகன்றன கால்கள். பியசீலி மெல்ல நகைத்தாள்.

ஹேமாவும் புஷ்பாவும் பிரியாமல் பிரிந்தனர். தனித்து விடப்பட்ட நிலையிலிருந்த புஷ்பராஜ் பிரியாவிடையின் போது ஹேமாவின் பெற்றோரோடு சரளமாய்ப் பேசினான். அதில் ஒரு காரணம் தொக்கி நின்றது.

பெற்றோரோடு பேசும் பாங்கில் மகளுடனும் பேசும் வாய்ப்புண்டாகும் என்பதுதானது.

எண்ணிய வாய்ப்பும் கிட்டியது. ஹேமாவுடன் வலிந்து பேசினான்.

"என்ன ஹேமா, இருவரும் பட்டம் பெற்றுவிட்டீர்கள். மேற்கொண்டு என்ன செய்வதாக எண்ணம்?"

திடீரென வந்த இந்தக் கேள்வியை அவனிடமிருந்து ஹேமா எதிர்பார்க்கவில்லை. பதில் சொல்ல வார்த்தை வராது சற்றுத் தடுமாறினாலும், தன்னைச் சமாளித்துக் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னுமொரு தீர்மானமில்லை. நானும் புஷ்பாவும் யோசிக்கிறோம்," என்றபடி புஷ்பாவின் முகத்தை ஏறிட்டாள்.

பொய்யைப் புரிந்துகொண்ட புஷ்பா நண்பியைக் காப்பாற்றத் தலையசைத்தாள்.

ஒன்றுமே பேசாதிருந்தவன் ஒரு கேள்வியை முன்வைத்துப் பேசியதும், ஹேமா கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டாள். புஷ்பாவைப் பார்த்து,

"புஷ்பா, உனது அண்ணனுக்குப் பேசவருகிறதே!" என்றாள் நையாண்டி கலந்த தொனியில்.

பதிலுக்கு அவன் "போசாதிருக்க நானொன்றும் ஊமையில்லையே!. நீங்கள் இருவருந்தான் வந்ததில் இருந்து எனக்கும் சேர்த்துப் பேசிக்கொண்டே இருந்தீர்களே, நானென்ன பேசுவது?" என்றான்.

சுவையான உணவும், இதமான உபசரிப்பும் வயிற்றையும் மனத்தையும் நிறைக்க, வந்த விருந்தினர்கள் விடைபெற்றுச் சென்றனர். அப்புசிங்ஹோ முதலாளி, பியசீலி, ஹேமா மூவரும் வீதிவரை வந்து வழியனுப்பினர்.

முதலாளி தங்கள் வீட்டுக்கு முன்னர் வரவில்லை என்பதால் பொன்னுத்துரை வாத்தியார் அவர் குடும்பத்தை கலஹாவுக்கு வரும்படி அழைப்பொன்றை விடுத்தார். வாய்ப்பு வரும்போது கட்டாயம் வருவோம் என அவரும் ஏற்றுக்கொண்டார்.

வாகன ஓட்டி குரல் கொடுத்ததும், பேச்சுத் தடைப்பட்டது. கலஹா குடும்பம் வாகனத்தில் ஏறிக்கொண்டது.

❖❖❖❖

மருதமுனையில் நடந்தவற்றையெல்லாம் மகுமுதுவிடம் மௌலவி சொல்லி முடித்தார். அவன் ஆச்சரியப்படவில்லை. இவையெல்லாம் நடக்கும் என அவன் எதிர்பார்த்ததுதான். இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவுக்கும் மச்சானுக்கும் எதிர்ப்பில்லை என்பதை மௌலவியின் பேச்சு உணர்த்தியது.

மதினியின் ஊது குழலாகத்தான் காக்கா பாடியிருக்கின்றார் என்பது அவனுக்குச் சொல்லாமல் விளங்கியது.

அதுபற்றி எதுவும் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை எனக் கலீல் காக்காவிடம் சொல்லும்படியும், தான் ஊருக்குப்போய் தாத்தாவுடனும் மச்சானுடனும் பேசுவதாக அவருக்ககுச் சொல்லும்படியும் மௌலவிக்குச் சொன்னான்.

சொன்னபடி அடுத்த வாரமே முகுமூது மருதமுனைக்குச் சென்றான். முன்போலல்லாது அன்று ஜமீலாவின் வீட்டில்தான் அவன் பாதம் பதிந்தது.

தம்பியின் எதிர்பாராத வரவின் காரணத்தை அவள் அறிந்துகொண்டாலும் அதுபற்றி அவள் எதுவும் அவனிடம் கேட்கவில்லை.

பயணக் களையாறிப் பகலுணவும் உண்டபின் முற்றத்து மணலில் பாய் விரித்துச் சிறிது நேரம் கண்ணயர முயன்றான்.

ஆயிரந்தான் கட்டிலும் மெத்தையும் சொகுசு என்றாலும் முற்றத்து மணல் தரும் சுகம் வருமா? குடும்பத்தோடு பேசித் தளர்த்த வேண்டியிருந்த மனத்தின் சுமை, தூக்கத்தைத் தன்னில் சமிபாடாக்கிக் கொண்டதால் பாயில் புரண்டான்.

பிற்பகல் தொழுகைக்கான "அதான்" ஒலி செவியுட் புகுந்ததும், பள்ளிக்குப் புறப்பட்டான். தொழுகை முடிந்து வீடு வந்தான். மச்சான் மீராப்பிள்ளையும் வந்து சேர்ந்தார்.

ஜமீலா இருவருக்கும் தேநீர் பரிமாறித் தானும் அவர்களோடு பாயில் அமர்ந்து கொண்டாள்.

"என்னம்பி, செல்லாம கொள்ளாம திடீரெண்டு வந்திரிக்காய்?"- ஜெமீலாவின் கேள்வி இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தை யூகித்திருந்தாலும், அவன் வாயிலிருந்தே அதை வரவழைக்க வேண்டுமென்ற உந்துதலின் வெளிப்பாடு.

மீராப்பிள்ளையின் முகத்திலும் ஒளிரேகையாய் அக்கேள்வி புலர்ந்ததை மகுமூது உணர்ந்தான். அவன் பேசலானான்.

"காத்தான்குடி மவுலவியும், கலீல் காக்காவும் வந்த வெசகளமாத்தான் நானும் வந்தன். எனகிட்ட கேட்டாங்க. நான் ஒங்களோட பேசி ஒரு முடிவுக்கு வரச் சென்னன். அதான் வந்தாங்க. இஞ்ச நடந்ததெல்லாம் மவுலவி சென்னார்." என்று வார்த்தையை நிறுத்தினான்.

"அப்ப ஒனக்குப் புறியம்:" என்றாள் ஜமீலா, பதிலொடு கேள்வி தொக்க.

தம்பியிடமிருந்து உடன் பதில் வரவில்லை. சிறிது நேரம் அவன் அமைதியாய் இருந்தான். பின் அமைதி குலைத்துப் பதில் சொன்னான்.

"கொழும்புக்கு வந்த நாளையிலிருந்து கலீல் காக்காட ஹோட்டல் கடையிலதான் மூணு நேரமும் நான் சாப்பிடுறன். நல்ல மனிசன். ஊட்டில இருந்தும் எனக்கிச் சோறனுப்புவார்.

"தொழுற பள்ளியிலயும் நாங்க சந்திப்பம். ஒரு நாள் நம்மட குடும்பத்தப் பத்தி விசாரிச்சார். அவர் மட்டக்கிளப்புக்கு வந்தில்ல எண்டுதான் அண்டைக்கி என்னோட ஊர்பாக்க வந்தார்," என்றான்.

"அப்ப காரணத்தோடதான் மொதலாளி மருதமனைக்கி வந்திரிக்கார்", என்றார் அவனை இடைமறித்த மீராப்பிள்ளை. அந்த வார்த்தைகள் மகுமூதுவைக் கொஞ்சம் உடல் நெகிழவைத்தது.

"ஊருக்கு வந்து போனபொறகுதான் எனக்கிட்ட கலியாணம் பத்திக் கதைச்சார். நான் புறியம் குடுக்கல்ல. அதுக்குப் பொறகுதான் மவுலவியையுங் கூட்டிக்கிட்டு இஞ்ச வந்தார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி சொன்ன பதிலையும் முன்னர் நடந்தவற்றையும் ஒன்றுகூட்டிப் பார்த்த ஜமீலாவுக்கு அவற்றிலுள்ள யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. தம்பி பதிலொன்றும் சொல்லாவிடினும், அவனுக்கு இந்தக் கல்யாண விடயத்தில் விருப்பமுண்டு என்பதை அவள் யூகித்தாள்.

"என்ன நீ, ஒளிச்சிமறச்சிக் கதயாம உள்ளத்தச் செல்லம்பி. ஒனக்கு இதில புறியந்தானே?"

அர்த்தத்தோடு பிறந்தது கேள்வி அக்காவிடமிருந்து. மச்சானும் ஒத்துப் பாடினார்.

"அதானே, நீ ஒண்ட புறியத்த சென்னாத்தானே நாங்களும் என்ன செய்யிறண்டு யோசிக்கலாம்?"

இருவரின் வார்த்தைகளிலும் ஒருமித்த ஒப்புதல் இழையோடுவதை உணர்ந்த மகுமூது பேசினான்.

"ஒரேஒரு மொறதான் நான் அந்தப் புள்ளைய நேர பாத்திரிக்கன். ஒண்டும் கதச்சதில்ல. தாயில்லாப் புள்ள. ஒடப்பொறப்பு ஆருமில்ல. மூத்தம்மாதான் வளக்கிறாவாம். வாப்பா நல்ல மனிசன். தொழுகையாளி.

"கொழும்பெண்டாலும் அந்தப்புள்ள கொள்ளையா படிச்சும் இல்ல. வேற அல்லுத்தொல்லும் இல்லையாத்தா," என்று முழு விபரத்தையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தான் மகுமூது.

எல்லாவற்றையும் செவிமடுத்த மீராப்பிள்ளை மனதுக்குள் நினைந்துகொண்டார் "மைத்துனன் விபரமாய்த்தான் இருக்கின்றான்" என்று.

"ஒனக்குப் புறியமெண்டா எங்களுக்கு ஒண்டுமில்ல. என்ன புள்ள செமிலா, நீ என்ன செல்லுகாய்கா"

தம்பி விடயத்தில் தனது ஒப்புதல் மனத்திலிருந்தாலும், எப்போது அவர்வாயிலிருந்து ஒரு வார்த்தை வருமெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்த ஜமீலா "நீங்க செரியெண்டா நானுஞ் செரிதான்," என்றாள்.

அவள் ஒப்புதலுக்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. இந்த விடயத்தில் அண்ணனின் மனைவி பாத்துமுத்துவின் காரசாரம் காக்கா வாயால் வந்ததுமாகும்.

"காக்காவும் மதினியும் புறியப்படுவாகள தாத்தா?"

"அவளார்ரா புறியஞ் செல்ல!. ஒனக்குக் குடுத்த சோத்துக்குக் கணக்குப் பாத்தவள். ஒன்ன சோத்துமாடு எண்டவள். தேவ....யாள். வெணுமெண்டா காக்காக்கிட்ட கேட்டுப் பாப்பம்," என்றாள் ஜெமீலா வார்த்தையில் தீப்பறக்க. "வந்தா வரட்டும் வராட்டிப் போகட்டும்," என்றும் வாய்பாறினாள்.

"இஞ்சப் பாரு புள்ள, தேவல்லாம அவள இழுக்காத. ஒண்ட காக்கா ஒழுங்கா இருந்தா அவளேன் தேவல்லாம கதைக்கப் போறாள்?-" நியாயத்தைப் பேசினார் கணவர்.

"அடிசக்கை.... இஞ்சப் பாருடோ இவருக்கு வாற ரோசத்த!. கூடப்பொறந்த தங்கச்சிக்கி ஏசினாப்போல. அவள்தானே எங்க காக்காவ எங்களுக்கிட்ட இருந்து பிரிச்சவள?. அவள் செல்லுகாப் போலதானே காக்கா ஆடுறார்?"

சேகுமதாரின் வாய் முணுமுணுத்தது. "இஞ்சயெண்டாப்போல நான் செல்லுகாப் போலதான் இவ கேக்கிற மாதிரி ...."

என்ன சொல்லுகின்றார் என்று புரியாவிட்டாலும் வாயசைவை கண்டுகொண்ட ஜமீலா சூடாகக் கேட்டாள். பாத்துமுத்துக்குச் சார்பாய் ஒருவார்த்தை பேசுவதையும் விரும்பாத அவள்.

"என்ன வாய்குள்ள புறுபுறுக்கயள்?. நான் சென்னது மெய்தானே?. எங்க காக்காவ எங்களுக்கிட்ட இருந்து பிரிச்சவள் அவள்தானே?" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகள் சூடாகிப் பேச்சு திசை மாறுவதை அவதானித்த மகுமூது கதையை மாற்றினான்.

"நீங்க ரெண்டுபேரும் செரியெண்டா நான் அவியள இன்னொருதரம் வரச்செல்லுகன். நீங்களே பேசி முடியுங்க. காக்காவையுங் கூப்பிடுங்க. மதினியும் வரட்டும். வேணுமெண்டா பள்ளி லெப்பையையுங் கூப்பிடுங்க," என்றான்.

இரண்டு நாட்கள்தான் ஊர்வாசம். ஒரு நல்ல முடிவுடன் மீண்டும் கொழும்புக்குப் புறப்பட்டான் மகுமூது.

❖❖❖❖

ஒருநாள் மாலைப் பொழுது. வீட்டுப் பூந்தோட்டப் பாதையில் அப்புசிங்ஹோவும் பியசீலியும் உலவிவந்தனர். பூத்துக் குலுங்கிய வெள்ளையும் செம்மையும் மஞ்சளும் ஒன்றறக் கலந்த றோசா மலர்கள் மனத்திறகு இதமளித்தன.

மாரிமுத்து மலர்ச்செடிகளைச் சாணமிட்டு, நீர் பாய்ச்சி பொறுப்போடு பரிபாலித்திருந்தான். மற்றைய வண்ணமலர்ச் செடிகளும் தம் பங்கிற்காய்ப் பூக்களால் தம்மை அலங்கரித்துக் காணப்பட்டன.

"ஏன் பியசீலி ஹேமா பல்கலைக் கழகப் படிப்பை முடித்துக்கொண்டாள?. இனி அவள் என்னசெய்யப் போகிறாள்?. மேற்கொண்டு படிக்கப் போகிறாளா? அன்றைக்கு டாக்டர் கேட்டாரே?" என்றார் முதலாளி ஏதோ நினைவுக்கு வந்தவராய்.

மகளின் திருமணத்திற்குக் காலம் கிட்டிவிட்டதை அடிக்கடி அவர்மனம் நினைவூட்டிக் கொண்டிருந்தது. தனது உடல்நலக் குறைவை எண்ணி அவர்மனம் கலங்கியது.

மனைவியின் கருத்தறிய மறைமுகமாக அப்படி ஒரு கேள்வியை முன்வைத்தார். பியசீலியின் பதில் அவர் எண்ணியவாறே பிறந்தது.



PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"படித்தது போதும். இனி நல்ல ஒரு மாப்பிளையைப் பார்த்துக் கல்யாணத்தைப் பண்ணிவைப்போம். "கப்பு மாத்தையா"க்கிட்ட "ஹந்தாஹன"வை குடுத்து நமது குடும்பத்துக்கு ஏற்ற ஒரு மாப்பிள்ளையைத் தேடுவோம். ஆனால் குடும்பத்துக்குள் வேண்டாம்," என்றாள்.

முதலாளிக்கு முன்னைய நினைவொன்று நினைவுக்கு வந்தது. குடும்பத்துள் இளைஞனை தன்மனம் விரும்புவதாகச் சொன்னபோது ஏற்பட்ட விபரீதம்.

அன்றே அவர் தீர்மானங் கொண்டிருந்தார். அந்தப் பேச்சுக்கே இடமளிப்பதில்லையென. பீயசீலியின் பதிலும் அதனை உறுதி செய்தது.

சட்டென ஒரு நினைவுக்கு வந்தவளாய்ப் பியசீலி கேட்டாள் - பேச்சின் தொடக்கத்தில் டாக்டர் பற்றி அவர் நினைவூட்டியது நினைவில்வர.

"ஏங்க, நம்ம பொண்ணுக்கு புஷ்பாவின் அண்ணனைக் கேட்டுப் பார்க்கலாமே?"

முதலாளி ஆச்சரியப்பட்டுப் போனார். இரத்த உறவுக்குள்ளேயே வேண்டாம் என்றவள், மதங்கடந்து சிந்திகின்றாளே என. அவர் சிறிது நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு,

"அது சரிவருமா பியசீலி?. நாங்கள் மதத்ததாலும் இனத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர்கள். நாம் ஒப்புக் கொண்டாலும் அவர்கள் பொருந்துவார்களா?" என்றார்.

"மொழி ஒரு பிரச்சனையே இல்லை, எல்லோருக்கும்தான் சிங்களம் தெரியுமே. மதமும் அப்படித்தான். அவரவர் மதத்தை அவரவர் பின்பற்றுவதற்கு என்ன தடை?" என்றாள் பியசீலி.

"புள்ளகுட்டி பிறந்தால்?"

"அதிலும் பிரச்சினை இல்லை. நாங்களும் இந்துத் தெய்வங்களை வணங்குபவர் தானே?" அவர்களும் விரும்பிய தெய்வத்தை வணங்கட்டுமே - திடமாகச் சொன்னாள் பியசீலி.

"குடும்பங்கள் ஏற்றுக்கொள்ளாதே! "பண்சல"வும் ஏற்றுக்கொள்ளாதே!" என்றார் மீண்டும்.

"இது நமது குடும்பத்தில் மட்டும் இல்லை. இப்ப எல்லா இடத்திலும் நடக்கும் ஒன்றுதான். முதலில் எல்லோரும் எதிர்ப்பார்கள். நாளடைவில் சரியாகிவிடும்"

பேச்சு பலபடப் பேசப்பட்டு இறுதியில் இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர்- பொன்னுத்துரை வாத்தியாரைச் சந்திப்பதென. எண்ணியபடி அதற்கான வாய்ப்பொன்றும் முதலாளிக்குக் கிடைத்தது.

பொன்னுத்துரை வாத்தியார் பாடசாலை விடயமாக ஒருநாள் கண்டிக்கு வந்திருந்தார். தினமும் கண்டியிலுள்ள கடைக்கு வரும் முதலாளியை, தற்செயலாக மணிக்கூண்டுக் கோபுரத்தடியில் சந்தித்தார். இருவரும் ஒருவரோடொருவர் குசலம் விசாரித்துக் கொண்டனர்.

"கவதாத அபே கெதற என்னே முதலாளி?" என்றார் பொன்னுத்துரை புன்னகைத்தபடி-

முதலாளி வீட்டு விருந்தின் பின் அவர்களைத் தனது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்ததை நினைவுபடுத்தி எப்போது வருவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள. முதலாளிக்கு அவரது கேள்வி வாய்ப்பாய் அமைந்தது. உடனே பதில் சொன்னார். "இந்த வாரமே வர நினைத்தோம் நீங்களே கேட்டுவிட்டீர்கள் சனிக்கிழமை கொழும்புக் கடைக்குக் கணக்குவழக்குப் பார்க்கப் போக வேண்டும் ஞாயிற்றுக் கிழமை வருகின்றோம் என்றார்.

வாத்தியாருக்கு ஏகப்பட்ட சந்தோஷம். "வாருங்கள் வாருங்கள் கட்டாயம் வாருங்கள் இந்த ஞாயிற்றுக் கிழமை நான் வீட்டில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பேன் பகல் சாப்பாட்டிற்கு வரவேண்டும். எல்லோரும் வரவேண்டும்" என்றார். அத்தோடு இருவரும் விடைபெற்றுக் கொண்டனர்.

❖❖❖❖❖

பொன்னுத்துரையாருக்கு அன்று லீவு நாள். அனைவரும் வீட்டில் இருந்தனர். அப்புசிங்ஹோ முதலாளியின் குடும்பத்தின் வருகை அனைவரையும்விடப் புஷ்பராஜுக்கே அதிக மகிழ்ச்சியைத் தந்தது.

ஹேமா மீது நீறுபூத்த நெருப்பாய்க் கிடந்த அவனது காதல் கொழுந்துவிட வாய்ப்புக்களுக்காய்க் காத்திருந்த அவனுக்கு அவர்கள் வருகை மகிழ்வைத் தந்ததில் வியப்பில்லையே.

பகல் பன்னிரண்டு மணியளவில் அவன் எதிர்பார்ப்பு ஒரு மொறிஸ் மைனர் காரின் வருகையால் நிறைவேறியது. புஷ்பா வாசலில் வரவேற்கக் காத்திருந்தாள்.

காரில் இருந்து ஒவ்வொருவராய் இறங்கினர். முதலாளி மகிழ்ச்சியோடு வாத்தியாரின் கைகளுக்குள் சங்கமமானார். புஷ்பா ஹேமாவைக் கட்டிக்கொண்டாள். அம்மாக்கள் ஆளுக்காள் கைகூப்பிக் கொண்டனர். புஷபராஜ் தனித்துப்போனான்.

தனிமையைக் காட்டிக்கொள்ளாமல் அனைவருக்கும் பொதுவாக "ஆயுபோவான்" சொன்னான். பார்வையோ ஹேமா மீது பதிந்திருந்தது. அவளும் பதிலுக்கு மதுவூறிய வார்த்தைகளால் "வணக்கம் டாக்டர்" எனக் கைகூப்பினாள்.

முதலாளியின் மகன் ரமேஷ் மட்டும் வரவில்லை. புஷ்பா கேட்டாள். "அய், மல்லி ஆவ நெத்த?" என்று. அவன் விசேட வகுப்பொன்றுக்குப் போனதால் வரவில்லை என்றாள் ஹேமா பதிலுக்கு.

அனைவரையும் வீட்டின் விரிந்திருந்த கதவுகள் வரவேற்றன. ஆடம்பரமற்ற அளவான இல்லம். தகுதிக்கு ஏற்றபடி தளபாடங்கள். வரவேற்பு அறையின் ஒரு புறத்தை அலங்கரித்தது ஒரு புத்தக அலுமாரி.

பக்கச் சுவரொன்றில் பெரிதாய் உலகப்படம். மற்றொன்றில் பாரதியின் புகைப்படம் - அதனடியில் "தமிழோதித் தந்த தாதை" என்ற வாசகத்துடன்.

முதல் முறை வந்தபோது இவற்றையெல்லாம் பார்த்ததனால் தாய்க்கும் மகளுக்கும் அவற்றில் அக்கறை ஏற்படவில்லை. பாரதியின் படத்தைப் பார்த்ததும் வாத்தியாரிடம் முதலாளி கேட்டார்

"யாரிவர். உங்கள் அப்பாவா?" என்று.

ஹேமா அப்பாவைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தாள். "அப்பச்சி, ஏக்க பாரதியார். தேமலென் லோக்கு கவிகாரயெக்!" என்றபடி.

முதலாளி வெட்கிப் போனார். பாரதியைத் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லாவிடிலும். தப்பான ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டோமே என்று.

உச்சியில் சூரியன் உலாவந்தபோதும். காற்றொடு கலந்த கலஹாவின் பனிக்குளிரின் கதகதப்பு இன்னும் கைகளைச் சூடேற்ற வைத்தது. அதனைப் போக்க என்பதுபோல் புஷ்பா அனைவருக்கும் சூடான தேநீர் தந்தாள்.

தேநீர் அருந்தும்வரை சிறிது நேரம் அங்கு அமைதி ஆட்கொண்டது. பின் மூத்தவர்கள் நால்வரும் தனித்திருக்கவிட்டு நண்பிகள் இருவரும் வாசலுக்கு வந்தனர். கூடவே அண்ணனையும் அழைத்தாள் புஷ்பா. அவனும் இணைந்து கொண்டான்.

இளையவர்கள் மூவரும் வெளியில் சென்ற வாய்ப்பினைப் பயன்படுத்த எண்ணிய முதலாளி வாத்தியாரிடம் பேச்சுக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் மகன்தான் பல்கலைக் கழகத்தை முடித்துவிட்டாரே. கண்டி வைத்தியசாலையில் இருதய சிகிச்சைப் பிரிவில் என்னுடைய வைத்திய நிபுணருக்கு அவர்தான் உதவியாக இருக்கிறார். அவருக்குக் கல்யாணம் ஏதாவது பேசிவிட்டீர்களா?"

வந்ததும் வராததுமாக இப்படி ஒரு கேள்வியை அவர் கேட்டதும். பொன்னுத்துரை வாத்தியாருக்கு என்ன பதில் சொல்லுவதென்று புரியவில்லை.

அவர் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, ஒரு மெல்லிய புன்னகையோடு "இன்னும் இல்லை" என்ற இரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக்கொண்டார்.

அந்தப் பதிலில் திருப்தியுறாத முதலாளி மீண்டும் கேட்டார்.

"நல்ல பையன். காலாகாலத்தில் ஒரு நல்ல மணப் பெண்ணைத் தேடிக்கொடுக்க வேண்டாமா? நானும் படிப்பு முடித்த எனது மகளுக்கு ஒரு மாப்பிள்ளை தேடிக்கொண்டுதான் இருக்கின்றேன்," என்றார்.

உடன் புரிந்தது வாத்தியாருக்கு. படித்தவரல்லவா. சட்டென ஒரு கேள்வியைக் கேட்டு, தானாகவே அதற்கான ஒரு தீர்வையும் முன்வைத்து, அதில் தனது மகளையும் தொடர்புபடுத்திப் பேசியதன் உட்பொருள் என்னவென்று.

அவர் மீண்டும் அமைதியானார். பெண்கள் இருவரும் பேச்சில் பங்குகொள்ளாவிட்டாலும் செவிப்புலனுக்குத் தீனிதரத் தவறவில்லை.

இதனிடையில் பிள்ளைகள் உள்ளே நுழைந்தனர். உணவுக்குரிய நேரம் வந்ததால் பேச்சைத் தொடராமல் வாத்தியார் அனைவரையும் சாப்பிட அழைத்தார்.

மேசையில் உணவுகள் பரிமாறப்பட்டிருந்தன. முதலாளிக்கெனச் சிவப்பரிசிச் சோறு, பாகற்காய்ச் சுண்டல். மீன் குழம்பு. வதக்கிய கீரையென உணவு வேறுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டிருந்தது. மற்றவர்களுக்கென விதம்விதமான உணவுகள். வயிராற அனைவரும் உண்டனர்.

உணவு முடிந்ததும் அனைவரும் நடுச்சாலைக்கு வந்தனர். மூத்தவர்கள் தத்தமக்கென இருக்கையை உறவாக்கிக் கொண்டனர். அவர்களின் சம்பாஷணைக்கு இடையூறு இல்லாமல் இளையவர்கள் வாசலுக்கு ஒதுங்கினர்.

மீண்டும் விட்ட இடத்திலிருந்து முதலாளி பேச்சைத் தொடங்கினார். சுற்றி வளைப்பதில் பயனில்லை என்பதால் நேரடியாகவே விடயத்திற்கு வந்தார்.

"இஸ்கொலமாத்தையா," எனத் தொடங்கி வார்த்தைகளை ஒவ்வொன்றாக உச்சரித்தார்.

"நானும் எனது மனைவியும் உங்களது அழைப்பை மதித்து வந்ததோடு, வேறு ஒரு முக்கிய காரணமாக உங்களுடன் பேச வேண்டுமெனவுந்தான் இன்று வந்தோம். அது எனது மகளைப் பற்றியது," என நிறுத்தினார்.

திட்டமிட்டு வந்ததால் பியசீலிக்கு அவர் சொல்லவருவது என்னவென்று புரிந்தாலும், பொன்னம்பலத்தாரின் மனைவிக்குப் புதிராகவிருந்தது. அவர் கதைக்குச் செவிதந்தார்.

கேட்கப் போவது என்ன என்பதை வாத்தியார் யூகித்தாலும். முதலாளியின் வாயிலிருந்தும் வரும் வார்த்தைக்காகக் காத்திருந்தார்.

"உங்கள் மகனை எனது மகளுக்கு மாப்பிள்ளை கேட்கவுமே நாங்கள் வந்துள்ளோம்," என்றவாறு மீண்டும் பேச்சை நிறுத்தினார் முதலாளி.

இதைக் கேட்ட வாத்தியாரின் பார்வையும் மனைவியின் பார்வையும் சட்டென ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அவற்றில் அளவிலாக் கேள்விகள் அப்பிக் கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின்பின் பெற்றோரின் பேச்சுக்கு இடையூறு இல்லாமல் ஹேமாவுடன் வெளியில் வந்த அண்ணனும் தங்கையும் நாற்காலியிட்டு அமர்ந்துகொண்டனர்.

பேசிட வார்த்தைக்குப் பஞ்சமில்லாத பல்கலைக்கழக வாழ்வு, மனம்விட்டுப் பேசும் துணிவைத் தந்திருந்ததால் புஷ்பாவே பேச்சைத் தொடங்கினாள்.

"அண்ணே! நான் ஓங்கிட்டே ஒண்ணு கேக்கலாமா?" என்றாள் புஷ்பராஜை நோக்கி.

"என்னநீ. புதிர்போடுற? கேளுவன்!"

"அண்ணே! நான் ஓங்கிட்ட ஹேமாபத்தி ஒரு விசயம் சொல்லிரிக்கேன். அவ விருப்பத்தையும் சொல்லிரிக்கேன். நீ எனக்கு ஒரு முடிவான பதில் சொல்லல்ல. இப்ப சொல்லண்ணே. அவ முன்னாலேயே சொல்லிடு." என்றாள்.

ஹேமாவின் முன்னிலையில் எதிர்பாராத அவள் கேள்வி அவனுக்குச் சங்கடத்தைத் தந்தாலும், அதனை அவன் விரும்பினான். ஹேமாவின் புறம் திரும்பினான். அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அவனைப் நேரிடையாய்ப் பார்க்க இயலாதவாறு பார்வையால் நிலத்தைத் துழாவினாள்.

"நான் ஒனக்குச் சொன்னேனே நம்ம அம்மா அப்பா விரும்பினால் எனக்கு ஆட்சேபனை இல்லைன்னு. அவுங்க அம்மா அப்பாவும் விரும்பணுமே. புஷ்பா?"

இந்தப் பேச்சிடையில் வெளியில் வந்த புஷ்பாவின் அம்மா புஷ்பாவை அழைத்தாள். பேச்சு முற்றுப்பெறாவிட்டாலும், அண்ணன் அவனளவில் விருப்பம் தெரிவித்த நம்பிக்கையோடு அவர்களைத் தனிக்கவிட்டு வீட்டினுள் நுழைந்தாள்.

சமையற்கட்டிற்கு அம்மா அழைத்துச் சென்றாள். தனித்து அழைத்துச் செல்வதன் காரணம் அறியாப் புஷ்பா பின் தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



"புஷ்பா .. அண்ணனுக்கும் ஹேமாவுக்கும் ஏதாவது....?" இறுதி வார்த்தை சற்று ஓசையில் நீண்டதும் புஷ்பா சிந்தனை சுழன்றது.

"ஏனம்மா, ஏன் அப்படிக் கேக்கிறே?"

"ஒன்றுமில்லடி, அப்புசிங்ஹோ முதலாளி அண்ணன மாப்பிள்ள கேக்கிறார். அதான், அப்பிடி எதாச்சும் உண்டாண்ணு கேக்கிறேன். அப்பிடின்னா ஒனக்குத் தெரிஞ்சிருக்குமே"

"அப்பிடி ஒண்ணும் இல்லம்மா. அண்ணன அவளுக்குப் பிடிச்சிருக்கு. ஏங்கிட்ட சொன்னா. நானும் அண்ணனுக்குச் சொன்னேன். அவன் அம்மா அப்பா விரும்பினா தனக்கு ஆட்சேபனை இல்லைன்னு இப்பதான் சொன்னான்"

"அப்ப ஒனக்கு முன்னமே தெரியுமில்ல, ஏண்டி நீ எனக்கு சொல்லல்ல?"

"அம்மா! அவ புறியப்பட்டா. அண்ணன் ஒண்ணும் செல்லல்லையே? இத எதுக்கு நான் சொல்லணும்?"

"இப்ப மொதலாளி மாப்பிள்ள கேட்டு வந்திருக்காரே, நாங்க என்ன பதில சொல்றது? சொல்லடி!"

"அது ஒங்க விருப்பம். விரும்பினா சரியெண்ணுங்க. இல்லேன்னா வேணாண்ணுங்க. அண்ணனும் அதத்தான் சொன்னான். அம்மா அப்பா விரும்பினா தனக்கு ஆட்சேபனை இல்லைன்னு."

"அவ நல்ல பொண்ணும்மா. தெரிஞ்ச பொண்ணு. அண்ணனுக்கு நல்ல மனைவியா இருப்பா. நான் மூணு வருஷம் பழகி இருக்கேன். ஏங்கிட்ட கேட்டா நான் ஆமாண்ணுதான் சொல்லுவன்."

மகளின் வார்த்தைகளில் தொனித்த உறுதி வாத்தியார் மனைவிக்கு நம்பிக்கையூட்டியது. மகள் படித்தவள். உலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தவள். தப்பில்லாமல் முடிவுக்கு வரும் புத்திசாலி என்பதால், கேட்டவற்றைச் செவிகொண்ட அவள் உள்ளே சென்றாள்.

வந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு கணவனை உள்ளே அழைத்தாள். பொன்னுத்துரை வாத்தியாரும் மனைவியைப் பின்தொடர்ந்தார்.

மகளிடம் தான்கொண்ட தகவல்களை முற்றும் சொன்னதோடு, அவளது பரிந்துரையையும், மகனின் நிலைப்பாட்டையும் தந்தையிடம் கூறினாள். அனைத்தையும் செவிகொண்ட அவர் மிக நிதானமாகப் பேசலானார்.

"புஷ்பா சொன்னபடி அந்தப் பொண்ணு ஆசைப்படுறதும், புஷ்பராஜ் மறுக்காம இருக்கிறதும், அவுங்க அம்மா அப்பா ஆசப்படுறதும் ஒண்ணா இருக்கிறப்போ நாங்கமட்டும் ஏன் எதுக்கணும். அவுங்க நல்ல குடும்பம். நம்மபோல அவுங்களும் நாலுபேர், சாதிமதம் பத்திக்கூட அவுங்க கவலப்படல. நாங்களும் ஆமாண்ணு சொல்றதுதான் நல்லதுண்ணு எனக்குத் தோணுது. நீ என்ன சொல்லுற?"

"எனக்கு எப்பவோ அவுங்கள புடிச்சிப்போச்சு. புஷ்பாவும் சொல்லுறா நம்ம குடும்பத்துக்கு நல்லதுண்ணு. நீங்க ஆமாண்ணா நானும் ஆமாதான்!"

"அப்ப வா பேசலாம்," என்றபடி மனைவியையும் அழைத்துக்கொண்டு முன்கூடத்துக்குச் சென்றார் வாத்தியார்.

எந்தவித பீடிகையும் இல்லாமல் விடயத்துக்கு வந்த முதலாளிக்குத் தக்கபடி, அவர்போன்றே பதில் இறுக்க எண்ணிய பொன்னம்பலத்தார் தானிருந்த நாற்காலியைத் தனதாக்கிக் கொண்டார். மனைவியும் முன்னர்போல பியசீலியின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

மாப்பிள்ளையின் தாயும் தகப்பனும் மகளை அழைத்ததையும், அவளோடு கலந்துரையாடுவதையும்

யூகித்தறிந்த முதலாளி, அவர்களின் வருகையின் தாமதிப்பிலிருந்து அதனை ஊர்ஜிதம் செய்துகொண்டார்.

அவர்கள் என்ன பதில் சொல்லப் போகின்றார்கள் என்றறியக் காத்திருந்தார். கூடத்தில் சிறிது நேரம் மௌனாஞ்சலியொன்று நிறைவேறியது. அந்த இடத்தில் புஷ்பா இருக்கவில்லை.

அமைதி கலையுண்டது. பொன்னம்பலத்தார் பேசினார். மகளுடன் பேசிய விபரங்களோ வேறு சுற்றிவளைப்புக்கள் எதுவுமோ இல்லாது வார்த்தைகள் வெளிவந்தன.

"நீங்கள் பொருளாதார வசதி மிக்கவர்கள். உங்கள் சொந்தபந்தங்களுக்குள் மாப்பிள்ளை தேட வாய்ப்பிருந்தும், நீங்களாக வலிந்துவந்து எனது மகனை உங்கள் மகளுக்கு கணவனாக வரித்துக்கொள்ள விரும்புகின்றீர்கள். எங்களைப் பொறுத்த வரையில் எங்களுக்கு எந்தவித மறுப்பும் சொல்லுவதற்கில்லை.

"மதமும் மொழியும் கடந்த இந்தப் பொருத்தத்தில் நீங்கள் உங்கள் குடும்பத்தையும் கலந்தாலோசிக்க வேண்டாமா? அதனால், நாம் இருசாராரும் சம்மதத்தில் ஒன்றுபடுவோம். மற்றுமொருநாள் குடும்பங்கள் ஒன்றாகிக் கலந்துபேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவோம்."

மகிழ்ச்சியால் பூரித்துப் போனார்கள் ஹேமாவின் பெற்றோர். இத்தனை எளிதில் காரியம் கைகூடும் என்று அவர்கள் எண்ணவில்லை. கரங்கள் கோத்துக் கொண்டன. நன்றி சொன்னார் அப்புசிங்ஹோ.

அம்மாக்களும் தாம் வந்தபோது இருந்த மகிழ்விலும் தற்போது கொண்ட சந்தோஷத்தை முகங்களில் ஒளிரவிட்டனர்.

வந்த காரியம் பழமானதால் மேற்கொண்டு தாமதித்தால் ஏதேனும் மாற்றங்கள் வந்துவிடுமோ என்ற அச்சத்தால் முதலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் புறப்பட்டார். தேநீர் அருந்தக் கேட்ட அழைப்பையும் மறுத்துவிட்டு எழுந்து கொண்டார்.

விடைபெற ஆயத்தமாவதை அறிந்த இளையவர்கள் மூவரும் பெற்றோருடன் இணைந்துகொண்டனர். அங்கு நடந்த எதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

❖❖❖❖

கொழும்புக்கு வந்த மகுமூது முதலில் சந்தித்தது இராத் தொழுகையின்பின் பள்ளி மௌலவியைத்தான். அவரே இரண்டு குடும்பங்களுக்கும் இடையில் பொதுமனிதனாக இருந்தார். ஸலாம் கூறி அருகில் வந்த மகுமூதைக் கண்டதும் அவர் பதிலுரைத்தவாறு, "என்ன தம்பி ரெண்டு மூணுநாளா பள்ளிப்பக்கம் காணல?" என்றார்.

"ஊருக்குப் போயிருந்தன் மவுலவி," என்றபடி, அங்கு தாத்தாவோடும், மச்சானோடும் நடந்த சம்பாஷணைகளையும் சுருங்கக் கூறி, அவர்கள் சம்மதித்துள்ள செய்தியையும் சொன்னான். மேற்கொண்டு கலீல் காக்காதான் மாப்பிள்ளை கேட்டுப் போக வேண்டும் என்றும் சொன்னான்.

அவரும் இது பற்றிக் கலீல் காக்காவிடம் பேசுவதாகவும், விரைவில் மருதமுனைக்கு போக ஆயத்தம் செய்யும்படி கூறுவதாகவும் கூறினார்.

சொன்னதுபோல் மறுநாள் கலீல் காக்காவையும் சந்தித்து விடயத்தைச் சொன்னதுடன், விரைவாகப் போகும் ஆயத்தங்களைச் செய்யும்படி கூறி, உடன் தானும் வருவதாகவும் வாக்களித்தார்.

கலீல் காக்கா நடந்தவற்றைத் தாயாரிடம் சொன்னபோது, கிழவி திருமணம் நடந்துவிட்டது போன்று மனம் நிறைந்தாள்.

❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலஹாவிலிருந்து பட்டியகம வரும்வரை மொறிஸ் மைனருள் உடன் காரோட்டி மாணிக்கமும் இருந்ததால், திருமண விடயம் பற்றி யாரும் எதுவும் பேசவில்லை.

குடும்ப விடயங்கள் பேசுவது பொருத்தமில்லை என்பதால் தாயும் தகப்பனும் அமைதி காத்தனர். அவர்கள் இருவரும் தமக்குள் புஷ்பாவின் வீட்டுக்குச் செல்லும் முக்கிய காரணத்தை மகளுக்குத் தெரியப்படுத்தாது வந்ததால் ஹேமாவும் பேசாதிருந்தாள்.

வீடுவந்து சேர்ந்ததும் அவரவர் வேலையில் அவரவர் கருத்தானார்கள். இரவு உணவின்பின் முதலாளி மனைவியையும் மகளையும் இருக்கை அறைக்கு அழைத்தார். அவர்களும் சேர்ந்து கொண்டனர்.

காரணம் ஏன் என்பது பியசீலிக்குத் தெரிந்தாலும், வழக்கத்திற்கு மாறான அந்த அழைப்பு ஹேமாவுக்கு வியப்பைத் தந்தது.

"ஹேமா, இப்போது ஒரு முக்கிய விடயம் பேசத்தான் நானும் அம்மாவும் உன்னை அழைத்திருக்கின்றோம். நீ படித்தபெண் நிதானமாக யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும்."

"நீ பட்டம் பெற்றுவிட்டாய். மேற்கொண்டு படிக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இருக்கலாம். அதில் எங்களுக்கு எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது.

"இருந்தும் நாங்கள் உன்னளவில் எங்களுக்கான ஒரு பொறுப்பினை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். அது நிறைவேற நீ எங்களுக்கு உதவ வேண்டும், என்றபடி மகளை நோக்கினார். அவள் அமைதியாக இருந்தாள். பதில் எதுவும் அவளிடமிருந்து எழவில்லை. முற்றாகப் பேசி முடித்தபின் பதில் சொல்லலாம் என நினைத்தாள். தந்தை மீண்டுந் தொடர்ந்தார்.



LENDING SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹேமா, நாங்கள் உனக்குத் திருமணம் செய்விக்க எண்ணியுள்ளோம்," என்று மீண்டும் நிறுத்தினார். இந்த வார்த்தைகள் ஹேமாவை அதிர்ச்சியடையச் செய்தன.

அவர்களது தீர்மானம் எதுவென்று அவள் அறியாதிருந்ததால், யாரேனும் பொருத்தமற்ற ஒருவரைத் தீர்மானித்து விட்டார்களோ என்ற சந்தேகமே அதற்குக் காரணமானது. அவர் மீண்டுந் தொடர்ந்தார்.

"துவே, உனக்குத் திருமண வயதாகிவிட்டது. உனக்குப் பொருத்தமான ஒரு இடத்தில் நாங்கள் உனக்கு மாப்பிள்ளை பார்த்துள்ளோம். நீ அதற்குச் சம்மதிக்க வேண்டும்," என்றார்.

இதற்கு மேலும் விபரம் அறியாதிருப்பது தன்னைத்தானே சங்கடத்தில் மாட்டிவிடும் என்று அஞ்சிய அவள் சட்டென, "கவ்த அப்பச்சி எயா?" என்றாள்.

மகளின் உள்ளக்கிடக்கையை அறியாத முதலாளி, இனமத, மொழி பாராது தாங்கள் கொண்டுள்ள முடிவை எங்கே மறுப்புரைப்பாளோ என்று அஞ்சியவராய், "அவர் விடயத்தில் நாங்கள் நன்றாகச் சிந்தித்தே ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். நல்ல குடும்பம், படித்தவர். கௌரவமான தொழில் செய்பவர். உனக்குச் சகல விதத்திலும் ொருத்தமானவர். ஆனால் ஒன்று...." என்று மீண்டும் நிறுத்தினார்.

மாப்பிள்ளை மதத்தாலும், மொழியாலும் வேறுபட்டவர் என்றால் எங்கே மறுத்துவிடுவாளோ என்ற அச்சம் அவர் மனத்தில் ஆழப்பதிந்திருந்தது.

"அது என்ன, ஆனால் ஒன்று..?"- கேள்வி புலர்ந்தது ஹேமாவிடமிருந்து.

தங்களுக்குப் பிடித்த, தனக்குப் பொருத்தமில்லாத ஒன்றைத் தேர்ந்து அதனை என் தலையில் கட்டப் போகின்றார்களோ என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் அந்தக் கோள்வியோடு கூடிய முகபாவத்தில் வெளிப்பட்டது. மீண்டும் தந்தை கேள்வி ஒன்றை முன்வைத்தார்.

"நீ சிங்களவர் அல்லாத ஒருவரைத் திருமணஞ் செய்வாயா ஹேமா?"

"ஏன், சிங்களவர் அல்லாதவரும் மனிதர்கள்தானே அப்பச்சி? அவர்களும் நாங்களும் பிறப்பால் இலங்கையர்களல்லவா? "உங்கள் இருவரதும் விருப்பம் அதுவானால் எனக்கும் பொருத்தம் எனப்பட்டால் நிச்சயமாக நான் ஒப்புக்கொள்வேன்" என்றாள்.

தந்தையின் கேள்வியும் அதற்கான தனது பதிலும் தான் ஆசைப்பட்டபடி டாக்டர் புஷ்பராஜைக் கைப்பிடிக்கத் தோதான ஒரு வழி பிறப்பதாக உள்ளூர மகிழ்ந்தவாறே.

"நாங்கள் புஷ்பாவின் அண்ணனை அவர்களின் பொற்றோருடன் பேசி முடிவு செய்திருக்கின்றோம்."

இதனைக் கேட்ட ஹேமாவுக்கு அவளையே அவளால் நம்ப இயலாதது போயிற்று. தான் அவரை விரும்பியதோ, அவர் மறைமுகமாய்த் தனது விருப்பத்தைத் தெரிவித்ததோ அறிந்திராத தனது பெற்றோர் இப்படியொரு தீர்மானத்திற்கு எப்படி வந்தார்கள் என்பதை எண்ணி ஹேமா அதிசயித்தாள்.

"உங்களது விருப்பம் அதுவானால் எனக்கும் சம்மதம்," என்றாள் தனது உணர்வுகளை வெளிக்காட்டாதவாறு ஹேமா,

தங்களது விருப்பத்திற்கு மகள் மறுப்புத் தெரிவித்தால் என்ன செய்வது என்ற அச்சத்தோடு இருந்த ஹேமாவின் பெற்றோர், காய் தானாய் கனிந்த மகிழ்சியில் திளைத்தனர்.

❖❖❖❖

**வா**ரம் ஒன்று சென்றது. அது ஒரு சனிக்கிழமை. அப்புசிங்ஹோ முதலாளி வழமைபோல் ஹேமாவுடன் கொழும்புக் கடைக்கு வந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமைக்குச் சற்று அதிகமாகவே ஹேமா குதுகலமாக இருந்தாள். வந்ததும் வராததுமாக இன்று தனக்கு "ஸ்பெஷல் கோழி புரியாணி" வேண்டும் என்றாள்.

மகுமூதுவுக்கு ஆச்சரியம். எப்போதுமே அவனோடு சரளமாகப் பழகும் அவளிடம், காரணம் என்ன என்று கேட்க வேண்டும் என்று தோன்றினாலும் முதலாளிமுன் கேட்க அஞ்சினான்.

பகலுணவு முடிந்ததும், கையலம்பிக் கொண்டிருந்த ஹேமா முகம் மலரச் சிரித்தபடி

"மகுமூது ஒங்களுக்குத் தெரியுமா ஒரு செய்தி?" என்றாள்.

பதிலுக்கு அவன், "நீங்க சொன்னத்தானே தெரியும் புஞ்சி நோனா?" என்றான். - மனதுக்குள் தனது விடயம் அவள் காதுகளுக்கு எட்டிவிட்டதோ என்ற ஐயப்பாட்டுடன்.

"எனக்கு கலியாணம் பேசியாச்சே!"

"அப்படியா, சந்தோஷம்! மாப்பிள்ளை யாரு நோனா?" - அச்சம் நீங்கி அவன் கேட்டான்.

"டொக்டர். தமிழ்டொக்டர்!"

"என்ன! தமிழ்டொக்டரா?" ஐயத்தோடு கேட்டான்.

"ஏன், தமிழ்டொக்டர் கூடாதா?"

"இல்ல.... நோனா .... நீங்க .... சிங்களம்.. அதுதான்....

"ஜாதிமதம் பேசக் கூடாது மகுமூது. நாங்க எல்லாரும் ஸ்ரீலங்கா தானே!"

இதற்குமேல் எதுவும் பேசினால் அவளிடம் வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டது போலகிவிடும் என நினைத்த மகுமூது, அத்தோடு நிறுத்தித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

"ஆமா மகுமூது, நீங்க கல்யாணம் கட்ட மாட்டுதா?" என்றாள் வாய்விட்டுச் சிரித்தபடி ஹேமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனைக் கிண்டல் செய்யவே அப்படிக் கேட்டாள் என்றாலும், மகுமூது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தனக்கும் திருமணப் பேச்சுவார்த்தை நடப்பதை அவளிடம் சொன்னால் முதலாளியும் அறியச் சந்தர்ப்பம் உண்டாகுமே என எண்ணினான்.

"ஓம் புஞ்சிநோனா, எனக்கும் கல்யாணம் பேசுறாங்க." என்றான் சற்று சங்கோஜப் பட்டவனாக. ஹேமா மீண்டும் கைகொட்டிச் சிரித்தாள்.

"எங்கே பொண்ணு பாக்கிறது மகுமூது? ஓங்கட ஊருல தானே?"

"இல்ல புஞ்சிநோனா, கொழும்புலதான்."

ஹேமா அதுபற்றியெல்லாம் முழுமையாகக் கேட்டறிந்து கொண்டாள். தானே அப்பாவிடம் கூறுவதாகவும், கல்யாணத்திற்கான அத்தனைச் செலவுகளையும் அப்பாவிடம் கூறித் தாங்களே செய்ய வேண்டும் என்றும் சொன்னாள்.

பழம் நழுவிப் வாயில் விழுந்தது போலிருந்தது மகுமூதுக்கு. அவன் அதனை எதிர்பார்க்கவில்லை. ஹேமா சொன்னால் அந்தக் குடும்பத்தில் யாரும் எதையும் மறுக்கமாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். அது மட்டுமல்லாது தன்னளவிலும் அது சாத்தியமே என்பதையும் அவன் அறிவான்.

❖❖❖❖

கொட்டுக்கல விநாயகர் கோயிலில் இரண்டு புறத்தும் நெருங்கிய குடும்பத்தாரின் பங்குபற்றுதலோடு, ஹேமா புஷ்பராஜ் திருமணம் நடைபெற்றது.

திருமண அழைப்பு விருந்து, மண்டபம் ஒன்றில் செல்வந்த முதலாளியின் மொத்தச் செலவில் மிக்க விமரிசையாக நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே சகல திருமணச் செலவுகளையும் செய்ய வேண்டுமென அவர் மாப்பிள்ளை வீட்டாரை நிர்பந்தித்திருந்தார். பொருளாதாரத்தில் அப்புசிங்ஹோ முதலாளிக்கு ஈடுகொடுக்க இயலாத பொன்னுத்துரையும் அதற்குச் சம்மதித்தார்.

மகுமூது விருந்து மண்டபத்தில் பம்பரமாய்ச் சுழன்றான். இரண்டு இனத்தவர்கள் ஒன்று கூடிய மண்டபத்தில் சிங்களமும் தமிழும் தனித்தனியும் கலந்தும் பேசப்பட்டது இன ஒற்றுமைக்கு விருந்தானது.

மணப்பெண் ஹேமா கண்டியின் பாரம்பரிய உடையணிந்து தேவதைபோல் காட்சியளித்தாள். கொடிமாலை, பெத்திமாலை, அகஸ்த்திமாலை, என்பன கொண்ட ஏழுவகை மாலைகள் கழுத்தைச் சுற்றி அலங்கரிக்க, ஒசரி அணிந்தவளாய் அதன்மேல் மினிமவுள பூண்டிருந்தாள்.

நெற்றிப்பொட்டில் நலல்பட்டம் துலங்கியது. பாதத்திற்குப் பாதஜாலாவும் அவள் அழகுக்கு அழகு கூட்டியது. மாப்பிள்ளை ஆங்கிலோ இந்தியனாகத் தோற்றம்பெற்றிருந்தார்.

குடும்ப உறவினரோடு, ஊர்மக்கள், நண்பர்கள், இருவரதும் பல்கலைக் கழகங்களின் பங்காளிகளும், பேராசிரியர்களும் மண்டபத்தை நிறைத்திருந்தனர்.

இந்துக்களின் முறைப்படி கோயிலில் திருமணம் மந்திரம் ஓதி, அம்மிமிதித்து அருந்ததி காட்டி நடைபெற்றாலும், சிங்கள முறைப்படி "போர்வை"ச் சடங்குகளும் நடைபெற்றன.

❖❖❖❖

கலீல் காக்கா மாப்பிள்ளை கேட்க மட்டக்களப்புக்குப் போகச் சகல ஆயத்தங்களும் செய்தார். சொந்தத்தில் இரண்டு ஆண்கள் சேர்ந்துகொண்டனர். மௌலவியும் உடன்பட்டார்.

அதிகாலையில் புகையிரதம் மட்டக்களப்பை அடைந்தது. மௌலவி ஆதரவளித்தார். தனது வீட்டுக்கு அழைத்துச்சென்று

காலைக்கடன் நிறைவேற்றிக் காலை உணவுக்கும் உதவினார். களைப்பாறி, பகல் உணவும் உண்டபின் நால்வரும் மருதமுனைக்குச் சென்றனர்.

மீராப்பிள்ளை வீட்டில் அமைதியான வரவேற்பு. முன்னிராத் தொழுகையின்பின் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தம் செய்திருந்தனர். மகுமூது சார்பில் அவனது காக்கா சேகுமதாரும் பள்ளி மௌலவியும், உறவுக்காரர் இருவரும் வந்திருந்தனர். காக்கா மனைவி பாத்துமுத்து வரவில்லை.

முதல்முறை பேச வந்தபோது ஜெமீலாவின் குத்து வார்த்தையில் அவளுக்குக் கோபம் இருந்தது. தான் போவதால் சாதிக்கப் போவது எதுவும் இல்லை என்பதை அவள் அறிந்திருந்தாள்.

இருப்பினும் இயலுமானவரை கணவனை உசுப்பேத்தி அனுப்பி இருந்தாள். ஆனால் அதனைச் செயற்படுத்த அங்கு அவரால் இயலாது போயிற்று.

காத்தான்குடி "ஹஸரத்"தான் பேச்சைத் தொடங்கினார். கொடுக்கல் வாங்கல் பற்றி எதுவும் பேசக் கூடாதென மீராப்பிள்ளை சொல்லி இருந்ததால், அந்தப் பேச்சே எழவில்லை. எங்கு எப்போது கல்யாணம் என்பது பற்றியே பேசி முடிவாக்கப்பட்டது.

கொழும்பில் முதல்நாள் கல்யாணம் என்றும் கல்யாணச் செலவுகளைக் கலீல் காக்கா பொறுப்பேற்பதென்றும் மூன்றாம் நாள் மருதமுனையில் பெண்ணழைப்பும் "வலீமா" விருந்தளிப்பதென்றும் தீர்மானமானது.

குறிப்பிட்ட தினத்தில் கொழும்பில் வீடொன்றில் கல்யாணம் நடந்தது. கலீல் காக்கா ஊரைக்கூட்டி விருந்து வைத்தார். மாப்பிள்ளை வீட்டில் வந்தவர்கள் சொற்பமே. ஊரில் "வலீமா" கொடுப்பதாலும், போக்குவரவிலுள்ள சிரமங்களாலும் அதிகம்பேர் கல்யாணத்திற்கு அழைக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகக் கட்டப்பெற்ற வீடொன்றைக் கலீல் காக்கா வாடகைக்கு எடுத்திருந்தார். அதன் நீண்ட சாலையில் மணவறை அமைத்திருந்தார்கள். புத்தம்புதிய மலர்களால் சோடிக்கப்பட்ட மணவறையின் மத்தியில் இருவர் ஒன்றாய் அமரத்தக்க இருக்கை இடப்பட்டிருந்தது.

நான்கு சிறுமிகள் ஒன்றேபோல் உடையணிந்து மணமகளின் இருபுறத்தும் மலர்க்கொத்துகள் தாங்கி நின்றனர்.

கதீஜா அழகுற அலங்கரிக்கப்பெற்றிருந்தாள். வெண்மஞ்சள் நிறத்தில் நீண்ட அங்கி. பொருந்துவதுபோல் சிகையலங்காரம். கழுத்தில் அட்டியல், மாலையுடன் கைநிறைய வளையல்கள், காதுப்பூ எனத் தங்கத்தால் மகளை அபிஷேகம் செய்திருந்தார் கலீல் காக்கா.

மீண்டுமொரு திருமணச் சடங்கு செய்ய வேறு பிள்ளைகள் யாரும் இல்லாததால் தனது ஒரே மகளுக்குத் தன்னாலான மிகைப்படு செலவினை அவர் பொருட்படுத்தவில்லை என்பதை கதீஜாவின் அலங்காரம் கட்டியங்கூறியது.

மாப்பிள்ளை வருமுன்னே மணப்பெண் கதீஜா மணவறையில் அமர்த்தப்பட்டிருந்தாள். பெண்கள் தனித்த பகுதியது. உறவினர், சுற்றம், அழைக்கப்பெற்றோரென கூடம் நிறைந்து வழிந்தது. "நிக்காஹ்" நிகழ்வுக்கென முன் இருக்கை அறையில் மேசை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாப்பிள்ளை என்பதால் மாப்பிள்ளையும் அவருடன் வந்தவர்களும் தங்குவதற்காகக் கலீல் காக்கா ஒரு பித்தியேக வீட்டினைக் கல்யாண வீட்டருகில் ஒழுங்கு செய்திருந்தார். மாப்பிள்ளை திருமணத்திற்கென ஆயத்தம் செய்துவரவும் அவ்வீடு வாய்ப்பாய் அமைந்தது.

கொழும்புக் கல்யாணம் என்பதால் மாப்பிள்ளை மகுமூது கோட்டும் சூட்டுமாய் இருந்தான். தம்பியின் தோற்றங்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீலா மகிழ்ச்சியால் பூரித்துப் போனாள். கையைப்பற்றி ஸலாம் கூறித் தலையில் முத்தமிட்டாள்.

எத்தனைதான் தனது முன்மொழிவுகள் சபையேறாத வருத்தம் இருந்தாலும், உடன்பிறந்த பாசம் மனத்தை உருகச்செய்ய, சேகுமதாரும் தம்பியைக் கட்டி "முஸாபஹா" செய்தார்.

மச்சான் மீராப்பிள்ளை மாப்பிள்ளை எல்லோருக்கும் ஸலாம் கொடுத்து வெளியேறப் போகுமுன் மைத்துனனின் தலையில் ஒரு "துருக்கித் தொப்பி"யை "பிஸ்மி" சொல்லி அணிவித்தார்.

கல்யாண வீட்டுக்கு மாப்பிள்ளை வந்ததும் மண்டபம் கலகலப்படைந்தது. "நிக்காஹ்" நிகழ்வறையில் விவாகப் பதிவாளர் அல்ஹாஜ் ஜெகூலி சலாஹுத்தீன் அவர்களுடன் பலரும் அமர்ந்திருந்தனர். பட்டு வண்ணத் துணியிட்டு வடிவமைத்த நாற்காலியில் மாப்பிள்ளை அமர்ந்துகொள்ள மற்றவர்கள் சுற்றி நின்றனர்.

ஒரு பவுண் தங்கம் "மகர்"ஆகத் தீர்மானிகப்பட்டு, மாப்பிள்ளை அதனைக் கொடுக்க, மணமகளின் தந்தை கலீல் முதலாளி "வொலி" சொல்ல, இருபுறத்தும் இருவர் சாட்சிகளாக நிக்காஹ் நடைபெற்றது.

அல்ஹாஜ் ஜெகூலி சலாஹுத்தீனின் இனிமையான குரலில் "துஆ"ப்பிரரர்த்தனையும் முடிவுற மாப்பிள்ளை பெண்ணிருக்கும் மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டார். வழைமைபோல் மற்றக் கருமங்கள் நடைபெற்றன.

மறுநாள் காலை உணவின்பின் கலீல் காக்காவின் உறவினர் ஒருவர் மகுமூதிடம் வந்து, "புறப்படுங்கள், தரர்ஹாவுக்குப் போகவேண்டும்," என மிக அன்பாகக் கேட்டார்.

மகுமூதுக்கு அவர் என்ன சொல்லுகின்றார் என்று புரியவில்லை. "எந்த தர்ஹாவுக்கு? ஏன்? எதற்காக?" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடம் கேட்டான். ஊரில் கண்டிராத பயணம் வழக்கம் என்பதால்.

கொழும்பில் திருமணம் நடந்த மறுநாள் "தெவட்டமரத்தடி தர்ஹாவுக்கு" புதுமணச் சோடிகள் சென்று தர்ஹாவில் "துஆ"பிரார்த்தனை செய்துவருவது அக்கால வழக்கம். அதற்காகவே அவர் மகுமூதுவையும் அழைத்தார்.

இவ்வாறான மார்க்கத்தில் இல்லாத புதிதான நடைமுறைகளில் மகுமூது நாட்டமற்று இருந்தான். அதற்கு சரிபுத்தீன் வாத்தியாரின் போதனைகள் காரமாயிருந்தன. இவ்வாறான போலிச் சடங்கு சம்பிராதயங்களில் அவருக்கு நம்பிக்கை இல்லாதிருந்தது. அதனையே மாணவர்களும் பின்பற்றினர்.

அழைத்தவர் மனம் நோகாதவாறு அவரது விருப்பத்தை மகுமூது மறுக்க, வந்தவர் வந்தவழி மீண்டார்.

மூன்றாம் நாள் காலை கொழும்பிலிருந்து ஒரு பேருந்து புறப்பட்டது. அதில் ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்தனர். நிற்பவர்கள் இருப்பதும், இருப்பவர்கள் நிற்பதுமாக நீண்டதூரப் பயணம். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தனித்தொரு வாகனத்தைக் கலீல் காக்கா ஆயத்தம் செய்திருந்தார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்குப் பத்து மணித்தியாலத் தொலைதூரம். நகரங்கள், கிராமங்கள் மாறிமாறிக் கடப்பதோடு காட்டுவழிப் பயணமும் கூடவே அமைந்தது.

பயணம் களைப்படையாதிருக்க இளைஞர்கள் பாட ஆரம்பித்தனர். பெண்கள் அமைதியாய் இருக்க மற்றவர்கள் கையொலி செய்தனர்.

"சூடா மாணிக்கே பலன்ன யனவா மேயப்பி", "டிங்கிரி டிங்காலே", "சுறாங்கனி சுறாங்கனி", போன்று இன்னும் பலவும் பேருந்தை அமர்க்களப் படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளையிலிருந்து ஹபரணையூடாக பொலன்னறுவ வரை பயங்கரக் காட்டுப்பாதை. அடிக்கடி யானைகளின் அட்டகாசம் அவ்வழிப் பரிச்சயம்.

ஹபரணை தாண்டிச் சில மைல் தொலைவில் நடுக்காட்டில் யானைக் கூட்மொன்று பாதையைக் குறுக்கறுத்தது. சிறிதும் பெரிதுமாக ஒரு பெருங் கூட்டமது. வாகன ஓட்டிகள் இருவரும் அந்த வீதிக்குப் பரிச்சயமானவர்கள்.

கூட்டமாக யானைகள் வந்தால் ஆபத்துக் குறைவு. அவைகள் தமது குடும்பத்தைக் காத்துக்கொள்ள தமதுவழி தொடருமாம். தனியாக ஒன்று வந்தால் சிலபோது பிரச்சினைகள் உருவாகலாம்.

அன்று வந்ததோ யானைக்கூட்டம். அவை தம்பாட்டிற்கு வீதியைக் குறுக்கறுத்து நகர்ந்தன. இருந்தும் அவற்றில் ஒன்றுமட்டும் சிறிது நேரம் கூட்டத்தைத் தவிர்த்துப் பாதையிக் குறுக்குவாட்டில் நின்று உயர்ந்த குரல்கொடுத்துப் பிளிறியது.

வாகனத்தில் இருந்தவர்கள் பயத்தால் நடுங்கினர். சாரதிகள் அமைதியாக இருக்கும்படி கூறினர். சிறிது நேரம் தாமதித்த யானை, கூட்டம் சென்றுவிட்டதால் தனித்திராது அதனுடன் சேர்ந்துகொண்டது.

அதிஷ்டவசமாக அன்று எதுவும் நேரவில்லை. உள்ளே இருந்தவர்களுக்குப் போன உயிர் மீண்டது போன்ற புதிய அனுபவம். மீண்டும் வாகனங்கள் வழிப்பயணம் தொடர்ந்தன.

பொலன்னறுவைப் புராதன நகரப் புல்வெளியொன்றில் பேருந்து தரித்து நின்றது. தனது சூட்டைத் தணித்துக்கொள்ள, இளைஞர்கள் அருகில் இருந்த குளத்தில் குளித்தனர்.

கொழும்பிலிருந்தே கொண்டுவரப்பட்ட உணவுப் பொதிகள் பரிமாறப்பட்டன. அனைவரின் பசியடங்கியதும் பயணம் மீண்டுந் தொடங்கியது. ஆடலும் பாடலும் அமளிதுமளிப்

படுத்தின. வயதில் மூத்த கிழவர்களும் கிழவிகளும் முகஞ் சுழித்துச் செவிகளை மூடிக்கொண்டனர்.

வழி தொடர்ந்து இலங்கையை ஆண்ட மன்னர்கள் கட்டிய கட்டிட இடிபாடுகள், குளங்கள் என்பன நாட்டின் நாகரிகத் தொன்மையை இனங்காட்டி, கண்களுக்கு விருந்தாய் அமைந்தன.

வாகனம் மட்டக்களப்பை அடைந்து, அங்கிருந்து தெற்குநோக்கிப் பயணித்தது. மருதமுனையை அடையும்போது பிற்பகல் நான்கு மணி. வந்தவர்களில் பெண்களை ஜமீலாவும், ஆண்களை மீராப்பிள்ளையும், சேகுமதாரும் வரவேற்று உபசரித்தனர்.

வண்ணப் பன்பாய்கள் வாசலில் விரிக்கப்பட்டன. வந்தவர்கள் அமர்ந்துகொண்டனர். பெரிய தட்டுகளில் எண்ணெய்ப் பணியாரம், பாகிட்ட மரமுந்திரிகைப் பருப்பு, சோவி, பயத்தங்கொட்டைப் பணியாரம் எனப் பலவகைப் பலகாரங்கள் விருந்தினருக்குப் பார்த்தறியாத உணவுகளாகின.

அனைவரும் அனைத்திலும் சுவைகண்டனர். உண்டபின் பருகக் கோப்பியுந் தந்தார்கள். அவை நாக்கிற்கும் நாசிக்கும் இதமளித்தன.

"வலிமா" விருந்து இரவு "இஷா"த் தொழுகையின் பின் என வீடுவீடாய் அழைப்பு விடுத்திருந்தனர். "கூப்பிட்டுப் போதல்" என்னும் ஒருவழக்கம் அங்கிருந்ததால் இரண்டாம் முறையும் அழைப்பு விடுத்திருந்தனர்.

அழைப்பை ஏற்றுப் பெரும்பாலும் அழைக்கப்பட்டவர்களில் அனைவரும் வந்திருந்தனர். இரண்டாம் முறை அழைப்பு "கூப்பிட்டுப் போதல்". இல்லாவிட்டால் சிலர் தன்மானச் செருக்கால் வராது விடுவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலன்னறுவை, தம்மான்கடவையில் மாட்டுப் பட்டிகளில் இருந்து தேர்ந்தெடுத்த கொழுத்த வெள்ளைப் பசு ஒன்றை அன்று அதிகாலையிலேயே விருந்துக்காக அறுத்திருந்தார்கள்.

பால் மணக்கும் முத்துச் சம்பா அரிசி மருதமுனை மக்களின் முதுசொம். மீராப்பிள்ளையின் வயலின் விளைச்சல்.

பெரிய நீலாவணை "தோணா" அருகில் மரக்கறிக் காலை செய்திருந்த சிற்றம்பலத்தின் தோட்டத்து வழுதுணங்காய், மைசூர் பருப்பு அனைத்தும் காலையிலேயே பக்குவப்படுத்தப்பட்டிருந்தன.

பாறாங் கருங்கற்கள் மூன்றினை முக்கோணமாய் வைத்து, அவற்றில் பெரிய அண்டாக்களில் சோறும் கறிகளும் பதமாக வேகின.

இரவு ஏழு மணிக்கே உணவு தயாராகிவிட்டது. விசேடமாய் வாசலில் அமைக்கப்பட்ட நீண்ட பந்தலில் பாய் பரப்பி இருந்தார்கள். இருபுறமும் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அமர்ந்திருக்கக் கையலம்ப முதலில் தண்ணீர் தந்தனர். பின்னர் உணவு பரிமாறப்பட்டது.

திருமண விருந்து கொழும்பில் இருந்து வந்தவர்களுக்குப் புதிய அனுபவம். தனித்தனி சைனாவின் "மலாம்பூச்சு"ப் பீங்கான். "போஸ்" கோப்பையில் கொழுக்குப் போட்டுத் தண்ணீர். மாட்டிறைச்சிக் கறி, மைசூர் பருப்பில் வாழைக்காய்த் துண்டமிட்ட துணைக்கறி, ஒரு பால் புளியாணம்.என்பன உணவாகப் பரிமாறப்பட்டன.

கொழும்பில் "ஸஹன்" சாப்பாடு. புரியாணி, ஆட்டுக் கறி, கோழிக் குறுமா, சுப்பும், களியாவும், வெண்காய அச்சாறும், வட்டிலப்பமும் உண்டு பழகிய நாவுக்குப் புதிதான இந்த உணவுகள் மாற்றமாக இருந்தன.

பக்கத்து ஊர்களான பாண்டிருப்பு, பெரிய நீலாவணையைச் சேர்ந்த ககோதர சமூகத்தினருக்காக மேசை கதிரை போட்டு உணவு ஒழுங்கு செய்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுமூதுவின் கல்யாணச் செலவுகள் அனைத்தையும் தானே பொறுப்பேற்ற அப்புசிங்ஹோ முதலாளி ஹேமமா புஷ்பராஜ் தம்பதிகளுடன் குடும்பமாக வந்திருந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

மூன்று மதங்களைச் சார்ந்தவர்களும், மொழி இரண்டு பேசினாலும் ஒன்றித்துக் கல்யாணத்தைச் சிறப்பித்தமை மருதமுனை மக்களுக்கு ஒரு புதுமையான அனுபவமாகும்.

❖❖❖❖

கல்யாண வீட்டின் கலகலப்பு அடங்கிப்போனது. வந்திருந்த வெளியூர் விருந்தாளிகள் மறுநாளே வீடேகிப் போயினர். சொந்தக்காரர் மட்டும் அவ்வப்போது வந்துபோயினர்.

மூன்றாம்நாள் திருமணத்துக்கு வராத குறையை நீக்கவும், புதிய சோடிக்குச் சந்தோசம் கொடுக்கவும். ஹமீது அப்பச்சி வந்திருந்தார். மகுமூதுவின் திருமணத்தில் அவருக்கு உடன்பாடில்லை காரணம் பிறந்த ஊரில் அவன் பெண் எடுக்கவில்லையாம்.

வந்தவரை ஜமீலா வரவேற்றாள். பாய்போட்டு உபசரித்தாள். பணியாரமும் கோப்பியும் தந்தாள். அவர் அவற்றை உண்ணவுமில்லை குடிக்கவுமில்லை. சற்றுத் தொலையுறவு என்றாலும் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் அவருக்கு மரியாதை அதிகம்.

மகுமூது மனைவியை அறிமுகப்படுத்தினான். அனால் அவர் அதனைக் கண்டுகொள்ளவில்லை. கல்யாணச் சந்தோசமாகக் அவன் கைக்குள் ஐந்து ரூபாயைப் பொத்தினார். பின் பேசினார்.

"ஏனடா மகுமூது, ஒனக்கு பொறந்த ஊரில பொண் இல்லாமல பொறத்தி ஊரில பொண் எடுத்தாய்? எங்கட பொண்டுகள் ஒனக்குத் தகுதி இல்லைய, இல்லாட்டி எங்கட கொமருகளுக்கு நீ தகுதி இல்லைய?"

தனது புதிய மனைவி முன் எதிர்பாராத இந்தக் கேள்வி மகுமூதுவுக்கு வெறுப்பை மூட்டினாலும் அவன் எதுவும் பேசவில்லை. மூப்பைச் சங்கித்து அமைதியானான்.

புதுப்பெண் கதீஜாவுக்கோ அவர் வார்த்தைகள் அதிர்ச்சியையும் துக்கத்தையும் தந்தன. ஏனிந்த மனிதன் இப்டிப் பேசுகின்றார் என அவள் அங்கலாய்த்தாள். மீண்டும் அவர் பேசினார்.

"எங்கட ஊரில பொறத்தியில பொண்ணெடுத்தவங்கள நாங்க கணக்கெடுக்கிறதில்ல. ஒன்னையும் இனிமேல நாங்க கணக்கெடுக்கமாட்டம், தெரிஞ்சுக்க. இப்ப நீ மருதமனையானில்ல. கொழும்பான்" என்றார்.

ஜமீலாவுக்கோ எதுவும் பேச இயலாத இக்கட்டான நிலை. தம்பிக்குப் பரிந்து பேசுவதா, அன்றி அப்பச்சியைச் சமாளிப்பதா அவர்களைவிட்டாலும் இந்த வார்தைகளால் மனச் சஞ்சலங்கொண்ட கதீஜாவைச் சமாதானம் செய்வதா என்று.

உடனே அவள் கதையை மாற்ற, "அப்பச்சி, அதுகளப் போட்டுட்டுக் கோப்பிய குடியுங்க," என்றாள். தன்னால் தொடர்ந்தும் பேச முடியாதபடி ஜமீலா இடைமறித்ததால் கோபங்கொண்ட ஹமீது அப்பச்சி வீட்டைவிட்டு வெளியேறினார். யாரும் அவரைத் தடுக்க முயலவில்லை.

இன்னிலையில் "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்பார்கள். முதல்முதல் அறிமுகஞ் செய்யப்பட்டவரே இவ்வாறென்றால், தொடர்ந்தும் இப்படியானவற்றைத் தான் சந்திக்க வேண்டி வருமோ எனக் கதீஜா மனத்துள் எண்ணியதை தவிர்க்க அவளாலும் இயலவில்லை.

நடந்த நிகழ்வுக்காக மகுமூது மிகவும் வருந்தினான். புதுப்பெண்ணுக்கு அமைதியாக ஆறுதல் கூறினான். அவனுக்குத் தெரியும் அவளை மையப்படுத்தித்தான் அப்பச்சி அப்படிச் சொன்னார். கதீஜா புரிந்துகொண்டிருப்பாள் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் இரண்டுதான் ஊரில் தங்க முடிந்தது. அப்புசிங்ஹோ முதலாளி அவனை அவசரமாக வரும்படி தகவல் அனுப்பி இருந்தார். கதீஜாவை நீண்டநாள் கிழவியிடமிருந்து பிரித்து வைக்கவும் அவன் விரும்பவில்லை.

கிராமமும் சொந்தங்களும் பரிச்சயமான பின் அவளாகவே விரும்பும்போது அழைத்து வரலாம் என அவன் எண்ணினான். கதீஜாவுக்கு ஜமீலாவையும் குழந்தைகளையும் நன்கு பிடித்துக்கொண்டது போல, அவர்களும் அவளை நேசித்தனர்.

❖❖❖❖

கொழும்புக்கு வந்ததும் மகுமூது முதலாளியைத்தான் முதலில் சந்தித்தான். அவர் மகிழ்ந்துபோனார். அவனது எஜமானிய விசுவாசத்தை அவர் அறிவார்.

எனினும் புதிய வாழ்க்கைப் பொறுப்பு அவனுக்குச் சுமையாக இருக்குமென அவர் எண்ணினார். அவனுடன் மனம்விட்டுப் பேசினார். ஹேமா அன்று வரவில்லை.

"மகுமூது, இனி நீ என்ன செய்யப்போகின்றாய?. உடனடியாகவே இங்கிருந்து போகும் எண்ணத்தைக் கைவிடு. நீ எனக்காக உழைத்தவன். உன்னை வெறுங்கையோடு நான் அனுப்பமாட்டேன்."

"நீ உன் சொந்தக்காலில் நிற்பதையே நான் விரும்புகின்றேன். அதற்கான மனப்பலமும், வியாபாரத்தில் அனுபவமும் உனக்கு இருக்கின்றது."

"இன்னுஞ் சில மாதங்கள் என்னோடு நீ இருக்க வேண்டும். டொக்டருக்கு கொழும்புக்கு மாற்றங் கிடைத்ததும், புஞ்சி நோனாவுக்கு பக்கத்தில் புதிய வீடு வாங்கிக் குடியமர்த்தி விட்டால். எனது சுமை குறைந்துவிடும். கடைப்பாலனத்தை அவளால் கவனித்துக்கொள்ள இயலுமல்லவா?" என்றார் கனிவாக.

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI



மகுமூது கண்கலங்கினான். அவரது நல்ல எண்ணத்தை எண்ணி மனத்திருப்தி உற்றாலும், தந்தைபோல் தன்னைப் பரிபாலித்த அவரையும், அவரது குடும்பத்தையும் பிரியும் தருணம் வந்துவிட்டதே என்பதை எண்ணி வருந்தினான். அதனைப் புரிந்துகொண்ட முதலாளி அவனைச் சமாதானம் செய்தார்.

"மகுமூது, நீ எதற்கும் கவலைப்படாதே. நான் உனக்கு எப்போதும் பாதுகாப்பாக இருப்பேன். எனக்குப் பின்னும் புஞ்சி நோனா உனக்குப் பலமாக இருப்பார். நீ எனக்குப் பிள்ளை போன்றவன். உன்னைப் பிரிவது எனது தொழிலுக்குப் பாதகம் என்றாலும், மனத்தளவில் நாங்கள் அனைவரும் எங்களில் ஒரு ஜீவனைப் பிரிவதுபோல்தான் உணருகின்றோம்," என்ற முதலாளி மேற்கொண்டு பேசமாட்டாது மனச்சுமையால் வாயடைத்துப் போனார். அவரது மனநிலைமையைப் புரிந்துகொண்ட மகுமூது அவருக்குக் குளிர்நீர் தந்தான். சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. மகுமூது பேசினான்.

"முதலாளி, நான் உடனடியாக உங்களைப் பிரிந்து போகமடாட்டேன். எப்போது நீங்கள் என்னைப் போக அனுமதிக்கின்றீர்களோ அப்போது போகின்றேன்."நீங்கள் எதுவும் தெரியாத எனக்கு வியாபாரத்தைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்தீர்கள். எந்தவிதக் குறையுமில்லாது பார்த்துக் கொண்டீர்கள். உங்களை எனது வாழ்நாளில் ஒருபோதும் மறக்கமாட்டேன்," என்றான் நாத்தழுதழுக்க.

❖❖❖❖

கலீல் நானா மகிழ்ச்சியில் மிதந்தார். கிழவிக்கு நெஞ்சில் இருந்த பாறாங்கல் கழன்றது போலிருந்தது. பேத்தியின் கல்யாணம் தனக்குப் பிடித்தபடி நடந்த புளகாங்கிதம். புது மாப்பிள்ளையைப் பார்த்துப்பார்த்து உபசரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது மட்டுமல்ல கேளாததும் கிடைத்தது மகுரூதுக்கு. கதீஜாவும் தான் விரும்பியவனே கணவனாகக் கிடைத்த பூரிப்பில் திளைத்தாள்.

கலீல் கக்கா இத்தனைக்கும் பக்கபலமாக இருந்த மௌலவிக்கு விருந்து வைத்தார். தன்பேரில் அவர் முன்னின்று காரியங்களைப் பேசி முடித்திராவிட்டால் இத்தனை எளிதாய் அனைத்தும் முடிவடைந்திருக்காது என்பது அவருக்குத் தெரியும்.

விருந்தின் போது மகுரூதும் கூட இருந்ததால் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி மௌலவியின் முன்னிலையில் கலீல் காக்கா தனது மருமகனின் எதிர்காலத் திட்டமென்ன என்பதை அறிய விரும்பினார்.

திருமணம் முடிந்த கையோடு தனித்து வைத்துக் கேட்பதை அவர் விரும்பவில்லை. அது மௌலவியின் முகத்தைப் பார்த்தவாறு கேள்வியாகவே பிறந்தது.

தனது கடைப்பொறுப்பை மருமகனோடு பகிர்ந்து கொள்ளுவது திருமணத்துக்கு முன்னரே அவரது விருப்பமாய் இருந்ததை மௌலவியும் அறிந்திருந்தார்.

கேள்விக்குப் பதிலாக மகுரூது அப்புசிங்ஹோ முதலாளியுடன் பேசிய விபரங்களைக் கூறி, சிலகாலம் பொறுத்துத் தான்முடிவு சொல்வதாகவும் அதுவரை அவரிடமே தொடர்ந்து வேலைசெய்யப் போகதாகவும் கூறினான். அதனை அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

மௌலவி விடைபெறுமுன் வழக்கமாக அவ்வப்போது அவரது பள்ளிச் சேவைக்காகப் பிறரறியாது செய்துவரும் அவர், தனக்குச் செய்த உதவிக்கு நன்றி கூறியதுடன் வழக்கத்திற்கு அதிகமாக அன்பளிப்பையும் கைமாற்றினார்.

புதிய வாழ்புலச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழவேண்டிய கட்டாயம் என்பதால், திருமணத்தின்பின் மகுரூது ஒரு புது வாழ்க்கைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமுனையின் வாழ்க்கை முறை வேறு. கொழும்பு வாழ்க்கை முறை வேறு. தனித்தனி வீடுகளில் பரந்துபட்டு வாழ்ந்து பழகிவன், கொழும்பில் நெருக்கமான தெருக்களில் அடுத்தடுத்த வீடுகளில் வாழவேண்டியதாகிற்று. உடன்பிறப்பென ஒன்றும் இல்லாது, தான்மட்டும் தனித்து வாழ்ந்த கதீஜாவுக்கு, மகுமூதுவின் வரவால் அந்தக் குறை நீங்கியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

திருமணத்தை இறைவனே தீர்மானம் செய்கின்றான் என்பது எத்தனை யதார்த்தமானது. எட்டாத் தொலைவில் பிறந்த இருவேறு உயிர்களை அவனன்றி இணைப்பது யார். என அவள் எண்ணினாள்.

❖❖❖❖

மகுமூதுவின் வார்த்தைகள் அப்புசிங்ஹோ முதலாளிக்கு மனநிறைவைத் தந்தது. திருமணத்தின் பின் மகளின் ஆரம்பகால வாழ்க்கையில் தன்னால் இடையூறு ஏற்படக் கூடாது என அவர் விரும்பினார்.

கொழும்பில் மனைவியோடு வாழ்வதால் கடைப்பொறுப்பு அவனுக்கு எந்தவிதச் சங்கடத்தையும் ஏற்படுத்தாது. வழமை போல் தொழிலைத் தொடரலாம் என அவர் எண்ணினார்.

அவருக்கு இப்போதுள்ள பெரும்பொறுப்பு மருமகனுக்குக் கொழும்பை அண்டிய பிரதேசத்துக்கு தொழில் மாற்றம் பெறுவதொன்றே. அது சாத்தியமானால் கொழும்பில் அவர்களுக்கான வதிவிடத்தைத் தேர்ந்து குடியமர்த்தி விடலாம்.

அதன்பின் ஹேமாவின் மேற்பார்வையில் முன்போல கடையைத் தொடரலாம். பின்னர் மகுமூது தொழிலை விடுவதால் பாதிப்பு ஏற்படாது.

கொழும்பில் தமிழர்கள் பரந்து வாழும் வெள்ளவத்தையில் சகல வசதிகளுடனுங் கூடிய ஒருவீடு நியாயமான விலைக்குப் பெறக் கலீல் காக்கா உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுமூதுவின் திருமணத்தின் பின் அவர்களும் முதலாளி குடும்பத்துடன் ஒன்றுக்குள் ஒன்றாகிப் போயினர். ஹேமாவும் அந்தச் சூழலை விரும்பினாள்.

எண்ணியபடி எல்லாம் நடப்பதில்லை. சிலவேளைகளில் நாம் எண்ணாமலே நல்லது நடப்பதுண்டு. முதலாளியின் வாழ்வில் அவருக்கு மனைவி வாய்த்ததும், மகளுக்குக் கணவன் வாய்த்ததும் அவ்வாறுதான்.

ஒருவனது வாழ்வில் அவனுக்கு இறைவனருள் நல்ல வருவாய், நல்ல மனையாள், நல்மக்கள், மகளுக்கு நல்ல மணவாளன் கிடைப்பதென்பது பெரும் பாக்கியமாகும். அப்புசிங்ஹோ முதலாளிக்கு இவை அனைத்தும் கிடைத்திருந்தமை அவர் பெற்ற பாக்கியமாகும்.

காலவெள்ளத்தில் நாட்கள் கரைந்தோடிப் போயின. முதலாளி தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. வெள்ளவத்தையில் வீடு கிடைத்ததுபோல் டாக்டருக்கும் கொழும்பில் உத்தியோக மாற்றமும் கிடைத்தது. நினைத்தபடி மகளை மேல்மாகாணக் குடிபதியாக்கினார்.

அத்தோடு நீண்டநாள் தன்னோடு இருந்து, சுயநலமற்றுத் தன் குடும்பத்தில் ஒருவனாய்த், தங்கள் இன்பதுன்பங்களில் பங்குதாரனாய் இருந்த மகுமூதைத், தனித்து விட்டுவிட அவர்மனம் இடந்தரவில்லை.

அவன் தனித்துத் தொழில் செய்வதாயினும், தானே அதற்கான முற்றும் முழுதான முதலீட்டைத் தரவேண்டிய கட்டாயமும் மனத்தளவில் அவருக்கு இருந்தது.

ஹேமாவின் விருப்பமும் அதுவானதாலும், அதனைத் தவிர்த்து அவனைத் தன்னோடு இருத்திக் கொள்வதால் தன் தொழிலில் தொய்வுநிலை ஏற்படாது என்பதனாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடு ஒன்றுகலந்து ஆலோசித்து, அவனது தூய நாணயத்தினை நம்பி அவனையும் தனது வியாபாரத்தில் ஒரு பங்குதாரனாக்கிக் கொண்டார் முதலாளி.

வேலைவெட்டி இல்லாது வீதியளந்து திரிந்த ஒரு முஸ்லிம் இளைஞன், விதிவசத்தால் மேன்மையுற இனமத மொழி போதமற்ற ஒரு சிங்கள முதலாளியின் நல்லுள்ளம் காரணமானது அன்றைய வரலாறுமானது

❖❖❖❖

கிழக்கின் கருவொன்று மேற்கில் விதையுண்டு வளரத் தொடங்கியது. கதீஜா கருவுற்றாள். பாட்டிக்குப் பிறந்தபலன் கண்டது போன்று உளப்பெருக்கு. கலீல் காக்கா ஒற்றைக் குழந்தையோடு வருடங்கள் பலவற்றை வயதாக்கிக் கொண்ட வெறுமை நீங்கும் மகிழ்வில் திளைத்தார்.

மகுமூது தனக்கொரு வாரிசு கிடைப்பதை எண்ணிப் பூரிப்படைந்தான். தான் விரும்பிய கதீஜாவின் கரம்பற்றிய போது கொண்ட மகிழ்விலும் அவன் மகிழ்வு இரட்டிப்பானது.

தலைக்கரு என்பதால் தொலைதூரப் பயணம் போகக் கூடாது எனக் கிழவி தடை போட்டுவிட்டதால், மருதமுனைக்குப் போவதைத் தவிர்த்திருந்தனர்.

கொழும்பைக் காணாத ஜமீலாவும் மீராப்பிள்ளையும் குழந்தைகளுடன் வந்துபோயினர். புதிய உறவெனிலும் தம்பியின் மனைவியைத் தனது உடன்பிறந்தாள்போல் ஜமீலா எண்ணினாள். ஒவ்வொரு முறையும் வாரமொன்று தங்கித் தாயில்லாப் பெண் கதீஜாவுக்குத் தாய்போலும் உதவினாள்.

நாற்பது வாரங்கள் நில்லாது கடந்தன. மருதானை கலீல் மருத்துவமனையில் பெண் சிசுவொன்று பேர்சொல்லப் பிறந்தது. மகுமூதின் பிள்ளைக்கு மகுமூதா எனப் பெயரிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் குழந்தை என்பதால் பெயர் சூட்டுவிழா பிரமாதமாக நடந்தது. ஊரைக்கூட்டிச் சோறிடுவது என்பதன் நிதர்சனம் கலீல் காக்கா வீட்டு விழாவில் துல்லியமானது.

குழந்தைக்குப் பரிசுப்பொருட்கள் குவிந்தன. ஜமீலாவும் குடும்பத்தோடு வந்திருந்தாள். அண்ணனின் பிள்ளைகள் விடயத்தில் பாத்துமுத்துவின் பாராமுகத்தால் கண்டு கொள்ளப்படாத அவளுக்குத் தம்பி வீட்டில் கிடைத்த முதன்மை மனநிறைவைத் தந்தது. இரண்டு பவுணில் கழுத்துக்கு மாலையும் காதுக்கு அருங்கலும் அணிவித்தாள்.

❖❖❖❖

**கொ**ழும்புக் கடைத்தொழிலில் தனது குடும்ப உறுப்பினர்களோடு ஒரு பங்குதாரனாக முதலாளி மகுமூதையுஞ் சேர்த்துக் கொண்டதனால், அதற்கான வருவாய் மகுமூதுவுக்கு முன்னிலும் கணிசமான அளவு அதிகம் தேறியது. அதனால் ஏற்கனவே தனக்கிருந்த சொந்த ஊரில் தொழில் செய்யும் எண்ணத்தை அவன் தாமதிக்க முடிவு செய்தான்.

அதனைக் கலீல் காக்காவிடம் சொல்லியபோது அவர் இரட்டிப்பு மகிழ்வடைந்தார். ஒரே மகள் என்பதால் வீட்டோடு மாப்பிள்ளையானால், மகளும் பேரக்குழந்தையும் தன்னோடு இருக்கும் வாய்ப்பு உண்டாகும் என்ற சுயநலமும் அதில் கலந்திருந்தது.

குடும்பச் செலவுகளை மாமனே ஏற்றுக்கொண்டதால் மகுமூதுவின் வருவாய் முற்றிலும் வங்கியில் சேகரமானது. மகுமூதாவின் பெயரிலும் பணம் இருபுறத்தாலும் வைப்பிலிட அவர்கள் விரும்பினர். குழந்தையின் எதிர்காலத்திற்கு அது பயனுறும் என்பதால்.

மகுமூதா பிறந்து மாதங்கள் கழிந்து வருடமும் மூன்றாகிற்று. திடீரென ஊரில் இருந்து ஒரு தந்தி வந்தது. காக்கா சேகுமதாருக்கு

உடல்நலமில்லை என்று. தானாடாவிட்டாலும் தசையாடும் என்பார்களே. மகுமூது உடன் புறப்பட்டான்.

"நாங்களும் வருகின்றோம்," என்றாள் கதீஜா. அங்கு நிலைமை என்னவென்று அறியாமல் அவர்களையும் அழைத்துச்செல்ல அவன் மனமொப்பவில்லை. இரண்டுநாள் கழித்து தான் அறிவித்ததும் வாப்பாவுடன் வரும்படி சொல்லிவிட்டு அவன் புறப்பட்டான்.

ஊரையடைந்ததும் நேரடியாகக் காக்கா வீட்டிற்கே சென்றான். காக்கா காலொடிந்து கட்டிலில் கிடந்தார். மகுமூதைக் கண்டதும் மைத்துனி பாத்துமுத்து "வாங்கம்பி, வாங்க." என்றாள்.

கையில் இருந்த தோல்பெட்டியைக் கண்டதும், அப்போதுதான் வருகின்னறான் என்பதைப் புரிந்துகொண்டு, "கொழும்பிலிருந்து இப்பதான் வாயறள?" என்றாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன. வார்த்தையிலும் என்றுமில்லாத கனிவு இருந்தது.

"ஓங் காக்கபொண்டி, இப்பதான் வாறன். காக்காவுக்கு என்ன நடந்த?" என்றான் பரிவோடு.

"களிமடுக் கண்டத்தில வெள்ளாமைச் செய்யக் காடு வெட்டப்போய் மரம் உழுந்து தொடையில முறிவு. இப்ப ஒரு கெளமையாகுது. சொத்தியன் பரிசாரிக்கிட்ட வைத்தியம் பாக்கம்."

மகுமூதுவுக்குத் தெரியும் சொத்தியன் பரிசாரி முறிவு வைத்தியர். நல்ல அனுபவசாலி. கைராசிக்காறன் என்று. இருந்தும் அவன் கேட்டான், "மட்டக்களப்பு ஆசுபத்திரிக்கு கொண்டுபோயிரிக்கலாமே மதினி"

"இல்லம்பி, ஊருக்குள்ள எல்லா முறிவுகளுக்கும் அவர் வைத்தியம் செஞ்சிதான் சொகமாகுது"

காக்காவின் அருகில் இருந்தபடி விபரங்களை அறிந்து கொண்டவன் "காக்கா இப்ப கால் நோவு எப்படி" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வருத்தம் ஒள்ளுப்பம் கொறஞ்சாலும் முறிவு சொகமாக நாளெடுக்குமாம். அதுமட்டும் பொறுக்கத்தான் வேணும் என்ன செய்ய." என்றார் விரக்தி மேலிட.

"நீங்க ஒண்டுக்கும் கணகாட்டுப்பட வேணாம். அல்லாட ஒதவியால நான் எல்லாத்தையும் பாத்துக்கிறன். காசுகப்புப் பத்தியும் ஒண்டும் கவலப்பட வேணாம்." என்றான்.

தம்பியின் ஆறுதல் வார்த்தைகள் சேகுமதாருக்கு மனத்தென்பைத் தந்தாலும், ஊள்ளூர மனச் சங்கடத்தையும் அதிகரிக்கச் செய்தது.

அவனது இளமைக் காலத்தில் அவனது விடயத்தில் மனைவியின் கெடுபிடிகளைக் கண்டும் காணாததுபோல் தான் நடந்துகொண்ட குற்ற உணர்வு அவரைத் தலைகுனிய வைத்தது. அவரது கண்கள் கலங்கின.

காலுடைந்த விபரத்தை மகுமூதுவுக்கு அறிவிக்க அவர் விரும்பவில்லை. பாத்துமுத்து அது பற்றிய கவலையற்றிருந்தாள். ஜமீலாவே மீராப்பிள்ளையிடம் வற்புறுத்தித் தந்தி கொடுக்க வைத்தாள். ஒரே வயிற்றில் உண்டான இரத்த உறவு தம்பியை அழைக்கவைத்தது.

மகுமூது பணப்பையிலிருந்து ஒருதொகைப் பணத்தைக் கையிலெடுத்து பாத்துமுத்தின் பக்கம் நீட்டினான்.

"இத செலவுக்கு வெச்சுக்குங்க. நான் தாத்தா ஊட்டபோய் பின்னேரம் வாறன்," என்றரன். அவள் வாங்கத் தயங்கினாள். அவன் நிர்ப்பந்தித்துத் தந்துவிட்டு வெளியேறினான்.

❖❖❖❖

தம்பியைக் கண்ட ஜமீலா அவனை அன்போடு வரவேற்றாள். மீராப்பிள்ளை கடல்வலைக்குச் சென்றிருந்தார். தந்தி கண்டதும் அவன் கட்டாயம் வருவான் என்ற நம்பிக்கை இருந்ததால் காலையுணவு தயாராக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கடன் முடித்து மகுமூது சீனி வாழைப்பழத்துடன் பாலப்பம் சாப்பிட்டான். நீண்ட நாட்களின் பின் கிடைத்த உணவு. கொழும்பில் கிடைக்காதது.

மருதமுனைப் பாலப்பத்திற்கு மௌசு அதிகம். அதன் செய்முறையால் அது வேறுபடும். நன்றாக அரைத்த அரிசி மாவைத் தலைத்தேங்காய்ப்பாலில் கரைத்தெடுப்பர். பின்னர் அளவான நெருப்பில் காயும் மண்சட்டியில் அகப்பைக் கரைசலை ஊற்றித், தீயிட்ட மற்றொரு மண்சட்டியால் மூடுவர்.

சில நிமிடங்கள் சென்றதும் கழற்றி எடுப்பர். எல்லோராலும் பதமாக இதனைச் செய்ய இயலா. அதற்கென்று சிலர் இருந்தனர்.

காலை உணவின்பின் மகுமூது களைப்பாறச் சிறிதுநேரம் தூங்கினான். பிரயாணக் களைப்பு தூக்கத்திற்குத் துணை நின்றது.

தம்பி கதீஜாவுடனும் பிள்ளையோடும் வருவான் என்று ஆசையோடு காத்திருந்த ஜமீலாவுக்கு ஏமாற்றம். இருந்தும் வாய்ப்பைப் பயன்படுத்த அவள் எண்ணினாள்.

அவன் விழித்துக்கொண்டதும் பகல் உணவை மீராப்பிள்ளையுடன் உண்டான். உணவிடையில் ஜமீலா கேடடாள்.

"தம்பி, ஏனம்பி புள்ளையள கூட்டிக்கி வரல்ல?"

"அவசரமா வந்ததால கூட்டிக்கி வரேலாம போச்சி தாத்தா. வரக்குள்ள செல்லிப்போட்டுத்தான் வந்தன். ரெண்டு மூணுநாள் கழிச்சி அவிய வாப்பாவோட வரச்செல்லி."

தம்பியின் பதில் கேட்டதும் ஜமீலாவால் பொறுத்திருக்க இயலவில்லை. அவள் உடனே கணவனிடம், "இஞ்சயிங்க, நீங்க ஒரு தந்தி அடியிங்க அவியள வரச்செல்லி." என்றாள்.

சொன்னபடி நடந்ததும், மூன்றுநாள் கழித்துக் கலீல் காக்கா, கதீஜா, குழந்தை மூவரும் புறப்பட்டு வந்தனர். மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத நிலையத்துக்குச் சென்று மகுமூது அவர்களை அழைத்து வந்தான். வந்தவர்கள் ஜமீலா வீட்டிலேயே தங்கினர்.

இரண்டு நாட்கள் கழித்து ஜமீலா வீட்டுக்கு ஹமீதப்பச்சி வந்தார். சேகுமதாரைப் பார்க்கப் போனவர் அங்கும் வந்தார். கதீஜாவே அவருக்கு இருக்கப் பாய் விரித்தாள்.

"இருங்க அப்பச்சி," என்றாள் முகமலர்ச்கியோடு. அதில் எந்தவிதக் கள்ளமும் இருக்கவில்லை. அவளது உபசரணை அப்பச்சியின் மனத்தை இளகச் செய்தது.

அவள் தந்த பாயில் அமர்ந்துகொண்டார். கோப்பி பரிமாறினாள். அவரும் வாங்கிக் குடித்தார். அப்போது அழகிய நிகழ்வொன்று நடந்தது.

வாசலில் ஜமீலாவின் சின்ன மகனுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மகுமூதா ஓடிவந்து ஹமீதப்பச்சியின் மடியில் உட்காந்தாள். முன்னர் எப்போதும் கண்டிராத முகம் அப்பச்சி. என்ன உணர்வில் வந்திருந்தாளோ?.

அவளது செய்கை அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது. அப்பச்சிக்கும் அவளது செய்கை வியப்பைத் தந்ததில் வியப்பில்லை.

அவர், அவரை அறியாமலேயே அவளை வாரி அணைத்துக் கொண்டார். ஜமீலா சென்னாள் "பேத்திக்கு ரெத்தம் மணத்ததாக்கும்," என்று.

நடந்த நிகழ்வுகள் அப்பச்சிக்கு மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தின. வந்ததும் வராததுமாகக் கதீஜா முகம்மலர பாய்விரித்து அமரச் செய்தது. உரிமையோடு அப்பச்சி என்று கோப்பி தந்து உபசரித்தது. குழந்தை தன்னை அறியாதபோதும் அறிந்ததுபோல் மடியில் வந்து அமர்ந்தது. இவை எல்லாம் அவர் எதிர்பார்க்காதவை. அப்போது அவர் மனம் கடந்த காலத்தை எண்ணி இரைமீட்டது.

பெண்அழைப்பின்போது மகுமூது சொந்த ஊரில் பெண் எடுக்கவில்லை என்ற ஆதங்கத்தில். அவர் கதீஜாவின் முன்னாலேயே அவனிடம் அநாகரிகமாகப் பேசியது அவர் நினைவுக்கு வந்தது.

கொழும்புப் பெண் என்றால் பிறநாட்டு நாகரிகத்தில் திளைத்வர்கள், நமது ஊருக்கு அவர்கள் பொருந்திவரார் என்றே அவர் அவ்வாறு பேசினார். ஆனால் அவரது எண்ணம் பொய்யென கதீஜாவின் செயல்கள் நிரூபித்தன.

கொழும்பார் என்றால் மட்டக்களப்பாருக்கும், மட்டக்களப்பார் என்றால் கொழும்பாருக்கும் தப்பான அபிப்பிராயம் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருவது. அதனால் கலப்புத் திருமணத்தை ஒருவருக்கொருவர் விரும்புவதில்லை. அதன் விளைவுதான் அப்பச்சியின் நடவடிக்கைகள்.

முற்றிலும் அந்த எண்ணத்தில் ஊறிக்கிடந்த அவர் நடந்த நிகழ்வுகளால் தன்னை அறியாமலேயே தனக்குள் ஒரு மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தார்.

குழந்தையைக் கட்டிக் கொஞ்சினார். விளையாட்டுக் காட்டினார். அவளுக்கும் அவரைப் பிடித்துப்போனது.

ஜமீலா நெகிழ்ந்துபோனாள். கொழும்பில் கொண்டிருந்த குரோதம் தன்னளவில் வெறுப்பாயமைந்திருந்த நிலைமை மாறி, அப்பச்சியில் ஒரு புதிய மாற்றங் கண்டிருப்பது அவளுக்கு மகிழ்வைத் தந்தது.

அப்பச்சி கதீஜாவைப் பார்த்துப் பேசினார். "என்ன மகளே எப்பிடி இரிக்காய்?. மூத்தம்மாவும் வாப்பாவும் சொகந்தானே?"

"ஆமா அப்பச்சி அவுங்க சொகமா இருக்காங்க. நீங்களும் சொகந்தானே அப்பச்சி?" என்றாள் கதீஜா.

"ஓண்டா மகளே! நானும் நல்லா இரிக்கன். எப்ப கொழும்புக்குப் போறயள்?. ஒருநாளைக்கி எங்கட ஊட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் பகல் சாப்பாட்டுக்கு வாங்க புள்ள." என்றார். அதில் கனிவு கரைந்திருந்தது. கதீஜாவும் ஆம் என்றாள்.

❖❖❖❖❖

முன்போலல்லாது அடிக்கடி மருதமுனைக்கு வரவேண்டும் போலிருந்தது கதீஜாவுக்கு. பிறந்த மண்ணில் பக்கத்து வீட்டோடும் பழகுவதில் கண்டிப்புக் காட்டிய பாட்டியால், மாற்றாரின் அன்னியோன்னியம் அவளுக்கு அதிகம் இருக்கவில்லை.

ஒற்றைக் குழந்தை. அதுவும் பெண்மகள் என்பதால் கைக்குள் பொத்திப்பொத்தி வளர்த்தாள் வயதானவள். பள்ளிப் படிப்பும் பத்தோடு நின்றுவிட்டதால் இளவட்டங்களில் ஆண்களின் நெருக்கமும் அவளுக்கு அதிகம் இருக்கவில்லை.

தானுண்டு தன்பாடுண்டு என்று வாழ்ந்து பழகிப்போன அவளுக்கு, மருதமுனையின் வாழ்வுமுறையில் பற்றேற்பட்டதில் வியப்பில்லையே!.

அடிக்கடி வீட்டுக்கு வரும் சொந்தபந்தங்கள், அவர்களுடனான உறவுப் பரிமாற்றம், சுகதுக்கங்களில் பங்கேற்பு - இவையெல்லாம் கூடிய இறுக்கமான பிணைப்பை அவள் விரும்பினாள். தன்னைப்போல் தனது குழந்தையும் ஊர் உறவற்று வாழ்வதை அவள் நேசிக்கவில்லை.

வயது முதிர்ச்சியும், திடீரென ஏற்பட்ட கடுமையான உடல் உபாதையும் கதீஜா கல்யாணமாகிய மூன்றாண்டுக்குள் கிழவியை இயற்கை தன்பால் ஈர்த்துக்கொண்டது.

பேத்தியை நல்ல இடத்தில் திருமணம் செய்வித்து, அவள் ஒரு குழந்தைக்குத் தாயானதையும் கண்குளிரக் கண்ட பின்னர்தான் அவள் கண் மூடினாள்.

தொழிலோடு தந்தை ஐக்கியமானதும், மகுமூதுவின் தொழில் சுமையும் பகலில் பேச்சுத் துணைக்கும் ஆளில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைக்குள்ளவளை ஆக்கியது. கொழும்பின் வாள்கைமுறை பெரும்பாலும் அதுவேதான்.

பக்கத்து வீட்டாரோடும் நெருக்கமாகப் பழகமாட்டாத வாழ்வுமுறை. அதுவே பாட்டியின் இழப்பின் பின் அவள் மருதமுனை வாழ்வை விரும்பக் காரணமாகிற்று.

கலீல் காக்கா மகளின் சந்தோஷத்திற்குத் தடையாக இருக்கவில்லை. மகளைவிடப் பேத்தியைப் பிரிந்திருப்பதை அவரால் தாங்கிக்கொள்ள இயலாதபோதும். புகுந்தவீட்டில் அவள் மகிழ்வாக இருப்பதை அவரும் விரும்பினார்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கதீஜாவையும் குழந்தையையும் மகுமூது மருதமுனைக்கு அழைத்துச் சென்று சிலநாட்கள் தங்கியிருக்க விட்டு வருவான்.

இப்போது காக்காவின் குடும்பமும் பழைய வெறுப்பு மறந்து அவர்களுடன் ஒன்றுபட்டது. பாத்துமுத்தும் கதீஜாவுடன் அன்னியோன்னியமானாள். அதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. அது மகுமூதினால் மாதாமாதம் கிடைத்துவந்த கணிசமான பொருளுதவியாகும்.

அப்புசிங்ஹோ முதலாளி மகுமூதுவையும் கடையின் ஒரு பங்குதாரனாகச் சேர்த்துக்கொண்டதனால் காலப்போக்கில் அவனது வங்கி இருப்பில் கணிசமான தொகையொன்று வைப்பிலிடப்பட்டிருந்தது. 13812

இடைக்காலத்தில் அவனது மனத்தில் முளைவிட்டிருந்த ஆசை மீண்டும் புத்துயிர்பெற, கதீஜாவின் மருதமுனை வாழ்வாசையுங் காரணமானது. ஒருமுறை கதீஜாவே வாய்விட்டுக் கேட்கவுஞ் செய்தாள்.

"ஏங்க, நாம ஊரில ஒரு கடைபோட்டு வியாபாரம் செஞ்சாலென்ன?" என. அதில் உட்பொதிந்திருந்த உண்மையை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் வியாபாரத்தைத் தொடங்கினால் அங்கேயே அவர்களும் குடிபதியாகிவிடலாம் என்பது அவளது அடிமனத்து ஆசையாக இருந்தது.

"ஊரில் கடைபோட எனக்கும் புறியம்தான். ஆனா மொதலாளிய உட்டுட்டு வர ஏலாதே புள்ள?"

"நீங்கதான் இத்தின வரிசமா அவருக்கு உழைச்சுப் போடுறியளே! இப்ப நீங்க உங்கட காலில நிக்க வேணுமெண்டா அவர் ஏத்துக்குவார்தானே?"

"கதீஜா, அப்பிடிச் சொல்லாதீங்க. நான் அவருக்கு ஒழைச்சுப் போடல்ல, அவர்தான் அல்லாட ஒதவியால என்ன மனிசனாக்கினார். இண்டைக்கி என்ர கையில காசுவரக் காரணம் அவர்போட்ட பிச்சைதானே. செய்யிற வேலைக்கே சம்பளம் குடுக்காத காலத்தில தொழில்ல பங்குதர ஆருக்கு மனம்வரும்? ஒரு காலத்தில வெறுங்கையோட ஒரு தொழிலுந் தெரியாத நாடுவாசாரியா இருந்த எனக்கி கண்டி வைத்தியர்ர செல்லக்கேட்டுக் கடையில சேத்துத் தொழில் பழக்கி, கைநெறையச் சம்பளமும் தந்த மனுசன் அவர உட்டுட்டு அவர் செல்லாம நான் கடைய உட்டுட்டுப் பேகேலா புள்ள!"

நன்றியுணர்வோடு அவன் பேசிய வார்த்தைகளில் நியாயமிருப்பதைக் கதீஜா உணர்ந்தாலும், தன்பக்க உணர்வையும் அவள் மறைக்க முயலவில்லை.

"அவரும் ஆரம்பத்தில சில்லறைக்கடைச் சிப்பந்திதானே?. அதில இருந்து விலகி தனித்தொழில் தொடங்கினதாலதானே இப்ப இப்பிடி மொதலாளியானார்?. நீங்களும் அப்பிடிச் செய்தா என்ன குத்தம்?"

மகுமூதுவுக்கு அவள் வார்த்தைகள் சினத்தை மூட்டின. வார்த்தைகள் கடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்ர முதலாளி வேற, எண்ட மொதலாளி வேற. அவருக்குச் சம்பளம் மட்டுந்தான். எனக்குத் தொழில்ல பங்கு. ரெண்டையும் ஒண்டாக்க வேணாம், கதீஜா."

இதற்கு மேலும் பேசினால் பிரச்சினை பெரிதாகிவிடும் என்பதால் கதீஜா இருந்த இடத்தை விட்டு எழுந்து நடந்தாள்.

❖❖❖❖

எண்ணாமலேயே சில விடயங்கள் எளிதாய் முடிவதுண்டு. அடுத்து முயன்றாலும் ஆகாக் காரியங்கள் அறியாமலேயே சில வேளைகளில் கனிந்துவிடும்.

முன்பெல்லாம் கடையே கதி என்றிருந்த மகுமூது, திருமணத்தின்பின், அதுவும் குழந்தை பிறந்தபின் அடிக்கடி ஊர் சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

குடும்ப பந்தத்தைத் தக்கவைத்துக்கொள்ள அவன் கொண்டுள்ள அக்கறைதான் அதற்குக் காரணம் என்பதை ஹேமா அறிவாள். வயதிலும் குடும்பப் பொறுப்பிலும் ஒருமித்து அவளும் இருந்ததால் அதனை அவளால் எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது.

சொந்த ஊரில் தொழில் செய்யும் எண்ணம் ஏற்கனவே அவனுக்கு இருப்பதை அவள் அறிவாள். முன்னர் அதனையே தனது சுய தேவைக்குப் பயன்கொள்ள முயன்றதையும் அவள் மறந்திருக்கவில்லை.

வியாபாரத்தில் மகுமூதுவின் துணையில்லாமலேயே தன்னால் தனித்து இயங்க முடியும் என்ற தைரியமும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் மகுமூது ஊரில் தொழில் தொடங்கி வளர அவனுக்கு உதவ வேண்டும். அவன் அவனது விருப்பப்படி அவனது சொந்தக்காலில் நிற்கத் தன்னாலான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென ஹேமா எண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை முன்னர் ஒருமுறை, "முதலாளி நான் உடனடியாக உங்களைப் பிரிந்து போகமடாட்டேன். எப்போது நீங்கள் என்னைப் போக அனுமதிக்கின்றீர்களோ அப்போது போகின்றேன்," என்று அவன் கூறிய வார்த்தைகள் அவளுக்கு நினைவில் வந்தது.

ஊரில் தொழில் தொடங்கும் எண்ணம் இருந்தாலும் தனது தந்தையின் விருப்பமில்லாது அவன் கடையை விட்டுப் போகமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்.

அவன் விரும்பிக் கேட்கவும்மாட்டான் என்பதால், அவனது எதிர்காலத்தில் அக்கறை கொண்ட ஹேமா, அவன் ஊருக்குச் சென்று வியாபாரம் ஒன்றைத் தொடங்க தனது தந்தை மூலம் செயற்படுத்தத் திட்டமிட்டாள். அதற்கான வாய்ப்புங் கனிந்தது.

வழக்கம்போல அப்புசிங்ஹோ முதலாளி சனிக்கிழமை ஒன்றில் கொழும்புக் கடைக்கு வந்திருந்தார். தந்தையின் வருகையைப் பயன்படுத்தி அன்று மகுமூதுக்கு லீவுநாள் என்பதால் அவருடன் மகள் பேசினாள்.

திருமணத்தின்பின் கடைக்கருமங்களில் எந்தவிதக் குறையுமில்லாமல் தொழில்பட்டாலும், மகுமூது அடிக்கடி மருதமுனைக்குச் சென்றுவருவதைத் தந்தைக்குச் சொன்ன அவள், அவனைத் தனித்து ஒரு தொழில் தொடங்க உதவினால் அவன் தனது சொந்த ஊரில் தனக்கான ஒரு கடையை உருவாக்கி தானே தனித்து முன்னேற வழிபிறக்கும் என்றும் சொன்னாள்.

ஏற்கனவே அப்படி ஒரு முயற்சியில் அவன் ஈடுபட்டால் அவனுக்கு உதவுவதாகத் தானளித்த வாக்கையும் தந்தைக்கு ஹேமா கூறியதோடு தந்தையின் கருத்துக்காய்க் காத்திருந்தாள்.

மகளின் கருத்தறிந்த முதலாளி நீண்டநேரச் சிந்தனையின் பின் ஒரு முடிவுக்கு வந்தவராய்ப் பேசினார். அது ஹேமாவின் கருத்துக்கு ஒத்திசைவாய் அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் தனது தொழில் வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்தவன். குடும்பத்தில் ஒருவனாகப் பழகியவன். தொடர்ந்தும் தன்னிடமே தொழில்செய்ய வேண்டும் என்பது சுயநலம் மட்டுமல்ல, மற்றொருவனின் வளர்ச்சிக்கு இடையூறுமாகும் என முதலாளி எண்ணினார்.

இறுதியில் மகளின் விருப்பப்படி அவனுக்குரிய பங்கினைப் பிரித்துக் கொடுப்பதோடு மேலும் தன்னாலியன்ற அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும் என்பதே அவரது முடிவாயிற்று.

❖❖❖❖

மனைவி மகளோடு ஊருக்கு வந்திருந்தான் மகுமூது. ஜமீலாவின் வீட்டில் பகல் சோற்றிற்கு ஆயத்தம் செய்திருந்தனர். காக்கா, மதினி குழந்தைகள் அனைவரும் நிறைந்து வீடே களேபரப்பட்டது. என்றுமில்லாதவாறு பெரியவர் சிறியவர் என்றில்லாமல் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

ஜமீலாவின் கணவர் கறிக்கு ஆற்றுமீன் வாங்கி வந்திருந்தார். பேராற்றில் பிடித்த பிள்ளையளவு கொடுவா. அறுக்க அரிவாள்மணைக்குள் அடங்காத அகலவாய்மீன். மீனைப் பார்த்த கதீஜாவுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

கொழும்பில் வாசலில் "மாலு மாலூ.... மாலே..ய்" என்று பெருங்குரலில் கூவிவரும் மீன்காரனிடம் பாட்டி துண்டுமீன் வாங்கப் பழக்கப்பட்டவளுக்கு அதன் முழு உருவத்தைப் பார்க்க ஒருபுறம் பயமாகவேறு இருந்தது.

பனிக்கட்டிக்குள் பலநாட்கள் பதனிடப்பட்ட, நாட்பட்ட மீனுண்டு பழகிய அவள் கண்களுக்குப் புத்தம்புதிதாய்ப் பிடிபட்டநாளே கொண்டுவரப்பட்டு சமையலுக்குத் தயாராகும் மீனைக் காணப் புதுமையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீலா அறுத்தெடுத்த மீன் துண்டங்களைப் பாத்துமுத்து கழுவிச் சுத்தம்செய்து சமைத்தெடுத்தாள்.

உழுவை மீனிட்டுச் சுண்டிய திராய்ச் சுண்டல் மருதமுனையில் பரிச்சயமான உணவு. கொடுவா மீன்கறிக்கும், முத்துச்சம்பா சோற்றிற்கும் சொல்லிவைத்த கூட்டு.

வேறொன்றும் வேண்டாம். சாப்பிட உட்கார்ந்தால் ஆண்பெண் என்றில்லாமல் ஒருபிடி பிடிப்பார்கள். அன்றும் அப்படித்தான் ஆண்கள் முதலிலும் பின்னர் பெண்களுமாய்ப் பசியாறினர்.

தாய், தகப்பன், அண்ணன் தம்பி, தங்கையெனச் சிறுவயதில் ஒன்றித்து வாழ்ந்த குடும்பத்துள் பாத்துமுத்துவின் வரவின்பின் விரிசல் கண்டது.

பெற்றோரின்பின் குடும்பத்தில் இளையவரைத் தாங்கும் பொறுப்பு மூத்தவன் சேகுமதாருக்கு வந்ததால் மகுமூதை அவர் பொறுப்பேற்க வேண்டியாயிற்று.

பாத்துமுத்து ஆரம்பத்தில் வேண்டா விருந்தாக, கணவனுக்காக அவனை ஏற்றுக்கொண்டாலும், எந்தவிதப் பொறுப்புமற்று ஊர்சுற்றி வேளைக்கு உண்ணவரும் அவனை அவள் வெறுத்தாள். அதில் அவள்பக்க நியாயமும் இருந்தது.

தம்பிமேல் மைத்துனி வெறுப்புக் காட்டுவதை அறிந்த ஜமீலா அவளை வெறுத்தாள். ஒருபக்கம் மனைவி. மறுபக்கம் ஊரளக்கும் தம்பி. தான் யார்பக்கம் நியாயங் கூறுவது என்ற இரண்டுங்கெட்டான் நிலையில் சேகுமதார் இருந்தார்.

அதனைப் புரிந்துகொள்ளாத ஜமீலா அவரையும் ஒதுக்கி வாழ்ந்தாள். இந்நிலையில்தான் மகுமூதின் திருமணமும். சேகுமதாரின் சுகவீனமும் ஒன்றாகிக் குடும்பத்தை ஒன்றுபடுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல்போசனம் முடிந்தபின்னர் பெண்கள் மூவரும் ஒன்றாகிப் பண்டபாத்திரங்களை அலம்பி அடுக்கினர். அனைத்தும் முடிய பிற்பகல் மூன்றுமணியாகிற்று.

பசியாறிய ஆண்கள் மூவரும் மாமரத்தடியில் பாய்விரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். குழந்தைகள் அனைத்தையும் மறந்து விளையாட்டில் கண்ணாயினர்.

"அஸர்" தொழுகைக்காகப் பெரிய பள்ளிவாயிலில் "அதான்" ஒலித்தது. "முஅத்தினார்" இடியோசை எழுப்பினார். தூங்குபவனும் திடுக்கிட்டு எழுந்து பள்ளிக்கு ஓடுவான். அத்தனை வேகமதில் கலந்து கரையும்.

காதெட்டுதூரம் குடியிருப்போருக்குக் கிடைத்த பாக்கியம் அவரது "பாங்கொலி". ஆண்கள் பள்ளிக்குச் செல்லப் பெண்கள் வீட்டில் தொழுதனர்.

பிற்பகல் தேநீரை ஜமீலா தயாரித்தாள். பகலுணவு வயிற்றை நிறைத்திருந்ததால் கோப்பி மட்டுமே பரிமாறப்பட்டது. கொத்தமல்லி, சுக்கு கலந்திடித்த கூட்டுத் தயாரிப்பு. சமிபாட்டுக்கும் இதமான பானம்.

சிறிது நேரத்தில் பெண்களும் ஜமீலா அழைத்துவர மாமரத்தடியில் காலால் மணலைச் சமப்படுத்தி ஆண்களோடு அமர்ந்தனர். ஒரே குடும்பம் என்பதால் அங்கு பேதமிருக்கவில்லை. குடும்ப சுகதுக்கங்கள் பரிமாறப்பட்டன. இடையில் சடுதியாய் ஜமீலா மகுமூதிடம் தனது விருப்பமொன்றைச் சொன்னாள்.

"ஏன்ரம்பி, நீதான் இப்ப வசதியா இரிக்கையே, ஊரில ஒரு காணித்துண்டு வாங்கப்போடாத. பின்னுக்கு ஒண்ட பொண்டாட்டி புள்ளைக்கி ஒதவுந்தானே?"

எவரும் எதிர்பாராத வகையில் சட்டென அவள் கேட்ட கேள்வி அங்குச் சிறிதுநேர அமைதியை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை மகுமூதுவுக்கு அப்படியொரு எண்ணம் தோன்றியிருக்கவில்லை. அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் கதீஜாவின் முகத்தை ஏறிட்டு நோக்கினான். அது பூரித்திருந்தது.

❖❖❖❖

வாரமொன்று தாண்டி மறுவாரத்தில் முதலாளி பியசீலியுடன் கொழும்புக் கடைக்கு வந்திருந்தார். வழக்கத்திற்கு மாறாக மகுமூதுவும் கடையில் இருந்தான். ஹேமாவிடம் சொல்லி அவனை அவர் சந்திக்கும்டி செய்திருந்தார். முக்கிய தேவைக்கன்றி அவர் அவ்வாறு செய்வதில்லை.

அதுவும் மனைவியுடன் வந்திருந்ததும், சற்றைக்கெல்லாம் ஹேமாவும் டாக்டரும் வந்து சேர்ந்ததும் அவனுக்கு வியப்பைத் தந்தது. தன்னை வரவழைத்த காரணத்தை அறியாதிருந்த அவனிடம் முதலாளி பேசினார்.

"மகுமூது! நாங்களெல்லாம் இன்று ஒன்றாகக் கூடிவந்ததும், உன்னை அழைத்திருப்பதும் உனக்கு வியப்பைத் தரலாம். அதற்கொரு காரணமுண்டு," என்று நிறுத்தினார்.

அவர் முகத்தில் எந்தவொரு உணர்வின் வெளிப்பாடும் தோன்றாதிருந்தது. மற்றவர்களும் அவ்வாறே முகக்குறி காட்டினர். வழக்கமாய்ப் புன்னகைக்கும் ஹேமாவும் அமைதியாக இருந்தாள்.

மகுமூதுவின் கண்கள் வினாவினைத் தொக்கி நிற்க, அவன் சற்றுப் பதற்றமுற்றான். ஒவ்வொருவரையும் தனித்தனி அவன் பார்வை மேய்ந்தது.

மொத்தமாய் அனைவருங் கூடி ஏதோ ஒரு விடயத்தைச் தன்னிடம் சொல்ல விளைகின்றார்கள் என்றுமட்டும் அவன் உள்மனம் உறுத்தியது. முதலாளி பேச்சைத் தொடர்ந்தார்

"மகுமூது இந்த மாதத்திலிருந்து நான் உன்னை வேலையில் இருந்து நீக்கப் போகின்றேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வார்த்தைகள் காதில் விழுந்ததோ இல்லையோ அவன் திடுக்கிட்டான். காரணத்தை அறியுமுன்னே அவரைப் பிரிய வேண்டி வருமே என்ற எண்ணம் பளிச்சிட மகுமூதுவின் கண்கள் கலங்கி வழிந்தன.

அவனுக்குத் தெரியும், அவர் அவனை தொழில் நீக்கம் செய்ய அவன்பால் எந்தக் குற்றமும் இதுவரை நடந்ததில்லை என்பது. அப்படியாயின் ஏனிந்த முடிவு? அவன் புரியாத குழப்பத்தில் ஆழ்ந்தான். மீண்டும் முதலாளி பேசினார்.

"மகுமூது, நீ பல வருடங்களாக என்னிடம் வேலை செய்கிறாய். உனது நம்பிக்கை நாணயத்தைக் கருதியே நான் உன்னை இந்தக் கடையில் ஒரு பங்குதாரனாக மாற்றினேன். அது உனது நேர்மையான உழைப்புக்குக் கிடைத்த வெகுமதி குடும்பத்தில் நாங்கள் எல்லோரும் சேர்ந்தெடுத்த முடிவுதானது. இப்போது நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் இந்த முடிவுக்கும் வந்துள்ளோம். அது முற்றிலும் உனது நன்மை கருதியதுதான்."

மகுமூது, எதுவும் பேசவில்லை. மௌனமாக அவர் வார்த்தைகளைச் செவிவாங்கினான். அவனுக்குத் தெரியும் அவர்கள் தனக்கு மாறாக எந்தவொரு முடிவுக்கும் வரமாட்டார்கள் என்பது. இருந்தும் அது எதுவாக இருக்கும் என்பதை அவனால் நிதானிக்க இயலவில்லை. முதலாளியின் வார்த்தைகள் மீண்டும் தொடர்ந்தன.

"மகுமூது, நீ என்னிடம் வரும்போது உலகத்தைப் புரிந்துகொள்ளாத இளைஞன். இப்போது நீ உலகத்தைப் புரிந்துகொண்டு உனக்கான ஒரு வாழ்வைத் தனித்துத் தொடரும் பக்குவம் பெற்றுள்ளாய். இன்று நீ ஒரு குடும்பத்தின் பொறுப்புதாரி. தொடர்ந்தும் ஒருவரை நம்பிவாழும் நிலைமை தொடரக் கூடாது. உனக்கான ஒரு தொழிலை நீ நிர்மாணித்து நான் எப்படி என் வாழ்வில் படிப்படியாய் உயர்ந்தேனோ அதுபோல் நீயும் உயர



LENDING SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென எண்ணித்தான் நாங்கள் கூடி இந்த முடிவுக்குள் வந்துள்ளோம். சொந்த ஊரில் ஒரு வியாபாரத்தைத் தொடங்க வேண்டும் என்றிருக்கும் உனது ஆசையை நானறிவேன். அது மிகச் சரியானதே. திருமணத்தின்பின் நீ அடிக்கடி மருதமுனை சென்றுவருவது எனக்குத் தெரியும். நீண்டகாலம் மறந்துகிடந்த பிறந்த மண்மீது மீண்டும் உனக்குள் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுவே உன் எண்ணப்படி தொழில் தொடங்க ஏற்ற காலமுமாகும். கடையில் உனக்கிருக்கும் பங்குலாபத்தில் நீ இங்கு இல்லாவிடினும் எந்தவிதக் குறைவும் ஏற்பட மாட்டாது. நீ ஒரு உறங்குநிலைப் பங்குதாரனாக எப்போதும் இருப்பாய். ஊரில் நீ தொடங்க வேண்டிய தொழிலுக்கு வேண்டிய முதலை நானே வட்டியற்ற கடனாக உனக்குத் தருகின்றேன். அதனை நீ சிறிது சிறிதாகக் கொடுத்துத் தீர்த்துவிடலாம். எந்தவித நிர்ப்பந்தமும் யாராலும் வரமாட்டா. இது பொறுப்போடு நீ தொழிலில் ஈடுபட ஒரு தூண்டுதலாகவும் அமையும்," என்றார்.

மகுமூதுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. அவன் கல்லெனச் சமைந்து நின்றான். அவரது உயர்ந்த எண்ணத்தை எண்ணி மனநிறைவு கொண்டாலும், அவரை விட்டுத் தான் தனிக்கவேண்டி வருமே என மட்டுமே அப்போது அவனால் எண்ணத் தோன்றியது.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. ஹேமாவே அந்தச் சூன்யத்தைக் கலைத்தாள். அவளது பேச்சில் அவன்பேரில் அந்தக் குடும்பத்திற்கு இருக்கும் பொறுப்புணர்வு துல்லியமாயிற்று.

"மகுமூது இது எங்கள் அனைவரினதும் ஒருமித்த முடிவுதான். நீ உடனடியாக ஊருக்குப்போய்ச் செய்யப்போகும் வியாபாரத்திற்குப் பொருத்தமான ஒரு இடத்தைத் தேர்ந்தெடு. இக்காலகட்டத்தில் அங்கு என்ன தொழில் தொடங்கினால் முன்னேற வாய்ப்புண்டு என்பதை அங்குபோய்த்தான் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்திற்கு வரவேண்டும். எனவே உடனடியாகப் புறப்படு. எப்போதும் எங்களது ஆசீர்வாதமும் ஆதரவும் உனக்குண்டு." எனக் கூறி முடித்தாள்.

❖❖❖❖

ஊரில் காணியொன்று வாங்கும்படி ஜமீலா கூறியதும், அவள் விருப்பத்திலிருந்த யதார்த்தத்தை சட்டென உணர்ந்த மகுமூது கதீஜாவின் முகத்தைப் பார்த்ததும், அவளது முகம் மகிழ்வால் பூரித்ததும், அவள் அதனை விரும்புகின்றாள் என்பதை முகக்குறிப்பால் அறிந்த மகுமூது தனது விருப்பத்தைப் பின்னர் சொல்லுவதாகக் கூறியிருந்தான்.

ஏற்கனவே கிராமத்தில் கடைவைத்து வியாபாரம் செய்யும் எண்ணம் இருந்தாலும், முதலாளியின் விருப்பத்திற்கு மாறாய் எதுவும் செய்வதில்லை என்ற முடிவோடு அவன் இருந்தான். அதனால் ஜமீலாவின் விருப்பத்திற்குச் சாதகமான பதிலொன்றை அவனால் அன்று சொல்ல இயலாதிருந்தது.

மற்றொரு காரணம் மருதமுனையின் நிரந்தரக் குடிபதியாக கதீஜா விரும்புவாளா என்பது. இப்போது இரண்டும் தன் எண்ணத்திற்குச் சாதகமாக அமைவதுபோலிருப்பதால் காரியத்தைச் செயல்படுத்தும் எண்ணம் அவன் மனத்தில் உறுதியானது.

முதலாளியின் குடும்பத்தோடு கூடிய சந்திப்பின்பின் அன்றிரவே நடந்தவைகள் அனைத்தையும் கதிஜாவிடம் கூறினான் மகுமூது. அவனுக்கிருந்த ஒரேயொரு பிரச்சினை ஊர்மாறும் விடயத்தில் கதீஜாவின் முழுமையான சம்மதத்தை அறிவதோன்றே.

ஜமீலா மருதமுனையில் காணி வாங்கும்படி கூறியபோது அவளது முகமாற்றம் அவனுக்கு ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்திருந்தாலும் பூரணமான சம்மதத்தைப் பேசியறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென அவன் எண்ணினான். ஏனெனில் பிறந்ததில் இருந்து கொழும்பு வாழ்க்கைகக்குப் பழக்கப்பட்டவளவள் என்பதால்.

முன்னர் ஒருமுறை ஊரில் கடைபோட்டு வியாபாரம் செய்வதைப் பற்றி அவளே அவனிடம் கூறியபோது, அவன் அதை மறுத்துரைத்திருந்தான். இப்போது அந்த எண்ணத்திலிருந்து அவள் மாறுபட்டிருப்பாள் என அவன் எண்ணினான்.

ஆனால் அனைத்தையுங் கேட்டுக்கொண்டிருந்த கதீஜா முதலாளியின் எண்ணத்திற்கு முழுமையான சம்மதத்தைத் தெரிவித்தாள்.

❖❖❖❖

என்னதொழில் தொடங்குவது என்பதில் அவனுக்குள் ஒரு தீர்மானம் இருந்தது. பட்டியகமவில் சில்லறைப் பலசரக்குக்கடை அவனது முதல் தொழில் என்பதால் பலசரக்குக் கடையொன்றை ஆரம்பிக்க வேண்டும்.

தொகை வியாபாரத்தில் பின்னர் ஏற்பட்ட அனுபவம் இருப்பதால் பலசரக்குத் தொகைவியாபாரம் உகந்ததென்பது அவன் திட்டம்.

தனது வங்கி வைப்பினோடு முதலாளியும் உதவ முன்வருவதால் அது சாத்தியம் என்பது அவனுக்குத் தெரியும்.

கையிருப்பில் உள்ள பணத்தில் தொடங்கி, கையிறுகும் போது முதலாளியிடம் கடன் பெறலாம். வட்டியில்லாத கடன் என்பதால் அதைப்பெறுவது பாதகம் இல்லை என எண்ணியபடி மறுநாளே மனைவி, மகளுடன் ஊருக்குப் புறப்பட்டான்.

மருதமுனையின் பிரதான வீதியில் கடைகளுக்குப் பஞ்சமில்லை. மக்களின் வசதி கருதி ஊருக்குள்ளும் கடைகள் இருந்தன. அவை அனைத்தும் அன்றாடத் தேவைக்கான கடைகளே. பெரும்பாலும் சில்லறைக் கடைகள் கொள்வனவு செய்வது கல்முனையில்தான்.

LEND... SECTION



மகுமூது தனது முடிவில் உறுதியானான். கொழும்பிலிருந்து பெருந்தொகையில் சரக்குகளைக் கொள்வனவு செய்து ஊருக்குள் சில்லறை வியாபாரிகளுக்குக் கட்டுப்பட்ட விலைக்குத் தருவதென.

வாய்ப்பாக ஊரின் மத்தியில் பொதுச்சந்தையின் அருகிலேயே ஒரு கட்டிடம் கிடைத்தது. களஞ்சியப்படுத்தவும் இடமொன்று கிடைத்தது.

இரண்டிற்கும் முற்பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்ததும், மனைவியையும் பிள்ளையையும் ஊரில் விட்டுவிட்டு அவன் மட்டும் கொழும்புக்குப் புறப்பட்டான்.

கொழும்பு வந்ததும் ஹேமாவைச் சந்தித்தான். ஊரில் தான் செய்த ஏற்பாடுகளைக் கூறி முதலில் தன்னிடமுள்ள பணத்திற்குப் பொருட்களை வாங்க முற்பணம் தருவதாகவும் தேவை ஏற்படின் அவர்கள் உதவியை நாடுவதாகவும் சொன்னான்.

ஹேமா மகிழ்ந்துபோனாள். இத்தனை விரைவாக அவன் இயங்குவான் என அவள் எதிர்பார்க்கவில்லை.

தந்தைக்குத் தெரிந்த ஒரு பெருந்தொகை வியாபாரியுடன் தெடர்புகொண்டு, தாங்களே அனைத்திற்கும் பிணைநிற்பதாக ஒப்புதல் தந்து வேண்டியவற்றைக் கொள்வனவு செய்ய உதவினாள். தங்களது வாகனங்களையே பொருட்களை ஊர்கொண்டுசெல்லப் பயன்படுத்தும்படியும் கூறினாள்.

❖❖❖❖

மருதமுனையில் முன் எங்குமில்லாதவாறு ஒரு கொள்முதல் பலசரக்குக்கடை ஊர்மத்தியில் உதயமானது. மகுமூது அதன் சொந்தக்காரனானான். ஊரே மகிழ்ந்தது.

கல்முனைக்குச் சென்று கொள்வனவு செய்யும் ஊரின் சிறிய கடைக்காரர்களும், பக்கத்து ஊர்ச் சிறு வியாபாரிகளும் தமக்குத் தோதாக அது அமைந்ததாக எண்ணினர்.

கொழும்பிலிருந்து லொறிகள்மூலம் பொருட்கள் கொண்டு வரப்பட்டன. மக்களின் அன்றாட பாவனைக்கான அத்தனையும் அங்குக் கிடைத்தன.

அப்புசிங்ஹோ முதலாளியே குடும்பத்தோடு வந்து கடையைத் திறந்துவைத்தார். ஒரு முஸ்லிம் கிராமத்தில் ஒரு முஸ்லிமுக்குச் சொந்தமான கடையை ஒரு சிங்களவர் வந்து திறந்துவைத்தது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அது அன்றைய சமூக ஒருமைப்பாட்டிற்கு உதாரணமானது.

காலங் கரைந்தோட கடையின் வளர்ச்சியும் அதற்கேற்ப வளர்ச்சி கண்டது. ஊரறியாதிருந்த மகுமூது, மகுமூது முதலாளியென ஊருக்கு அறிமுகமானார்.

வியாபாரத்தைத் தொடரும்போதே ஊரில் ஒரு காணியைக் சொந்தமாக்கி ஜமீலாவின் விருப்பத்தை நிறைவேற்றியதோடு, அதிலொரு வீட்டையுங் கட்டி மனைவி கதீஜாவுடனும் மகளுடனும் குடிபதியானான்.

கொழும்பில் கலீல் காக்கா தனித்துவிட்டாலும், மருதமுனையில் மகள் நல்லபடி வாழ்வதில் திருப்தி கண்டார். மாமியும் மகளும் கூட இருந்ததால் மனைவியின் இழப்பைத் தாங்கிக்கொண்ட அவருக்குத் தற்போது தனிமையின் சுமை தெரிந்தது.

மக்களைவிட உறவில் பேரக் குழந்தைகள் வந்ததும், அவர்களே முதன்மைபெறுவது உலக நியதி என்பதற்கிணங்க பேத்தி மகுமூதாவின் பிரிவு அவரை வாட்டியது.

தொழிலிலும் கவனமோடவில்லை. காலப்போக்கில் வெறுக்கவும் செய்தது. மகள் தங்களோடு வந்துவிடும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தாள். தந்தையின் தனிமைக்கு அதுவே வடிகாலென அவள் எண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வசதியாக இருக்க நீங்கள் யாருக்காக உழைக்க வேண்டும். கடையைக் குத்தகைக்குக் கொடுத்துவிட்டு, வீட்டையும் வாடகைக்கு விட்டுவிட்டு வரும்படி மருமகன் மகுரூது முதலாளியும் வற்புறுத்தினார்.

வேறு வழியின்று தனித்திருப்பதைவிடக் குழந்தை குட்டிகளுடன் வாழ்வதே உவப்பென எண்ணிய கலீல் காக்கா அவரும் மருதமுனையின் குடிமகனானார். தொழில் அனுபவம் உள்ள அவரால் மருமகனுக்கு உதவவும் இயலுமானது.

திடீரென ஒருநாள் ஹேமாவிடமிருந்து அவசரத் தந்தியொன்று வந்தது. அப்புசிங்ஹோ முதலாளி கடுமையான நோய்க்குள்ளானதாகவும் கண்டியில் தனியார் ஆசுபத்திரியில் வைத்திருப்பதாகவும், மகுரூதைப் பார்க்க விரும்புவதாகவும் உடன் வரும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகுரூது பதறிப்போனார். மாமனாரிடம் கடையைப் பொறுப்பாக்கிவிட்டு, உடனே கண்டிக்குப் புறப்பட்டார். புகையிரதப் பயணத்திற்காகக் காத்திராமல் வீட்டிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பை அடைந்தார், அங்கிருந்து பொலன்னறுவை ஊடாக கண்டிக்குச் சென்றார்.

ஏற்கனவே தங்கியிருக்கும் வைத்தியசாலையின் விபரம் அறிந்ததால், வாடகை வாகனமொன்றிலேறிப் போய்ச் சேர்ந்த போது முதலாளியின் குடும்பமே அங்கிருந்தது. அனைவரின் முகத்திலும் கவலை சூழ்ந்திருந்ததால் அவர்கொண்டிருந்த மனப்பதற்றம் அதிகமானது.

மகுரூதைக் கண்ட ஹேமா அவரருகில் வந்தாள். தந்தையார் அனுமதிக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு அவர்கண்ட காட்சி அவரை அதிரச்செய்தது. கண்கள் பனித்தன. பீறிட்டு வந்த விம்மலை அடக்கிக்கொண்டு அவரருகில் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கில் சுவாசக்கருவி பொருத்தப்பட்டிருந்தது. மார்பிலும் கையிலும் "வயர்கள்" பொருத்தப்பட்டு பக்கத்தில் கருவிகள் இயங்கிக்கெண்டிருந்தன. அவர் மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தார். கண்களின் ஓரங்களிலிருந்து கண்ணீர் கசிந்து காய்ந்திருந்தது.

"அப்பச்சி, மகுமூது அவில்லா" என்றாள் ஹேமா காதருகில் வாய் வைத்தவளாய். எந்தவித மாற்றமும் தோன்றவில்லை. மீண்டும் மீண்டும் சொன்னாள். மெல்லக் கண்கள் திறந்து மூடின. மீண்டும் ஹேமா தந்தையை அழைத்தாள். ஒன்றுக்குப் பலமுறை.

13812

முதலாளியின் கண்கள் திறந்து விரிந்தன. மங்கலான பார்வைக்குள் மகுமூதுவின் உருவம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவை திறந்தபடி அவரையே பார்த்தபடி இருந்தன. மெல்லமெல்ல இமைகள் சில வினாடிகள் துடித்தன. பின்னர் திறந்தபடியே அடங்கிப் போயின. இறுதியில் அவர் பார்வையில் நிலைத்த உருவம் மகுமூதானது.

ஹேமா எதையோ புரிந்துகொண்டவளாக வெளியில் ஓடினாள். அப்போது அங்கிருந்த மருத்துவரிடம் நடந்ததைக் கூற, அவரும் அறைக்கு வேகமாய் வந்தார். ஏதேதோ முயன்றார். அவை பயனற்றுப்போக, வேதனையோடு ஹேமாவை நோக்கினார். அதன் உட்பொருள் புரிந்த அவள் அருகிலிருந்த இருக்கையில் தன்னை இருத்திக்கொண்டாள்.

எங்கிருந்தோ வந்தான், யாரென்று அறியாத இளைஞன். அவனை இனமத பேதமற்று, ஆதரித்து, தொழில்பழக்கி அவன் முன்னேற பக்கபலமாகவும் இருந்தவர் அப்புசிங்ஹோ முதலாளி. மகுமூதுவின் வாழ்வில் மறக்கவொண்ணா மனிதர். சமூக நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இன்றுவரை அவன் மனத்தில் பதிந்து போன மாமனிதர்.

PUBLIC LIBRAR
MARUTHAMUNA
MUNICIPAL COUN
KALMUNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஒரு கவிஞராகவே அறிமுகமானவர்.

இதுவரை பதினொரு காவியங்களுடன் ஐந்து கவிதைத் தொகுதிகளையும்,
இரண்டு மொழிமாற்றக் கவிதை நூல்களையும்
ஐந்து சிறுவர் இலக்கியங்களையும்,
இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களையும்
வெளியிட்டுள்ளார்.

நான்கு முறை சிறுகதைக்கான பரிசில்களையும் பெற்றுள்ளார்.

இவரது முதலாவது புதினம் கருகாத பசுமை என்பதாகும்.
அத்தோடு இப்போது வெளிவரும் "முக்காழி" என்னும் புதினமும் அடங்கும்.

தமிழ்கூறு நல்லுலகத்தில் மிகவும் அறிமுகமான இவர்
தமது படைப்புக்களுக்காக
இலங்கை, இந்தியா,புதுவை,மலேசியா,அமீரகம்
போன்ற நாடுகளால்
பட்டங்களளித்துப் பாராட்டப்பெற்றுமுள்ளார்.

இவரது படைப்புக்களை ஆய்வுசெய்து
இலங்கை,இந்தியா ஆகிய நாடுகளில் பலர்
முனைவர், கலைமானி, உயர் கலைமானிப் பட்டங்கள் பெற்றுள்ளனர்.

இருபதுக்கும் அதிகமானோர் ஆய்வுகளும் செய்துள்ளனர்.

அவரை மனதார வாழ்த்துகின்றேன்.

- கலாநிதி அகளங்கன்


Price : 400/-
ISBN : ISBN978-955-54039-7-9
Bar Code : 9 789555 403979

9 789555 403979

St. Joseph's Catholic Press, Jaffna. Phone: 021 222 2378



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org